உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது காவியம்.

தோலாமொழித்தேவர்

இயற்றியருளிய

சூளாமணி.

இஃது

யாழ்ப்பாணம்

சி. வை. தாமோதரம்பிள்ளையால்

பலபிரதிகளைக்கொண்டு பரிசோதித்து

இறங்கூனிலிருக்கும்

சில தமிழ்ப்பிரபுக்களது

காருண்யதிரவியோபகாரசகாயத்தினால்

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதி௵ கார்த்திகை௴.

இதன்விலை ரூபா-௧௨.

(*Copyright Registered.*)

1889.

உ

நூற் சிறப்பு.

பொழிந்துபொருள்விளக்கும்போழ்ந்திருள்கால்சீக்கும்
இழிந்தவரையேற்றிநிறுத்துஞ்—செழுந்தரளத்
* தோளாமணியைநகுந்தோலாமொழிதொகுத்த
† சூளாமணியகத்துச்சொல்.

திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன் புயலனைய
கையன் றெவ்வைக்
கைக்கொட்டி நகைக்குமிகற் கார்வெட்டி யரையன்வள
நாடற் கேற்பப்
பொக்கெட்டும் பத்துமிலான் புகழ்த்தரும தீர்த்தன்மலர்ப்
பதம்பூ சிப்போன்
சொற்கெட்டா வரன்றோலா மொழிசூளா மணியுணர்வோர்
துறைகண் டோரே.

---

* "தோளாமணி தொகுத்தாற் போலாதே தோலாக்கீர்" என்றும் பாடம். கீர் - மொழி.

† தம்மையுடையார் விரும்பிய அனைத்தும் நல்குந் தேவமணி இரண்டு; அவற்றின்பெயர் சிந்தாமணியுஞ் சூளாமணியுமாம். சூளாமணி-சூடாமணி, சிகாரத்தினம்; சூளம் - சிகை, மணி - ரத்தினம்.

உ

கணபதி துணை.

சூளாமணிப் பதிப்புரை.

குருவணக்கம்.

இறைவனே ருருவுகொண் டெழுந்தாங்கு வீற்று
மறைசையா தீனத்து மன்னுபு வதிந்த
கரணை யம்பதிக் கைலாச நாத
குரவன திருபத மருமலர்
சிரமிசை யிருத்திவெங் கருமுதல் களைவாம்.

தமிழாசிரிய வணக்கம்.

தெள்ளுதமிழ்க் கடல்கடந்து செழியகலைத் துறைப்படிந்து
திரிபில் ஞானக்
கொள்ளைகொண்டு நுகர்ந்தமுத்துக் குமாரகவி மேகமிதைக்
கொடிச்சுன் னுக
வள்ளலென துள்ளமதி கொள்ளநறை விள்ளுதமிழ்
மணஞ்சற் றேறி
வெள்ளறிவின் முடைநாற்றம் வீவித்தான் விரைமலர்த்தாள்
மிலைவன் மாதோ.

தமிழுஞ் சம்ஸ்கிருதமும் ஈஸ்வரன்பால் உதித்த இரட்டைப்பிள்ளைகளாம். சம்ஸ்கிருதத்திற்குப் பாணினியுந் தமிழிற்கு அகத்தியருஞ் செவிவித்தாயராயினர். சம்ஸ்கிருதம் வடபாலில் நைமிசாரணியத்து ரிஷிகள் கோட்டத்திலுந் தமிழ் தென்பாலில் மதுரைப் பாண்டியர் அவைக்களத்திலும் வளர்ந்து முறையே வடமொழி தென்மொழியெனும் நாமம் வழங்கப்பெற்றன.

"இருமொழிக்குங் கண்ணுதலே முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியுந் தழீஇயினு ரான்றவரே யென்றாலிவ்
இருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ."

அகத்தியர்க்குத் தமிழிலக்கணம் அறிவுறுத்தியவர் சுப்பிரமணியக்கடவுளெனச் சைவர் கூறுவர். சமணர் அதனை மறுத்து அவர்க்கு அவ்வறிவுறுத்தினர் அவலோகிதனென்பர். அகத்தியர் சைவோத்தமராதலின் அது பொருந்தாது. அஃதெவ்வாறாயினும் ஆகுக. தமிழணங்கிற்குப் பாலருத்தி வளர்த்தவர் அகத்தியரென்பது அனைவருக்கும் உடம்பாடேயாம்.

வளர்ந்த இடம் மதுரையாயினுந் தமிழின் சனனபூமி கங்காதீரமேயென்பதூஉம், ஆரியர் வடமேற்றிசையினின்று வந்து கங்காதீரத்திற் குடியேறினபோது ஆண்டு இருந்த தமிழர் அவரோடு இணங்கியிராது பிரிந்து பற்பல இடங்களிற் சென்று சிதறுண்டு வதிந்தனரென்பதூஉம், அவர்களிற் தென்னாட்டிற்கு வந்தவர்களே ஈண்டுச் சேர சோழ பாண்டிய இராச்சியங்களை நாட்டினரென்பதூஉம், மதுரைச்சங்கத்தில் வளர்ந்து விருத்தியடைந்து சிறப்புற்ற தமிழோடு அவ்வாறு சிறப்புறாதனவாய்க் காலவேற்றுமை சிறிதடைந்து வழங்குந் தென்மேற்கிற்புக்கு உறைந்த மலையாளரதும் மேற்கிற் புக்கு உறைந்த குடகரதும் உதகமண்டலத்துப் புக்கு உறைந்த தோடரதும் வடக்கிற் புக்கு உறைந்த இமயமலைச் சாரலில் ஒருவகை வேடரதும் பாஷைகளுக்குள்ள ஒற்றுமையான் விளங்கும்.

சம்ஸ்கிருதம் உச்சாரண வன்மையானும் வேதாகம அதிகாரத்தானும் மந்திரோபதேசப் பயிற்சியானும் ஆடூஉ லக்ஷணமுடையதாகத், தமிழ் தன் மிருதுத்தன்மையானுங் குயில் கிளி பூவைகள் தலைநாணும் ஓசையுங் கரும்பு தேன் பாகு பாலென்றிவற்றைவென்று தேவாமிர்தத்தோடொத்த இனிமையும் உடைமையானுந் தேவாரதிருவாசாதிகளினாற் சாக்ஷாத் ஈஸ்வரனையும் மயங்கச்செய்யும் வசீகரணத்தினு

னுஞ் சங்கீதசாகித்திய செய்யுள் விநோதங்களானும் மகடூஉ லக்ஷணம் மேற்பட்டது. இரண்டும் ஒன்றோடொன்று கலவாது விந்தகிரிக்கும் வேங்கடமலைக்கும் இடையே கிடந்ததோர் பேராரணியத்தாற் காக்கப்பட்டுவளர்ந்தன. ஆயினும் மங்கைப்பருவமுற்ற கன்னித்தமிழ் பின்னர்த் தன் புராணேதிகாசகாலத்திற் சம்ஸ்கிருதநாயகனை மாலை சூட்டிமணம்புரிந்தது. ஆதலால் இஞ்ஞான்றைத் தமிழில் வழக்கினுஞ் செய்யுளினுஞ் சமஸ்க்கிருதம் எங்கணும் வியாபித்துக் கொண்டிருக்கின்றது. பண்டைத்தமிழோ அக்கலப்புடையதன்று. இஃது இரண்டுபாஷையின் இலக்கணவிதிகளாலுஞ் சங்கமரீஇய பழைய தனித் தமிழ்நூல்களாலும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளிதிற் புலப்படும்.

நைமிசாரணிய ரிஷீஸ்வரர்கள் காலத்தின் பின்னர்ச் சம்ஸ்கிருதம் ஆரியப் பிராமணாசிரியர்களாற் பராமரிக்கப்பட்டதுபோல மதுரைச் சங்கத்தார் காலத்தின்பின்னர்த் தமிழிற்குக் கைகொடுத்துப் பரிபாலனஞ்செய்தவர்கள் சமணரென்பதூஉம், இக்காலத்திற் தமிழ் கற்போர் இலக்கிய இலக்கணப் பயிற்சிக்காக ஓதிவரும் நூல்களிற் பெரும்பான்மையன சமணர்காலத்திற் சமணாசிரியர்களால் எழுதப்பட்டனவென்பதூஉம் முன் வீரசோழியப் பதிப்புரையிற் கூறியிருக்கின்றேன். அவற்றுட் சீவகசிந்தாமணி முதலிய பெருங்காப்பியங்களோத்த சிறப்புடைய தமிழிற் சமணர் எழுதிவைத்த யசோதரகாவியம் உதயணகாவியம் நாககுமாரகாவியம் சூளாமணி நீலகேசியெனும் பெயரிய சிறுகாப்பியங்களும் உள. இன்னும் அனேக பிரபந்தங்கள் இதிகாசங்கள் புராணங்கள் சமயாசார தத்துவசாஸ்திரங்கள் உள. அவைகள் காலாந்தரத்தில் ஏடெழுதுவோராற் பெருகிய பிழைகளினாற் பேதப்பட்டு மிக விகாரமுற்றுக் கிடக்கின்றன.

"இற்றவர் தேவராய்ப் பிறப்பரீண்டுடல்
பற்றிய விசும்பிடைப் பரவுமாமுகி
றெற்றென வீழ்ந்தெனச் சிதைந்துபோகுமான்
மற்றினி மக்கடம் வண்ணஞ் செப்புவாம்."

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளின் மூன்றும் அடி ஓரோ வொரு பிரதியில் "அற்றெண முற்றிலு மழிந்து போகுமால்" எனவும், "தெற்றென வீங்தென வீந்து போகுமால்" எனவும், "இற்றென விழிந்தென வீந்து போகுமால்" எனவுஞ் சிலபிரதிகளில் முதலடியொழித்து ஏனைமூன்றடியும் முற்றும் ரூபம் மாறி "அற்றமில் பறவைகளடையக் கொண்டு போய்ச்—சுற்றிய பாற்கடறுளும்ப வீட்டிடும்—பொற்றிரள் வரையொடு மின்னுப்போலவே" எனவும் பிறழ்ந்து கிடப்பின் இவ்விகாரங்கள் இத்துணையவென்று கூறற்பாலவல்ல. பழஞ்சுவடிகளை ஒப்பிட்டுப் பரிசோதனைசெய்பவர்களுக்கே இவைகளால் நேரிடும் வருத்தந் தெரியும்.

சூளாமணி இரண்டாவது காவியமென அதன்பிரதிகளிலிருக்குங் குறியீட்டினுற் தெரியவருகின்றது. முதலாவது காவியம் எதுவென்றும் மற்றைய காவியங்களின் வரிசைக்கிரமம் இன்னதென்றும் விளங்கவில்லை. நீலகேசி என் கைக்கு அகப்படவில்லை. ஆயிரத்து நானூற்றுச்சொச்சஞ் செய்யுளுள்ள மேருமந்தரபுராணத்தில் முதற்பாகமும் யசோதரகாவியமுங் காஞ்சிபுரத்திலிருந்த ஸ்ரீ பாகுபலி நயினரால் அச்சிடப்பட்டன. எஞ்சியன அச்சில் வரவில்லை. சூவிரதகாவியம் என்று ஒன்றுவடமொழியில் இருப்பினுந் தமிழிற் செய்யப்பட்டதாகத் தோற்றவில்லை.

யாப்பருங்கலவிருத்தியிலும் அதனை முதனூலாகக் கொண்டு அமுதசாகரர் இயற்றிய காரிகைக்குக் குணசாகரர் சகாப்தம் ௨௦௦-௩௦௦ அளவில் எழுதிய விரித்துரையிலுஞ் சூளாமணியிலிருந்து அநேகசெய்யுட்கள் இலக்கியமாக எடுத்துக் காட்டப்பட்டிருத்தலானுஞ், சூளாமணியின் காலஞ் சோழமண்டலத்திற் கார்வெட்டி நகரத்திலிருந்து அரசுபுரிந்த விசயராசன் காலமென்பது நூற்சிறப்பிற் "திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன்" என்றற்றொடக்கத்துச் செய்யுளான் அறியக்கிடத்தலானும், கார்வெட்டிநகரின் காலம் உறந்தைக்கு முந்தியதாதலானும் இந்நூலின்வயது ஆயிரத்தைஞ்ஞூறு வருஷத்திற் குறையாது.

எவ்வெப்பாஷையினும் பெருங்காவியங்கள் தோற்றிய பின்னரும் ஆங்காங்குக் காலந்தோறுஞ் சிறுகாவியங்கள் உதித்து நடைபெறுதல் வழக்காயினும், சிலபல சிறுகாவியங்கள் செனித்தபின்னரே பெருங்காவியங்கள் பிறத்தல் இயல்பு. மேற்கூறிய சிறுகாவியங்களை ஒழித்தாற் சமணருக்குச் சிந்தாமணிக்கு முன்னர்த் தோற்றிய சிறுகாவியங்கள் வேறில்லை. இருந்து இறந்ததாகவுங் கேள்வியில்லை. அன்றியுங் குணசாகரர் காலத்திற் சிந்தாமணி முதலிய பெருங்காவியங்கள் இருந்தனவாகில் விசேஷமாக அவற்றினின்றே உதாரணங்கள் காட்டியிருப்பர். ஆதலால் இந்நூல் ஆருகதப் பெருங்காப்பியங்களுக்கு முந்திய தென்று கொள்ளல் தவறாகாது.

யகர ஆசெதுகைக்குக் "காய்மாண்ட" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுள் காட்டாக எடுத்து ஆளப்பட்டிருக்கின்றதாலோவெனின், ஆண்டு உரையாசிரியர்கள் காட்டியது * "வேய்காயு மென்பணைத் தோள்" என்னுஞ் சூளாமணிச் செய்யுளென்றும், அஃது ஆசிரியராற் சவலைவிருத்தத்திற்கு ஓர் இலக்கியமாதற்பொருட்டு வைக்கப்பட்டது உணராது, † கொகுடியென்பதோர் மரப்பெயருளதென்று அறியார் கோங்கமென்று மாற்றினாற்போல, அச்செய்யுளில் இரண்டாம் அடி சீர் குறைந்திருப்பது பிற்காலத்துச் சிதைவென்று கருதி, அதனை ஒழித்து, அதற்குப் பதிலாகக் "காய்மாண்ட" என்றற் ‡றொடக்கத்துச் செய்யுளை இக்காலத்தில் யாரோ சொருகிவிட்டார்களென்றும், எழுபது எண்பது வருஷத்திற்கு முந்திய பழஞ் சுவடிகளில் "வேய்காயுமென் பணைத்தோள்" என்னும் உதாரணமே இன்னுங் காணலாமென்றும், ரகர ழகர ஆசெதுகை மூன்றாமெழுத்தெதுகை முதலியவைகட்குச் சூளாமணியிலக்கியங்கொண்ட உரையாசிரியர்கள் யகரமொன்றற்கு மாத்திரஞ் சிந்தாமணியிற்

---

* சூளாமணி அரசியற்சருக்கம் ௨௦௪-ம் செய்யுள்.
† ,, தூதுவிடுசருக்கம் ௪-ம் ,,
‡ சிந்தாமணி நாமகளிலம்பகம். ௨-ம் ,,

கைவைத்தற்கோர் அவசியம் இருக்கமாட்டாதென்றுஞ், சிந்தாமணியிற் புதிதாகத்தேடி எடுத்ததென்பதற்கு அஃது அக்காப்பியத்தின் முதலாவது இலம்பகத்தின் முதலிலே கிடப்பதே ஒரு சான்றென்றுங் கூறிவிடுக்க. நூல்முழுவதிலுஞ் சிந்தாமணி உதாரணம் வேறில்லையே.

நாலைந்து வருஷத்தின் முன் யான் ஸ்ரீகைலாசபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துச் சற்குருநாதசுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகமூர்த்திகளைத் தரிசிக்கப் போயிருந்தபோது சுவாமிகள் சூளாமணி ஓர் அருமையான நூலென்றும் அஃது இப்பொழுது மாரணதசை அடைந்திருப்பதால் அதனை அச்சிட்டுக் காப்பாற்றுதல் தக்கதென்றுந் தமிழ்ப்புராதன நூல்களை என்னால் இயன்றமட்டுந் தேடிப் பரிசோதித்து வெளியிடும் முயற்சியிற் கையிட்டிருப்பதால் யானே அதனைச் செய்தல்வேண்டுமென்றுங், கட்டளையிட்டதுமன்றிச், சென்னை மகாலிங்கையர் பிரதியொன்று தமது ஆதீனத்திலிருந்ததை எடுத்து என்வசம் அனுப்பியுமருளியது. அதனை வாங்கி வாசித்துப்பார்த்தபோது, காரிகையில் இலக்கியமாகக் காட்டப்பட்டுள்ளனவுஞ் சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்தனவாயினும் யாது நூலகத்திருந்து எடுக்கப்பட்டனவென இக்காலத்து அதனை ஓதுவார்க்குத் தெரியாதனவுமாகிய விருத்தங்கள் ஆங்காங்குக் கிடத்தல் கண்டு, அஃதோர் அரிய இலக்கியமேயெனத் தேறிச் சுவாமிகள் கட்டளையைச் சிரமேற்றாங்கி, வேறுபிரதிகள் தேட ஆரம்பித்தனன். அவ்வவ் இடங்களில் இருக்கும் எனது இஷ்டர்களான உத்தியோகஸ்தர்கள் வித்துவான்களுக்குப் பிரதிகள் விசாரித்துச் சம்பாதிக்க எழுதியதில், அப்பொழுது கருவூரிலிருந்த பண்டிதர் ஸ்ரீமத் வெங்கட்டராமையங்காரவர்கள் தம்மிடம் இருந்ததோர் பிரதியை அனுப்பினதுமன்றி மன்னார்குடியிற் சைனதெருவில் ஒருபிரதி இருப்பதாகவுந் தெரிவித்தார்கள். அந்தப் பிரதிக்காக ஆளனுப்பி, அது கும்பகோணத்துச் சாசனப்பதிவுசாலையில் உத்தியோகமாயிருந்த சைனமாணவகன் ஒருவர் எடுத்துப்போயிருப்பதை அறிந்து,

அவரிடம் நேரிலே சென்று கேட்டதற்கு, அவர் யான் அப்பொழுது கலித்தொகைப் பரிசோதனையிற் கையிட்டிருந்தமைபற்றித், தன்னிடம் இருக்கும் புத்தகம் எனக்கு எப்போதுவேண்டுமோ அப்போது அனுப்பிவைப்பதாக வாக்களித்தனர். மற்ற இடங்களிலிருந்து இப்பெயருள்ளதோர் நூலிருப்பதாகவும் அங்குள்ளவர்களுக்குத் தெரியவில்லையென்று பதில்வந்தது. இம்மூன்று பிரதிகள்தான் தமிழ்நாட்டிலுண்டென்று எண்ணிக்கொண்டு, அதுகாறும் பிரசுரஞ்செய்த நூல்களால் எனக்கு நேரிட்ட செலவைக்குறித்து ஆலோசித்து, இந்நூலைச் சென்னைச் சர்வகலாசங்கத்தார் தமது பொறுப்பில் அச்சிடுவித்து நாலைந்து வருஷத்திற்குப் பிரவேசபரீக்ஷைக்கு ஏற்படுத்தினால் உத்தமமாக இருக்குமென்று அச்சங்கத்தலைவர்களுக்கு விண்ணப்பஞ்செய்தேன். அவர்கள் தங்கள் உத்தியோகத் தவணையை அதிக்கிரமித்து நாலைந்து வருஷத்திற்குப் பாடகியமனம்பண்ணுதல் கிரமத்தாழ்வென்று உத்தேசித்துப் போலுஞ், சென்னைச் சம்ஸ்கிருத திரவிடக்கிரந்த பரிபாலனசபையாரால் என்விண்ணப்பங் கவனிக்கப்படும்படி அச்சங்கலிகிதருக்கு என் விண்ணப்பத்தை அனுப்பினார்கள். அச்சபையார் நூலை அச்சிடுதற்கு இசைந்து என் சங்கேதங்களைப் பூரணமாகத் தெரிவிக்கும்படி எனக்கு எழுதினர்.

இதற்குள் இந்நூற் பிரகடனுதி செலவுகட்கு யான் காத்திராவண்ணம் ஒருவழி ஏற்பட்டது. தமிழ் கற்கும் மாணுக்கருக்குப் பஞ்சலக்ஷணப் பயிற்சி உண்டாதற்பொருட்டுத் திருவாரூர் வன்மீகநாததேசிகர் குமாரர் வைத்தியநாததேசிகர் இயற்றியருளிய இலக்கணவிளக்கம் மூலமும் உரையும் அச்சிட எண்ணி அதன் செலவிற்காக ஒரு விளம்பரஞ் செய்திருந்தேன். அப்பொழுது அச்செலவில் ஒரு பாதியைத் தாங்கள் பொறுத்துக்கொள்வதாக றங்கூன் டிப்டிக் கமிஷனராபீசில் மானேஜராக இருக்கும் எனது சகோதரன் செல்வச் சிரஞ்சீவி இளையதம்பிப்பிள்ளையும் அவர் இஷ்டர்கள் சிலருஞ் சேர்ந்து ௫00 ரூபா அனுப்பிவைத்தார்

கள். பின்பு அந்நூற் பிரகடனச்செலவு முழுவதுந் தாமே தருவதாகப் போடிநாயக்கனூர் ஜமின்தார் ம-ா-ா-ஸ்ரீ திருமலைபோடய காமராசபாண்டியநாயக்கர் துரை தெரிவித்தனர். அதனை அவர்களுக்கு அறிவித்து அவர்கள் அனுப்பிய பணத்தை வேறொரு பூர்வக்கிரந்த பிரகடனத்திற்காகச் செலவு செய்யலாமா எனக் கேட்பித்தேன். அவர்கள் அனைவரும் அதற்குச் சம்மதி கொடுத்தார்கள்.

இஃதிவ்வாறிருக்க என் கலித்தொகைப் பதிப்பு வெளிப்பட்டது. அது சென்னைச் சர்வகலாசங்கப் பரீக்ஷைகளுக்கு உபயோகமாதற்பொருட்டு, அதன் பதிப்புரையில் யான் தெரித்தவாறு அதிற் பதினோரிடத்திற் குஃறொடரன்மொழி வந்தனவற்றை மாற்றியிருந்தனன். பற்பல சிரேஷ்டகனவான்கள் அச்செய்கையை மிகவுங் கண்டித்து எனக்குக் கடிதம் எழுதினார்கள். அதனால் அஃதன்ன இடக்கர் மொழிகளைச் சிதைத்து அச்சிடுதல் தர்மமல்லவென்று தெளிந்தும், ஷைசபையார் அவற்றின் செறிவோடு நூல்களைப் பிரசுரியாரெனத் துணிந்தும், அவ்வாறு பிரசுரித்தல் எனக்குக் கட்டளையிட்டருளிய சுவாமிகளின் அனுமதிக்கு மாறுகுமென்று நினைந்துஞ், செலவிற்கு வேறுவழி ஏற்பட்டதைப் புகழ்ந்தும் யானே எவ்வாற்றானும் இந்நூலை அச்சிடத் தீர்மானித்தேன். இறங்கூன் பணம் அதற்கு உபயோகமாயினது.

இப்பால் முன் தஞ்சாவூர்க் கீழ்க்கோர்ட் நீதிபதியாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ திரு. கனகசபைமுதலியாரவர்கள், என் முயற்சிக்கு எஞ்ஞான்றுந் தமது கஷ்டத்தைப் பாராமற் கையெழுத்துப் பிரதிகள் தேடி உபகரிப்பவர், அப்பொழுதும் பற்பல இடங்களினுந் தமதிஷ்டர்கள் மூலஞ் சூளாமணிப் பிரதிகள் தேடுவாராய், வேதாரணியம் ஸ்ரீ அருமைப்பெருமாள்முதலியார் மகன் அனந்தவிஜயமுதலியார் பிரதியொன்றும் பெருமண்டூரிலுள்ள ஒரு சைனவித்துவானுடைய பிரதியொன்றுமாக இரண்டு பிரதி தமக்கு அகப்பட்டன அனுப்பி வைத்தனர். அதன்மேல் விழுப்புரம் டிஸ்ற்றிக்ட் முன்சிப் ம-ா-ா-ஸ்ரீ இராமச்சந்திரையரவர்கள் வழி

யாக வீரேச் சைனவித்துவசிரோமணி ஸ்ரீமான் அப்பாசாமி சாஸ்திரிகள் பிரதியொன்று அகப்பட்டது. மன்னார்குடிப் பிரதியை வேண்டியபோது தருவோமென்று வாக்குப்பண்ணிய மாணவகன் இதற்குள் இறந்து விட, அப்பிரதி யாவர் கையிற் சிக்குண்டதென்று எவ்வளவு தூரம் விசாரித்துந் தெரியவரவில்லை. கிடைத்த பிரதிகள் ஐந்தில் வேதாரணியப்பிரதியுங் கருவூர்ப்பிரதியும் வீரேப்பிரதியைப் பார்த்து எழுதப்பட்டனவாதலாற் பரிசோதனைக்குப் பயன் படத் தக்க சுயபிரதிகளாகாமற்போய்விட எஞ்சிய மூன்றுபிரதிகளையுங்கொண்டே அச்சிட ஆரம்பித்தேன்.

நூறுபக்கம் அளவு அச்சானபின்பு, தென்றேசப்பிரதியொன்று, எனது நண்பரும் பண்டைத் தமிழ்நூல் ஆராய்ச்சியே தமக்குப் பொழுதுபோகும் விநோதமாக உடையவருஞ் சென்னைத் தபாலாபீசுகளின் மேல் விசாரணைத்தலைவருமாகிய ம-ள-ள-ஸ்ரீ மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளையவர்களுடையது, அவரிடந் திரிசிராப்பள்ளியிற் தமிழ் முனிஷி ஒருவர் வாங்கிவைத்திருந்து இறந்துபோகக், கும்பகோணத்தில் ஒரு ஹெட் கனஸ்டேபில்கையிற் சேர்ந்திருந்ததை அறிந்து, அதனை அவ்விடத்திற் போலீஸ் மேல்விசாரணையிலிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ கிருஸ்ணசாமிநாயுடு அவர்கள் சகாயத்தாற் தருவித்தேன். அதற்கும் முதன் மூன்று பிரதிகளுக்கும் அனேக வேறுபாடுகள் இருந்தமையால் இன்னுஞ் சிலபிரதி எவ்விடத்தாயினும் இருக்குமாயின் அவற்றையுந் தேடி ஒத்துப்பார்த்துக்கொண்டே அச்சிடுதல் அத்தியாவசியகமென்று உட்கொண்டு, அங்கங்கே சமணர்கள் குடியிருக்கும் இடங்களுக்கெல்லாம் நேரிலே ஒரு சுற்றுப் பிரயாணம் பண்ணிக் காஞ்சிபுரத்தில் மாத்திரம் ஒரு மிகப் பழம்பிரதி கண்டு அதனை வாங்கிவந்தேன். இவ்விரண்டோடும் ஒத்துப்பார்த்ததில் முன்பு அச்சிட்ட அவ்வளவும் மறுபடி திருத்தி அச்சிடவேண்டியதாயிற்று. வேறுபிரதி எங்கும் அகப்படவில்லை. கும்பகோணத்திற்போயிருந்ததாக யான் முன்னர்ச் சொன்ன மன்னார்குடிப்பிரதி வீரேப்பிரதி

யையே பார்த்தெழுதப்பட்டதென்று அதன்சொந்தக்காரர் மன்னார்குடியிற் சொன்னமையால் அதனை யான் பின்பு இச்சித்துத் தேடவில்லை.

காலாந்தரத்தில் ஏடெழுதுவோராற் பெருகிப் பெருகி வந்த பிழைகளினாற் காவியங்கள் மிகவும் பேதப்பட்டு விகாரம் அடைந்திருக்கின்றமை முன்னமே சொன்னேன். இம் மாறுபாடுகளைக்குறித்து இந்நூற்பதிப்பில் அடியேனுக்கோர் துணிவு புதிதாகப் பிறந்தது. இதுகாறும் அச்சிட்ட பழைய நூல்களில், ஒருபிரதியின் ஆதாரமாவது இல்லாமற் பாடபேதத்தைத் திருத்துதல் ஒழிந்த யான், இப்பொழுது பிரதிகள் அனைத்தும் பிழையென்றும், பிரதிகளில் இருக்கும் பாடம் ஆக்கியோன் வாய்மொழியாய் இருக்கமாட்டாதென்றும், எந்தப்பிரதிவழிச் சென்றாலும் அச்சில் வருவது ஆசிரியரினின்றும் வேறுபட்ட பிழைபாடென்றும் நிச்சயிக்க ஏது உண்டான இடங்களில் இரண்டொரு எழுத்தையாவது மொழியையாவது சந்தர்ப்பத்திற்கும் பொருளுக்கும் இயையுமாறு திருத்தத் துணிந்தேன். அவ்வாறு செய்யாவிடின் நூலின் சிறப்பு அழிவதுமன்றிச் சில பாடங்கள் ஒருபயனுந் தராமலுஞ் சில முன்பின்னோடும் பிறநூல்களோடும் விரோதப்பட்டும் நிற்குமாதலிற் திருத்தம் அத்தியாவசியகமாயிற்று. இதனை உலகம் அறியச் சொல்லாமல் விடுவதே தப்பென்று உணர்ந்து இங்ஙனந் தெரிவிக்கலாயினேன்.

பிரகடனாசிரியர்கள் நூலிலுள்ள தப்பு ஒப்பிற்கு உத்தரவாதிகளல்லரே! ஆசிரியர் பாடம் இஃதென்று நிச்சயித்து உணராவழி இருந்தவண்ணம் நூலை உலகிற்கு ஒப்பிக்கிறது தானே! வீரசோழியம் தொல்காப்பியம் முதலியவைகளில் அப்படி ஒப்பிக்கவில்லையா என்பாருளராயின், அன்னோர் மேல்வரும் நியாயங்களைச் சீர்தூக்கி என் செய்கையை மன்னித்தருள்வாராக. முதலாவது, அந்நூல்களிற் பிரதிகளில் இருந்தபடி ஒப்பித்த வழுக்கள் மூலபாடத்தின்கணவாவது அம்மூலபாடத்தின் அர்த்தத்திலாவது உள்ளன அல்ல. மூலத்திலும் அர்த்தத்திலும் வரும் வழுக்கள் ஒன்றாலொன்

றன் பூர்வசொரூபம் அறிந்து திருத்தப்படற்பாலனவாம். உரையாசிரியர்கள் பிறநூல்களிலிருந்து எடுத்துக்காட்டிய உதாரணச்செய்யுளிலாவது மேற்கோள்களிலாவது புகுந்த வழுக்களே பிரதிகளிற் கண்டபடி ஒப்பிக்கப்பட்டன. அவைகள் அவ்வவ நூலாராய்ச்சியாற் பிறர் அப்பப்போ திருத்திக் கொள்ளக்கூடியன. இவை அவ்வாறு பின் எக்காலத்துந் திருத்தப்படா. இரண்டாவது, உதாரணங்கள் மேற்கோள்களிற் புகுந்திருக்கும் வழுக்கள் தாமும் ஆங்காங்கு எடுத்தோதிய பொருட்டுணிபிற்கு எம்மாத்திரம் வேண்டியதோ அதனுட்புகுந்த வழுவல்ல. எஞ்சிய பாகங்களில் ஏதாவது வழுக்கிடத்தலாற் கற்போர் பெறக் கருதிய பயன் எவ்வாற்றானுஞ் சிதைவுபடாது. உதாரணமாகச் "செய்யுளுளும் மூக்தாகலு முரித்தே" என்னும் இலக்கணமும் அதனுரையும் வழுப்படாமல் ஆராய்ந்து பதித்திருக்க, அதற்கு இலக்கியமாகக் காட்டிய செய்யுள்கள் "தெண்டிரைமிசைப்பாயுந்து" "நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து" என்று பிரிந்தாலென்! "தெண்டிரைமிசைப்பாயுந்துநீர்" "கோழிகூப்பெயர்க்குந்து" என்று பிரிந்தாலென்! "தெண்டிரை" என்றிருப்பினென்! "தண்டிரை" என்றிருபபினென்! தெண்டிரையோ தணடிரையோ என்பதும் "நீர்" எதனைச்சேர்தல் சரியென்பதும் அவ்விலக்கியங்கள் இருந்து எடுக்கப்பட்ட நூல்களாற் றிருந்த உணர்தற்பாலவாயினும் "பாயுந்து" "பெயர்க்குந்து" எனவரும் விதியினை உணரும் உணர்ச்சி அவ்வழுவாற் சிதைவுபடாதன்றோ? நீர்க்கோழிக்குக் கூவுதற்றொழிலிலைபாதலானும் பாயுந்து என்னும் எச்சத்திற்கு முடியும்பெயர் வேண்டுமாதலானுஞ் சிறிதாலோசனையால் "நீர்" முன்வாக்கியத்தோடு சேர்தற்பாலதென்றும் புத்திநுட்பக்குறைவால் ஏட்டுத்தொடரெழுத்தைப் பிரிக்க அறியாமல் வழுப்பட்டதென்றுஞ் சொல்வீராயின், அற்றன்று; கூவுதற்கு அழைத்தற் பொருளும் உண்டென்றும் நீர்க்கோழி தன் துணையைத் தன்னோடு செல்வான் அழைத்துப் பெயர்த்தல் இயல்பென்றும், பெயருந்து என்னது பெயர்க்குந்து என்றதாற் றன்பெயர்ச்சியைக் கருதாது துணையைப் ெ யர்த்தலைக் கொள்ளலுங்

தருமென்றும் "பாயுந்துரீ" என முடியுஞ் சொல் சேர்ந்த தாயின் பெயர்க்குந்து யாண்டையோ முடிந்ததென்றும் விடுத்தொழிக. இன்னநூலிலிருந்து உதாரணம் எடுக்கப்பட்டதென்று அறிந்து அந்நூலையுந் தேடிப்பார்த்தாலன்றி யதார்த்தரூபம் அறிதல் அசாத்தியமென்க. அவ்வாறு எட்டுத்தொகை பத்துப்பாட்டலென்றின்னோரன்ன சங்கத்தார் காலத்து நூல்களைத் தேடிப்பார்த்து அவற்றால் அறியத்தக்கன பின்னர்த் திருத்தற்பொருட்டாகவே தொல்காப்பியப்பொருளதிகாரத்து உதாரணச்செய்யுள்களிற் சிலபிழைகளைப் பிழையென்று நிச்சயமாயுணர்ந்தும் பிரதிகளிற் கிடந்தபடி விட்டிருக்கின்றேன். நற்றிணையாதிய தொகைகளிலும் பத்துப்பாட்டிலிலும் பின்னுராய்ச்சியால் யான் இப்பொழுது செய்துவைத்திருக்கிற திருத்தங்களுள் அனேகம் அப்பொழுது யான் இவை இன்னவாறு இருத்தல் வேண்டுமென்று உத்தேசித்தபடியே இருக்கின்றன. ஆயினும் பூருவசொரூபம் இதுதானென்ற நிச்சயமின்மையானும், ஒருகாலமில்லாதிருந்தால் வேறொருகாலத்தில் எப்படியும் பூருவசொரூபங்தேடி அறிதற்பாலவாயினமையானும் அவற்றை என் உத்தேசத்தின்பிரகாரந் திருத்தத் துணிந்திலேன். மூன்றாவது, உரை எழுதப்பட்டிராததோர் இலக்கியநூலின் மூலபாடத்திற் சாஸ்திரமுடிபுங் கதைப்பொருத்தமுமே அயனூலாராய்ச்சிகொண்டு துணிதற்பாலன. வாக்கியமுடிபு அங்ஙனமன்று. அது பலபல பிரதிரூபத்தின் சகாயத்தால் மாத்திரமே அறிதற்பாலது. நாடெங்குந் தேடியும் வேண்டிய அளவுக்குப் பிரதிகள் அகப்படாமல வழுக்கள் நிறைந்து மாரணதசையும அடைந்ததோர் உரையிலலாநூலை ஒன்றிற் பிரசுரஞ் செய்யாமல் இறந்துபோக விட்டுவிடவேணடும. அன்றேற் கற்போர்க்குப் பயன்படத் திருத்தியே அச்சிடல்வேண்டும். இவ்விரணடில் எது தக்கது? எனும்பழுகிய நாசியைச் சத்திரம்பண்ணிப் பொன்னூசி பொருத்தினாற்போலப் பூர்வசொரூபம இறந்து பிறழ்ந்த இடத்தில அஃதறிய வேறுவழியின்றேற் புதுத்திருத்தஞ் செய்வதை வழுவமைதியாக்கி மன்னிக்க. நான்காவது, ஒருதிருத்தமுஞ்

செய்யாது பழம்பிரதிகளின்படி ஒப்பிப்பதால் வரும் பயன் யாது? வீரசோழியத்திற் சிலசில இடங்களிற் பிழைப்பட்டனவற்றை இருந்தவண்ணம் ஒப்பித்தேனன்றோ? யாவர் அவற்றிற்குப் பூர்வ சொரூபந் தேடிக் கொடுத்தார்! தேட முயன்றவராயினும் உளரா? என்பு நொறுங்கிய காலை வெட்டியெறிந்து பொய்க்கால் வைத்தாற்போல அவற்றிற்குப் புத்துதாரணங்கள் செய்து சேர்த்திருப்பேனாயின் கற்போர்க்குச் சிறிதாவது பயன்படத்தக்கதாயிருக்குமே! ஐந்தாவது, சிற்சில இடங்களிற் புதுத்திருத்தமானபின் இந்நூலைத் தோலாமொழித்தேவர் இயற்றியருளிய சூளாமணியெனல் பொய்படுமன்றோவெனின், புதுமொழி சில சேர்ந்தமையை உலகிற்குத் தெரிவியாது சொருகிவைத்து யாவும் ஆசிரியர் வாக்கென்று நடைபெற விடுவதே தவறுவது. நன்னூற்குச் சங்கரநமச்சிவாயப்புலவர் இயற்றிய விருத்தியுரையென்று இக்காலத்தார் கொள்வதெது! அன்னோருரையில் அங்குமிங்குஞ் சிவஞானமுனிவரால் திருத்தப்பட்ட புத்தம்புத்துரையன்றோ? முனிவரர் திருத்தியமை உணர்ந்தோரால் அவராற் திருத்தப்பட்ட விருத்தியுரையென்று அச்சுப்பிரதிகளின் நாமதேயபக்கத்திற் போட்டிருப்பது யான் அறிந்துளேன். ஊரில் வழங்குங் கையெழுத்துப் பிரதிகளைப்பார்த்து அதிற்படித்தோரை இஃதியாவருரையென்று கேட்டறிக. கஅசஉ-ம்ஹு யான் நன்னூல் விருத்தியுரை எழுதிப் படித்தபோது முனிவரரால் அது திருத்தப்பட்டதென்று கேள்விபபட்டது மிலலை. ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் அச்சிட்டபின் எல்லாருஞ் சொலலுவர். இப்பொழுதும் அதிற் புலவர் எழுதியதிது முனிவரர் திருத்தியதிது என்று பகுத்தறியக் கிடக்கின்றதா? "நன்னூலுட்கருத்துலகோ ரறியவுரைசெய்கவென நரேந்திர சிங்கந், தென்னூற்றுமலைமருதப் பன்புகலப்பொருள்விளங்கச் செய்தான் பாரி, லெந்நூற்குமெழுத்தொடுசொற் பொருளறிசங்கரநமச்சி வாய னென்னும், பன்னூற்செந்தமிழ்ப்புலவன் சைவசிகாமணிநெல்லைப் பதியினனே." என்பதுதான் வெளி. வைத்தியநாததேசிகர் செய்த இலக்கணவிளக்கத்து அணியியலிற் சில சூத்திரங்கள் அவர்

மகன் சதாசிவதேசிகராற் சேர்க்கப்பட்டனவன்றோ? அதில் மைந்தனார் தந்தன இவையென யாவர் பிரித்துக்காட்டவல்லார்? ஆதலால் உலகறியச் சொல்லித் திருத்தல் தவறிலதாக, முழுத்தோட்டமும் அகத்திநாட்டினும் வெற்றிலைத் தோட்டம் வெற்றிலைத்தோட்டமேயாமென்க. ஆறாவது, சுவடிகளிற் பிழைப்பட்டிருக்கும் ரூபம் ஆசிரியரதல்ல என்பது மலையிலக்கு. பின்னை எப்படியும் யான் பிரசுரஞ் செய்யத்தக்கது ஆசிரியர் செய்த ரூபமல்லாதபோது, பிழைப்பட்டு ஒருபொருளுந் தராமலாவது விரோதப்பொருள் பயந்தாவது நிற்கும் ரூபத்தில் அவ்விரோதமில்லாதபடிக்கு யான் வைத்த ரூபந் தாழ்வுடையதன்று. ஏழாவது, ஓர் ஆருகத நூலை இவ்வாறு திருத்துவது சமணர்க்கு வெறுப்பாயிராதோ வெனின், திருத்திய இடம் அனைத்திலுஞ் சுவடிகளின் பாடமும் அவற்றின் குற்றமும் அவைகளில் யான்செய்த திருத்தமுஞ் சைனவித்துவான்களிற் சிறந்தோர் பலர்க்குக் காண்பித்து அன்னோர் முழுச்சம்மதியுடனேயே பதிப்பித்தேனென்றறிக. இருந்தபடியே பதிப்பிப்பது நூலாசிரியரின் மகத்துவத்தை ஒரோவொரு இடத்தில் இழிவுபெறச் செய்யத்தக்கதாதலின் அதுவே அவர்க்கு வெறுப்பாயிருக்குமென்பது அவர் மேருமந்தர புராணப்பதிப்பிற் காட்டும் அரோசிகத்தாற் றெளியலாம். மேலும் என் திருத்தங்களை அவர்கள் தங்கள் பிரதிகளிலுங் குறித்துக் கொண்டதே அவர்கள் சம்மதிக்குச் சான்றாகும். எட்டாவது, அப்படியாயின் இன்னாரால் திருத்தப்பட்டதென்று நாமதேய முகத்திற் போடுவது தானேயெனின், இலைமறைகாய்போல எங்கேயோ ஒவ்வொரு மாறுபாடு செய்ததால் நூல் என்னாற் திருத்தப்பட்டதாகாது. அல்லாமலும் ஆக்கியோன் மொழியினை யான் திருத்ினவனல்லன். பின் புக்க வழுவையன்றோ யான் திருத்தியது. மேலும் எனது திருத்தமே பூர்வசொரூபமாக இருப்பினும் இருக்கலாமே. நூலைத் திருத்தியவனென்ற மேன்மைக்கு யான் அருகனல்லேன். இக்காரணங்களால் உலகமென்னை மன்னிக்குமென்று முற்றிலும் நம்புகின்றேன். என் திருத்தங்கள் எப்படிப்பட்டனவென்று யாவரொருவா

அறிய விரும்புவராயின் அவர்க்கு அதனைத் தெரிவித்தல் என் கடன். தெரிந்து எடாது கைக்கு எதிர்ப்பட்டபடியே அவற்றிற் சிலவற்றைக் குறிப்புப் பண்ணி ஓர் அனுபந்தமாகச் சேர்த்திருக்கின்றனன். ஆண்டுக் கண்டுகொள்க.

மேற்கண்ட பிரதிகளை வைத்துக்கொண்டு பரிசோதனைபண்ணுகையில் ஆருகதசமயக்கோட்பாடுகள், தத்துவபேதங்கள், புராணக்கதைகள் சிறப்புப்பெயர்களிற் சில சமுசயங்கள் நேரிட்டன. அதற்காக வீடூர் வித்துவான் ஸ்ரீமான் அப்பாசாமி சாஸ்திரிகளை வர அழைத்து மூன்று மாதக்காலம் அவர்களைக் கூடவைத்திருந்து எனக்குள்ள சமுசயங்களைத் தீர்த்துக்கொண்டதுமன்றி அவர்கள் போன பின்பு நிகழ்ந்தன சிலவற்றை அப்பப்போ அவர்களுக்குக் கடிதமெழுதித் தெரிந்துகொண்டனன். இன்னுஞ் சந்தேகந் தீராத இடங்களும் இரணடொன்று உண்டு. அவர்கள் இத்தனை தூரம் வந்திருந்து எனக்குச்செய்த உதவியை எப்பொழுதும் மறவேன்.

இந்நூலுணர்ச்சிக்கு உபயோகமான சமண கிரந்தங்களை எனக்குக் காண்பித்ததுமன்றித் தமது கையிலிருக்கும் ஏடுகளில் எப்பொழுதேனும் யாதாயினும் வேண்டுமாயின் அதனை உடனே அனுப்பிவைப்பதாகத் தயைபுரிந்த மன்னார்குடி ஸ்ரீ மு. அ. அப்பாண்டமுதலியாருக்குஞ் சித்தாம்பூர் முதலிய இடங்களிலுள்ள சமணர் வசம் இருக்கும் நூல்கள் வேண்டிய காலங்களில் வாங்கி அனுப்புவதாக வாக்களித்த காஞ்சிபுரம் பச்சையப்ப பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் ம-௱-௱-ஸ்ரீ வ. கணபதிப்பிள்ளையவர்களுக்கும் என் வந்தனஞ் சொல்லுகின்றேன்.

இந்நூல் ஆருகத மகாபுராணத்திற் கூறிய நவவாசுதேவப்பிரதிவாசுதேவர்களிற் திப்பிரஷ்ட வாசுதேவனதும் அவ்வாசுதேவனுக்குப் பகையாய் அவதரித்த அயக்கிரீவப் பிரதிவாசுதேவனதுஞ் சரித்திரத்தை விரித்துக் கூறிப், பெரும்பாலுஞ் சமண காவியங்கள் துறவும் முத்தியும் உணர்த்தி

முடியுமாறுபோல, இருபத்துநாலு தீர்த்தங்கரருட் சிரேயசுவாமி தீர்த்தகாலத்திற் சுரமைநாட்டின்கண் போதனமாநகரத்திலிருந்து அரசுபுரிந்த பயாபதி அரசன் தன் குமாரனை அவ்வாசுதேவனைப் பூமியாளவைத்துத் துறந்து தன் தேவிமாரோடு முத்திபெற்ற கதையை எடுத்துச் சொல்லும். இந்நூற் சீயவதையும் வித்தியாதரவிவாகமுஞ் சேடியர்சங்காரமுங் கிருஷ்ணசரித்திரத்திற் சேர்ந்தனவல்லவாயினும், திவிட்டராசன் குணுதிசயங்கள் திருமாலின் அவதாரமாகிய கண்ணபெருமானதும், திவிட்டனுக்கு மூத்தோனுகிய விசயன் குணுதிசயங்கள் கண்ணன் அண்ணன் பலபத்திரனதும் இலக்ஷணங்களோடு ஒருவாறு ஒத்திருக்கும்.

சீவகசிந்தாமணிச் சரித்திரத்தைச் சிந்தாமணிப் பதிப்பின் முதலிற் ஸ்ரீமத் சாமிநாதையரவர்கள் சுருக்கிக் காட்டியதுபோல, இந்நூலை எளிதிற் படித்து உணர்தற்கு உபயோகமாக இதன் முதலிலுந் திவிட்டன் கதையைப் பொழிப்பாகக் காட்டும்படி எனது இஷ்டர் சிலர் கேட்டுக்கொண்டனர். இக்கதையை வசனரூபமாக யாழ்ப்பாணம் வித்துவான் ஸ்ரீ தாவடி அம்பிகைபாக உபாத்தியாயர் எழுதிவருவதால் அதன் சாரத்தை இவ்விடம் வேறுகப் பதித்தல் அவசியமன்றெ நிறுத்தினன். அன்றியும் இக்காலத்து மிகச் சிறந்த வித்துவான் ஒருவர் இந்நூற்கு உரையெழுதி அச்சிடுவிக்கக் கருதியிருப்பதாகவுந் தெரியவருகின்றது.

இக்கதையில் வரும் அரசாதியோர் பெயர் ஊர் சம்பந்தம் முதலிய அறிதல் கதைத்தொடர்ச்சியை லேசில் உணர்தற்கு உபயோகமாகுமாதலின் அவற்றிற்கு ஓர் அகராதி சேர்த்திருக்கின்றேன்.

பிரதிகள் தேடிப் பரிசோதித்து இந்நூலைப் பதிப்பித்தற்கு உபயோகமான திரவியம் றங்கூனிலிருக்கும் என் சகோதரன் செல்வச் சிரஞ்சீவி இளையதம்பிப்பிள்ளையும் அவரது இஷ்டர் சிலருஞ் சேர்ந்து அனுப்பியதென்று முன் தெரிவித்தேன். அவர்களைப் போல்வார் பிறர்க்கும் இப்படிப்

பட்ட விஷயத்தில் ஊக்கம் உண்டாதற் பொருட்டு அன்னோர் பெயர் விவரத்தை இவ்விடந் தருகின்றேன்.

பணம் அனுப்பினோர் பெயர்வழி.

ம-ா-ா-ஸ்ரீ தி. எம். குட்டியாபிள்ளையவர்கள், றங்கூன் கமிசேரியட் ருெட்டிச்சாலை மானேஜர் ரூ க00.

,, ஏ. சரவணமுதலியாரவர்கள், றங்கூன் கன்டிரோலர் ஆபீசு சுப்பரின்டென்டன்ட் ரூ ௫0.

,, வி. நமசிவாயபிள்ளையவர்கள், எம். ஏ., வி. எல்., கல்கத்தா ஹைகோர்ட்வக்கீல், றங்கூன் றிக்கார்டர்ஸ்கோர்ட் அட்வக்கேட் ரூ ௫0.

,, பா. குப்புசாமிமுதலியாரவர்கள், றங்கூன் கமிசேரியட் மானேஜர் ரூ ௫0.

,, தி. வி. கிருஷ்ணசாமிநாயுடுகாரு, றங்கூன் கண்டிருாக்றர் ரூ ௫0.

,, பி. வேதாசலமுதலியாரவர்கள், றங்கூன் பர்மா ஸ்டேட் றேல்வே பொக்கிஷதாரர் ரூ ௫0.

,, தி. எம். பொன்னுசாமிப்பிள்ளையவர்கள், றங்கூன் பேப்பர் கறென்ஸி ஆபீசு பொக்கிஷதாரர் ரூ ௫0.

,, சி. வை. இளையதம்பிப்பிள்ளையவர்கள், றங்கூன் டிப்டி கம்மிஷனர் ஆபீசு ஹெட் அக்கவுண்டன்ட் ரூ க00.

ஆ. ரூ ௫00.

இவர்கள் செய்த இவ்வுபகாரத்தை யான் ஒருபோதும் மறவேன். இவர்கள் முன் மாதிரியைப் பின்பற்றி இன்னும் அனேகர் தத்தமக்கு ஏற்ற வித்துவான்களைக்கொண்டு பற்பல பழைய தமிழ்நூல்களை வெளிப்படுத்தி நிலைநிறுத்தக் கலைமகள் கடாட்சிப்பாளாக.

தொண்டமான் புதுக்கோட்டை
விரோதிவரு கார்த்திகைமீ
சி. வை. தா.

அநுபந்தம்.

புதுத்திருத்த உதாரணம்.

சருக்கம்.	செய்யுள்.	பாடம்.	திருத்தம்.
நகரம்	௩௦	மாண்பிவன்	மாண்பினும்
குமாரகாலம்	௧	அமர்ந்தகர்ப்பம்	அமரர்கற்பம்
மந்திரசாலை	௫௯	மன்னும்	மண்ணும்
	௬௩	அரியஞ்சும்	அரிமஞ்சு
	௬௭	ஈங்குலக்கொம்போடு	ஈங்குநங்குலக்கொம்பு
	௭௭	மடமாதர்	மடமாதின்று
	௧௦௦	வீட்டினன்	ஈட்டினன்
	௧௬௦	ஆழியாற்கடலிடம்	ஆழியாற்ககவிடம்
	௧௬௨	ஒன்பதென்பவே	ஒன்பதொன்பதே
	௧௮௮	செய்யதேவிதுமினி	செய்யதோர்தூதினித்
தூது	௧௪	தயங்கிதனெனப்	அங்கதனெனும்
	,,	அன்னவிருவானூற்	பொன்னவிருநூல்கெழு
	௩௪	வெம்முலை	வெம்முகம்
	௪௦	நினையா	துணியா
	௪௫	பூமரக்குழாம்	சாமரக்குழாம்
	௫௦	வாய்நெடுங்கணார்	வாயநெடியகண்
	௬௦	மைம்முகத்து	வெம்முகத்து
	௧௪௨	பொற்றாமரை	போர்த்தாமரை
நியவதை	௪௪	அவரல்லன	பொழுதும்மலால்
	௯௯	கொடுமின்	தெரிமின்
	௧௪௪	உடன்றெழுந்த	உடைந்தொழிந்த
கல்யாணம்	௧௭௦	நடக்கவல்ல	நடையிற்றூய
	௧௯௧	அன்னோர்	விண்ணோர்
	௨௦௨	மேய்ந்து	நீத்து
	௨௭௦	பால்பணியவைத்த	வால்வளைபயின்று
அரசியல்	௩௬	தகர்த்து	புடைத்து
	௨௦௧	வேலினலவ்	வேலின்வந்த
	௩௯	வெண்டாமரை	தாமரைவெண்
	௪௦௧	மரையும்	மரைபுரையும்
சுயம்வரம்	௩௬	வல்லிதழ்	வள்ளிதழ்
	௧௯௬	அரவம்படிந்தாள்	ஆயம்படிந்தாள்
	௨௪௫	முலைகடோளவர்கள்	முலைகளோடவர்கள்
முத்தி	௯	நணிந்து	நலிந்து

சூளாமணிச்சிறப்புப்பெயரகராதி.

அங்கதன்-ஒருநிமித்திகன்

அங்கம்-ஒருதேயம்

அங்காரவேகன்-சுவலனபுரத்தரசன்

அசோதரன்-ஒருமுனிவன்

அச்சுவகண்டன், அச்சுவக்கிரீவன்-இரத்தினபல்லவத்தரசன்; மயூரகண்டன் மகன்; பூலோக வித்தியாதரலோகங்கள் முழுதுந் திறைபெற்று அதிபதித்துவஞ் செலுத்தியவன்; நவப்பிரதிவாசுதேவர்களில் ஒருவன்.

அச்சுவபுரம் - ஒருவித்தியாதரநகரம்

அஞ்சுமான்-மருசியின் தந்தை.

அத்தினபுரம்-குருகுலத்தரசர் நகரம்

அபிநந்தனன்-ஒருசாரணன்

அமராபுரம்-ஒருவித்தியாதர நகரம்

அமிததேசன் - அருக்ககீர்த்தி மகன்

அமிர்தபிரபை-சயம்பிரபைதோழி

அமிழ்தபதி - ஒருவித்தியாதர நகரம்

அயகண்டன், அயக்கிரீவன்-அச்சுவக்கிரீவன்

அயோத்தி - இக்குவாகுலத்தரசர் நகரம்

அரிகண்டன் - கீதமாநகர ராசகுமாரன்

அரிகேது-ஒருவித்தியாதரன்; மாயாசிம்மமாகத் திவிட்டனிடம் அரிமஞ்சுவால் அனுப்பப்பட்டவன்

அரிசேனன் - ஒருவித்தியாதரன்; அச்சுவகண்டன் தோழன்.

அரிபுரம்-ஒருவித்தியாதர நகரம்

அரிமஞ்சு - அச்சுவக்கிரீவன் மந்திரி

அருக்ககீர்த்தி - சடியரசன்மகன்; திவிட்டன் மைத்துனன்

அருசிமாலை-மருசியின் தாய்

அருஞ்சயன் - இந்திரசஞ்சயராசகுமாரன்

அவந்தி-ஒருதேயம்

அளிதாங்கன்-திரிபுரராச குமாரன்

இந்திரசஞ்சயம் - ஒருவித்தியாதர நகரம்

இரதநூபுரம்-ஒருவித்தியாதர நகரம்

இரத்தினகண்டன் - அச்சுவகண்டன் மக்கள் நூற்றுவரில் மூத்தவன்

இரத்தினபல்லவம் - ஒருவித்தியாதர நகரம்

இரத்தினபுரம் - ஒருவித்தியாதர நகரம்

இரமியதரன் - தேவரவணத்தரசன்

உறந்தை-ஒருநகரம்

ஏமாங்கதம்-ஒருநகரம்

ஏமாங்கதன் - சித்திரகூடராச குமாரன்

கங்கை - கீழ்க்கடலிற்பாயும் ஓர் யாறு

கச்சன் - காசிராசன்; சடியரசன் இவன்மரபிற் தோன்றியவன்

கந்தமாதனம்-ஒருவித்தியாதர நகரம்

கந்தருவம்-ஒருவித்தியாதரநகரம்
கமலமாலதை, கமலமாலினி-ஒரு வித்தியாதர அரம்பை
கருடாங்கதன்-கிருதமாதனத் தரசன்
கலிங்கம்-ஒருதேயம்
கலியாணிகை - ஒரு வித்தியாதர அரம்பை
கனககாமன்-அச்சுவகண்டன் படைவீரரில் ஒருவன்
கனகசித்திரன் - அச்சுவபுரத் தரசன் குமாரன்
கனகசித்திரை - அச்சுவகண்டன் தேவி
கனகபல்லவம் - ஒருவித்தியாதர நகரம்
காசி-ஒருநகரம்
காந்திமதி-பவனவேகன் மனைவி
காபுரம்-ஒருநகரம்
காமன் - பிரசாபதி படைவீரரில் ஒருவன்
காமுகன்-பிரசாபதி படைவீரரில் ஒருவன்
கிருதமாதனம் - ஒரு வித்தியாதர நகரம்
கின்னரகீதம் - ஒருவித்தியாதர நகரம்
கீதமாபுரம் - ஒருவித்தியாதரநகரம்
குணசேனன் - அச்சுவக்கிரீவன் சேனைவீரரில் ஒருவன்
குண்டலபுரம் - ஒரு வித்தியாதர நகரம்
கோசலம்-ஒருதேயம்
கோடிசிலை-சுரமை நாட்டில் ஒரு மலை.
சகநந்தனன்-ஒரு சாரணன்
சக்கிரவாளம்-ஒருவித்தியாதர நகரம்
சசி-பிரசாபதியின் இளையராணி
சடி-இரதநூபுரத்தரசன்; அருக்ககீர்த்திக்குஞ் சயம்பிரபைக்குந் தந்தை

சண்டவேகை - மாயாவிஞ்சைத் தெய்வம்
சதவிந்து - ஒருநிமித்திகன்; சடியரசன் புரோகிதன்
சயசேனன்-பவகிரிபுரத்தரசன்
சயம்பிரபை-திவிட்டன்தேவி; சடியரசன் புத்திரி
சயம்பூல் - வடமலையில் அரசுபுரிந்து பின் துறவினால் அதிகமேன்மை பெற்றவன்
சார்த்தூலகன்-பிரசாபதிபடைவீரரில் ஒருவன்
சிங்ககேது - கனகபல்லவராச குமாரன்
சித்திரகூடம்-ஒருவித்தியாதர நகரம்
சித்திரதரன் - சோபனபுரத்தரசன்
சித்திரதரன் - போதனபுரத்தில் ஒரு சிற்பன்
சித்திரரதன்-ஸ்ரீநிலை ராசகுமாரன்
சிந்து - மேற்கடலிற் பாய்வதோர் யாறு
சிந்து - ஒருதேயம்; சுரமைநாட்டைச் சேர்ந்தது
சுகண்டன் - அச்சுவக்கிரீவன் தம்பி
சுச்சுதன் - சடியின் மந்திரிகளில் ஒருவன்
சுதசாகரன்-சடியின்மந்திரிகளில் ஒருவன்
சுதஞ்சனை-கச்சன்மனைவி
சுதாரை-அருக்ககீர்த்தி புதல்வி
சுமந்திரி-சடியின் முதல் மந்திரி
சுரமியம் - சுரமை நாட்டில் ஒரு வனம்
சுரமை-பிரசாபதியரசன் நாடு
சுரேந்திரகாந்தம் - ஒருவித்தியாதர நகரம்
சுவணகேது - அச்சுவகண்டன்படைவீரரில் ஒருவன்
சுவலனபுரம்-ஒருவித்தியாதர நகரம்
சுவலனரதன்-அமராபுரத்தரசன் சடி அரசன் தம்பி

சூரியபுரம்-அரிகுலத்தரசர் நகரம்
சொன்னரதன்-இரத்ினபுரராச குமாரன்
சோதிமாலை-திவிட்டன்புதல்வி
சோதிமாலை - மேகவாகனன் புதல்வி; அருக்ககீர்த்தி மனைவி
சோபனம்-ஒருவித்தியாதரநகரம்
திரிபுரம்-ஒருவித்தியாதரநகரம்
திருநிலையகம்-போதனநகரில் ஒரு நந்தவனம்
திருநிலையகம்-ஒருவித்தியாதர நகரம்
திவாகரன்-கந்தமாதனத்தரசன்
திவிட்டன் - பிரசாபதியின் இளையராணிவழிப்புத்திரன்; நவவாசுதேவ அவதாரத்தில் ஒன்று
துருமகாந்தன்-புட்பமாகாண்டத்திற்குக் காவலாக வைக்கப்பட்டவன்
தூமகேது-மேககூடத்தரசன்
தேவசேனன்-பிரசாபதி சேனைவீரரில் ஒருவன்
தேவரவணம்-ஒருவித்தியாதரநகரம்
நமி-கச்சன் புதல்வன்
நாதவன்-குண்டலபுரத்தின் முதல் அரசன்; இவனாற் றோன்றியகுலம் நாதவகுலம்
நீலகண்டன்-அச்சுவக்கிரீவன் தம்பி
நீலரதன்-அச்சுவக்கிரீவன் தம்பி
நீலாங்கனை - மயூரகண்டன் மனைவி
பதுமரதன்-மேகபுரராசகுமாரன்
பயாபதி-பிரசாபதி
பரதன்-இக்குவாகுலத்தில் ஓரரசன்
பவகிரி-ஒருவித்தியாதரநகரம்
பவச்சுதன்-சடியின் மந்திரிகளில் ஒருவன்
பவபுரம்-ஒருவித்தியாதரநகரம்
பவனஞ்சன் - கின்னரகீதராசகுமாரன்

பவனவேகன்-பவபுரத்தரசன்
பிரசாபதி - சுரமைநாட்டரசன்; திவிட்டன் தந்தை; வாகுவலி வமிசத்திற் றோன்றியவன்
பிரிதிமதி-சயசேனன் மனைவி
பிரீதிவர்த்தனன் - வருத்தமான புரத்தரசன்
புட்பமாகாண்டம்-பிரசாபதியின் நந்தவனம்
போதனம் - சுரமைநாட்டிராசதானி
மகதை-மகததேயம்
மதுரை-சந்திரகுலத்தரசர் நகரம்
மயூரகண்டன் - அச்சுவக்கிரீவன் தந்தை
மருசி-சடியரசனாற் பிரசாபதியினிடம் அனுப்பப்பட்டதூதன்
மனோவனம் - சடியரசன் நந்தவனம்
மாதவசேனை-சசியின் தோழி
மிருகாபதி-பிரசாபதியின் முதற்றேவி
மேககூடம் - ஒருவித்தியாதரநகரம்
மேகபுரம்-ஒருவித்தியாதரநகரம்
மேகமாலினி - மேகவாகனன் மனைவி
மேகவாகனன் - சுரேந்திரகாந்த அரசன்
வங்கம்-ஒருதேயம்
வச்சிரகண்டன்-அச்சுவக்கிரீவன் தம்பி
வச்சிரதாடன்-சக்கிரவாளத்தரசன்
வயந்தசேனை-சசியின்தோழி
வயந்தமாதிலகை- சயம்பிரபையின் செவிலித்தாய்
வயந்தமாதிலகை - ஒருவித்தியாதர அரம்பை
வரசேனன்-அச்சுவகண்டன் சேனைவீரரில் ஒருவன்
வருத்தமானம் - ஒருவித்தியாதர நகரம்
வாகுவலி-ஓரரசன்; கச்சன் மருகன்; பிரசாபதி இவன் வழி

யிற் றோன்றியவன்
வாயுவேகன்-பிரசாபதி சேனாவீரரில் ஒருவன்
வாயுவேகை-சடியரசன் தேவி
வாயுவேகை - காந்திமதி தோழி; மருசியின் சகோதரி
வாரணவசி - உக்கிரகுலத்தரசன் நகரம்
விசயகூடம்-ஒருவித்தியாதர நகரம்
விசயபத்திரன்-சயசேனன் புதல்வன்; சாசாரமென்னும் இந்திர பதவியை ஆண்டு பின்பு விச்சுவனாக அவதரித்தவன்
விசயன்-பிரசாபதியின் முதற்றேவிமழிப்புத்திரன்; பலதேவன் அவதாரம்
விசயன்-திவிட்டன் புதல்வன்
விச்சுவன் - மேகவாகனன் புதல்வன்
விதூடகன்-திவிட்டன்விகடகவி
வியந்தசேனை-ஒருவித்தியாதர அரம்பை
வியாக்கிரரதன்-அரிபுரத்தரசன்
விருககடி-கந்தருவநகரத்தரசன்
வேகரதன்-அமிர்தபுரத்திராச குமாரன்
வேகரதன்-விசயகூடத்தரசன்
ஸ்ரீசேனன்-அச்சுவகண்டன் சேனாவீரரில் ஒருவன்
ஸ்ரீநிலை-ஒருவித்தியாதரநகரம்
ஸ்ரீநிலையகம்-திருநிலையகம்
ஸ்ரீபாலன்-திருநிலயகத்தரசன்
ஸ்ரீபாலன் - பிரசாபதியரசன் தம்பி

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சூளாமணி.

காப்பு.

வென்றான்வினையின்றொகையாகிவிரிந்துதன்க
ணென்றாய்ப்பரந்தவுணர்வின்னொழியாதுமுற்றுஞ்
சென்றான்றிகழுஞ்சுடர்சூழொளிமூர்த்தியாகி
நின்றானடிக்கீழ்ப்பணிந்தார்வினைநீங்கினின்றார்.

பாயிரம்.

அங்கண்ணுலகிற்கணிவான்சுடராகிநின்றான்
வெங்கண்வினை * போழ்ந்திருவைச்சரண்சென்ற மேனாட்
பைங்கண்மதர்வைப்பகுவாயரியேறுபோழ்ந்த
செங்கண்ணெடியான்சரிதம்மிதுசெப்பலுற்றேன். (க)

கொற்றங்கொணேமிநெடுமால்குணங்கூறவிப்பா
லுற்றிங்கொர்காதல்கிளரத்தமிழ்நூற்கலுற்றேன்
மற்றிங்கொர்குற்றம்வருமாயினுநங்கள்போல்வா
ரற்றங்கள்காப்பாரறிவிற்பெரியார்களன்றே. (௨)

நாமாண்புரைக்குங்குறையென்னினுநாமவென்வேற்
றேமாணலங்கற்றிருமானெடுஞ்சேந்தனென்னுந்
தூமாண்டமிழின்கிழவன்சுடராரமார்பிற்
கோமானவையுட்டெருண்டார்கொளப்பட்டதன்றே. (௩)

* செய்யுமென்னும் முற்று. † சிரேயசுவாமிதீர்த்தகாலம்.

செங்கண்ணெடியான்றிறம்பேசியசிந்தைசெய்த
நங்கண்மறுவுமறுவன்றுநல்லார்கண்முன்ன
ரங்கண்விசும்பினிருள்போழ்ந்தகல்வானெழுந்த
திங்கண்மறுவுஞ்சிலர்கைதொழச்செல்லுமன்றே. (௪)

விஞ்சைக்கிறைவன்விரைசூழ்முடிவேந்தன்மங்கை
பஞ்சிக்கனுங்குஞ்சிலம்பாரடிப்பாவைபூவார்
வஞ்சிக்கொடிபோல்பவள்காரணமாகவந்த
செஞ்சொற்புராணத்துரையின்வழிச்சேறுமன்றே. (௫)

பாயிரம் முற்றிற்று.

ஆ விருத்தம் - ௫.

முதலாவது

நாட்டுச்சருக்கம்.

மஞ்சுசூழ்மணிவரையெடுத்தமாலம
ரிஞ்சிசூழணிநகரிருக்கைநாடது
விஞ்சைநீளுலகுடன்விழாக்கொண்டன்னது
துஞ்சுநீணிதியதுசுரமையென்பவே. (௧)

பங்கயங்காடுகொண்டலர்ந்தபாங்கெலாஞ்
செங்கயலினநிரைதிளைக்குஞ்செல்வமு
மங்கையர்முகத்தனமதர்த்தவாளரி
யங்கயற்பிறழ்ச்சியுமருதநீரவே. (௨)

ஆங்கவரணிநடையன்னத்தோட்டன
தீங்குரன்மழலையாற்சிலம்புந்தண்பணை
வீங்கிளமுலையவர்மெல்லென்சீறடி
யோங்கிருஞ்சிலம்பினாற்சிலம்புமூர்களே. (௩)

நிழலகந்தவழ்ந்துதேனிரந்துதாதுசேர்
பொழிலகம்பூவையுங்கிளியும்பாடுமே
குழலகங்குடைந்துவண்டுறங்குங்கோதையர்
மழலையும்யாழுமேமலிந்தமாடமே. (௪)

காவியுங்குவளையுநெகிழ்ந்துகள்ளூமி
ழாவியுண்டடர்த்ததேனகத்துமங்கையர்
நாவியுங்குழம்புமுண்ணகிலநற்றவ
மேவிநின்றவரையுமெலியவிம்முமே. (௫)

வானிலங்கருவியவரையுமுல்லைவாய்த்
தேனிலங்கருவியதிணையுந்தேறல்சேர்
பானலங்கழனியுங்கடலும்பாங்கணி
நானிலங்கலந்துபொன்னரலுநாடதே. (௬)

வேறு.

முன்றிலெங்குமுருகயர்பாணியுஞ்
சென்றுவீழருவித்திரளோசையும்
வென்றிவேழமுழக்கொடுகூடிவா
னென்றிநின்றதிரும்மொருபாலெலாம். (௭)

ஏறுகொண்டெதியும்பணைக்கோவலர்
கூறுகொண்டெழுகொன்றையந்தீங்குழல
காறுகொண்டவர்கம்பலையென்றிவை
மாறுகொண்டுசிலம்புமொர்மாடெலாம். (அ)

அணங்கனுரணவாடன்முழவமுங்
கணங்கொள்வாரணக்கம்பலைச்செல்வமும
மணங்கொள்வார்முரசும்வயலோதையு
மிணங்கியெங்குமிருக்குமொர்பாலெலாய். (௯)

கலவரின்னியமுங்கடலச்சிறுர்
புலவுநீர்ப்பொருபூணெதிபூசலும்
நிலவுவெண்மணனீளிருங்கானல்வா
யுலவுமோதமுமோங்குமொர்பாலெலாம். (௧௦)

கைவிரிந்தனகாந்தளும்பூஞ்சுனை
மைவிரிந்தனநீலமும்வான்செய்நாண்
மெய்விரிந்தனவேங்கையுஞ்சோர்ந்ததே
னெய்விரிந்தனநீளிருங்குன்றெலாம். (௧௧)

கொன்றையுங்குருந்துங்குலேக்கோடலு
முன்றிலேறியமுல்லேயம்பந்தரு
நின்றுதேனிரந்தூதவிரிந்தரோ
மன்றெலாமணநாறுமருங்கினே. (கஉ)

நாறவிண்டனநெய்தலுநாண்மதுச்
சேறுவிண்டசெந்தாமரைக்கானமு
மேறிவண்டினமூன்றவிழ்ந்ததே
னூறிவந்தொழுகும்மொருபாலெலாம. (கங)

கோடுடைந்தனதாழையுங்கோழிருண்
மோடுடைந்தனமூரிக்குவளேயுந்
தோடுடைந்தன * சூகமுங்கற்பகக்
காடுடைந்தனபோன்றுளகானலே. (கச)

நீலவாலவட்டத்தினிறங்கொளக்
கோலும்பீலியகோடுயர்குன்றின்மே
லாலுமாமழைநீண்முகிலார்த்தொறு
மாலுமாமயிலர்லுமொர்பாலெலாம். (கரு)

நக்கமுல்லேயுநாகிளங்கொன்றையு
முக்கதாதடர்கொண்டொலிவண்டுரு
வெக்கரீர்மணற்கிண்டியிளம்பெடைப்
பக்கநோக்கும்பறவையொர்பாலெலாம். (கசு)

துள்ளருக்கவுட்கொண்டுசுரும்பொடு திருமீன்
கள்ளருதசெந்தாமனாக்கானகத்
துள்ளருதுதைந்தோகையிரட்டுறப்
புள்ளருதுபுலம்பினபொய்கையே. (கஎ)

வெண்முளேப்பசுந்தாமரைமென்சுருண்
முண்முளேத்திரளோடுமுனிந்துகொண்
டெண்முளேத்திளவன்னமுழக்கலாற்
கண்முளேத்ததடத்தகழியெலாம். (கஅ)

---

* சூகம்—தாமரை ஆம்பல் முதலிய நீர்ப்பூவின் பொதுப்பெயர்.

காந்தளங்குலையாற்களிவண்டினங்
கூந்திளம்பிடிவீசக்குழாங்களோ
டேந்துசந்தனச்சாரலிருங்கைம்மா
மாந்திநின்றுறங்கும்வரைமாடெலாம். (௧௯)

தார்செய்கொன்றைதளித்ததண்டேறலுண்
டேர்செய்கின்றவிளம்புலிருங்குழைக்
கார்செய்காலைகறித்தொறுமெல்லவே
போர் * செய்மாவினம்பூத்தன்புறணியே. (௨௦)

அள்ளிலைக்குவளைத்தடமேய்ந்தசைஇக்
கள்ளலைத்தகவுட்கருமேதிபா
லுள்ளலைத்தொழுகக்குடைந்துண்டலாற்
புள்ளலைத்தபுனலபுலங்களே. (௨௧)

கெண்டையஞ்சினைமேய்ந்துகிளர்ந்துபோய்
முண்டகத்துறைசேர்ந்தமுதலைமா
வண்டல்வார்கரைமாமகரக்குழாங்
கண்டுநின்றுகனலுங்கழியெலாம். (௨௨)

கண்ணிலாங்கழையின்கதிர்க்கற்றையு
மண்ணிலாங்குரல்வார்தினைவாரியு
மெண்ணிலாங்கவிளைவனவீட்டமு
முண்ணிலாங்குலவாமையுயர்ந்தவே. (௨௩)

பேழ்த்தகாயினபேரெட்பிறங்கிணர்
தாழ்த்தகாயனதண்ணவரைக்கொடி
சூழ்த்தகாய்த்துவரைவரகென்றிவை
மூழ்த்தபோன்றுளமுல்லைநிலங்களே. (௨௪)

மோடுகொண்டெழுமூரிக்கழைக்கரும்
பூடுகொண்டபொதும்பரொடுள்விராய்த்
தோடுகொண்டபைங்காய்துவள்செந்நெலின்
காடுகொண்டுளகண்ணகனடெலாம். (௨௫)

---

* செய்யுமென்னும் முற்று.

சங்குநித்திலமுந்தவழிப்பியுந்
தெங்கந்தீங்குலையூறியதேறலும்
வங்கவாரியும்வாரலைவாரியுந்
தங்குவாரியதங்கடனுடெலாம். (உசு)

வேறு.

கொடிச்சியர்புனத்தயற்குறிஞ்சிநெய்பக
ரிடைச்சியர்கதுப்பயற்கமழுமேழையங்
கடைச்சியர்களையெறிகுவளைகானல்வாய்த்
தொடுத்தலர்பிணையலார்குழலுட்டோன்றுமே. (உஎ)

கலவர்தஞ்சிறுபறையிசையிற்கைவினைப்
புலவர்தேம்பிழிமகிழ்குரவைபொங்குமே
சூலவுகாற்கோவலர்கொன்றைத்தீங்குழ
லுலவுளைசுணமாவுறங்குமென்பவே. (உஅ)

மாக்கொடியானையுமௌவற்பந்தருங்
கார்க்கொடிமுல்லையுங்கலந்துமல்லிகைப்
பூக்கொடிப்பொதும்பருங்கானஞாழலுந்
தூக் * கொடிகமழ்ந்துதாந்துறக்கமொக்குமே. (உகூ)

நாட்டுச்சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம் - ௩௰.

இரண்டாவது

நகரச்சருக்கம்.

சொன்னநீர்வளமைத்தாயசுரமைநாட்டகணிசார்ந்து
மன்னன்வீற்றிருந்துவைகநூலவர்வகுக்கப்பட்ட
பொன்னவிர்புரிசைவேலிப்போதனமென்பதுண்டோர்
நன்னகர்நாகலோகநகுவதொத்தினியதொன்றே. (க)

சங்கமேய்தரங்கவேலித்தடங்கடற்பொய்கைபூத்த
வங்கண்மாஞாலமென்னுந்தாமரையலரினங்கேழ்ச்
செங்கண்மால்சுரமையென்னுந்தேம்பொகுட்டகத்துவைகு
நங்கையார்படிவங்கொண்டநலத்ததுநகரமன்றே. (உ)

* கொடி—வாசனை.

செஞ்சுடர்க்கடவுடிண்டேரிவுளிகாறிவளவூன்று
மஞ்சுடைமதர்வைநெற்றிவானுழுவாயின்மாடத்
தஞ்சுடரிஞ்சியாங்கோரகழணிந்தலர்ந்ததோற்றம்
வெஞ்சுடர்விரியுமுந்நீர்வேதிகைமீதிட்டன்றே. (௩)

இரும்பிடுதொடரின்மாவினைமுழுதற்பிணித்தயானைக்
கரும்பிடுகவளமூட்டுங்கம்பலைகலந்தகாவி
னரும்பிடையலர்ந்தபோதினல்லியுண்டரற்றுகின்ற [ம்.
சுரும்பொடுதுதைந்துதோன்றுஞ்சூழ்மதிலிருக்கையெல்லா

மானளாமதர்வைநோக்கின்மையரிமழைக்கணார்தந்
தேனளாமுருவக்கண்ணிச்செல்வர்தோடிளைக்குமாடங்
கானளாங்காமவல்லிகற்பகங்கலந்தகண்ணான்
வானளாய்மலர்ந்துதோன்றுமணிவரையனையதொன்றே. (௫)

வேறு.

அகிலெழுகொழும்புகைமஞ்சினூடவு
முகிலிசையெனமுழாமுரன்றுவிம்மவுந்
துகிலிகைக்கொடியனார்மின்னிற்றோன்றவு
மிகவினமலையொடுமாடமென்பவே. (௬)

கண்ணெலாங்கவர்வனகனககூடமும்
வெண்ணிலாச்சொரிவனவெள்ளிவேலியுந்
தண்ணிலாத்தவழ்மணித்தலமுஞ்சார்ந்தரோ
மண்ணினுலியன்றிலமதலைமாடமே. (௭)

மாடவாய்மணிமுழாவிசையுமங்கைய
ராடுவார்சிலம்பிணையதிருமோசையும்
பாடுவார்பாணியும்பயின்றுபல்கல
மூடிமாணகரதுமுரல்வதொக்குமே. (௮)

தாழிவாய்க்குவளையுந்தண்ணெனேதியர்
மாழைவாணெடுங்கணுமயங்கிவந்துசென்
றூழிவார்மின்குரலாலித்தார்த்தரோ
வேழைவாய்ச்சுரும்பினமிளைக்குமென்பவே. (௯)

பளிங்குபோழ்ந்தியற்றியபலகைவேதிகை
விளிம்புதோய்நெடுங்கடைவீதிவாயெலாந்
துளங்குபூமாலையுஞ்சுரும்புந்தோன்றலான்
வளங்கொள்பூங்கற்பகவனமும்போலுமே. (௧0)

காவிவாய்க்கருங்கணார்காமர்பூஞ்சிலம்
பாவிவாய்மாளிகையதிரக்கேட்டொறுந
தூவிவான்பெடைதுணைதுறந்தகொல்லென
வாவிவாயிளவனமயங்குமென்பவே. (௧௧)

* விலத்தகைப்பூந்துணர்விரிந்தகோதையர்
நலத்தகைச்சிலம்படிநவிலவூட்டிய
வலத்தகக்குழம்புதோய்ந்தரசவீதிகள்
புலத்திடைத்தாமரைபூத்தபோலுமே. (௧௨)

கண்ணிலாங்கடிமலர்க்குவளைக்கற்றையும்
வெண்ணிலாத்திரளெனவிளங்குமாரமும்
வண்ணவான்மல்லிகைவளாயமாலையு
மண்ணன்மாநகர்க்கவைக்கரியவல்லவே. (௧௩)

தேம்பழுத்தினியநீர்மூன்றுந்தீம்பலா
மேம்பழுத்தளிந்தனசுளையும்வேரியு
மாம்பழக்கனிகளுமதுத்தண்டீட்டமுந்
தாம்பழுத்துளசிலதவளமாடமே. (௧௪)

மைந்தருமகளிருமாலைகாலையென்
றந்தரப்படுத்தவரறிவதின்மையாற்
சுந்தரப்பொற்றுகடுதைந்தபொன்னக
ரிந்திரவுலகம்வந்திழிந்ததொக்குமே. (௧௫)

மற்றமாநகருடைமன்னன்றன்னுய
ரொற்றைவெண்குடைநிழலுலகிற்கோருயிர்ப்
பெற்றியான் † பயாபதியென்னும்பேருடை
வெற்றிவேன்மணிமுடிவேந்தர்வேந்தனே. (௧௬)

* விலம், நீர்நிலை—பள்ளத்தாக்கு. † பிரசாபதியென்றும் பாடம்.

எண்ணினரெண்ணகப்படாதசெய்கையா
னண்ணியரகன்றவர்திறத்துமாணையா
னண்ணுநர்பகைவரென்றிவர்க்குநாளினுந்
தண்ணியன்வெய்யனந்தானைமன்னனே. (கஎ)

நாமவேனரபதியுலகங்காத்தநாட்
காமவேள்கவர்கணைகலந்ததல்லது
தாமவேல்வயவர்தந்தழலங்கொல்படை
நாமநீர்வரைப்பகஙலிவதில்லையே. (கஅ)

ஆறிலொன்றறமெனவருளினல்லதொன்
றாறுசெய்துலகினினுவப்பதில்லையே
மாறிநின்றவரையும்வணக்கினல்லது
சீறிநின்றெவரையுஞ்செகுப்பதில்லையே. (க௯)

அடிநிழலரசரையளிக்குமாய்கதிர்
முடிநிழல்முனிவரர்சரணமூழ்குமே
வடிநிழல்வனைகதிரெஃகின்மன்னவன்
குடைநிழலுலகெலாங்குளிர்கின்றதே. (உ0)

மன்னியபகைக்குழாமாறும்வையகந்
துன்னியவரும்பகைத்தொகையுமின்மையாற்
றன்னையுந்தரையையுங்காக்குமென்பதம்
மன்னவன்றிறத்தினிமருளவேண்டுமோ. (உக)

மேலவர்மெய்ப்பொருள்விரிக்கும்வீறுசா
லூலினுற்பெரியவர்நுழைந்தசுற்றமா
வாலுநீரன்னமோடரசவன்னமே
போலநின்றுலகினைப்பொதுமைநீக்கினன். (உஉ)

கொதிநுனைப்பகழியான்குறிப்பினல்லதொன்
றிதுநமக்கிசைக்கெனவெண்ணுமெண்ணிலா
னொதுமலர்வெருவுறுநுவற்சியானபின்
னதுவவன்பகுதிகளமைதிவண்ணமே. (உ௩)

மற்றவன்றேவியர்மகரவார்குழைக்
கொற்றவர்குலங்களைவிளங்கத்தோன்றினு
ரிற்றதிம்மருங்குலென்றிரங்கவீங்கிய
முற்றுறுமுலையினர்கலையின்முற்றியுார். (உச)

பஞ்சனுங்கடியினர்பரந்தவல்குலார்
செஞ்சுணங்கிளமுலைமருங்குசிந்தினர்
வஞ்சியங்குழைத்தலைமதர்வைக்கொம்புத
மஞ்சுடரிணர்க்கொசிந்தனையவைம்மையார். (உரு)

காமத்தொத்தலர்ந்தவர்கதிர்த்தகற்பினர்
தாமத்தொத்தலர்ந்துதாழ்ந்திருண்டகூந்தலார்
தூமத்துச்சுடரொளிதுளும்புதோளினர்
வாமத்தின்மயங்கிமைமதர்த்தவாட்கணர். (உசு)

ஆயிரரவரவர்க்கதிகத்தேவியர்
மாயிருவிசும்பினினிழிந்தமாண்பினர்
சேயிருந்தாமரைத்தெய்வமன்னரென்
றேயுரையிலாதவரிருவராயினர். (உஎ)

வேறு.

தீங்கரும்பமிழ்தமூட்டித்தேனளாய்ப்பிழிந்தபோலு
மோங்கிருங்கடலந்தானைவேந்தணங்குறுக்குமின்சொல்
வீங்கிருங்குவவுக்கொங்கைமிகாபதிமிக்கதேவி
தாங்கருங்கற்பிற்றங்கைசசியென்பாள்சசியொடொப்பாள். ()

பூங்குழைமகளிர்க்கெல்லாம் பொன்மலர்மணிக்கொம்பன்ன
தேங்குழன்மங்கைமார்கடிலதமாய்த்திகழுகின்றார்
மாங்கொழுந்தசோகமென்றுங்கிரண்டுமேவயந்தகாலத்
தாங்கெழுந்தவற்றையெல்லாமணிபெறவலருமன்றே. (உகூ)

பெருமகனுருகும்பெண்மைமாண்பினும்பேணினாளு
மருவினும்புதியபோலுமழலையங்கிளவியாலுந
திருமகள்புலமையாக்குஞ்செல்வியென்றிவர்கள்போல
விருவருமிறைவனுள்ளத்தொருவராயினியரானர். (௩0)

மன்னவனுவியாவார்மகளிரம்மகளிர் தங்க
ளின்னுயிராகிநின்றானிறைமகனிவர்கடங்கட்
கென்னைகொலொருவர்தம்மேலொருவர்க்கிங்குள்ளமோட
முன்னவன்புணர்த்தவாறம்மொய்மலர்க்கணையினானே. (நக)

சொற்பகர்ந்துலகங்காக்குந்தொழில்புறத்தொழியவாங்கி
மற்பகரகலத்தானைமனத்திடைப்பிணித்துவைத்தார்
பொற்பகங்கமழப்பூத்ததேந்துணர்பொறுக்கலாற்றாக்
கற்பகக்கொழுந்துங்காமவல்லியங்கொடியுமொப்பார். (நஉ)

மங்கையரிருவராகிமன்னவனொருவனாகி
யங்கவரமர்ந்ததெல்லாமமர்ந்தருள்பெருகிநின்றான்
செங்கயன்மதர்த்தவாட்கட்டெய்வமாமகளிர்தோறுந்
தங்கியவுருவந்தாங்குஞ்சக்கரன்றகைமையானான். (நங)

முற்றுநீர்வளாகமெல்லாமுழுதுடனிழற்றுமூரி
யொற்றைவெண்குடையினீழலுலகுகண்படுப்பவோம்பிக்
கொற்றவனெடுங்கணார்தங்குவிமுலைத்தடத்துமூழ்கி
மற்றவர்க்கரசசெல்வமின்னணமமர்ந்ததன்றே. (நச)

நகரச்சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம் - சுக.

மூன்றாவது

குமாரகாலச்சருக்கம்.

ஆங்கவர்திருவயிற்றமரர்கற்பமாண்
டீங்குடனிழிந்துவந்திருவர்தோன்றினார்
வாங்குநீர்த்திரைவளர்வளையுமக்கட
லோங்குநீர்நிழலுமொத்தொளிருமூர்த்தியார். (க)

பெண்ணிலாந்தகைப்பெருந்தேவிபேரமர்க்
கண்ணிலாங்களிவளருவகைகைமிகத்
தண்ணிலாவுலகெலாந்தவழ்ந்துவான்கொள
வெண்ணிலாச்சுடரொளிவிசயன்றோன்றினான். (உ)

ஏரணங்கிளம்பெருந்தேவிநாளுறச்
சீரணங்கவிரொளித்திவிட்டன்றோன்றினன்
நீரணங்கொளிவளைநிரந்துவிம்மின
வாரணங்கலர்மழையமரர்சிந்தினர். (௩)

திசையெலாந்தெளிந்தனதேவர்பொன்னக
ரிசையெலாம்பெருஞ்சிறப்பியன்றவேற்பவர்
நசையெலாமவிந்தனநலியுந்தீவினைப்
பசையெலாம்பறந்தனபலர்க்குமென்பவே. (௪)

செய்தமாணகரியிற்சிறந்துசென்றுசென்
றெய்தினர்குமரராம்பிராயமெய்தனு
மைதுழாநெடுங்கணார்மனத்துட்காமனு
ரைதுலாங்கவர்கணையரும்புவைத்தவே. (௫)

காமருவலம்புரிகமழுமேனியன்
தாமரையகவிதழ்தடுத்தகண்ணினன்
றாமருளிருடுணர்ந்தனையகுஞ்சியன்
பூமருபொலங்குழைபுரளுங்காதினன். (௬)

வாடவில்கண்ணியன்மலர்ந்தமார்பினன்
தாடவழ்தடக்கையன்றயங்குசோதியன்
கோடுயர்குன்றெனக்குலவுதோளினன்
பீடுடைநடையினன்பெரியநம்பியே. (௭)

பூவையம்புதுமலர்புரையுமேனியன்
றாவிரிதாமரைதொலைத்தகண்ணினன்
றீவிரியாம்பலிற்சிவந்தவாயினன்
மாவிரிதிருமறுவணிந்தமார்பினன். (௮)

செங்கயல்வலம்புரிதிகிரியென்றிவை
தங்கியவங்கையனடித்தண்போதினன்
மங்கலமழகளிறனையசெல்கைய
னிங்குமுன்மொழிந்தவற்கிளையநம்பியே. (௯)

திருவிளைத்துலகுகண்மலரத்தெவ்வர்தம்
புரிவளைநன்னகர்ச்செல்வம்புல்லென
வரிவளைத்தோளியர்மனத்துட்காமநோ
யெரிவளைத்திடவேதோரிளைமையெய்தினர். (கo)

உவர்விளைகடற்கொடிப்பவளமோட்டிய
துவரிதழ்வாயவர்துளங்குமேனிய
ரவர்கடம்மருள்கொலோவனங்கனுய்மலர்
கவர்கணைகடைக்கணித்துருவுகாட்டினர். (கக)

கடலொளிமணிவணன்கனவில்வந்தெம
துடலகம்வெறுவிதாயுள்ளம்வவ்வினன்
விடலிலனெம்முயிர்விடுக்குங்கொல்லென
மடவரலவர்குழாமயக்கமுற்றதே. (கஉ)

வார்வளைவண்ணனெம்மனத்துளான்பிற
ரேர்வளர்நெடுங்கணுக்கிலக்கமல்லனற்
கார்வளர்கொம்பனரிவர்கள்காமநோ
யார்வளர்த்தவர்கொலென்பவருமாயினர். (கங)

கண்ணிலாங்கவினொளிக்காளைமார்திறத்
துண்ணிலாவெழுதருகாமவூழெரி
வெண்ணிலாச்சுடர்சுடவிரிந்துநாண்விடாப்
பெண்ணிலாம்பிறிதுயிர்பெரியதில்லையே. (கச)

திருவளர்செல்வர்மேற்சென்றசிந்தைநோ
யொருவரினொருவர்மிக்குடையராதலா
லுருவளர்கொம்பனருள்ளங்காய்வதோ
ரெரிவளர்த்திடவேதாரிளமையெய்தினா. (கரு)

மற்றொர்நாளமரிகைக்கொடிகொண்மாமணிச்
சுற்றுவான்சுடரொளிதழுவிச்சூழ்மலர்
முற்றிவண்டினம்விடாமுடிகொள்சென்னியக்
கொற்றவனிளையவர்குழையவைகினன். (கசு)

மஞ்சுடைமணிநகுமாலைமண்டபத்
தஞ்சுடரகிற்புகையளைந்துதேனளாய்ப்
பஞ்சுடையமளிமேற்பள்ளியேற்பவன்
செஞ்சுடரிரிவதோர்திறத்தனுயினுன். (கஎ)

மன்னவன்றுயில்விடுத்தருளமைந்தர்பொற்
றுன்னியவுடையினர்துதைந்தகச்சையர்
பின்னியஞாணினர்பிடித்தவில்லின
ரன்னவரடிமுதற்காவனண்ணினுர். (கஅ)

தங்கியதவழொளிதடாவிவில்லிட
மங்கலவுழைக்கலமருங்குசேர்ந்தன
வங்கவன்கண்கழூஉவருளிச்செய்தனன்
பங்கயமுகத்தர்பல்லாண்டுகூறினுர். (கக)

அந்தணராசிடைகூறியாய்மலர்ப்
பைந்துணர்நெடுமுடிபயிலவேற்றினுர்
செந்துணர்நறுமலர்தெளித்துத்தேவர்மாட்
டிந்திரனனையவனிறைஞ்சியேத்தினுன். (உ0)

விரையமர்கோதையர்வேணுக்கோலின
ருரையமர்காவல்பூண்கடையினூடுபோய்
முரசமர்முழங்கொலிமூரித்தானைய
ளரசவைமண்டபமடைவதெண்ணினுர். (உக)

பொன்னவிர்திருவடிபோற்றிபோற்றியென்
றன்னமென்னடையவர்பரவவாய்துகிற்
கன்னியர்கவரிகாலெறியக்காவலன்
முன்னியநெடுங்கடைமுற்றமுன்னினுன். (உஉ)

மஞ்சிவர்வளநகர்காக்கும்வார்கழ
ளஞ்சிவர்வேனரபதியையாயிடை
வெஞ்சுடர்வாளினர்விசித்தகச்சையர்
கஞ்சுகியவர்கண்மெய்காவலோம்பினுர். (உங)

வாசநீர்தெளித்தலர்பரப்பிவானக
மேசுளினிருக்கையவிலங்குசென்னிய
மூசுதேனெடுங்கடைமூன்றும்போய்ப்புறத்
தோசைநீண்மண்டபமுவந்ததெய்தினன். (உச)

வேறு.

பளிங்கொளிகதுவப்போழ்ந்தபலகைகண்குலவச்சேர்த்தி
விளங்கொளிவிளிம்பிற்செம்பொன்வேதிகை வெள்ளிவேயுட்
டுளங்கொளிபவளத்திண்காற்சுடர்மணிதவழும்பூமி
வளங்கவின்றனையதாயமண்டபமஃயப்புக்கான். (உரு)

குஞ்சரக்குழவிகவ்விக்குளிர்மதிக்கோடுபோலு
மஞ்சுடரெயிற்றவாளியணிமுகமலரவூன்றிச்
செஞ்சுடரணிபொற்சிங்காசனமிசைச்சேர்ந்தசெல்வன்
வெஞ்சுடருதயத்துச்சிவிரிந்தவெய்யவனொடொத்தான். ()

பூமருபுரிந்தநுண்ணூற்புரோகிதன்பொறிவண்டார்க்கு
மாமலரணிந்தகண்ணிமந்திரக்கிழவர்மன்னு
ரேமருகடலந்தானையிறைமகன்குறிப்புநோக்கித்
தாமரைச்செங்கட்சைகைபணித்ததானத்தாரானர். (உஎ)

முன்னவரிருந்தபின்னைமூரிநீருலகங்காக்கு
மன்னவன்கழலைத்தங்கண்மணிமுடிநுதியிற்றீட்டிப்
பின்னவன்பணித்ததானம்பெறுமுறைவகையிற்சோந்தார்
மின்னிவர்கடகப்பைம்பூண்வென்றிவேல்வேந்தரெல்லாம். ()

வழிமுறைபயின்றுவந்தமரபினர்மன்னர்கோமான்
விழுமலரடிக்கண்மிக்கவன்பினர்வென்றிநீரா
ரெழுவளர்த்தனையதோளாரினையவரின்னநீரா
ருழையவராகவைத்தானேடைமால்களிற்றினனே. (உகூ)

காவலனென்னுஞ்செம்பொற்கற்பகங்கவின்றபோழ்தி
னாவலரென்னும்வண்டுநகைமுகப்பெயரினைய
பூவலர்பொலிவுநோக்கிப்புலமயங்களிப்பவாகிப்
பாவலரிசையிற்றேன்றப்பாடுபயின்றவன்றே. (கூ0)

பண்ணமைமகரநல்யாழ்ப்பனுவனூற்புலவர்பாடி
மண்ணமர்வளாகமெல்லாமலர்ந்தநின்புகழோடொன்றி
விண்ணகம்விளங்குதிங்கள்வெண்குடைநிழலின்வைகிக்
கண்ணமருலகங்காக்குங்கழலடிவாழ்கவென்றார். (௩௧)

மஞ்சுடைமலையின்வல்லிதொடரவான்வணங்கநின்ற
வஞ்சுடர்க்கடவுட்காத்தவருங்குலமலரத்தோன்றி
வெஞ்சுடரெஃகமொன்றின்வேந்துகண்ணகற்றிநின்ற
செஞ்சுடர்முடியினாய்நின்கோலிதுசெல்கவென்றார். (௩௨)

இன்னணம்பலருமேத்தவினிதினங்கிருந்தவேந்தன்
பொன்னணிவாயில்காக்கும்பூங்கழலவனைநோக்கி
யென்னவரேனுமாகநாழிகையேழுகாறுங்
கன்னவின்றோளினாய்நீவரவிடுகாவலென்றான். (௩௩)

ஆயிடையலகின்மெய்ந்நூலளவுசென்றடங்கிநின்றான்
சேயிடைநிகழ்வதெல்லாஞ்சிந்தையிற்றெளிந்தநீரான்
மேயிடைபெறுவனாயின்வேந்துகாண்குறுவன்கொல்லோ
நீயிடையறிசொல்லென்றோர்நிமித்திகனெறியிற்சொன்னான்.

ஆங்கவனரசர்கோமான்குறிப்பறிந்தருளப்பட்டு
ரீங்கினிப்புகுமினென்றானிறைவனையவனுஞ்சேர்ந்தான்
வீங்கிருந்தானையானும்வெண்மலர்பிடித்தகையா
லோங்கிருந்தானங்காட்டியுவந்தினிதிருக்கவென்றான். (௩௫)

உற்றதன்றொழுக்கிற்கேற்பவுலகுபசாரநீக்கிக்
கொற்றவன்குறிப்புநோக்கியிருந்தபின்குணக்குன்றொப்பான்
முற்றியவுலகின்மூன்றுகாலமுமுழுதுநோக்கிக்
கற்றநூற்புலமைதன்னைக்காட்டுதல்கருதிச்சொன்னான். ( )

கயந்தலைக்களிற்றினாயோர்கனாக்கண்டதுளதுகங்கு
னயந்ததுதெரியினம்பிநளிகடல்வண்ணன்றன்னை
விசும்பகத்திழிந்துவந்தோர்வேழம்வெண்போதுசேர்ந்த
தயங்கொளிமாலைசூட்டித்தன்னிடமடைந்ததன்றே. (௩௭)

மன்மலர்ந்தகன்றமார்பமற்றதன்பயனுங்கேண்மோ
நன்மலர்நகைகொள்கண்ணிநம்பிதன்னாமமேத்தி
மின்மலர்ந்திலங்குபைம்பூண்விஞ்சைவேந்தொருவன்வந்து
தன்மகளொருத்திதன்னைத்தந்துதான்போகுமென்றான். ( )

கட்பகர்திவலைசிந்துங்கடிகமழ்குவளைக்கண்ணித்
திட்பமாஞ்சிலையினாய்நீதெளிகநாளேழுசென்றா
லொட்பமாயுரைக்கவல்லானொருவனோரோலைகொண்டு
புட்பமாகாண்டமென்னும்பொழிலகத்திழியுமென்றான் (௩௯)

என்றவனியம்பக்கேட்டேயிருந்தவர்வியந்துநோக்கிச்
சென்றுயர்திலகக்கண்ணித்திவிட்டனித்திறத்தனேயா
மொன்றியவுலகமெல்லாமொருகுடைநீழற்காக்கும்
பொன்றிகழலங்கன்மார்பபோற்றிபொய்யன்றிதென்றார். ( )

உரையமைந்திருப்பவிப்பாலோதுநாழிகையொன்றோட
முரசமொன்றதிர்த்ததோங்கியதிர்தலுமுகத்தினாலே
யரசவைவிடுத்தவேந்தனகத்தநூலவரைநோக்கி
வரையுயர்மாடக்கோயின்மந்திரசாலைசேர்ந்தான். (௪௧)

வேறு.

கங்குல்வாய்க்கனவவன்கருதிச்சொற்றது
மங்கலப்பெரும்பயன்வகுத்தவண்ணமுங்
கொங்கலர்தெரியலான்கூறிக்கொய்ம்மலர்த்
தொங்கலார்நெடுமுடிசுடாத்தூக்கினான். (௪௨)

சூழுநீருலகெலாந்தொழுதுதன்னடி
நீழலேகிரந்துகண்படுக்குநீர்மையா
னூழியங்கிழவனாயலருமென்பது
பாழியந்தோளினாய்பண்டுங்கேட்டுமே. (௪௩)

நற்றவமுடையனேநம்பியென்றுபூண்
விற்றவழ்சுடரொளிவிளங்குமேனியக்
கொற்றவன்குறிப்பினையறிந்துகூறிய
மற்றவர்தொடங்கினார்மந்திரத்துளார். (௪௪)

வேறு.

சங்கலேகையுஞ்சக்கிரலேகையு
மங்கையுள்ளனவையர்க்காதலாற்
சங்கபாணியான்சக்கிராயுத
மங்கையேந்துமென்றறையல்வேண்டுமே. (சரு)

வேறு.

விஞ்சையருலகுடைவேந்தன்றன்மகள்
வஞ்சியங்கொடியிடைமயிலஞ்சாயலா
ளெஞ்சலின்றியங்கிவருதிழியுமாய்விடி
லஞ்சிநின்றிவ்வுலகாட்சிசெல்லுமே. (சசு)

நாமினிமற்றவன்மொழிந்தநாளினுற்
றேமருசிலாதலந்திருத்தித்தெய்வமாந்
தூமருமாலையாய்துருமகாந்தனைக்
காமருபொழிலிடைக்காவல்வைத்துமே. (சஎ)

என்றவர்மொழிந்தபினிலங்குபூணினு
னனறதுபெரிதுமென்றருளிநாடொறுஞ்
சென்றவன்காக்கெனமொழிந்துதேங்குழ
லின்றுணையவர்கடங்கோயிலெய்தினான். (சஅ)

எரிபடுவிரிசுடரிலங்குபூணினன்
திருவடிதொழுதுசெலதுருமகாந்தனும்
வரிபடுமதுகரமுரலவார்சினைச்
சொரிபடுமதுமலர்ச்சோலைநண்ணினான். (சகூ)

குமாரகாலச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் - ககஅ.

நான்காவது

இரதநூபுரச்சருக்கம்.

புரிசைநீண்மதிற்போதனமாநக
ரரசர்வார்த்தையவ்வாறதுநிற்கவே
விரைசெய்வார்பொழில்விஞ்சையர்சேடிமே
லுரையையாமுரைப்பானுறுகின்றதே. (க)

நிலவுவெண்சுடர்பாய்நிலமொப்பநீண்
டுலவுநீள்கடறீண்டியுயர்ந்துபோ
யிலகுவின்மணிவானியன்மாடெலாம்
விலகநின்றதுவிஞ்சையர்குன்றமே. (உ)

தொக்கவானவர்சூழ்குழலாரொடு
மொக்கவாங்குளராய்விளையாடலா
லுக்கசோதிகள்சோலையினூடெலாஞ்
செக்கர்வானகமுஞ்சிறிதொக்குமே. (ந)

அவிழுங்காதலராயரமங்கையர்
பவழவாயமுதம்பருகிக்களி
தவழுமென்முலைபுல்லத்ததைந்ததார்
கமழுகின்றனகற்பகச்சோலையே. (ச)

கிளருஞ்சூழொளிக்கின்னரதேவர்தம்
வளரும்பூண்முலையாரொடுவைகலாற்
* றுளருஞ்சந்தனச்சோலைகளூடெலா
நளிருந்தெய்வநறுங்குளிர்நாற்றமே. (ரு)

மங்குல்வாடைவந்தார்வனமீதுழாய்ப்
பொங்குதாதொடுபூமதுக்கொப்பளித்
தங்கராகமளாயரமங்கையர்
கொங்கைவாரிகள்மேற்குதிகொள்ளுமே. (சு)

தேனகத்துறையுஞ்செழுஞ்சந்தனக்
கானகத்தழையின்கமழ்சேக்கைமே
லூனகத்தவர்போகமுவந்தரோ
வானகத்தவர்வைகியவைகலே. (எ)

மஞ்சுதோய்வரைமைந்தரொடாடிய
வஞ்சிலோதியராரளகப்பொடி
பஞ்சராகம்பதித்தபளிக்கறை
துஞ்சுபாறைகள்மேற்றுதைவுற்றதே. (அ)

---

* துளர்தல்—மெல்லொன்றுருவித்தல்.

மாதரார்நடைகற்கியவானிழிந்
தூதுவண்ணெவூழடியூன்றிய
பாதராகம்பதித்தபளிக்கறை
காதலார்தமகண்கவர்கின்றதே. (கூ)

ஆகுபொன்னறைமேலருவித்திரள்
நாககன்னியராடலின்ஞால்கைம்மா
வேகமும்மதவெள்ளமளாவிய
போகமல்லிகைநாறும்புனல்களே. (க0)

பூக்களாவனபொன்மரைபூம்பொழிற்
காக்களாவனகற்பகச்சோலைகள்
வீக்குவார்கழல்விஞ்சையர் * சேடிமே
லூக்கியாமுரைக்கின்றதிங்கென்கொலோ. (கக)

வரைமின்மேன்மதிகோடுறவைகிய
திருவநீளொளித்தென்றிசைச்சேடிமே
லிரதநூபுரச்சக்கரவாளமென்
றுரைசெய்பொன்னகரொன்றுளதென்பவே. (கஉ)

வேறு.

அம்பொன்மாலையார்களித்தலத்தெழுந்தரத்தவாய்க்
கொம்பனார்கொடுத்தமுத்தநீரவாயகோழரைப்
பைம்பொன்வாழைசெம்பொனே பழுத்துவீழ்ந்தசோதியால்
வம்புபாய்ந்துவந்தொசிந்துசாறுசார்வமானுமே. (கங)

வேய்கிழன்னிலாவிலங்குவெள்ளிவிம்முபாளைவாய்ப்
பாய்கிழற்பசுங்கதிர்ப்பருமணிக்குலைகுலாய்ச்
சேய்கிழற்செழும்பொனூற்றிரண்டசெம்பழத்ததாய்ப்
போய்கிழற்பொலிந்துவீழ்வபோன்றபூகராசியே. (கச)

காந்திநின்றகற்பகநிழற்கலந்துகையறப்
பாய்ந்தெரிந்தபோல்விரிந்துபாரிசாதமேர்செய
வாய்ந்தெரிந்தசெம்பொன்மாடவாயிலாறுகண்கொளப்
போந்தெரிந்தபோன்மரம்புறம்பொலிந்திலங்குமே. (கரு)

---

* வித்தியாதரரூர்.

மாசில்கண்ணிமைந்தரோடுமங்கைமார்திளைத்தவிற்
பூசுசாந்தழித்திழிந்தபுள்ளிவேர்புலர்த்தலால்
வாசமுண்டமாருதந்தென்வண்டுபாடமாடவாய்
வீசவெள்ளிலோத்திரப்பொதும்பர்பாய்ந்துவிம்முமே. (கசு)

ஆந்துணர்த்தமாலமும்மசோகபல்லவங்களுந்
தாந்துணர்த்தசைந்தனதழைத்தலைத்தடாயின
மாந்துணர்ப்பொதும்பர்வந்துவைகமற்றதூன்றலாற்
றேந்துணர்ச்சுமந்தொசிந்தசைந்ததேவதாரமே. (கஎ)

தெய்வயாறுகாந்தளஞ்சிலம்புதேங்கொள்பூம்பொழிற்
பௌவமுத்தவார்மணற்பறம்புமௌவன்மண்டப
மெவ்வமாடுமின்னபோலிடங்களின்பமாக்கலாற்
கவ்வையாவதந்நகர்க்குமாரனார்செய்கவ்வையே. (கஅ)

மற்றமாநகர்க்குவேந்தன்மானயானைமன்னர்கோ
னற்றமின்றிநின்றசீரழற்பெயர்ப்புணர்ச்சியான்
முற்றுமுன்சடிப்பெயர்சொன்மூன்றுலஃகுமான்றெழப்
பெற்றுநின்றபெற்றியான்பீடியாவர்பேசுவார். (க௯)

இங்கண்ஞாலமெல்லைசென்றிலங்குவெண்குடைநிழல்
வெங்கண்யானைவேந்திறைஞ்சவென்றியின்விளங்கினான்
கொங்குகொண்டுவண்டறைந்துகுங்குமக்குழம்பளா
யங்கராகமங்கணிந்தலர்ந்தவாரமார்பினான். (உ0)

விச்சையாயமுற்றினான்விஞ்சையார்களஞ்சநின்
றிச்சையாயவெய்தினானேந்துசெம்பொனீண்முடிக்
கச்சையானைமானவேற்கண்ணிலங்குதாரினான்
வெச்செனச்சொலொன்றுமே விடுத்துமெய்ம்மையேயினான்.

வேறு.

வெற்றிவெண்குடைவிஞ்சையர்வேந்தவ
னொற்றையந்தனிக்கோலுலகோம்புநாட்
குற்றமாயதொன்றுண்டுகுணங்களா
லற்றகீழுயிர்மேலருளாமையே. (உஉ)

செம்பொனீண்முடியான்செருவின்றலை
வெம்புவேலவன்விஞ்சையர்மண்டில
நம்பியாள்கின்றநாளினடுங்கின
கம்பமாடக்கதலிகைபோலுமே. (உங)

மின்னுவார்ந்தமந்தாரவிளங்கிணர்
துன்னுதொன்முடியானெளிசென்றநாண்
மன்னுமாடவர்மேல்வளைந்திட்டன
பொன்னனார்புருவச்சிலைபோலுமே. (உச)

வெண்ணிலாச்சுடருந்தனிவெண்குடை
யெண்ணிலாப்புகழானினிதாண்டநா
ளுண்ணிலாப்பலவாயுளவாயின
கண்ணனாரொடுகாமக்கலங்களே. (உரு)

மாக்கண்வையமகிழ்ந்துதன்றுணிழ
னோக்கிவைகநுனித்தவனண்டநாட்
டாக்கணங்கனையார்தமதாயரால்
வீக்கப்பட்டனமென்முலைவிம்முமே. (உசா)

வடியவானவனளவும்வாய்களிற்
கடியவாயினகள்ளவிழ்தேமல
ரடியவாய்ப்பயப்பட்டடங்காவலர்க்
கொடியவாயினகொங்கவிழ்சோலையே. (உஎ)

மாயமாயநின்றுன்வரைமார்பிடை
மேயபூமகள்போலவிளங்கினு
மேயவாமுறுவற்றுவர்வாயவள்
வாயுவேகையென்பாள்வளர்கொம்பனாள். (உஅ)

பைம்பொற்பட்டமணிந்தகொல்யானையா
னம்பொற்பட்டநறுங்குழலார்க்கெலாஞ்
செம்பொற்பட்டஞ்செறிந்ததிருநுத
லம்பொற்பட்டுடையாளணியாயினாள். (உகூ)

கோவைவாய்க்குழலங்குளிர்கொம்பனாள்
காவிவாணெடுங்கண்ணியக்காவலன்
காவியாயணங்காயமிழ்தாயவன்
மேவுநீர்மையளாய்விருந்தாயினாள். (௯௦)

முருக்குவாயவண்முள்ளெயிற்றேர்நகை
யுருக்கவேந்தனொருங்குறைகின்றநாட்
பெருக்கமாகப்பிறந்தனன்பெய்கழ
லருக்ககீர்த்தியென்பானலர்தாரினான். (௯௧)

நாமநல்லொளிவேனம்பிநங்கையா
யேமநல்லுலகின்னிழிந்தன்னகைத்
தாமமல்லிகைமாலைச்சயம்பவை
காமவல்லியுங்காமுறத்தோன்றினாள். (௯௨)

கங்கைநீரனஞான்றகதிரிளந்
திங்களாற்றொழப்பட்டதுசெக்கர்வான்
மங்கைமார்பிறப்பும்மடமாதரிந்
நங்கையாற்றொழப்பாடுநவின்றதே. (௯௩)

வண்டுசூழ்மலர்போன்றளகக்கொடி
கொண்டுசூழ்ந்ததுகுண்டலவாண்முகங்
கெண்டைகண்கிளரும்புருவஞ்சிலை
யுண்டுகொல்லெனவுண்டுமருங்குலே. (௯௪)

காதின்மீதணிகற்பகத்தொத்தினை
ஊதுதேனிற்கூன்றியிருந்தொறும
போது * தேர்முகத்துப்புருவக்கொடி
நோதலேகொனெசிந்துளவாங்களே. (௯௫)

விண்ணணங்கவிழித்துவிளங்கொளி
மண்ணணங்குறவேவளர்வெய்திய
பெண்ணணங்கிதுதோன்றியபின்கொலோ
கண்ணணங்குறுகாரிகைகண்டதே. (௯௬)

---

* தேர் உவமவுருபு.

கொங்கைபோதருவான்குமிழ்க்கின்றன
வங்கராகமணிந்தகையன்றியு
நங்கைநாகரிகம்பொறைநாண்மதுத்
தங்குவார்கொடியிற்றளர்வித்ததே. (௩எ)

மங்குறேய்வரைமன்னவன்றேல்குடி
நங்கைபோற்றியென்றேத்திநறுங்குழன்
மங்கைமார்பலர்காப்பவளர்ந்துதன்
கொங்கையாற்சிறிதேகுழைவெய்தினள். (௩அ)

வாமவாணெடுநோக்கிமடங்கனி
தூமவார்குழலாடிவர்வாயிடை
நாமநல்லொளிமுள்ளெயிறுள்ளெழு
காமனுளரும்பிற்கடிகொண்டவே. (௩கூ)

மஞ்சுதோய்வரையாரஞ்சுமாண்பிரு
லஞ்சிலோதிநினைப்பினகத்தவாய்
விஞ்சைதாம்பணிசெய்தல்விரும்பின
னெஞ்சிவாவகையாவிணர்கொண்டவே. (௪0)

நங்கைதோன்றியபின்னகைவேலினாற்
கங்கண்ஞாலமமர்ந்தடிமைத்தொழி
றங்கணீண்முடியாற்றலைநின்றனர்
வெங்கண்யானைவிளங்கொளிவேந்தரே. (௪க)

வேறு.

நங்கைதான்வளர்ந்துகாமநறுமுகைதுணரவைத்து
மங்கையாம்பிராயமெய்திவளரியநின்றநாளுட்
பைங்கண்மால்யானையாற்குப்பருவம்வந்திறுத்ததென்றாள்
வங்கவாய்ப்பவழச்செவ்வாய்வயந்தமாதிலகையென்பாள். ()

தேங்குவாமலங்கன்மாலைச்செறிகழன்மன்னர்மன்னன்
பூங்குலாய்விரிந்தசோலைப்பொழிமதுத்திவலைதூவக்
கோங்கெலாங்கமழமாட்டாக்குணமிலார்செல்வமேபோற்
பாங்கெலாஞ்செம்பொன்பூப்பவிரிந்ததுபருவமென்றாள். ()

வெய்ந்திணரொசிந்தசோலைவேனிலான்வென்றியோகைத்
தேந்துணர்கொடுப்பமூழ்கித்தேறல்வாய்நெகிழமாந்தித்
தாந்துணர் துணையோடாடிச்சாறுகொண்டேறுமோரார்
மாந்துணரொசியவேறிமதர்த்தனமணிவண்டெல்லாம். ()

கடிமலர்க்கணையினான்றன்கழலடிபரவிக்காமர்
படிமலர்த்தும்பியென்றும்பாண்படைதொடர்ந்துபாடக்
கொடிவளர்மகளிர்பூங்கட்குடைந்துநீர்குடிமினென்று
வடிமலர்வள்ளத்தேந்தவாய்மடுத்திட்டவன்றே. (சரு)

அஞ்சுடர்முருக்கினங்கேழணிமலரணிந்துகொம்பர்த்
துஞ்சிடைபெருதுதும்பி துவன்றிமேற்றுகைக்குந்தோற்றஞ்
செஞ்சுடரிலங்குஞ்செந்திக்கருஞ்சுடர்க்கந்துள்சிந்தி
மஞ்சுடைமயங்குகானமண்டியவகையிற்றன்றே. (சசு)

அந்தழையசோகம்பூத்தவழகுகண்டவாவினோக்கி
வெந்தழற்பிறங்கலென்றுவெருவியமறுவிறும்பி
கொந்தவிழ்ந்துமிழப்பட்டகுளிர்மதுத்திவலைதூவச்
செந்தழற்பிறங்கலன்மைதெளிந்துசென்றடைந்தவன்றே. ()

மாஞ்சினைகறித்ததுண்டந்துவர்த்தலின்மருங்குநீண்ட
பூஞ்சினைமுருக்கஞ்சோலைப்பூக்கள்வாயாரமாந்தித்
தீஞ்சுவைமிழற்றுகின்றசிறுகுயில்செல்வரேனுந்
தாஞ்சுவைதிரிந்தபின்றைச்சார்பவரில்லையன்றே. (சஅ)

கோவைவண்டூதுகின்றகுரவெனுங்குரைகொண்மாதர்
பாவைகொண்டாடுகின்றபருவத்தேபயின்றகாம
னாவிகொண்டிவளைக்கைவிட்டகலுமோவென்றுதத்தம்
பூவையுங்கிளியுங்கொண்டுபுலம்பினபொழில்களெல்லாம். ()

வயந்தமாங்குணர்த்தக்கேட்டேமன்னவன்மக்களோடு
முயர்ந்ததன்னுரிமையோடுமுரிமைகாப்பவர்களோடுங்
கயந்தலைகளிறுந்தேரும் * வையமுங்கவினவேறி
நயந்தனனகரிநீங்கிமனோவனநண்ணினானே. (ருo)

* வையம், சிவிகை.

வேறு.

கோமான்சென்றணைதலுமே கொங்கணிந்தமலர் தூவித்
தேமாவின்றெதிர்கொள்ளச் சிறுகுயில்போற்றிசைத்தனவே
வாமான்றேர்மன்னற்கு மங்கலஞ்சொன் மகளிரைப்போற்
றாமாண்ட விளங்கொடிதந்தளிர்க்கையாற்றொழுதனவே. ( )

கடிவாசமலர்விண்ட கமழ்தாதுகழலவற்கு
வடிவாசப்பொடியாக வனவல்லிசொரிந்தனவே
புடைவாசங்கொளமாலம்பூங்கவரியெடுத்தெறியக்
குடைமாகமெனவேந்திக் கோங்கம்போதவிழ்ந்தனவே. (௫௨)

கொடியாடுநெடுநகரக் கோமான்றன் குணம்பரவி
யடிபாடுமவர்களென வணிவண்டுமுரன்றனவே
வடிவாயவேலவற்கு மலர்ச்சின்னஞ்சொரிவனபோற்
கொடுவாயகிளிகோதிக் குளிர்கறும்போதுகுத்தனவே. (௫௩)

குரவகத்துக்குடைந்தாடிக் குளிர்நறவங்கொப்பளித்தார்த்
தரவவண்டின்னிசைபாட வருவிநீரளைந்துராய்
விரைமலர்ந்ததுணர்வீசி விரைநாறவருதென்றல்
புரவலன்றன்றிருமுடிமேற்போதலரவசைத்ததே. (௫௪)

இன்னவாறிளவேனிலெதிர்கொள்ளவெழில்யானை
மன்னவாந்தனிச்செங்கோன் மறவேல்வையகவேந்தன்
றன்னவாமடவாரைத் தானுவந்துபொழில்காட்டி
மின்னவாமிடைநோவ விளையாடவருளினான். (௫௫)

எரியணிந்தவிளம்பிண்டியிணரார்ந்தவிடமெல்லாம்
பொரியணிந்துபுன்குதிர்ந்துபூநாறுந்துறையெல்லாம்
வரியணிந்துவண்டேதவளர்கின்றவிளவேனில்
புரியணிந்தகுழலீர்நுஞ்செல்வம்போற்பொலிந்ததே. (௫௬)

காரணிந்தகுழலீர்நுங்கைத்தலங்கடைகைநோக்கிச்
சீரணிந்தசெழும்பிண்டிதளிரீன்றுதிகழ்ந்தனவே
வாரணிந்தமுலையீர்நும்மருங்குறனின்வகைநோக்கி
யேரணிந்தகுருக்கத்தியிளங்கொடித்தாயீன்றனவே. (௫௭)

மாந்தளிரிங்கிவை நுமதுநிறங்கொண்டுவளர்ந்தனவே
யேந்திளந்தீங்குயிலிவை நுஞ்சொற்கற்பானிசைந்தனவே
தேந்தளங்குகுழலீர் நுஞ்செவ்வாயினெழிலேநோக்கித்
தாந்தளிர்மென்முருக்கினியதாதோடுதகைந்தனவே. (ருஅ)

காவியுஞ்செங்கழுநீருங்கமலமுங்கண்விரிந்துகளி
வாவியுமண்டபமுமெழின்மதனனையுமருட்டுமே
தூவியருங்கிளியன்னசொல்லீர்நீர் துணையில்லா
ராவியுய்ந்துள்ளாராதலரிதேயிவ்விளவேனில். (ருக)

வேறு.

இன்னணமிளையவர்மருளவீண்டுசீர்
மன்னவன்வயந்தமாட்டருளிமாமணிக்
கன்னவில்புரிசையுட்கடவுட்காக்கிய
பொன்னவிதிருநகர்பூவொடெய்தினன். (சூ0)

உலமுறைதோளினனுவகைகூர்ந்தனன்
குலமுறைவழிபடுந்தெய்வக்கோயிலை
வலமுறைவந்தனன்வரலுமாமணிக்
கலமுறைகதிர்கைக்கபாடம்போழ்ந்ததே. (சூக)

பிணிநிலைபெயர்ப்பனபிறவிதீர்ப்பன
மணிநிலைவிசும்பொடுவரங்களீவன
கணிநிலையிலாத்திறற்கடவுட்டானக
மணிநிலைச்சுடரொளிமலர்ந்துதோன்றவே. (சூஉ)

மெய்மயிரெறிந்தொளிதுன்னும்புமேனியன்
கைமுகிழ்முடித்தடங்கதழச்சேர்த்தினன்
வெம்மைசெய்வினைத்துகள்விளியவென்றவன்
செம்மலர்த்திருந்தடிசீரினேத்தினன். (சூ௩)

வேறு.

அணியாதுமொளிதிகழுமாரணங்குதிருமூர்த்தி
கணியாதுமுழுதுணர்ந்தகடவுளென்றறையுமே
கணியாதுமுழுதுணர்ந்தகடவுளென்றறைந்தாலு
மணிஞாலமுடையாயையறிவாரோவரியரே. (சூச)

பகைநாறுமயிற்படைகள்பயிலாததிருமூர்த்தி
யிகன்மாறவென்றுயர்ந்தவிறைவனென்றறையுமே
யிகன்மாறவென்றுயர்ந்தவிறைவனென்றறைந்தாலு
மகன்ஞாலமுடையானையறிவாரோவரியரே. (௬௫)

திருமறுவுவலனணிந்துதிகழ்கின்றதிருமூர்த்தி
யொருமறுவுமிலையென்பதொழியாமலுணர்த்துமே
யொருமறுவுமிலையென்பதொழியாமலுணர்த்துகினு
மருமறையைவிரித்தானையறிவாரோவரியரே. (௬௬)

வேறு.

இன்னணமிறைவனையேத்தியேந்தறன்
சென்னியுட்சேர்த்தியசேடப்பூவினன்
கன்னவிறிருமணிக்கபாடந்தாழ்நீஇ
முன்னியதிருநகர்முற்றமுன்னினன். (௬௭)

ஆரணங்கவிரொளியெரியவாயிடைச்
சாரணர்விசும்பினினிழிந்துதாதைத
னேரணிவளநகர்வலங்கொண்டின்னணஞ்
சீரணிமணிக்குரல்சிலம்பவாழ்த்தினர். (௬௮)

வேறு.

விரைமணந்ததாமரைமேல்விண்வணங்கச்சென்றா
யுரைமணந்தியாம்பரவவுண்மகிழ்வாயல்லை
யுண்மகிழ்வாயல்லையெனினுமுலகெல்லாங்
கண்மகிழநின்றாய்கட்காதலொழியோமே. (௬௯)

முருகணங்குதாமரையின்மொய்ம்மலர்மேற்சென்றா
யருகணங்கியேத்தியதுமகிழ்வாயல்லை
யதுமகிழ்வாயல்லையெனினும்பெயராக்
கதிமகிழநின்றாய்கட்காதலொழியோமே. (௭0)

மணமயங்குதாமரைமேல்வான்வணங்கச்சென்றாய்
குணமயங்கியாம்பரவக்கொண்டுவப்பாயல்லை
கொண்டுவப்பாயல்லையெனினுங்குளிர்ந்துலகங்
கண்டுவப்பநின்றாய்கட்காதலொழியோமே. (௭௧)

வே று.

தீதறுமுனிவர் தஞ்செல்வன்சேவடிக்
காதலினெழுவியகாமரின்னிசை
யேதமின்றெவ்வளவிசைத்ததவ்வள
வோதியவுயிர்க்கெலாமுறுகண்டீர்ந்தவே. (எஉ)

இறைவனையின்னணமேத்தித்தந்தொழில்
குறைவிலாமுடிந்தபின்குணக்குன்றாயினோர்
மறமலிமன்னனைநோக்கிமற்றவற்
கறமழைபொழிவதோராார்வமெய்தினர். (எங)

தென்றலுஞ்செழுமதுத்திவலைமாரியு
மென்றுமின்றருதழோரிளந்தண்பிண்டியு
நின்றொளிதிகழ்வதோர்நிலாக்கல்வட்டமுஞ்
சென்றவரமர்ந்துழித்திகழ்ந்துதோன்றுமே. (எச)

வென்றவன்றிருநகர்விளங்குவேதிகை
முன்றில்சேர்ந்திருந்தனர்முனிவராதலு
மின்றவழ்விளங்குவேல்வென்றிவேந்தனுஞ்
சென்றவர்திருந்தடிமுடியிற்றீட்டினன். (எரு)

பாசிடைப்பரப்புடைப்பழனநாடனை
யாசிடைகொடுத்தவரிருக்கவென்றலுந்
தூசுடைமணிக்கலைமகளிர்சூழ்தர
வேசிடையிலாதவனிருக்கையெய்தினன். (எசு)

தாளுயர்தாமரைத்திருவுந்தண்கதிர்
நீளெழிலாரமுகிழன்றகண்குலாந்
தோளிணைசெவ்வியோவென்னச்சூழொளி
வாளவன்மணிமுடிவணங்கிவாழ்த்தினன். (எஎ)

முனிவருட்பெரியவன்முகத்துநோக்கியொன்
றினிதுளதுணர்த்துவதடிகளென்றலும்
பனிமலர்த்தாமரைப்பழனநாடனைக்
கனியமற்றின்னணங்கடவுள்கூறினன். (எஅ)

துன்னியவினைப்பகைதுணிக்குந்தொன்மைசா
லின்னுரையமிழ்தெமக்கீமினென்பதா
மன்னவின்மனத்துளதென்னமாமணிக்
கன்னவில்கடகக்கைகதழக்கூப்பினான். (எகூ)

வேறு.

மெய்யறிவிலாமையென்னும்வித்தினிற்பிறந்துவெய்ய
கையறுவினைகள்கைபோய்க்கடுந்துயர்விளைத்தபோழ்தின்
மையுறவுழந்துவாடும்வாழுயிர்ப்பிறவிமாலை
நெய்யுறநிழற்றும்வேலோயினைத்தெனநினைக்கலாமோ. (அ0)

சூழ்வினைதுரப்பச்சென்றுசூழ்வினைப்பயத்தினாலே
வீழ்வினைபிறிதுமாக்கிவெய்துறவிளிந்துதோன்றி
யாழ்துபருழக்குமந்தோவளியற்றவறிவில்சாதித்
தாழ்வினைவிலக்குஞ்சார்வுதலைப்படாவளவுமென்றான். (அக)

காதியங்கிளைகள்சீறுங்காமருநெறிக்குங்கண்ணாய்ப்
போதியங்கிழவர்தங்கடியானத்துப்புலங்கொண்டேத்தி
யாதி * யந்தகன்றுநின்றவடிகளேசரணங்கண்டாய்
மாதுயரிடும்பைதீர்க்குஞ்சரணெனப்படுவமன்னா. (அஉ)

மெய்ப்பொருடெரிதல்மற்றப்பொருண்மிசைவிரிந்தஞான
மப்பொருள்வழாதநூலினருந்தகையொழுக்கந்தாங்கி
யிப்பொருளிவைகள்கண்டாயிறைவனால்விரிக்கப்பட்ட
கைப்பொருளாகக்கொண்டுகடைப்பிடிகனபொற்றேரோய். ( )

உற்றடுபிணியுமூப்புமூழுறுதுயருநீக்கிச்
சுற்றிநின்றுலகமேத்துஞ்சுடரொளியுருவந்தாங்கிப்
பெற்றதோர்வரம்பிலின்பம்பிறழ்விலாநிலைமைகண்டாய்
மற்றவைநிறைந்தமாந்தர்பெறப்படுநிலைமைமன்னா. (அச)

அருந்துயரறுக்குமாண்பி<u>னரமிர்தவைகண்மூன்றுந்</u>
திருந்தநின்குரைப்பக்கேட்டேதீவினையிருள்கள்போழும்
விரிந்தலலறிவின்சோதிவிளங்கவிற்சனங்களெல்லாம்
பரிந்தகங்கழுமத்தேறிப்பவம்பரிந்தவர்களொத்தார். (அரு)

---

* அந்தமென்பதன்விகாரம்.

மன்னியமுனிவன்வாயுண்மணிகொழித்தனையவாகிப்
பன்னியபவங்கடீர்க்கும்பயங்கெழுமொழிகடம்மாற்
கன்னவில்கடகத்தோளான்காட்சியங் * கதிர்ப்புச்சென்றான்
பின்னவனுரிமைதானும்பெரு † வதமருவிற்றன்றே. (அசு)

வேறு.

மன்னவன்மடமகள்வணங்கிமற்றவ
ரின்னுரையமுதமுண்டெழுந்தசோதியள்
பன்னியொர்நோன்புமேற்கொண்டுபொங்கினாற்
பின்னதுமுடிப்பதோர்பெருமையெண்ணினாள். (அஎ)

முனிவரர்திருந்தடிவணங்கிமூசுதேன்
பனிமலர்விரவியபடலைமார்பினான்
கனிவளர்பொழிலிடைக்கடவுணன்னக
ரினிதினின்வலமுறையெய்தியேகினான். (அஅ)

வாமமேகலையவர்மனத்தில்வார்பொழிற்
காமவேளிடங்கொளவருளிக்கண்ணொளிர்
தாமவேலிளையவர்காப்பத்தாழ்கதிர்
நாமவேனரபதிநகரநண்ணினான். (அகூ)

அகநகரரைசரோடரைசன்சென்றபின்
‡ சகதபிநந்தனரென்னுஞ்சாரணர்
மிகநவின்றிறைவனைவணங்கிவிண்ணிடைப்
பகநகுசுடரொளிபடரவேகினார். (கூ0)

அழற்கொடியெறித்தொறுஞ்சுடருமாடக
நிழற்கொடியதுவெனநிறைந்தகாரிகைக்
குழற்கொடியனையவள்கொண்டநோன்பினொ
லெழிற்கொடிசுடர்வதோரியற்கையெய்தினாள். (கூக)

முகைத்தவார்முல்லையைமுருக்குமெல்லெயிற்
றகைத்தவார்குழலவடன்மையாயினும்
வகுத்தவாறுயர்ந்தனநோன்புமாசிலா
வகத்துமாண்புடையவர்க்கரியதில்லையே. (கூஉ)

---

* கதிர்ப்பு, பிரகாசம். † வதம், விரதம்.
‡ சகநந்தனன்-அபிநந்தனன்.

இந்திரவுலகமும்வணக்குமீடுடைத்
தந்திரநோன்பொளிதவழத்தையலாண்
மந்திரநறுநெய்யால்வளர்ந்துமாசிலா
வந்தரவழற்கொடியனையளாயினாள். (௯௩)

தாங்கருஞ்சுடரொளிசக்கிரவாளமென்
றோங்கிரும்பெயர்கொளோன்புயரநோற்றபின்
தீங்கரும்பனையசொற்சிறுமிதெய்வதக்
காங்கொடுபெருஞ்சிறப்பயர்தன்மேயினாள். (௯௪)

தண்ணவிர்கிலாச்சுடர்தவழுமவ்வரைக்
கண்ணவிர்சென்னிமேற்கடவுட்டானமஃ
தண்ணலங்கோமகளருச்சித்தாயிடை
விண்ணவருலகமும்வியப்பவேத்தினாள். (௯௫)

வேறு.

ஆதியங்கடவுளையருமறைபயந்தனை
போதியங்கிழவனைபூமிசையொதுங்கினை
போதியங்கிழவனைபூமிசையொதுங்கிய
சேதியஞ்செல்வநின்றிருவடிவணங்கினம். (௯௬)

காமனைக்கடிந்தனைகாலனைக்காய்ந்தனை
தேமலர்மாரியைதிருமறுமார்பனை
தேமலர்மாரியைதிருமறுமார்பனை
மாமலர்வண்ணநின்மலரடிவணங்கினம். (௯௭)

ஆரருள்பயந்தனையாழ்துயரவித்தனை
யோரருளாழியையுலகுடையொருவனை
யோரருளாழியையுலகுடையொருவனை
சீரருண்மொழியநின்றிருவடிதொழுதனம். (௯௮)

வேறு.

கருவடிநெடுநல்வேற்கண்ணியின்னணம்
வெருவுடைவினைப்பகைவிலக்கும்வீறுசான்
மருவுடைமொழிகளாற்பரவிவாமன
திருவடிச்சேடமுந்திகழச்சூடினாள். (௯௯)

வானுயர்கடவுளைவயங்குசேவடித்
தேனுயர்திருமலர்ச்சேடங்கொண்டபின்
மானுயர்நோக்கியர்பரவமங்கைதன்
கோனுயர்வளநகர்க்கோயின்முன்னினாள். (௧௦௦)

வெஞ்சுடர்வேலவற்குணர்த்திமெல்லவே
பஞ்சுடைச்சேவடிபரவச்சென்றுதன்
னஞ்சுடர்மெல்விரல்சிவப்பவாளியற்
செஞ்சுடரங்கையிற்சேடநீட்டினாள். (௧௦௧)

அல்லியினரவவண்டிரியவாய்மலர்
வல்லியின்வணங்கியமகளைமன்னவன்
முல்லையஞ்சிகழிகைமுச்சிமோந்திவை
சொல்லியதொடங்கினான்சுடரும்வேலினான். (௧௦௨)

தேந்துணர்பலவுளவேனுஞ்செங்குழை
மாந்துணர்வயந்தனைமலரத்தோன்றுமே
பூந்துணரோதிநீபிறந்துபொன்செய்தார்
வேந்துவந்திறைஞ்சயான்விளங்குகின்றதே. (௧௦௩)

கங்கைநீர்பாய்ந்துழிக்கடலுந்தீர்த்தமா
மங்கணீருலகெலாமறியப்பட்டது
நங்கைநீபிறந்ததற்பின்னைநங்குடி
வங்கநீர்வரைப்பெலாம்வணக்கப்பட்டதே. (௧௦௪)

போதுலாந்தாமரைபூத்தபொய்கையைத்
தீதுலாங்கீழுயிர்தீண்டச்செல்லல
மாதுலாமடந்தைநீபிறந்திம்மண்டில
மேதிலாரிடைதிறமிகந்துநின்றதே. (௧௦௫)

வானகத்திளம்பிறைவளரவையக
மீனகத்திருள்கெடவின்பமெய்துமே
நானகக்குழலிநீவளரநங்குடி
தானகத்திருள்கெடத்தயங்குகின்றதே. (௧௦௬)

கண்பகர்மல்லிகைகமழக்காதலாற்
சண்பகத்தனிவனந்தும்பிசாருநீ
பெண்பகர்திருவனுய்பிறந்துநங்குடி
மண்பகருலகெலாமகிழச்செல்லுமே. (௧0எ)

கொவ்வையந்துவரிதழ்க்கோலவாயவட்
கிவ்வகையணியனகூறியீண்டுநும்
மவ்வைதன்கோயில்புக்கடிசிலுண்கென
மவ்வலங்குழலியைமன்னனேயினன். (௧0அ)

பல்கலம்பெரியனவ்வணியிற்பாவைத
னல்குனேமெனச்சிலம்பணிந்துமெல்லவே
செல்கவென்திருமகளென்றுசெம்பொனன்
மல்கியமுடியினன்மகிழ்ந்துநோக்கினன். (௧0௯)

மண்ணருங்கலமெலாம்வலிதின்வவ்வினும்
விண்ணருங்கலமெலாம்விதியினெய்தினும்
பெண்ணருங்கலமிதுபெறுதன்மானுடர்க்
கெண்ணருந்தகைத்தெனவிறைவனெண்ணினன். (௧௧0)

மையணிவரையின்வாழ்மன்னர்தொல்குடிக்
கையணிநெடுநல்வேற்காளைமார்களு
ளையணிகுழலிவட்குரியநீர்மையான்
மெய்யணிபொறியவனெவன்கொல்வீரனே. (௧௧௧)

பொலங்கலக்குரியவாம்பொருவின்மாமணி
யிலங்கலமென்னலவியஞ்சேர்த்தினுங்
குலங்கலந்தில்வழிக்குரவர்கூட்டினு
மலங்கலங்குழலியரன்றென்கிற்பவோ. (௧௧௨)

* அந்தைதாமுறுவதுகருதியாருயிர்த்
தந்தைதாயென்றிவர்கொடுப்பிற்றையலார்
சிந்தைதாயிலாதவர்திறத்துஞ்செவ்வனே
நொந்துதாம்பிறிதுரைநொடியவல்லரோ. (௧௧௩)

---

* அந்தமென்பதன்விகாரம்; அழகு என்னும்பொருட்டு.

காதலாலறிவதுகாமங்காதலே
யேதிலாருணர்வினாலெண்ணலாவதன்
முதலான்மாதராடிறத்தினாணைநூ
லோதினாருரைவழியொட்டற்பாலதே. (௧௧௪)

தன்னுணர்பொறிபிறர்தங்கண்கூட்டென
வின்னணமிருவகைத்திறைவர்வாழ்க்கையே
தன்னுணர்பொறிப்புலந்தன்னினும்பிறி
தின்னணமியற்றுகென்றமைச்சரேவுவார். (௧௧௫)

தண்ணியதடத்தவேயெனினுந்தாமரை
விண்ணியல்கதிரினால்விரியும்வேந்தரும்
புண்ணியப்பொதும்பரேபுரிந்துவைகினுங்
கண்ணியபுலவராலலர்தல்காண்டுமே. (௧௧௬)

மாலமர்நெடுங்கடன்மதலைமாசிலாக்
காலமைந்தொழுகுமேற்கரையுங்காணுமே
நூலவர்நுழைவொடுநுழைந்துசெல்லுமேல்
வேலவரொழுக்கமும்வேலைகாணுமே. (௧௧௭)

ஒன்றுநன்றெனவுணர்ந்தொருவன்கொள்ளுமே
லன்றெனவொருவனுக்கறிவுதோன்றுமே
லின்றதொன்றுண்டினிநீதிநூலினோ
டொன்றிநின்றவருரையுலகமொட்டுமே. (௧௧௮)

அந்தணரொழுக்கமுமரைசர்வாழ்க்கையு
மந்திரமில்லையேன்மலருமாண்பில
விந்திரனிறைமையுமீரைஞ்ஞூற்றுவர்
தந்திரக்கிழவர்கடாங்கச்செல்லுமே. (௧௧௯)

என்றுதன்மனத்தினானெண்ணியீண்டுசீர்
நின்றநூற்கிழமையினீதிமாக்களை
யொன்றிநீர்தருகெனவுழைக்குற்றேவலா
ரென்றவர்க்கருளிதுவென்றுசெப்பினார். (௧௨௦)

இரதநூபுரச்சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம் - ௨௩௮.

ஐந்தாவது

மந்திரசாலைச்சருக்கம்.

செஞ்சினத்தெரியலானருளிச்செய்தது
தஞ்செவிக்கிசைத்தலுந்தணப்பில்கேள்வியா
ரஞ்சினர்நடுங்கினராகியாயிடை
நஞ்சிவர்வேலினான்பாதநண்ணினார். (க)

உள்ளுணின்றுலிபுறப்படாததொண்சிறைப்
புள்ளுமல்லாதவும்புகாதசீரது
வெள்ளிவெண்விளிம்பினால்விளங்குவேதிகை
வள்ளறன்மந்திரசாலைவண்ணமே. (உ)

ஆங்கமர்ந்தமைச்சரோடரைசர்கோமகன்
பூங்கமழ்மண்டபம்பொலியப்புக்கபின்
வீங்கொளிமணிக்குழைமிளிர்ந்துவில்விட
வீங்கிவைமொழிந்தனனிறைவனென்பவே. (ங)

வேறு.

மண்ணியவளாகங்காக்குமன்னவர்வணக்கலாகாப்
புண்ணியரேரேனும்புலவராற்புகலப்பட்ட
நுண்ணியநூலினன்றிநுழைபொருளுணர்தறேற்று
றெண்ணியதுணிந்துசெய்யுஞ்சூழ்ச்சியுமில்லையன்றே. (ச)

வால்வளைபரவிமேயும்வளர்திரைவளாகமெல்லாங்
கோல்வளைவுறுமற்காக்குங்கொற்றவனெடியனேனு
மேல்விளைபழியும்வெய்யவினைகளும்விலக்கின்றூர்
நூல்விளைபுலவரன்றேநுணங்குபோதணங்குதாரீர். (ரு)

சுற்றுமின்றெரியுஞ்செம்பொன்மணிமுடிசுடரச்சூட்டி
வெற்றிவெண்குடையினீழல்வேந்தன்வீற்றிருக்குமேனு
மற்றவன்மனமுங்கண்ணும்வாழ்க்கையும்வலியுஞ்சால்பு
மற்றமிலரசுங்கோலுமாபவரமைச்சரன்றே. (சு)

வீங்குநீருலகங்காக்கும்விழுநுகமொருவனாலே
தாங்கலாந்தன்மைத்தன்றுதளையவிழ்தயங்குதாரீர்
பாங்கலார்பணியச்சூழுநூலவர்பாகமாகப்
பூங்குலாமலங்கன்மாலைப்புரவலன்பொறுக்குமன்றே. (எ)

அற்றமின் றுலகங்காக்குமருந்தொழில்புரிந்துமின்றுன்
கற்றவர்மொழிந்தவாயக்கழிப்பதுகடனதாகு
மற்றவற்குறுதிநோக்கிவருபழிவழி * கண்டேரச்
செற்றவர்ச்செருக்குஞ்சூழ்ச்சிதெருண்டவர்கடவவன்றே.()

செறிந்தவர்தெளிந்தநூலார்சிறந்தவைதெரிந்துசொன்னு
லறிந்தவையமர்ந்துசெய்யுமமைதியானரசனுவான்
செறிந்தவர்தெளிந்தநூலார்சிறந்தவைதெரிந்துகூறி
யறிந்தவையியற்றுகிற்குமமைதியாரமைச்சராவார். (கூ)

வாள்வலித்தடக்கைமன்னர்வையகம்வணக்கும்வாயி
றேள்வலிசூழ்ச்சியென்றுங்கிருவகைத்தொகையிற்றுகு
மாள்வலித்தானையார்கட்காதியதழகிதேனுங்
கோள்வலிச்சீயமொப்பீர்சூழ்ச்சியேகுணமதென்றுன். (க0)

ஊழ்வரவன்னதேனுமொருவகைக்கருமமெல்லாஞ்
சூழ்பவர்சூழ்ந்துசூழுஞ்சூழ்ச்சியுட்டோன்றுமன்றே
யாழ்பகர்ந்தினியதீஞ்சொலமிர்தனுரேனுஞ்சூழ்ச்சி
வாழ்பவர்வல்லராயின்மன்னராய்மலர்பவன்றே. (கக)

ஆற்றலென்றேதப்பட்டவரசர்கட்கவற்றின்மிக்க
வாற்றருன்சூழ்ச்சியென்பதாதலாலதனையாயு
மாற்றலாரமைச்சராகவமைச்சரோடமர்ந்துசெல்லு
மாற்றலானரசனுகினரியதொன்றில்லையன்றே. (கஉ)

வடந்திகழ்முலையினூர்தங்காமத்தின்மதர்த்தமன்னர்க்
கடைந்தவாமாண்புமாங்கொன்றில்லையவ்வரசர்வாழ்க்கை
கடந்தவழ்கடாத்தவேழங்களித்தபின்கல்விமாணு [மே.
மடந்தவ ழொருவன்மேல்கொண் டன்னதோர் வகையிற்றே

சுந்தரச்சுரும்புண்கண்ணிச்சூழ்கழலரசர்வாழ்க்கை
தந்திரமறிந்துசூழ்வான்சூழ்ச்சிறந்தமையல்வேண்டு
மந்திரம்வழூவுமாயில்வாளெயிற்றரவுகாய்ந்து
தந்திரந்தப்பினுற்போற்றன்னையேதபுக்குமன்றே. (கச)

* கண்டௌஷதமெனிற் சூழ்ச்சித் தெருண்டவரெனக.

எடுத்தனனிலங்குசாதியெழிலொடுதிகழுமேனு
மடுத்தனநிறத்தனுகுமணிகிளர்பளிங்குபோல
வடுத்தவமலர்ந்து நுண் ணூன்மதியவர்வினையின்மாட்சி
கொடுத்தவாயிலைமைமன்னர்குணங்களாக்கொள்பவன்றே.()

மன்னுநீர்வளாகமெல்லாம்வணக்குதல்வல்லீராய
பன்னுநூற்புலவீர்முன்னர்ப்பலபகர்ந்துரைப்பதென்னை
யென்னைநீரிறைவனுக்கியிராப்பகலியற்றவன்றே
யின்னநீரின்பவெள்ளமியைந்தியானுயர்ந்ததென்றான். (கசு)

கொங்குடை வயிரக்குன்றின் கொழுஞ்சுடர்விளக்கிட்டாங்
கங்குடிவிளங்கவந்தநங்கைதன்னலத்திற்கொத்தான் [கு
றங்குடிவிளங்கநின்றதன்மையானெவன்கொலென்றான்
சங்குடைந்தனையதாழைத்தடமலர்த்தொடையலானே. ()

இறையிவைமொழியக்கேட்டேயிருந்தவரிறைஞ்சியேத்தி
யறைகழலரவத்தானையணிமுடியரசரேறே
நிறைபுகழுலகங்காத்துநிலாகநின்னிறைமையென்று
முறைமுறைமொழியலுற்றுமுன்னியமுகத்தரானார். (கஅ)

பணிந்துமற்றேனையார்பாங்கிருப்பநூல்பலவுநோக்கித்
துணிந்துதன்புலமைதோன்றச்சுச்சுதன்சொல்லலுற்று
னிணைந்துநின்றுலவுந்தும்பியிடையிடையிருண்டுதோன்ற
வணிந்துநின்றலரும்பைந்தாரணிமணிமுடியினுற்கே. (கக)

பொழிற்கதிர்பரப்பிவந்துபொங்கிருள்புதையநூறுந்
தொழிற்கதிர்க்கடவுடோன்றச்சூரியகாந்தமென்னு
மெழிற்கதிர்ப்பிறங்கல்வட்டமெரியுமிழ்ந்திடுவதன்றே
யழற்கதிரிலங்குஞ்செவ்வேலதிர்கழலரசர்கோவே. (உ0)

கோணைநூற்றடங்கமாட்டாக்குணமிலார்குடர்கணைய
வாணைநூற்றடங்கக்காக்குமரசர்தமருளினாலே
பேணுநூற்புலவர்மாண்பும்பெருகுவதுருவத்தார்மேற்
பூணுநூற்பொலிந்துதோன்றும்பொன்வரைமார்பவென்றான்.

சூழ்கதிர்த்தொழுதிமாலைச்சுடர்ப்பிறைக்கடவுடோன்றித்
தாழ்கதிர்சொரிந்தபோழ்திற்சந்திரகாந்தமென்னும்
வீழ்கதிர்விளங்குவட்டம்வெள்ளநீர்விரியுமன்றே [லோய்.
போழ்கதிர் பொழிந்துபொங்கிப் புலானிணம் பொழியும்வே

கண்ணளித்துலகமெல்லாங்கவின்பெறக்காவல்பூண்டு
தண்ணளித் * தயங்குஞ்செங்கோற்றுரவர்தவத்தினாலே
மண்ணளித்தினியநூலோர்மந்திரமலருமென்றான்
விண்ணளித்திலங்கும்வெள்ளிவிரிந்தவெண்குடையினாற்கே

கண்ணியகடாத்தவேழங்கவுளினானுரிஞப்பட்டுத்
தண்ணியதன்மைநீங்காச்சந்தனச்சாதிபோலப்
புண்ணியக்கிழவர்கீழோர்பிழைத்தனபொறுப்பவாயின்
மண்ணியல்வளாகமெல்லாம்வழிநின்றுவணங்குமன்றே. ( )

நிறந்தலைமயங்கவெம்பிநெடுங்கடல்சுடுவதாயி
னிறந்தலைபெருகுநீர்வாழுயிர்க்கிடரெல்லையுண்டோ
மறந்தலைமயங்குசெவ்வேன்மன்னவன்வெய்யனாயி
னறந்தலைமயங்கிவையமரும்படருழக்குமன்றே. (உரு)

மண்குளிர்கொள்ளக்காக்குமரபொழிந்தரசர்தங்கள்
விண்குளிர்கொள்ளவோங்கும் வெண்குடைவெதும்புமாயிற்
கண்குளிர்கொள்ளப்பூக்குங்கடிகயத்தடமுங்காவுந்
தண்குளிர்கொள்ளுமேனுந்தான்மிகவெதும்புமன்றே. (உசு)

தீயினம்படர்ந்துவேந்தன்செறுவதேபுரியுமாயிற்
போயினம்படர்ந்துவாழும்புகலிடமின்மையாலே
வேயினம்படர்ந்தசாரல்வேங்கையைவெருவிப்புல்வாய்
மாயினம்படர்ந்ததெல்லாம்வையகம்படருமன்றே. (உஎ)

மறந்தலைமயங்கிவையத்தொருவரையொருவர்வாட்ட
விறந்தலையுறாமைநோக்கியின்னுயிர்போலக்காக்கு
மறந்தலைநின்றவேந்தரடிநிழலன்றியார்க்குஞ்
சிறந்ததொன்றில்லைகண்டாய்திருமணிதிகழும்பூணாய். ( )

---

* எதுகை நோக்கிய விரித்தல் விகாரம்.

ஒருமையாற்றுன்பமெய்துமொருவனையும்மையாலே [இ
திருமையான்முயங்குஞ்செல்வச் செருக்கொடுதிளைப்பநோக்
யிருமையுமொருமையாலேயியற்றலினிறைவன்போலப்
பெருமையையுடையதெய்வம்பிறிதினியில்லையன்றே. (௨௯)

கண்ணெனப்படுவமூன்றுகாவலர்கல்விகாமர்
விண்ணினைச்சுழலவோடும்வெய்யவனென்னும்பேரா
ரெண்ணினுட்டலைக்கண்வைத்தகண்ணஃதில்லையாயின்
மண்ணினுக்கிருளைநீக்கும்வகைபிறிதில்லைமன்னா. (௩௦)

குடிமிசைவெய்யகோலுங்கூற்றமும்பிணியுநீர்சூழ்
படிமிசையில்லையாயின்வானுள்யார்பயிறுமென்பார்
முடிமிசைத்திவளவேந்தர்முறைமுறைபணியவிம்மி
யடிமிசைநரலுஞ்செம்பொனதிர்கழலரசரேறே. (௩௧)

தண்சுடர்க்கடவுள்போலத்தாரகைக்குழாங்கடாமே
விண்சுடர்விளக்கமாகவிளங்கலவேந்தர்போல
மண்சுடர்வரைப்பின்மிக்கமக்களுமில்லைகண்டாய்
கண்சுடர்கனலச்சீறுங்கமழ்கடாக்களிற்றுவேந்தே. (௩௨)

அருந்தவமரைசபாரமிரண்டுமேயரியதம்மை
வருந்தியுமுயிரையோம்பிமனத்தினைவணக்கல்வேண்டுந்
திருந்தியவிரண்டுந்தத்தஞ்செய்கையிற்றிரியுமாயிற் [ய்.
பெருந்துயர்விளைக்குமன்றே பிறங்குதார்நிறங்கொள்வேலோ

அந்தரந்திரியுஞ்செய்கையமரர்தம்மரசுவேண்டி
யிந்திரவுலகங்காணுநெறியவையாவையென்னின்
மந்திரம்வழாதவாய்மைமாதவமுயறலன்றேற்
றந்திரந்தழுவிச்செங்கோறளர்விலன்றரித்தலென்றான். (௩௪)

மரந்தலையிணங்கிவான்றோய்மணிவளர்வயிரக்குன்ற
முரந்தனகுழுமவேந்தியுய்த்திடுமொருவர்க்கேனு
மருந்தவமரைசபாரமவைபொறையரிதுகண்டா
யிரந்தவர்க்கீட்டப்பட்டவிருநிதிக்கிழவவென்றான். (௩௫)

உரிதனிஒருவன்செய்தலூழ்வினையுதயஞ்செய்து
விரிதவினதனதுண்மைவிளங்கினற்போலவேந்தர்
கருதியகருமஞ்சூழ்ச்சிப்பயத்தினற்கருதும்வண்ண [ன்.
மெரிதவழ்ந்திலங்கும்வேலோ யென்னுவதென்னையென்று

பஞ்சிநன்றூட்டப்பட்டமாதுளம்பருவவித்து
மஞ்சிநின்றகன்றசாகைமலரிடைவடிவுகாட்டு
மஞ்சிநின்றனலும்வேலோய்சூழ்ச்சியுமன்னதேயால் [ய்.
வெஞ்சொலொன்றுரைக்கமாட்டா விடுசுடர்விளங்குபூணோ

கொற்றவேன்மன்னர்க்கோதுங்குணமெலாங்குழுமிவந்து
முற்றுநின்றுருவுகொண்டமூர்த்திநின்முன்னர்யாங்க
ளிற்றெனவுரைக்குநீதியோதுநூலெல்லைகாணக்
கற்றவர்முன்னையேனோர்கதையொத்துக்காட்டுமென்றே. ()

தேன்மகிழ்தெரியலாய்நின்றிருக்குலந்தெளிப்பவந்த
பான்மகிழ்ந்தனையதீஞ்சொற்பவழவாய்ப்பரவையல்குல்
வான்மகிழ்மணங்கொண்மேனியணங்கினுக்குரியகோனை
யான்மகிழ்ந்துணர்த்தக்கேட்பி னிடைசிறிதருளுகென்றான்.

வேறு.

மஞ்சிவர்மால்வரைச்சென்னிவடமலை
விஞ்சையர்வாழும்விழாவணிகல்லுல
கஞ்சியல்வில்லோயதுமற்றமரர்க
டுஞ்சியலில்லாத்துறக்கமனைத்தே. (சo)

மண்ணியல்வாழ்நர்க்கும்வானுலகொப்பது
புண்ணியமில்லார்புகுதற்கரியது
கண்ணியகற்பகக்கானங்கலந்தது
விண்ணியவின்பம்விரவிற்றினிதே. (சக)

எல்லாவிருதுவுமீனும்பொழிலின
தெல்லாநிதியுமியன்றவிடத்தின
தெல்லாவமரர்கணமுமிராப்பக
லெல்லாப்புலமுநுகர்தற்கினிதே. (சஉ)

பொன்னிதழ்த்தாமரைபொய்கையுட்பூப்பன
பொன்னிதழ்த்தாமம்பொழில்வாயவிழ்ப்பன
பொன்னிதழ்த்தாதுமணிநிலம்போர்ப்பன
பொன்னிதழ்த்தாதுதுகளாய்ப்பொலிவன. (௬௩)

கானங்களாவனகற்பகங்காமுகர்
தானங்களாவனசந்தனத்தாழ்பொழி
ஞனங்களாவனநாவிநறுவிரை
வானங்களாம்வகைமற்றுமொன்றுண்டோ. (௬௪)

மணிக்கற்பட்டாரணமண்டபஞ்செம்பொன்
குணிக்கப்படாதகுளிர்புனனீத்தங்
கணிக்கப்படாதகதிர்மணிக்குன்றம்
பிணிக்கப்படாதவர்வாய்மையைப்பேற்றால். (௬௫)

ஆங்கதன்மேலவறுப்துமாநகர்
தீங்கதிர்மண்டிலஞ்சேர்ந்துதிளைப்பன
நீங்கருமாநகர்தம்முணிலாவிரிங்
தோங்கியசூளாமணியினொளிர்வது. (௬௬)

மரத்தினுமண்ணினுமாடங்கள்யாவுந்
திருத்தினவில்லதுசெம்பொனுலகிற்
புரத்தினைவெல்வதுபொன்னகர்பூந்த
ணிரத்தினபல்லவமென்பதொன்றுண்டே. (௬௭)

வளைத்தகைமங்கையர்மைந்தரொடாடி
முளைத்தெழுகாமமுடிவிலராகித்
திளைத்தவினன்னகர்தெய்வவுலகங்
களித்திழிந்தன்னதோர்கவ்வையுடைத்தே. (௬௮)

ஆடவர்கொம்பனையாரிளையாடவர்
பாடகமெல்லேர்பரவியசீறடி
தோடலர்தொங்கலங்குஞ்சியுட்டோயவைத்
தூடலுணர்த்துந்தொழிலதொன்றுண்டே. (௬௯)

சிலைத்தடந்தோளிவர்செஞ்சாந்தணிந்த
மலைத்தடமார்பிடைமைமதர்க்கண்ணார்
முலைத்தடம்பாயமுரிந்துமுடவண்
டிலைத்தடத்தேதங்குமிரக்கமுளதே. (௫௦)

வனைந்தனபோலும்வளர்ந்தமுலையா
ரினைந்துதங்காதலரின்பக்கனிகள்
கனிந்துகளித்தகங்காமங்கலந்துண
முனிந்துபுருவமுரிவபலவே. (௫௧)

செவ்வாய்ப்பவழக்கடிகைத்திரளெனு
மவ்வாயமிர்தமுண்டார்பலராவ
ரொவ்வாதிவைப்பரொசிந்தனரோடரி
மைவாணெடுங்கண்மலக்கம்பெரிதே. (௫௨)

வளர்வனபோலுமருங்குல்கணேவத்
தளர்வனபோலவர்தாமக்குழன்மேற்
கிளர்வனபோதிளவாசங்கிளைத்துண்
டுளர்வனபோதருமூதையுளதே. (௫௩)

பஞ்சாரகலல்குற்பாவையர்பூண்முலைச்
செஞ்சாந்தணிந்துதிகழ்ந்தமணிவண்டு
மஞ்சார்பொழிலுள்வளர்பெடைகண்டதற்
கஞ்சாவொளிக்குமயலததுவே. (௫௪)

பாசிலைமென்றழைப்பள்ளியுட்பாவையர்
தூசினுணின்றுசொரிமணிக்கோவையும்
பூசினசாந்தும்பிணையலும்போர்த்திடை
மூசினவண்டினமொய்பொழிலெல்லாம். (௫௫)

காமவிலேகையுங்கற்பகமாலையுஞ்
சேமமணிநகைச்செப்பினுளேந்துபு
தூமக்குழலவர்தாதுதிரிபவர்
தாமத்தெருவிடைதாம்பலர்கண்டாய். (௫௬)

தாமத்தொடையல்பரிந்துதமனிய
வாமக்கலங்கள்புலம்பமகளிர்கள்
காமக்கடலைக்கலக்குங்கழலவர்
தீமைத்தொழிலவைதேர்ந்துளவன்றே. (ருஎ)

வே று.

பொன்னகர்தன்னையாள்வான்புரந்தரனனையமாண்பின்
மன்னவன்மயூரகண்டன்மற்றவன்றேவிமாருண்
மின்னவிர்மருங்குனீலாங்கனையெனவிளங்கிநின்ற
ளன்னவள்புதல்வன்கண்டாயச்சுவக்கிரீவனென்பான். (ருஅ)

அதிர்கழலலங்கல்வேலோயச்சுவக்கிரீவனென்னும்
பொதியவிழ்பொலங்கொள்பைந்தார்ப் புரவலன்றிகிரியெய்தி
மதிதவழ்குன்றமெல்லாம்வணக்கியபின்றைமண்ணுங்
கொதிதவழ்வேலினான்றன்குறிப்பொடுகூடிற்றன்றே. (ருக)

சுற்றமாண்புடைமையாலுஞ்சூழ்கதிர்த்திகிரியாளுங்
கொற்றமாங்குடைமையாலுங்குலத்ததுபெருமையாலுங்
கற்றமாண்விஞ்சையாலுங்கருதியமுடித்தலாலும்
வெற்றிவேலவனோடொப்பார்வேந்தர்மற்றில்லைவேந்தே. ()

தம்பியர்நீலத்தேரோன்றயங்குதார்நீலகண்டன்
வம்புயர்மகரப்பேழ்வாய்வயிரமாகண்டன்வண்டுண் [டாய்
தும்பியுந் துவைக்குந்தொங்கற் சுகண்டனென் றிவர்கள்கண்
வெம்பியவுருமுத்தீயுங்கூற்றமும்வெதுப்புநீரார். (சுக)

படையினதமைதிகூழின்பகுதியென்றிவற்றின்பன்மாண்
புடையவரவனொடொப்பாரொருவர்மற்றில்லைவேந்தே
விடயமொன்றின்றிவென்றவிடுசுடராழியாளு
நடையவனுவப்பின்ஞாலம்பிறருழைநடப்பதென்றான். ()

ஆணைநூலமைச்சனுவானரிமஞ்சுவவனதாற்றல் [லான்
கோணைநூற் பவரைத்தன்சொற் குறிப்பின்மேனிறுத்தவல்
பேணுநூனிமித்தம்வல்லான்சதவிந்துபெரியநீரான்
காணுநூற்புலமையாருங்காண்பவரில்லைகண்டாய். (சுஉ)

தன்னலாற்றெய்வம்பேணார்சார்ந்தவர்தானுஞ்சார்ந்தார்க்
கென்னலாலிவருக்குற்றாரில்லையென்றிரங்குநீரான்
பொன்னெலா * நெதியமாரப்பொழிந்திடுகின்றபூமி
மன்னெலாமவனையன்றிவணங்குவதில்லைமன்னா. (௬௪)

குளிறும்வாளுழுவையன்னான்குமாரகாலத்துமுன்னே
களிறுநூறெடுக்கலாகாக்கற்றிரள்கடகக்கையா
லொளிறுவாளுழவனேந்தியுருட்டிவட்டாடவன்றே
வெளிறிலாக்கேள்வியானைவிஞ்சையரஞ்சியிட்டார். (௬௫)

மூற்றவமுடைமையாலேமூரிநீருலகமெல்லா
மற்றவனேவல்கேளாமன்னவரில்லைமன்னா
செற்றவனலிதலஞ்சித்திறைகொடுத்தறிவித்தன்றே
நற்றவநங்கைதோன்றுமுன்னநாமாண்டதெல்லாம். (௬௬)

ஈங்குநங்குலக்கொம்பொப்பாள்பிறந்தபினினியனாகித்
தேங்கமழலங்கல்வேலோன்றிறைகொளலொழிந்துசெல்லு
மாங்கவன்றிறங்களெல்லாமறிதியாலாணைவேந்தே
தீங்கியானுணர்த்திற்றுண்டோதிருவடிதெளிகவென்றான். ()

ணா
மற்றவற்குரியதங்கையென்பதென்மனத்தினோடு
முற்றுவந்துளதுசாலவுறுதியுமுடையதொக்கும்
வெற்றிவேல்விஞ்சையாருமஞ்சுவர்மின்செய்பைம்பூட் [ன்.
கொற்றவ குறிப்புண்டாயிற் கொடுப்பது குணங்கொலென்று

சுடர்மணிமருங்குற்பைங்கட்சுளிமுகக்களிநல்யானை
யடர்மணிக்கதிரும்பைம்பொன்மாலையுமணிந்தசென்னித்
தொடர்மணிப்பூணினாற்குச்சுச்சுதன்சொல்லக்கேட்டே
படர்மணிப்படலைமாலைப்பவச்சுதன்பகரலுற்றான். (௬௯)

வேறு.

நூலாராய்ந்துநுண்பொறிகண்ணுநொடிவல்லான்
மேலாராயுமேதைமையாலுமிகநல்லான்
றோலாநாவிற்சுச்சுதன்சொல்லும்பொருளெல்லாம்
வேலார்கையாய்மெய்ம்மையவன்றேமிகையாலும். (௭௦)

* நெதியம், திறை.

தேனும்வண்டுந்தீதிலபாடுஞ்செறிதாரோ
யானுங்கண்டேனச்சுவகண்டன்றிறமிஃதே
மானங்கொண்டமாரதர்போரேறனையாயோ
ரூனங்கண்டேனொட்டினுமொட்டேனுரைசெய்கேன். (௭௧)

மானக்கோதைமாசறுவேலோய்வரவெண்ணி
நானக்கோதைநங்கைபிறந்தநாளானே
வானக்கோளின்மாண்புணர்வார்கண்மறுவில்லாத்
தானக்கோளிற்சாதகவோலைதலைவைத்தார். (௭௨)

காவிப்பட்டங்கள்விரிகானற்கடலுடன்
மேவிப்பட்டம்பெற்றவன்காதன்மேயானா
லேவிப்பட்டமீந்தவரெல்லாமினிதேத்துந்
தேவிப்பட்டஞ்சேர்பவளன்றேதிருவன்னாள். (௭௩)

நங்கோனங்கைநன்மகனாகிநனிவந்தான்
றங்கோனேவத்தானிளவேந்தாய்த்தலைநின்றா
னெங்கோனென்றேயிவ்வுலகேத்துமியறன்னாற்
செங்கோலின்பஞ்சேர்பவனன்றேசெருவேலோன். (௭௪)

என்றாலன்றச்சாதகவோலையெழுதிற்றாற்
குன்றாவென்றிக்குன்றுறழ்யானைக்கொலைவேலோய்
நன்றாநங்கைக்கொன்றியகாமப்பருவத்தா
னின்றானன்றேயின்றுணையாகுங்கிளைமேயான். (௭௫)

ஆழிக்கோமானச்சுவகண்டனவனுக்கே
யூழிக்காலமோடினவென்னுமுரையாலுந்
தாழிக்கோலப்போதனகண்ணாடகுவாளோ
சூழிக்கோலச்சூழ்களியானைச்சுடர்வேலோய். (௭௬)

கண்ணார்கோதைக்காமருவேய்த்தோட்கனகப்பேர்
மண்ணார்சீர்த்திச்சித்திரையென்னுமடமாதின்
றெண்ணாரின்பக்காதலியாகியியல்கின்றாள்
பெண்ணார்சாயல்பெற்றனடேவிப்பெறுபட்டம். (௭௭)

வானேருட்குமக்களொரைஞ்ஞூற்றுவர்தம்மு
ளீனேருட்குமிரத்தினகண்டனெனநின்று
னேனேருட்குமின்னிளவேந்தாயியல்கின்று
னூனேருட்குமொண்சுடர்நஞ்சூற்றுளிவேலோய். (எஅ)

அன்னணியினுதலினன்றேயவனல்லா
லென்னவனென்றனன்வேந்தனெனலோடு
மின்னனின்னனிந்நகராள்வானிவனன்றே
யன்னனன்னற்கந்நகரெல்லாமறிவித்தான். (எகூ)

மையார்சென்னிமால்வரையாளும்வயமொய்ம்பிற்
கையாரெஃகிற்காளைகடம்முட்கமழ்கோதை
மெய்யாமேவுமேதகுவானைமிகவெண்ணிக்
கொய்யாவிம்முங்கொங்கலர்தாரோய்கொடுவென்றான். (அ0)

வேறு.

கேடிலிம்மலையின்மேலாற்கின்னரகீதமாளுந்
தோடிலங்குருவத்தொங்கற்சுடர்முடியரசன்செம்மல்
பாடல்வண்டிமிரும்பைந்தார்ப்பவனஞ்சனென்பபாரித்
தாடலம்புரவிவல்லவரசிளங்குமரனென்றான். (அக)

அளந்தறிவரியசெய்கையமிழ்தமாபதியையாளும்
வளந்தருவயிரப்பைம்பூண்மன்னவன்சிறுவன்வண்டார்
விளங்கொளியுருவத்திண்டோள்வேகமாரதனையன்றே
யிளங்களியுழுவையாகவிருநிலம்புகழ்வதென்றான். (அஉ)

வேழத்தாற்பொலிந்தசோலைமேகமாபுரமதாளு
மாழித்தேரரவத்தானையரசர்கோன்புதல்வனந்தார்ப்
பாழித்தோளுருவச்செங்கட்பதுமத்தேர்ப்பெயரினானை
யூழித்தீயென்றுவேந்தருட்குவதுருவத்தாரோய். (அங)

இலங்கொளிமாடவீதியிரத்தினபுரமதாளு
முலங்கெழுவயிரத்திண்டோளொளிமுடியரசன்செம்ம
லலங்கலம்புரவித்தானையருங்கலத்தேரின்பேரன் [பான்.
குலங்கெழுகுரிசில்கண்டாய் கொண்டல்வானுருமோடொப்

நங்கண்மால்வரையின்மேலோனன்னகர்கீதமென்னுந்
திங்கண்மால்புரிசைவேலிச்செழுநகராசன்செம்ம
லங்கண்மாஞாலமாளுமரிகண்டனவனைவிண்மேற்
செங்கண்மான்முனியுமேனுஞ்செய்வதொன்றில்லைகண்டாய்

சேந்தெரிசெம்பொன்வீதித்திரிபுரமதனையாளும்
வாய்ந்தெரிவயிரப்பைம்பூண்மன்னவன்புதல்வன்மல்லா
டேந்துதோளரசர்போரேறிவனளிதாங்கனென்பான் [ன்.
காய்ந்தெரிகனலின்வெய்யோன் கல்வியாற்கடலோடொப்பா

செந்தளிர்புதைந்தசோலைச்சித்திரகூடமாளு
மந்தளிரலங்கன்மாலையரசர்கோன்சிறுவனந்தா
ரிந்திரன்புதல்வனன்றுமேனந்தமேலமாங்கதற்கிம்
மந்திரவுலகின்வாழுமன்னர்மாறில்லைமன்னு. (௮௭)

அருமணியடுத்தவீதியச்சுவபுரமதாளுந்
திருமணிதிகழும்பூணான்பெருமகன்சிறைவண்டென்னுங்
கருமணிதுதைந்தபைந்தார்க்கனகசித்திரனையன்றே
யொருமணிதிலதமாகவுடையதுலகமதென்றான். (௮௮)

சீரணிமுழவமோவாச்சிறிநிலையதனையாளுங்
காரணிதடக்கைவேந்தன்கான்முளைகனபொனார்ந்த
தோரணியரவத்தானைச்சித்திரத்தேரின்பேரான்
றாரணிமார்பனன்றேதரணிக்கோர்திலதமாவான். (௮௯)

கற்றவர்புகழுஞ்சீர்த்திக்கனகபல்லவத்தையாளுங்
கொற்றவன்சிறுவன்கோலக்குங்குமக்குவவுத்தோளான்
செற்றவர்ச்செகுக்குஞ்செய்கைச்செருவல்லான்சிங்ககேது
மற்றவன்பிறந்தபின்னுமண்மகள்மகிழ்ந்ததென்றான். (௯௦)

இஞ்சிசூழெரிபொன்மாடத்திந்திரன்மிசைந்தநாமச்
சஞ்சயமுடையகோமான் * றாண்முளைதரணியெல்லா
மஞ்சுரீரலங்கல்வேலானருஞ்சயனவனைநங்கண்
மஞ்சுசூழ்மலைக்கோர்சூளாமணியெனக்கருதுமன்னு. (௯௧)

* தாண்முளை, கான்முளை.

ஈங்கிவர் தம்முள்யாவரிலங்கிரும்பவழச்செவ்வாய்க்
கோங்கிவர்குவிமென்கொங்கைக்கொம்பினுக்குரியகாளை
யாங்கவன்றன்னையாராய்ந்திதந்தருள்செய்கவென்றான்
வாங்கிரும்பரவைமுந்நீர்மணிகொழித்தனையசொல்லான். ()

வேறு.

மன்னர்நீண்முடிமென்மணித்தொத்தொளி
துன்னுசேவடியாற்குச்சுருங்கவே
பன்னுகேள்விப்பவச்சுதன்சொல்லலு
மன்னதேயென்றெல்லார்களுமொட்டினர். (கூ௩)

அல்லிநாண்மலராருமுத்தாரமும்
வல்லியாங்கணிசாந்தும்வனைந்துராய்
மல்லினன்மலிமார்பற்குமற்றிவை
சொல்லினன்சுதசாகரனென்பவே. (கூ௪)

ஆழியாள்கின்றவச்சுவகண்டன்மேற்
பாழியாகின்றதிண்டோட்பவச்சுதன்
சூழியானையினய்சொலப்பட்டன
வூழியாருரையும்மொத்துளகண்டாய். (கூ௫)

ஆயினுஞ்சிறிதுண்டறிவண்டினம்
பாயினும்பனிக்கும்படர்கோதைதன்
வேயினும்பணைக்கின்றமென்றோள்பிறர்
தோயினும்பகையாஞ்சுடர்வேலினாய். (கூ௬)

வண்டவாமுடிமன்னருண்மற்றவன்
றண்டமாற்றுநர்தாமிலையாற்சிறி
துண்டியானுரைப்பானுறுகின்றது
விண்டுவாழுநர்மேனகுவேலினாய். (கூ௭)

போகமாண்டவிச்சேடியோர் * பொன்னகர்க்
கேகநாயகனுயினிதாள்பவன்
மேகவாகனனென்றுளன்வீழ்மத
வேகமால்களிறும்மிகுவேலினன். (கூ௮)

---

* சுரேந்திரகாந்தம்.

நாகமாலைகண்மேனகுவண்டின
மேகமாலையவாயிசைகைவிடாத்
தோகைமாமயில்பொற்சுரிகூந்தலாண்
மேகமாலினியென்றுரைமிக்குளாள். (கூகூ)

தேவிமற்றவடெய்வம்வழிபட
மேவிவந்தனன்விச்சுவனென்பவ
னேவிறல்புகழானுளன்கூற்றமு
மேவிநின்றினிதாண்டிடுமீட்டினன். (க00)

மையில்வானுலகாண்டுமண்ணோர்களுக்
குய்யும்வாயிலுணர்த்தியதோன்றிய
வையனூற்பிறவாரணர்நீங்கியிவ்
வையமாயதெல்லாம்வளர்கின்றதே. (க0க)

மங்குல்வானுலகாண்டுவரத்தினா
லிங்குவந்தனனீண்டளியீந்தபிற்
றிங்கள்வாளொளியிற்றிகழ்சோதியாய்த்
தங்குவானுலகிற்றகைசான்றதே. (க0௨)

தன்னினாய்விளைவித்திருளைத்தவிர்த்
தின்னனாகவென்றெண்ணியவெண்ணமோ
டன்னனாதலினாலவன்மேற்பிற
ரென்னரேனுமின்னாதனவெண்ணிலார். (க0௩)

காம்பின்வாய்ந்தமென்றோளியக்காதலன்
றேம்பன்மாலைநன்மார்பகஞ்சேருமே
லாம்பன்மாலையுமாய்கதிர்த்திங்களுந்
தாம்பன்மாலையுஞ்சார்ந்ததனைத்தரோ. (க0௪)

நம்பிதங்கைகைமலர்க்கற்பகக்
கொம்பினன்னவள்கொங்கணிகூந்தலா
ளம்பினீண்டரிசிந்தியமாக்கயல்
வம்பினீண்டமைவாணெடுங்கண்ணினாள். (க0௫)

கோதின்மாலைகள்மேற்குதிகொண்டெழு
கீதமாலையகின்னரவண்டின
மூதிமாலையவாயுறையுங்குழற்
சோதிமாலையென்பாள்சுடர்ப்பூணினாள். (கoசு)

வெம்புமால்களியானைவிலக்குமீர்
நம்பி * ஞாயிறுசேர்பெயராற்கணி
யம்பினீளரிவாணெடுங்கண்ணவள்
வம்புசேர்முலைவாரிவளாகமே. (கoஎ)

இன்னவாறிசையப்பெறின்யாவரு
மென்னவாறுமிகப்பவரின்மையா
லன்னவாறருளுண்டெனிலாய்ந்தியான்
சொன்னவாறுகொண்டீசுடர்வேலினேய். (கoஅ)

வேறு.

கொங்குவண்டலைந்ததாரான்குறிப்பறிந்திவைகளெல்லா
மங்கவன்மொழிந்தபின்னையவனையுமமைதிகூறி
நங்கைதன்றாதைதோழர்நால்வருணால்வரானான்
றெங்கலந்துணர்கொண்மார்பிற்சுமந்திரிசொல்லலுற்றான்.()

அண்ணலங்களிகொள்யானையச்சுவகண்டன்மூத்தாற்
கெண்ணலுந்தகுவதன்றாலிவன்பணியகற்றலாற்றாக்
கண்ணலங்கவரும்வேலோர்க்கீயினுங்கருமமன்றாற்
பெண்ணலங்கனிந்தபேதையிருப்பதும்பெருமையன்றே. ()

சூழ்கதிர்ப்புரிசைவேலிச்சுரேந்திரகாந்தமாளுந்
தாழ்கதிராரமார்பிற்றமனியக்குழையினான்றன்
போழ்கதிர்க்கடவுள்போலும்புதல்வனுக்குரிமைசெய்தி
யாழ்கதிர்விலங்கலாளுமரசவம்ஃதரிதுகண்டாய். (ககக)

மங்கையர்முகத்தினீண்டுமைகடைமதர்ப்பமாந்தி
யங்கயல்பிறழ்வபோலுமையரியடர்த்தவாட்கட்
பங்கயச்செங்கணான்மேற் படைத்தொழில்பயின்றபோழ்துந்
தங்கியமனத்தனாகித்தளர்விலன்றவத்தின்மிக்கான். (ககஉ)

---

* அர்க்ககீர்த்தி.

மண்கணைமுழவச்சீருமடந்தையர் தூக்குமற்றும்
பண்கனிபாடலாடற்பாணியும்பயின்றுமேவான்
விண்கனிந்தனையவின்பவெள்ளமும்வெறுத்துநின்றான்
கண்கனியுருவக்காளைகடவுளர் தகையன்கண்டாய். (௧௧௩)

செறிகழலவற்குத்தாதைசித்திரகூடமென்னு
மறிவரன்கோயிலெய்தியணிவிழவயர்ந்தகாலை
யிறுதியிலவதிஞானியசோதரனென்னும்பேர [ன்.
வுறுவனை வணங்கிக்கேட்டான் மகன்றிறமுலங்கொடோளா

பங்கயப்பழனவேலிப்பவகிரியரசன்பைந்தார்
தங்கியதடங்கொண்மார்பன்சயசேனனவற்குத்தேவி
செங்கயனெடுங்கட்செவ்வாய்ப்பிரிதிமதிபயந்தகாளை
வெங்களியானைவல்லவிசயபத்திரனென்பானே. (௧௧௫)

மந்திரத்தரசர்கோவேமற்றவன்வையங்காக்குந்
தந்திரந்துறந்துநோற்றுமறைந்துசாசாரமென்னு
மிந்திரவுலகமெய்தியேழொடீரைந்துமுந்நீ
ரந்தரகாலந்தேவர்க்கரசனாயாண்டுவந்தான். (௧௧௬)

ஆதலாலமரபோகநுகர்ந்தவனரைசர்செல்வம்
போதுலாமலங்கன்மார்பபொருளெனமருளல்செல்லான்
தீதெலாமகலநோற்றுச்சிவகதிசேருமென்றக்
கோதிலாமுனிவன்சொன்னவுரையிவைகூறக்கேட்டாம். ()

அம்மையாற்றவங்கடாங்கியலர்ந்தநல்லறிவினாலு
மிம்மையானுடம்புநீங்கியிகந்துபோமியற்கையாலுஞ்
செம்மையாற்கடவுட்டானஞ்சேர்வதேசிந்தையாற்கு
மெய்ம்மையாற்கருமச்சுற்றம்வேண்டுவதில்லைவேந்தே. ()

வாரணிமுரசமார்ப்பவயிரொடுவளைகளேங்கத்
தாரவர்குழாங்கணீண்டச்சயமரமறைதுமேனு
மாரவிராழியானையஞ்சுதுமறியலாகா
கார்விரிதடக்கைவேந்தேகழலவர்கருமமென்றான். (௧௧௯)

ஒன்றுநாங்கருதிச்சூழினூழதுவிளைவுதானே
கன்றிநாங்கருதிற்றின்றிமற்றொர்வாறுகநண்ணு
மென்றுநாந்துணிந்தசெய்கையிதன்றிறத்தென்னமாட்டா
மின்றுநாந்துணிதுமாயினினிச்சிறிதுரைப்பனென்றான். ()

வீழ்புரிவிளங்குநூலோய்மேலுநங்குலத்துளார்கட்
கூழ்புரிந்துறுதிகூறுமுயர்குலமலரநின்றான்
றாழ்புரிதயங்குநுண்ணூற்சதவிந்துமொழிந்தவற்றால்
யாழ்புரிமழலையாள்கண்ணுவிதையறிதுமென்றான். (கஉக)

என்றவன்மொழிந்தபோழ்தினேனையாரினிதினோக்கி
மின்றவழ்விளங்குவேலோய்மெய்யினுமேவல்வேண்டுஞ்
சென்றவன்மனையுணீயேவினவெனச்சேனைவேந்த
னன்றவர்மொழிந்ததெல்லாநல்லவாயந்துகேட்டான். ()

இந்திரனனையநீரோயினிப்பிறிதெண்ணல்வேண்டா
மந்திரநீளுமாயின்வருவனவறியலாகா
சந்திரன்றவழநீண்டதமனியச்சூலநெற்றி
யந்தரந்திவளுஞாயிற்கோயில்புக்கருளுகென்றார். (கஉங)

மந்திரக்கிழவர்தம்மைமனைபுகவிடுத்துமன்னன்
சுந்தரச்சுரும்புந்தேனுஞ்சூழ்கழனிரையுமார்ப்ப
வந்தரமகளிர்போல்வார்வரன்முறைகவரிவீச
வந்தரக்கடைகணீங்கியகனகாருளிப்புக்கான். (கஉச)

வேறு.

மிகுகதிர்விலங்கலார்வேந்தன்றேனுடைந்
துகுகதிர்மண்டபமொளிரவேறலுந்
தொகுகதிர்சுடுவனபரப்பிச்சூழொளி
நகுகதிர்மண்டிலநடுவணின்றதே. (கஉரு)

கண்டிரள்கழைவளர்கரும்புகைமிகுத்
தொண்டிரள்வெள்ளிலையுரிஞ்சுமோடையர்
வெண்டிரண்மணிப்புடைசிலம்பவிட்டன
வண்டிரள்கிளையொடுவளைகளார்த்தவே. (கஉசு)

ஒலிவிழாவண்டினமூதலூறுதேன்
மலிவிழாப்பிணையலுமணங்கொள்சாந்தமும்
பலிவிழாப்பதாகையும்பரந்துபாடுவார்
கலிவிழாக்கழுமினகடவுட்டானமே. (௧௨௭)

குண்டுநீர்க்குழுமலர்க்குவளைப்பட்டமு
மண்டுநீர்மரகதமணிக்கல்வாவியுங்
கொண்டுநீரிளையவர்குடையக்கொங்கொடு
வண்டுநீர்த்திவலையின்மயங்கிவீழ்ந்தவே. (௧௨௮)

பங்கயத்துகள்படுபழனநீர்த்திரை
மங்கையர்முலையொடுபொருதவாவிக
ளங்கவரஞ்சனமழித்தசேற்றினுங்
குங்குமக்குழம்பினுங்குழம்புகொண்டவே. (௧௨௯)

அங்கள்வாய்க்கயம்வளராம்பறாம்பிடைப்
பொங்குகாடேர்படஞெறித்துப்பூவொடு
கொங்கைவாய்க்குழலவர்குளிப்பவிட்டன
திங்கள்வாண்முகவொளிதிளைப்பவிண்டவே. (௧௩௦)

மாயிரும்பனித்தடம்படிந்துமையழி
சேயரிநெடுமலர்க்கண்கள்சேந்தெனத்
தாயரைமறைக்கியகுவளைத்தாதுதேன்
பாய்மொரிந்திறைஞ்சினர்பாவைமார்களே. (௧௩௧)

சந்தனத்துளித்தலைததும்பச்சாந்தளைந்
தந்தரத்தசைப்பனவாலவட்டமு
மெந்திரத்திவலையுமியற்றியீர்மணற்
பந்தருட்பாலிகைக்குவளைபாய்த்தினர். (௧௩௨)

குருமணித்தாமரைக்கொட்டைசூடிய
திருமணிப்பீடமுஞ்செதுக்கமாயவும்
பருமணிப்பளிங்கெனவிளங்குவான்பலி
யருமணிக்கொம்பனாரலரவூட்டினர். (௧௩௩)

அன்னணம்பொழுதுகண்ணகற்றவாயிடைப்
பன்னருங்காலநூல்பயின்றபண்புடைக்
கன்னலங்கருவியோர்கழிந்தநாழிகை
மன்னவனடிமுதலுணர்த்திவாழ்த்தினர். (கருச)

வாரணிமுலையவர்பரவமன்னவ
னீரணிப்பள்ளிபுக்கருளினனிரங்
தேரணியின்னியமிசைத்தவின்பமோ
டாரணிதெரியலானமிர்தமேயினன். (கருரு)

வெள்ளிழைபொலிந்தொளிதுளும்புமேனியன்
வள்ளிதழ்மல்லிகைமலர்ந்தமாலைய
னள்ளிதழ்ப்புதுமலரடுத்தவீதிமேற்
கள்ளிதழ்க்கண்ணியான்காலினேகினன். (கருசா)

பொன்னவிர்மணிக்கழல்புலம்பத்தேனினந்
துன்னலர்தொடையலிற்சுரும்பொடார்த்தெழ
மன்னவனடத்தொறுமகரகுண்டல
மின்மலர்ந்திலங்குவில்விலங்கவிட்டவே. (கருஎ)

நெய்யிலங்கெஃகினர்நிறைந்தவிஞ்சையர்
கையிலங்கீட்டியர்கழித்தவாளினர்
மெய்யிலங்குறையினர்விசித்தகச்சையர்
வையகங்காவலன்மருங்குசுற்றினர். (கருஅ)

சுரும்புசூழ்பிணையலுஞ்சுண்ணமாரியுங்
கரும்புசூழ்கிளவியர்சொரிந்துகைதொழ
விரம்புநூனிமித்திகன்மாடநீள்கடை
யரும்புசூழ்தெரியலானருளினெய்தினன். (கருகூ)

எங்குலம்விளங்கவிங்கருளிவந்தவெங்
கொங்கலர்தெரியலாய்கொற்றங்கொள்கென
மங்கலவுழைக்கலம்பரப்பமன்னனுக்
கங்கலர்கேள்வியானுசிகூறினன். (கசo)

கொண்டமர்ந்தகிற்புகைகழுமிக்கோதைவாய்
விண்டமர்ந்தொழுகுவமதுக்கள்வீழ்ந்துராய்
வண்டமர்ந்தொலிசெயமருங்குல்கொண்டதோர்
மண்டபமணித்தலமன்னனெய்தினன். (௧௪௧)

தழையவிழ்சந்தனப்பொதும்புபோன்மது
மழைதவழ்மண்டபமலிரவிற்றிருந்
துழையவர்குறிப்பறிந்தகலவொண்சுடர்க்
குழையவன்குமரிதன்கருமமெண்ணினன். (௧௪௨)

கனைத்தெழுகதிர்மணிக்கடகஞ்சூடிய
பனைத்திரளனையதோட்படலைமாலையான்
மனத்தினைமறுவினூல்வாயினாற்சொல
நினைத்திவைவிளம்பினனிமித்தநீதியான். (௧௪௩)

மணங்கமழ்ந்துமலரலங்கன்மாலைபோல்
வணங்கெழினுடங்கிடைமாழைநோக்கிநங்
கணங்குழைகருமமாங்கருதிற்றென்றன
னணங்கெழில்விரிந்தநூலலர்ந்தநாவினன். (௧௪௪)

வெண்ணிலாவிரிந்தெனவிளங்குமாலையன்
கண்ணிலாங்கவர்தகைக்கண்ணிமன்னனை
மண்ணிலாமறுகிடைவலங்கொண்டெய்தின
னெண்ணிலாங்கதுதிருவெதிர்ந்தவண்ணமே. (௧௪௫)

பொன்சுலாஞ்சுடரிழைபொறுத்தபூண்முலை
மின்சுலாநுடங்கிடைமெல்லியாடிற
மென்சொலாலின்றியானியம்புநீரதோ
மன்சுலாவகலவின்றலரும்வாளினாய். (௧௪௬)

ஆதிநாளறக்கதிராழிதாங்கிய
சோதியான்றிருமொழிவிளக்கித்தோன்றுமாற்
போதுவார்புரிகுழற்பொலங்கொம்பன்னவிம்
மாதராள்வனமுலைக்குரியமைந்தனே. (௧௪௭)

அம்மயிலனையவடிறத்தினாரியன்
செய்ம்மையில்விளம்பியசெல்வங்கேட்டலு
மெய்ம்மையிற்றெரிந்தொளிதுளும்புமேனியன்
பொய்ம்மையில்புகழவன்பொலிந்துதோன்றினான். (௧௪௮)

முன்னியவுலகுகண்விடுத்தமூர்த்தியான்
மன்னியதிருமொழியகத்துமாதரா
ளென்னைகொல்விரிந்தவாறெனலுமன்னனுக்
கன்னவனாதிமாபுராணமோதினான். (௧௪௯)

மூவகையுலகினுணடுவண்மூரிநீர்த்
தீவினதகலமுஞ்சிந்துவட்டமு
மோவலவொன்றுக்கொன்றிரட்டிகண்ணறை
யேவலாய்விரிந்தவையெண்ணிறந்தவே. (௧௫௦)

மந்தரநெடுமலைநடுவின்வாய்ந்தது
சுந்தரவேதிகைமருங்குசூழ்ந்தது
நந்தியாளிசினைநாவன்மாமர
மந்தரத்துடையதிவ்வவனிவட்டமே. (௧௫௧)

குலகிரியாறுகூர்கண்டமேழ்குலாய்
மலைதிரைவளர்புனலேழிரண்டதாய்க்
கொலைதருவேலினாய்கூறப்பட்டதிவ்
வலைதிரைநெடுங்கடலவனிவட்டமே. (௧௫௨)

மாற்றவர்மண்டிலமதனுளூழியா
லேற்றிழிபுடையனவிரண்டுகண்டமாந்
தேற்றியவிரண்டினுந்தென்முகத்தது
பாற்றரும்புகழினாய்பரதகண்டமே. (௧௫௩)

மற்றதுமணிமயமாகிக்கற்பகம்
பொற்றிரளணிபொழிற்போகபூமியாய்
முற்றியவூழிமூன்றேறிமீள்வழிப்
பிற்றகையூழிவட்பிரமர்தோன்றினார். (௧௫௪)

வெங்கதிர்ப்பரிதியும்விரவுதண்பனி
யங்கதிர்வளையமுமாதியாயின
விங்கிவர்படைத்தனரிழிந்ததிவ்வகை
பொங்கியபுரவியாய்போககாலமே. (௧௫௫)

ஊழிமூன்றாவதோய்ந்திறுதிமன்னுயிர்
சூழ்துயர்பலகெடச்சோதிமூர்த்தியா
யேழுயருலகுடன்பரவவீண்டரு
ளாழியங்கிழமையெம்மடிகடோன்றினார். (௧௫௬)

ஆரருடழுவியவாழிக்காதியாம்
பேரருள்மருவியபிரான்றன்சேவடி
காரிருள்கழிதரக்கண்கவின்றரோ
சீரருள்சரணெனவுலகஞ்சேர்ந்ததே. (௧௫௭)

அலந்தவரழிபசியகற்றும்வாயிலுங்
குலங்களுங்குணங்களுங்கொணர்ந்துநாட்டினான்
புலங்கிளர்பொறிநுகர்விலாதபுண்ணிய
னலங்கிளர்திருமொழிநாதனென்பவே. (௧௫௮)

ஆங்கவன்றிருவருளலரச்சூடிய
வீங்கியவிரிதிரைவேலிகாவல
னோங்கியநெடுங்குடையொருவனாயினான்
பாங்குயர்பரிதிவேற்பரதனென்பவே. (௧௫௯)

ஆழியாலகலிடம்வணக்கியாண்டவன்
பாழியானவின்றதோட்பரதனாங்கொர்நா
ளூழியானொளிமலருருவச்சேவடி
சூழிமால்யானையான்றொழுதுவாழ்த்தினான். (௧௬0)

கதிரணிமணிமுடிவணங்கிக்காவல
னெதிரதுவினவினானிறைவன்செப்பினா
னதிர்தருவிசும்பிடையமிர்தமாரிசோர்
முதிர்தருமுகிலிடைமுழங்கிற்றென்பவே. (௧௬௧)

என்முதலிருபத்தீரிருவர்நாதர்க
ணின்முதலீரறுவகையர்நேமியர்
மன்முதல்பலவர்கேசவர்கண்மாற்றவர்
தொன்முதலவர்தொகையொன்பதொன்பதே. (௧௬௨)

மன்னவநின்மகன்மரிசிமாற்றிடைப்
பொன்னவிர்போதனமுடையபூங்கழற்
கொன்னவில்வேலவன்குலத்துட்டோன்றினா
லன்னவன்கேசவர்க்காதியாகுமே. (௧௬௩)

கேசவனாந்திறங்கிளப்பின்வெண்மலை
காசறுவனப்பினோர்கன்னியேதுவா
வாசறவச்சுவக்கிரீவனாவியுந்
தேசறுதிகிரியுஞ்செவ்வன்வௌவுமே. (௧௬௪)

தேரணிகடற்படைத்திவிட்டன்சென்றுபி
னாரணியறக்கதிராழிநாதனும்
பாரணிபெரும்புகழ்ப்பரதவென்றனன்
சீரணிதிருமொழித்தெய்வத்தேவனே. (௧௬௫)

ஆதியுமந்தமுநடுவுநம்மதே
யோதநீருலகுடையுரிமையென்றரோ
காதுவேலரசர்கோக்களிப்புற்றுனிது
போதுசேரலங்கலாய்புராணநீர்மையே. (௧௬௬)

அன்னணம்புராணநூலகத்துத்தோன்றிய
கன்னவிலிலங்குதோட்காளையானவன்
மின்னவில்விசும்பினின்றிழிந்துவீங்குநீர்
மன்னியவரைப்பகமலிரத்தோன்றினான். (௧௬௭)

திருவமர்சுரமைநாடணிந்துசெம்பொனாற்
பொருவருபோதனமுடையபூங்கழற்
செருவமர்தோளினான்சிறுவராகிய
விருவருளிளையவனீண்டநம்பியே. (௧௬௮)

கானுடைவிரிதிரைவையங்காக்கிய
மானுடவுடம்பினுன்மறைந்துவந்தவத்
தேனுடையலங்கலான்றெய்வமார்பகந்
தானடைந்தமர்வதற்குரியடையலே. (௧௬௯)

ஆங்கவற்கீந்தபினுழிதாங்கிய
வீங்கவற்கொன்றுனக்கிரண்டுசேடியுந்
தாங்கியதிருவினுற்றருமற்றென்றலும்
வீங்கியவுவகையன்வேந்தனுயினுன். (௧௭0)

கொங்கலர்தெரியலான்றிறத்திற்கொள்குறி
யிங்கியானிசைத்ததேயமையுமல்லதோர்
திங்களுளகவையிற்றிவிட்டனுங்கொரு
சிங்கம்வாய்பிளந்திடுந்தெளியிதென்னவே. (௧௭௧)

நிமித்தகனுரைத்தலுநிறைந்தசோதியா
* னுமைத்தகையிலாததோருவகையாழ்ந்துகண்
ணிமைத்திலனெத்துணைப்பொழுதுமீர்மலர்ச்
சுமைத்தகைநெடுமுடிசுடரத்தூக்கினுன். (௧௭௨)

இருநிலத்தலைமகளியன்றநூற்கடற்
றிருநிதிச்செல்வனச்செம்பொன்மாரியாச்
சொரிநிதிப்புனலுடைச்சோதிமாலையென்
றருநிதிவளங்கொணுடாளநல்கினுன். (௧௭௩)

மன்னவன்பெயர்ந்துபோய்வாயுவேகைதன்
பொன்னகர்புக்கனன்பொழுதுஞ்சென்றது
கன்னிதன்பெருமையுங்கருமச்சூழ்ச்சியு
மன்னமென்னடையவட்கறியக்கூறினுன். (௧௭௪)

தொக்கிளமலர்துதைவிலாதசோலையும்
புக்கிளந்தாமரைநகாதபொய்கையு
மிக்கிளம்பிறைவிசும்பிலாதவந்தியும்
மக்களையிலாததோர்மனையுமொக்குமே. (௧௭௫)

---

* உவமையின்விகாரம்.

தலைமகன்றாடனக்காகச்சாகைய
நிலைமைகொண்மனைவியாகிமிர்ந்தபூந்துணர்
நலமிகுமக்களாமுதியர்தேன்களாக்
குலமிகுகற்பகங்குளிர்ந்துதோன்றுமே. (௧௭௬)

சூழிநீண்முகத்தனதுளைக்கைம்மாவொடு
மாழைநீண்மணியிவையெளியமாண்பினால்
வாழுநீர்மக்களைப்பெறுதன்மாதரார்க்
காழுநீர்வையகத்தரியதாவதே. (௧௭௭)

தகளிவாய்க்கொழுஞ்சுடர்தனித்துங்கோழிரு
ணிகளவாய்ப்பிளந்தகஞ்சுடாகிற்குமே
துகளிலாச்சுடர்மணிதுளும்புபூணினாய்
மகளெலாத்திசைகளுமலிரமன்னினாள். (௧௭௮)

வலம்புரிவயிற்றிடைப்பிறந்தமாமணி
நலம்புரிபவித்திரமாகுநாமநீர்
பொலம்புரிமயிலனாய்பயந்தபூங்கொடி
குலம்புரிந்தவர்க்கெலாங்கோலமாகுமே. (௧௭௯)

மக்களையிலாதவர்மரத்தொடொப்பவென்
றொக்கநின்றுரைப்பதோருரையு * மூய்த்துநீர்
நக்கவானிளம்பிறைவளர்த்தகாட்கதிர்ச்
செக்கர்வானனையதோர்திருவுமெய்தினாய். (௧௮௦)

மாவினைமருட்டியநோக்கிநின்மகள்
பூவினுண்மடந்தைபொற்பூவைநாளொளித்
தேவனுக்கமிர்தமாந்தெய்வமாமென
வோவினாற்புரோகிதனுணரவோதினான். (௧௮௧)

மத்தவார்மதகளிற்றுழவன்மற்றிவை
யொத்தவாறுரைத்தலுமுவகைகைம்மிக
முத்தவாண்முகிழ்நகையடக்கிமொய்குழற்
றொத்துவார்பிணையலாடொழுதுசொல்லினாள். (௧௮௨)

* மூய்த்தல் - மூடுதல், விலக்குதல்.

மின்னவிர்மணிமுடிவேந்தர்வேந்தவிக்
கன்னிகின்னருளினேகருதப்பட்டனண்
மன்னவரருளிலராயின்மக்களும்
பின்னவர்பெறுவதோர்பெருமையில்லையே. (கஅரு)

பிடிகளைமகிழ்களிற்றரசர்பெய்மலர்
முடிகளின்மணிபொரமுரலுமொய்கழ
லடிகளதருளினுலம்மென்சாயலிக்
கடிகமழ்குழலினுள்கவினுமெய்தினுள். (கஅச)

திருமனைக்கிழத்திதன்றேங்கொள்சின்மொழி
மருமணிமுடியினுன்மகிழ்ந்துமற்றவள்
பருமணிப்பூண்முலைபாயமார்பிடை
யருமணித்தெரியறேனழியவைகினுன். (கஅரு)

மற்றைநாண்மகனையுமமைச்சர்தம்மையுங்
கொற்றவாட்டடக்கையான்கூவிக்கொண்டிருந்
திற்றியான்கருதியதென்றுதொல்லைநூற்
கற்றகாவலனதுகதையுஞ்சொல்லினுன். (கஅசா)

வீங்கியமுலையவடிருவும்வெம்முலைக்
கோங்கியமுகிலவனுரியபெற்றியுந்
தாங்கியபுகழவன்மொழியத்தாரவர்
தேங்கியவுவகையர்தெரிந்துசொல்லினர். (கஅஎ)

தெய்வமேதிரிகுழற்சிறுமியாவதற்
கையமேயொழிந்தனமனலும்வேலினுய்
செய்யதோர்தூதினித்திவிட்டன்றுதையாம்
வெய்யவேலவனுழைவிடுத்தும்வேந்தனே. (கஅஅ)

கற்றவன்கற்றவன்கருதுங்கட்டுரைக்
குற்றனவுற்றவுய்த்துரைக்குமாற்றலான்
மற்றவன்மருசியேயவனைநாம்விடச்
சுற்றமுங்கருமமுஞ்சொல்லவல்லனே. (கஅகூ)

காரியந்துணிந்தவன்மொழியக்காவலன்
மாரியந்தடக்கையாள்வருகவென்றொரு
சீரியதிருமுகஞ்சிறப்பொடீந்தன
ஞாரியன்கழலடியவனும்வாழ்த்தினன். (௧௧௰)

மன்னவன்பணியொடுமருசிவானிடை
மின்னவிர்முகிற்குழாமுழங்கும்வீதிபோய்த்
துன்னினன்சுரமைநாட்டகணிசூடிய
பொன்னகர்ப்புறத்ததோர்பொழிலினெல்லையே. (௧௧௧)

புதுமலர்ப்புட்பமாகாண்டமென்னுமப்
பொதுமலர்ப்பூம்பொழில்புகலும்போம்மென
மதுமலர்பொழிதரமழலைவண்டினங்
கதுமலரிணையொடுகலவியாத்தவே. (௧௧௨)

மந்திரசாலைச்சருக்கம் முற்றிற்று.
ஆ விருத்தம்-௪௬௰.

ஆறுவது

தூதுவிடுசருக்கம்.

மருவினியனமதுவிரிவனமலரணிவனவகுளந்
திருமருவியசெழுநிழலனசெங்குழையனதேமா
வரிமருவியமதுகரமுணமணம்விரிவனநாகம்
பொரிவிரிவனபுதுமலரனபுன்குதிர்வனபுறனே. (௧)

நிழனகுவனநிமிர்தழையனநிறைகுளிர்வனசாந்த
மெழினகுவனவிளமலரனவெழுசண்பகநிகரங்
குழனகுவனமதுகரநிரைகுடைவனபலகுரவ
மழனகுவனவலர்நெரிதரவசைவிலையவசோகம். (௨)

எழுதுருவினவெழுதளிரனவிணரணிவனவிரத
மிழுதுருவினகொழுமலரிடையெழில்பொலிவனமதுகங்
கழுதுருவினகளுவிலையனகழிமடலினகைதை
பொழுதுருவினவணிபொழிலினபொழிதளிரனபுன்னை. (௩)

வளர்கொடியனமணம்விரிவனமல்லிகையொடுமௌவ
னளிர்கொடியனநறுவிரையகநறுமலரனநறவங்
குளிர்கொடியனகுழைமாதவிகுவிமுகையனகொகுடி
யொளிர்கொடியனவுயர்திரளினொடொழுகினரனவோடை.

குடையவிழ்வனகொழுமலரினகுளிர்களியனகோங்கம்
புடையவிழ்வனபுதுமலரனபுன்னாகமொடிலவங்
கடியவிழ்வனகமழ்பாதிரிகலிகளிகைய * சாக
மிடையவிழ்வனமலரளவிலவிதுபொழிலினதியல்பே. (ரு)

மதுமகிழ்வனமலர்குடைவனமணிவண்டொடுதும்பி
குதிமகிழ்வனகுவிகுடையனநுதிகோதுபுகுயில்கள்
புதுமகிழ்வனபொழிலிடையனபுணர்துணையனபூவை
விதிமகிழ்பவர்மதிமகிழ்வுறவிரவுற்றனவிரிவே. (சு)

அதுவழகுதனகமகிழ்வுறவலர்தாரவனடைய
விதுவழகியதிவண்வருகெனவெழுபுள்ளொலியிகவா
விதி † வழகுடைவிரியிலையிடைவெறிவிரவியவேரிப்
பொதியவிழ்வனபுதுமலரணிபொய்கைக்கரைபுக்கான். (எ)

புணர்கொண்டெழுபொய்கைக்கரை பொருதிவலைகள்சிதறு
துணர்கொண்டனகரைமாநனிதுறுமலர்பலதூவா [த்
வுணர்கொண்டனமலலுற்றலைவளர்வண்டினமெழுவா [மே.
விணர்கொண்டெதிரெழுதென்றலி னெதிர்கொண்டதவ்விட

புனல்விரவியதுளிர்பிதிர்வதுபுரிமுத்தணிமணன்மேன் [ண்
மினல்விரவியசுடர்பொன்னொளிர் மிளிர்வேதிகைமிசையொ
கனல்விரவியமணியிடைகனகங்கணியணிதிரளின்
னனல்விரவியவலரணியதொரசோகம்மதுகண்டான். (கூ)

அதனின்னிழலவனடைதலுமதுகாவலனுவான்
பொதியின்னவிழ்மலர்சிதறுபுபொலிகென்றுரைபுகலா
மதியின்னொளிவளர்கின்றதொர்மணியின்சிலைகாட்ட
விதுவென்னென விதுவென்னென வினையன்பலசொன்னான்.

---

* சாளமென்றும்பாடம். † வழகு—இலைசெறிபுள்ளி.

வேறு.

மீனற்கொடிவிலங்கியவிலங்கன்மிசைவாழும்
புனற்கொடிமலர்த்தொகைபுதைத்தபொலிதாரோய்
நினக்கெனவியற்றியநிலாநிழன்மணிக்கன்
மனக்கினிதினேறினைமகிழ்ந்திருமினென்றான். (௧௧)

அழற்கதிரியங்கறவலங்கிணரசோக
நிழற்கதிர்மரத்தகையதாகநினைகில்லேன்
பொழிற்கடவுள்பொன்னிடமிதென்னைபுகுமாறென்
றெழிற்கதிர்விசும்பிடையிழிந்தவன்மொழிந்தான். (௧௨)

நிலாவளர்நிழற்கதிர்நிமிர்ந்தொளிதுளும்புஞ்
சிலாதலமிதற்குரியதெய்வமெனல்வேண்டா
வலாதவரிதற்குரியரல்லரவராவி
ருலாவியகழற்றகையினீரெனவுரைத்தான். (௧௩)

என்னவிதுவந்தவகையென்னினிதுகேண்மி
னென்னகரிதற்கிறைவன்முன்னநனிநண்ணித்
தன்னிகரிகந்ததவனங்கதனெனும்பேர்ப்
பொன்னவிருநூல்கெழுபுரோகிதனுரைத்தான். (௧௪)

மின்னவிர்விளங்குசுடர்விஞ்சையுலகாளும்
வின்னவிறடக்கைவிறல்வேலொருவன்வேண்டி
மன்னநின்மகற்கொருமகட்கருமமுன்னி
யின்னவனினைப்பகலுளீண்டிழிபுமென்றான். (௧௫)

மடங்கலையடுந்திறனெடுந்தகைதன்மாறு
யடங்கலரடங்கவடுமாழியஃதாள்வா
னுடங்கவனுடன்றெரிதுளும்பவரும்வந்தா
னடந்தவனடுங்கவடுநம்பியிவனென்றான். (௧௬)

ஆங்கவன்மொழிந்தபினடங்கலரையட்டான்
றேங்கமழ்பொழிற்றிகழ்சிலாதலமிதாக்கி
யீங்கவனிழிந்தபினெழுந்தெதிர்கொளென்ன
நீங்கலனிருந்தனனெடுந்தகையிதென்றான். (௧௭)

என்றவன்மொழிந்தபினிருந்தனனிருப்பச்
சென்றவன்வழிச்சிரமைதீர்மினெனநால்வர்
பொன்றவழ்பொருந்திழையணங்கினனையாரை
மின்றவழ்விளங்குகொடிவேந்தனும்விடுத்தான். (௧௮)

பொன்னவிர்மணிக்கலைசிலம்பொடுபுலம்ப
மின்னவிர்மணிக்குழைமிளிர்ந்தொளிதுளும்பச்
சின்னமலர்துன்னுகுழறேறலொடுசோர
வன்னமெனவல்லவெனவன்னணநடந்தார். (௧௯)

நலங்கனிமடந்தையர்நடத்தொறுமிணர்ப்போ
தலங்கலளகக்கொடியயற்சுடரவோடி
விலங்குபுருவக்கொடிமுரிந்துவெருவெய்த
மலங்கினவிலங்கினமதர்த்தவவர்வாட்கண். (௨௦)

அலத்தகமலைத்தனவடித்தலமாற்றுங்
கலைத்தலைமலைத்துவிரிகின்றகடியல்குன்
முலைத்தலைமுகிழ்த்தொளிதுளும்பியுளமுத்த
மலைத்தலைமயிற்கணமருட்டுமவர்சாயல். (௨௧)

கணங்கெழுகலாவமொளிகாலுமகலல்குற் இடையணி
சுணங்கெழுதடத்துணைமுலைச்சுமையிடத்தாய்
வணங்கியுநுணங்கியும்வருந்தியமருங்கிற்
கிணங்குதுணையாய்ஞிமிறிரங்கினவெழுந்தே. (௨௨)

முலைத்தொழில்சிலைத்தொழிலினொருயிர்முருக்கு
நிலைத்தொழிலவென்றுளநினைத்தொழுகவின்பக்
கலைத்தொழில்கள்காமனெய்கணைத்தொழில்களெல்லாங்
கொலைத்தொழில்கொள்வாட்கணினகத்தகுறிகண்டார். (௨௩)

அடித்தநுவர்வாயொடுதுளும்புநகைமுத்தம்
பொடித்தவியனீரொடுபொலிந்தசுடரோலை
யடுத்ததிலகத்தினொடணிந்தவளகத்தார்
வடித்தசிறுநோக்கொடுமுகத்தொழில்வகுத்தார். (௨௪)

பூவிரிகுழற்சிகைமணிப்பறவைபோகா
வாவிகொளகிற்புகையுள்விம்மியவரொண்கண்
காவியெனவூதுவனகைத்தலம்விலங்க
மேவியிவைகாந்தளெனவீழ்மிகநொந்தார். (௨௫)

சுரும்பொடுசுழன்றுளகுழற்றெரிவையெழிற்கை
கரும்பொடுகலந்துளகளித்ததவர்தீம்ப
ணரம்பொடுகடந்துளவிரற்றலையெயிற்றே
ரரும்பொடுபொலிந்ததுவர்வாயமிர்தமன்றே. (௨௬)

கணங்குழைமடந்தையர்கவின்பிறழிருங்கண்
ணணங்குறவிலங்குதொறகம்புலரவாடி
மணங்கமழலங்கலுடைமைந்தர்தமனந்தாழ்
வணங்கிடைவணங்குதொறணங்கெனவணங்கும். (௨௭)

நெய்யலர்குழற்றெரிவைநெருப்பினடுமென்பார்
மையலர்நெடுங்கணிவைவல்லகொலையென்பார்
தொய்யிலிளமென்முலையினீர்சுடுதிராயி
னுய்யலமெனத்தொழுதுமைந்தர்களுடைந்தார். (௨௮)

வேறு.

நாமநூற்கலைவிச்சையினன்னெறியிவைதாந்
தாமநீள்குழற்றளர்நடையுருவுகொண்டனையார்
வாமமேகலைமடவரலிவர்களைவளர்த்தார்
காமநூலினுக்கிலக்கியங்காட்டியவளத்தார். (௨௯)

இனியவீங்கியவிளமுலையிவர்களைவளர்த்தார்
பனியின்மென்மலரலர்ந்தனவுவகையிற்பயில்வார்
கனிபவேலிவர்கடல்விளையமிர்தெனக்கனிவார்
முனிபவேலிவரனங்கனைங்கணையெனமுனிவார். (௩௦)

புலவிதானுமோர்கலவியைவிளைப்பதோர்புலவி
கலவிதானுமோர்புலவியைவிளைப்பதோர்கலவி
குலவுவார்சிலைமதனனைங்கணையொடுகுலவி
யிலவுவாயுடையிளையவருடையனவிவையே. (௩௧)

மன்னுவார்சிலைமதனனோர்வடிவுகொண்டிலாதான்
றன்னைநாமுமோர்தகைமையிற்றணத்துமென்றிருப்பா
ரென்னைபாவமிங்கிவர்களைப்படைத்தனனிதுவாற்
பின்னையாங்கவன்பிறவிக்குமுதல்கண்டவகையே. (௩௨)

வாமமேகலைமுதனின்றுவயிற்றிடைவளர்ந்த
சாமலேகைகண்மயிர்நிரையலதலமீது
காமநீரெரியகத்ததுகனன்றெழுகிமிர்ந்த
தூமலேகைகள்பொடித்தனதுணைமுலையுறவே. (௩௩)

சனங்கடாஞ்சிலதவங்களைத்தாங்குதுமெனப்போய்
வனங்கள்காப்பவருளரெனமுனிவமற்றன்றேற்
றனங்கடாந்தவழ்சந்தனக்குழம்பிடைவளர்ந்த
கனங்கொள்வெம்முகங்கறுப்பதென்காரணமுரையீர். (௩௪)

தூமமென்புகைதுழாவிவண்டிடையிடைதுவைக்குந்
தாமவோதியர்தம்முகத்தனபிறர்மனத்த
காமநீள்சிலைகணையொடுகுனிவகண்டாலும்
யாமெமின்னுயிருடையமென்றிருப்பதிங்கெவனோ. (௩௫)

என்றுமைந்தர்களிடருறவெழுதியகொடிபோற்
சென்றுகற்பகவனமனசெறிபொழிலடைந்தா
ரின்றுகாமுகர்படையிணையிடர்படநடந்த
வென்றிகாமனுக்குரைத்துமென்றிரைத்தளிவிரைந்த. (௩௬)

வேறு.

ஆடைகைத்தலத்தொருத்திகொண்டதங்கடைப்பைதன்
மாடுகைத்தலத்தொருத்திகொண்டதுமணிக்கலஞ்
சேடிகைத்தலத்தனசெறிமணித்திகழ்வசெங்
கோடிகைத்தலத்தனகுளிர்மணிப்பிணையலே. (௩௭)

வேறு.

வண்ணச்சந்தங்கணிறைந்தனமணிச்செப்புவளர்பூங்
கண்ணிச்சந்தங்கணிறைந்தனகரண்டகங்கமழ்பூஞ்
சுண்ணச்சந்தங்கணிறைந்தனசுடர்மணிப்பிரப்போ
டெண்ணச்சந்தங்கள்படச்சுமந்திளையவரிசைந்தார். (௩௮)

தகளிவெஞ்சுடரெனத்திகழ்மணிக்குழைதயங்க
மகளிர்மங்கலவுழைக்கலஞ்சுமந்தவர்பிறரோ
டுகளுமான்பிணையனையவருழைச்செலவொளிர்தார்த்
துகளில்விஞ்சையன்றுணிந்தனன்றுறக்கமீதெனவே. (௩௯)

துறக்கம்புக்கவர்பெறுவனவிவையெனத்துணியா
வெறிக்கண்விம்மியவிரைவிரிதாரவனிருப்பச்
சிறைக்கணோக்கமுஞ்சிறுநகைத்தொழில்களுஞ்சுருக்கி
யறைக்கண்மாந்தனுக்கதிதியந்தொழிலினிலமைந்தார். (௪0)

ஆட்டினார்வெறிகமழ்வனவணிகிளர்நறுநீர்
தீட்டினார்நறுஞ்சாந்தமுஞ்சிறிதுமெய்கமழச்
சூட்டினார்சிலர்நறுமலரறுசுவையடிசி
லூட்டினாரவனமருளொருவனொத்தொளிர்ந்தான். (௪௧)

வயந்தமுன்னியதிலகைகல்லியாணிகைவடிவார்
வியந்தசேனைமென்கமலமாலதையெனவிளம்பு
மியங்குபூங்கொடியனையவரியல்புகணினையா
வயங்குதொல்புகழம்பரசரன்மகிழ்ந்திருந்தான். (௪௨)

வேறு.

ஆங்கெழிற்பொலிந்தவன்னிருந்தபின்னலங்குதார்
வீங்கெழிற்பொலிந்ததானைவேந்தனேவவீவில்சீர்ப்
பூங்கழற்பொலங்குழைத்திவிட்டனோடுபோர்க்கதந்
தாங்கெழிற்பெருங்கையானைசங்கவண்ணனேறினான். (௪௩)

தம்பியோடுசங்கவண்ணனம்பொன்மாலைதாழ்முகப்
பைம்பொனோடைவீழ்மணிப்பகட்டெருத்தமேறினான்
செம்பொன்மாமலைச்சிகைக் கருங்கொண்மூவினோடெழூஉம்
வம்பவெண்ணிலாவிலங்குதிங்கள்போலமன்னினான். (௪௪)

ஆர்த்தபல்லியக்குழாமதிர்த்தகுஞ்சரக்குழாந்
தேர்த்தவீரர்தேர்க்குழாந்திசைத்தபல்சனக்குழாம்
போர்த்தசாமரக்குழாம்புதைத்தவெண்கொடிக்குழாம்
வேர்த்தவேந்தர்பல்குழாம்விரைந்தகூந்தன்மாக்குழாம். ( )

பாடுவார்வணங்குவார்பலாண்டுகூறிவாழ்த்துவா
ராடுவாரோடார்வமாந்தரன்னரின்னராயபின்
சூடுமாலைசோரவுந்தொடாரமாலைவீழவும்
மாடவாயின்மேலெலாமடந்தைமார்மயங்கினார். (சசு)

கொண்டலார்த்தபொன்னெனிக்குழற்கொடிக்குழாமனார்
மண்டலங்கிறைந்ததிங்கள்வட்டமொத்தவாண்முகங்
குண்டலங்கொழும்பொனோலையென்றிரண்டுகொண்டணீஇ
வண்டலந்துமாலைதாழ்ந்துமாடவாய்மறைந்தவே. (சஎ)

கூடுதும்பியூடுதோய்குழற்றொகைத்துணர்துதைந்
தோடுமேலெருத்திடைக்குலைந்தகோதையோடுலாய்
மாடவாயின்மாலைஞாலமாடமேறுமாதரா
ராடுமஞ்ஞைகோடுகொள்வதென்னலாவதாயினார். (சஅ)

தொண்டைவாய்மடந்தைமார்கள்சுடிகைவட்டவாண்முகங்
கொண்டகோவினீரவாயகோடிமாடமேலெலாம்
வண்டுசூழ்ந்தபங்கயமலர்க்குழாமிணைப்பவேஉக்
கெண்டையோடுநின்றலர்ந்த * கேழவாய்க்கிளர்ந்தவே. ( )

மாலைதாழுமாடவாய்நிலத்தகத்துமங்கைமார்
வேலவாயநெடியகண்விலங்கிநின்றிலங்கலாற்
சாலவாயிருமெலாமொர்தாமரைத்தடத்திடை
நீலமாமலர்க்குழாநிரந்தலர்ந்தநீரவே. (ருo)

சுண்ணமாரிதூவுவார்தொடர்ந்துசேர்ந்துதோழிமார்
வண்ணவாரவளைதயங்குமுன்கைமேல்வணங்குவார்
நண்ணினாணொழிந்துசென்றுநம்பிமார்கண்முன்னரே
கண்ணிதம்மினென்றிரந்துகொண்டுநின்றுகண்ணுவார். (ருக)

பாடுவார்முரன்றபண்மறந் † தொர்வாறுபாடியு
மாடுவான்மறந்தணிமயங்கியாமைபாடியுஞ்
சூடுவான்றொடுத்தகோதைசூழ்குழன்மறந்துகண்
ணுடுவாய்நிழற்கணிந்துநாணுவாருமாயினார். (ருஉ)

* கேழ்—தன்மை. † ஒருவாறு என்பதன்விகாரம்.

இட்டவில்லிரட்டையுமிரண்டுகெண்டைபோல்பவும்
விட்டிலங்குதொண்டையங்கனிப்பிழம்பொடுள்விராய்ச்
சுட்டிசூட்டணிந்துசூளிமைமணிசுடர்ந்துநீள்
பட்டம்வேய்ந்தவட்டமல்லதில்லைநல்லபாங்கெலாம். (௫௩)

அலத்தகக்குழம்புதம்மடித்தலத்தொர்பாகமா
நிலத்தலத்தொர்பாகமாகநீடுவாயில்கூடுவார்
கலத்தலைத்தொகுத்தகோவைகண்ணெகிழ்ந்துசிந்தலான்
மலைத்தலைத்தழற்சிதர்ந்தபோன்றமாடவாயெலாம். (௫௪)

பாடகந்துளங்கவும்பசும்பொனோலைமின்னவுஞ்
சூடகந்துளும்பவுஞ்சுரும்புசூழ்ந்துபாடவு
மூடகங்கசிந்தொசிந்துநின்றுசென்றுவந்துலாய்
நாடகங்கணன்னகர்க்கணங்கைமார்நவிற்றினார். (௫௫)

மாலையால்விளங்கியும்பொன்வாசச்சுண்ணம்வீசியுஞ்
சாலவாயிலாறுசந்தனக்குழம்புசிந்தியு
நீலவாணெடுங்கணார்நிரந்துநெஞ்சுதாழொர் இ
ஞாலமானநம்பிமாரின்மாலுமாகிநண்ணினார். (௫௬)

வேய்மறிந்ததோள்விளர்த்துவெவ்வுயிர்ப்பொடுள்விராய்த்
தோமறிந்தசூழ்துகின்னெகிழ்ந்துடுத்துவீழ்ந்தசைஇப்
பூமறிந்ததேங்குழன்முடிப்பொதிந்துவீழ்த்துலாய்த்
தாமறிந்தமுல்லைவாயதாதுகுத்துடங்கினார். (௫௭)

கொங்குவார்மலர்த்தடத்தமர்ந்தகோதைமார்களோ
டங்கராகம்வீற்றிருந்தணிந்தவாரமாகுலாய்
மங்கைமார்கள்கண்ணும்வண்டுமாலையுமணங்களுந்
தங்குவாரினம்பிமார்கடானைசோலைசார்ந்ததே. (௫௮)

மானளாயநோக்கினார்மனங்கலந்துபின்செல
வானளாயசோலைவாயின்மன்னவீரர்துன்னலுங்
கானளாயபோதணிந்துகாவிவிம்முகள்ளளைஇத்
தேனளாவுவண்டுகொண்டுதென்றல்சென்றெழுந்ததே. (௫௯)

செம்முகப்பசும்பொனோடைசேர்மருப்பிணைக்கரும்
வெம்முகத்துவீழ்கடாத்துவேழநின்றிழிந்தபின்
கைம்முகத்துவேலிலங்குகாமர்தாங்கொலென்றுசென்
றம்முகத்ததும்பிவண்டுதேனொடாடியார்த்தவே. (சு0)

தாதுநின்றதேறனீர்தளித்திவற்றின்மேலளி
கோதுகின்றபோதுகொண்டுசிந்திநம்பிமார்களை
மாதுநின்றமாதவிக்கொடிகடந்தளிர்க்கையாற்
போதுகென்றிடங்கள்காட்டுகின்றபோற்பொலிந்தவே. (சுக)

போதுலாயவேரிமாரிசாரலாய்ப்பொழிந்துதேன்
கோதலானெரிந்ததாதுகால்குடைந்துகொண்டுறீஇ
மாதுலாயவண்டிரைத்துமங்குல்கொண்டுகண்மறைத்
தேதிலார்க்கியங்கலாவதன்றுசோலைவண்ணமே. (சுஉ)

போதுலாயபூம்பொதும்பர்மேலதென்றல்வீசலாற்
றாதுலாயபோதணிந்துதாழ்ந்துதாமவார்குழன்
மாதரார்கள்போதவல்லிமார்புபுல்லிமைந்தரைக்
காதலால்வளைப்பபோன்றுகாவினுட்கலந்தவே. (சுங)

புல்லிவண்டமர்ந்துதங்குபூந்தழைப்பொதும்பிடை
மல்லிகைக்கொடிக்கலந்துமௌவல்சூடவௌவுநீர்
வல்லிமண்டபங்கள்சென்றுமாதவிக்கொழுந்தணி
யல்லிமண்டபத்தயலசோகமாங்கணெய்தினர். (சுச)

பஞ்சிலங்குமல்குலார்பலாண்டுகூறவாண்டுபோய்
மஞ்சிலங்கசோகநீழன்மன்னவீரர்துன்னலும்
விஞ்சையன்மகிழ்ந்தெழுந்துவென்றிவீரர்தங்களுக்
கஞ்சலித்தடக்கைகூப்பியார்வமிக்கிறைஞ்சினன். (சுரு)

ஆங்கவனிறைஞ்சலுமலர்ந்ததிங்கணீளொளிப்
பூங்கழற்பொலங்குழைப்பொலிந்திலங்குதாரினா
னீங்கருங்குணத்தினீவிர்நீடுகுரவராதலி
னீங்கெமக்குநீர்பணிந்ததென்னையென்றியம்பினன். (சுசு)

பானிறக்கதிர்நகைபரந்தசோதியானையு
நீனிறக்கருங்கடனிகர்க்குமேனியானையும்
வானெறிக்கண்வந்தவன்மகிழ்ந்துகண்மலர்ந்துத
னூனெறிக்கண்மிக்கசீர்மையொக்கநின்றுநோக்கினான். (௬௭)

வேல்கொடானைவீரர்தம்மைவிஞ்சையன்வியந்துநீ
னூல்கொள்சிந்தைகண்கடாவநோக்கிநோக்கியார்கலன்
கால்கள்கொண்டுகண்ணிகாழுமுண்மகிழ்ந்துகண்டுகண்
மால்கொள்சிந்தையார்கள்போலமற்றுமற்றுநோக்கினான். ( )

வேரிமாலைவிம்மவும்விளங்குபூண்டுளும்பவுந்
தாரொடாரமின்னவுந்தயங்குசோதிகண்கொள
வாரநோக்ககில்லனன்னனரசநம்பிமார்களைச்
சாரவாங்கோர்கற்றலத்திருந்துதான்விளம்பினான். (௬௯)

செம்பொன்வானகட்டிழிந்துதெய்வயானையுண்மறைஇ
வம்புநீர்வரைப்பகம்வணக்கவந்தமாண்புடை
நம்பிமீர்களுங்கள்பாதநண்ணிநின்றிறைஞ்சுவா
ரம்பொன்மாலைமார்பினீருந்தவஞ்செய்தார்களே. (௭௦)

திங்கள்வெண்கதிர்ச்சுடர்த்ததிலதவட்டமென்றிரண்
டிங்கண்மாலுயிர்க்கெலாமெளியவென்றுதோன்றலுந்
தங்கள்சோதிசாரலாவவல்லவன்னநீரவா
லெங்கண்முன்னைநுங்கடம்மையென்றுபின்னையேத்தினான்.

இமைகள்விட்டநோக்கமேறவின்னபோல்வசொல்லலு
மமைகமாற்றநும்மையெங்களடிகள்காணவேகுவாஞ்
சுமைகொண்மாலைதொடுகளிற்றெருத்தமேறுகென்றனர்.
சிமைகொடேவர்போலநின்றுதிகழுகின்றசோதியார். (௭௨)

அம்பொன்மாலைகண்கவர்ந்தலர்ந்தசெல்வவெள்ளமேய்
வெம்புமால்களிற்றெருத்தம்விஞ்சையாளன்மேல்கொளப்
பைம்பொன்மாலைவார்மதப்பரூஉக்கையீருவாக்கண்மீச்
செம்பொன்மாலைமார்பர்சேர்ந்துதேவரிற்றுளும்பினார். (௭௩)

வே று.

கதிர்நகைக்கபாடவாயிற்கதலிகைக்கனகநெற்றி
மதிநகவுரிஞ்சுகோட்டுமாளிகைநிரைத்தவீதிப்
புதுநகரிழைத்துமுந்துப்பொலங்கலத்தொகையும்பூவு
மெதிர்நகைத்துகைத்துமாதரெதிர்கொளநகரஞ்சேர்ந்தார். ()

விரைக்கதிரலங்கற்செங்கேழ்விண்ணியங்கொருவனோடும்
வரைக்கெதிர்ந்திலங்குமார்பின்மன்னவகுமரச்செல்வ
ரெரிக்கதிரேற்றைக்காலமெழுநிலாப்பருவமேக
நிரைத்தெழுமிருதுமன்றுநிரந்ததோர்சவியரானார். (எரு)

வார்கலந்திலங்குகொம்மைவனமுலைமகளிரிட்ட
வேர்கலந்தெழுந்ததூமவியன்புகைகழுமிநான
நீர்கலந்துகுத்தமாலைநிறமதுத்துவலைசிந்தக்
கார்கலந்திருண்டபோலுங்கண்ணகன்றெருவுட்சென்றார். ()

தெளிர்முத்தமணலுஞ்செம்பொற் சுண்ணமுஞ்சிதர்ந்துதீந்
றளிர்முத்தமலரும்போதுஞ்சாந்தமுமுழக்கிவண்டா [தேன்
ரொளிர்முத்தமுறுவலார்தமுழைக்கலங்கலந்துமாலைக்
குளிர்முத்தநிழற்றுங்கோயிற்பெருங்கடைகுறுகச்சென்றார்.

மற்றவரடைந்தபோழ்தின்வாயிலோருணர்த்தக்கேட்டுக்
கொற்றவனருவிதூங்குங்குளிர்மணிக்குன்றம்போல
முற்றிநின்றிலங்குஞ்செம்பொன்முடிமிசைமுத்தமாலைக்
கற்றைகடவழச்சென்றோர்கனககூடத்திருந்தான். (எஅ)

மன்னவகுமரரோடும்விஞ்சையன்மகிழ்ந்துவையத்
தின்னருள்புரிந்தவேந்தனிறையறிந்தினிதினெய்திக்
கன்னவிறோளினான்றன்கழலடிதொழுதுநின்றா
னன்னவர்க்கிருக்கைத்தானமரசனுமருளிச்செய்தான். ()

வீரியக்குமரரோடும்விஞ்சையஞ்செல்வனோடுங்
காரியக்கிழவர்சூழக்கவின்றுகண்குளிரத்தோன்றி
யாரியனலர்ந்தசோதியருங்கலப்பீடநெற்றித்
தரநகையணிந்துதோன்றுஞ்சந்திரவிசயனானான். (அ0)

அலகையிருனைவேந்தனம்பராசரனைநோக்கி
யுலகுபசாரமாற்றமுரைத்தலுக்குரியகூறி
விலகியகதிரவாகிவிளங்கொளிக்கடகக்கையான்
மலரகங்கழுமப்போந்துமனமகிழ்ந்திருந்தபோழ்தின். (அக)

விஞ்சையனெழுந்துதங்கோன்வெள்ளிவேதண்டநோக்கி
யஞ்சலித்தடக்கைகூப்பியரக்கிலச்சினையின்வைத்த
வெஞ்சலிலோலைகாட்டவிறைமகன்குறிப்புநோக்கி
வஞ்சமில்வயங்குகேள்விமதிவரன்கரத்தில்வாங்கி. (அஉ)

நிகரிகந்தழகிதாகிநெரிவடுப்படாதவேழப்
புகர்முகப்பொறியதாயபுகழ்ந்தசொல்லகத்துப்போகா
மகரவாய்மணிக்கட்செப்பின்மசிகலந்தெழுதப்பட்ட
பகரும்பதங்கணோக்கிப்பயின்றுபின்வாசிக்கின்றான். (அங)

போதனத்திறைவன்காண்கவிரதநூபுரத்தையாளுங்
காதுவேன்மன்னனோலைகழலவன்றனக்குநாளு
மாதியவடிசிலொண்கேழஞ்சனமுள்ளிட்டெல்லாந்
தீதுதீர்காப்புப்பெற்றுச்செல்கெனவிடுத்ததன்றே. (அச)

அல்லதூஉங்கருமமாவதலங்குதாரிவுளித்திண்டேர்
வல்லவனிளையநம்பிக்குரியளாவழங்கப்பட்டாள்
மல்லகமார்பினான்றன்மருமகளிவளைக்கூவி
வல்லிதிற்கொடுக்கமன்னன்வாழ்கதன்கன்னிமாதோ. (அரு)

என்றவனோலைவாசித்திருந்தனனிறைவன்கேட்டு
வென்றியம்பெருமைவிச்சாதரரென்பாரெம்மின்மிக்கா
ரின்றிவன்விடுத்ததிவ்வாறென்கொலோவென்றுசிந்தித்
தொன்றுமற்றுரைக்கமாட்டாதிருந்தனனுரங்கொடோளான்.

தீட்டருந்திலதக்கண்ணிச்செறிகழலரசர்கோமான்
மீட்டுரைகொடாதுசாலவிம்மலோடிருப்பநோக்கி
வாட்டரும்பெருமையெங்கோனோலையைமதியாவாறென்
றோட்டருங்கதத்தனகிக்கேசரனுரைக்கலுற்றான். (அஎ)

முன்னமோர்கருமம்வேண்டிமொழிபவேன்மனிதர்தம்மா
லென்னவரேனுமாகவிகழ்ந்திடப்படுபபோலா
மன்னதேயுலகவார்த்தையாவதின்றறியும்வண்ணம்
மின்னவின்றிலங்கும்வேலோய்நின்னுழைவிளங்கிற்றன்றே.

பூவிரியுருவக்கண்ணிப்பொலங்குழையிலங்குசோதித்
தேவரேயெனினுந்தோன்றச்சில்பகல்செல்பவாயி
லேவரேபோலநோக்கியிகழ்ந்துரைத்தெழுவதன்றே
மாவிரிதானைமன்னுமனிதரதியற்கையென்றான். (௮௯)

வரைமலிவயங்குதோளாய்வியாதியான்மயங்கினார்க்குச்
சுரைமலியமிர்தத்தீம்பால்சுவைதெரிந்துண்ணலாமோ
விரைமலிவிளங்குபைந்தார்விஞ்சையர்செல்வந்தானு
நுரைமலிபொள்ளல்யாக்கைமனித்தர்க்குநுகரலாமோ. (௯௦)

அறவியமனத்தரன்றியழுங்குதலியல்பினார்க்குப்
பிறவியையறுக்குங்காட்சிப்பெருநிலையெய்தலாமோ
வெறிமயங்குருவக்கண்ணிவிஞ்சையர்விளங்குதானை
மறவியின்மயங்கிவாழுமனித்தர்க்குநிகழ்த்தலாமோ. (௯௧)

அருங்கடிகமழுந்தாரையழிமதக்களிற்றினுற்றன்
மரங்கெடத்தின்றுவாழுங்களபக்குமதிக்கலாமோ
விரங்கிடுசிறுபுன்வாழ்க்கையிங்கிலத்தவர்கட்கென்றும்
வரங்கிடந்தெய்தலாமோமற்றெமர்பெருமைமன்னா. (௯௨)

உள்ளியமரங்கொள்சோலைமண்மிசையுறையுமாந்த
ரொள்ளியரேனுந்தக்கதுணர்பவரில்லைபோலாம்
வெள்ளியஞ்சிலம்பினெங்கோன்விடுத்ததேயேதுவாக
வெள்ளியோருரையுமீயாதிருந்தனையிறைவவென்றான். ( )

ஆங்கவனுரைப்பக்கேட்டேயம்பரசரனைநோக்கித்
தேங்கமலழுங்கன்மார்பசிவந்துரையாடல்வேண்டா
வோங்கியவோலைமாற்றக்குரியவாறுரைக்கமாட்டா
தீங்கியானிருந்ததென்றானெரிசுடர்வயிரப்பூணான். (௯௪)

வெஞ்சுடர்த்தெறு * தீவிச்சாதரரென்பார்மிக்கீரோர்
செஞ்சுடர்த்திலதக்கண்ணித்தேவரேதெரியுங்காலை
மஞ்சுடைமண்ணுள்வாழுமக்களுக்கவர்கடம்மோ
டெஞ்சியதொடர்ச்சியின்பமெய்துதற்கரிதுமாதோ. (கூ௫)

ஈட்டியவூன்செய்யாக்கையெம்முறையின்னவாறு
வாட்டமில்வயங்குகண்ணிமணிமுடிமன்னனேலை
காட்டிநீயுரைத்ததெல்லாங்கனவெனக்கருதினல்லான்
மீட்டதுமெய்ம்மையாகவியந்துரைவிரிக்கலாமோ. (கூ௬)

இன்னவனின்னநீரானின்னவேயெய்துகென்று
முன்னவன்செய்தமொய்ம்பின்வினைகளேமுயல்வதல்லாற்
பின்னவன்பிறந்துதன்னாற்பெறுதலுக்குரியவாய
துன்னுவதென்றுக்கான்றுதுணியுமோசொல்லவென்றான். ()

மெய்ப்புடைதெரிந்துமேலைவிழுத்தவமுயன்றுகோற்றார்க்
கொப்புடைத்துங்கள்சேரியுயர்நிலைச்செல்வமெல்லா
மெப்படிமுபறுமேனுமெங்களுக்கெய்தலாகா
தப்படிநீயுமுன்னர்மொழிந்தனையன்றேயென்றான். (கூஅ)

இறைவனுங்குரைத்தசொற்கேட்டென்னைபாவம்பொருந்தாக், கறையவாமொழிகள்சொன்னேன்காவலன்கருதிற்றேரேன், பொறையினாற்பெரியன்பூபன் சிறியன்யானென்றுநாணி, யறிவினாற்பெரியநீரானவிந்தனகதத்தனானன். (கூகூ)

கிளர்ந்தொளிதுளும்புமேனிக்கேசரரோடுமண்மேல்
வளர்ந்தொளிதிவளும்பூணோர்மணவினைமுயங்கலில்லென்
றளந்தறிவரியசீரோற்கையமீதகற்றுகென்றாங்
குளர்ந்தனனுணர்வினூக்கியுரைக்கியவெடுத்துக்கூறும். ()

மஞ்சிவர்மணங்கொள்சோலைமணிவரைச்சென்னிவாழும்
விஞ்சையர்விச்சையாலேவிழுமியரென்பதல்லா
லஞ்சலிருனைவேந்தேமனிதரேயவரும்யாதும்
வெஞ்சுடர்விளங்குவேலோய்வேற்றுமையின்மைகேண்மோ.

---

* தீ; அறிவு.

மண்ணவின்முழவின்மாநீர்ப்பவபுரமுடையமன்னன்
பண்ணவில்களிநல்யானைப்பவனவேகற்குத்தேவி
கண்ணவில்வடிவிற்காந்திமதியவள்காதற்பாவை
வண்ணவிற்புருவவாட்கண்வாயுமாவேகையென்பாள். (க௦௨)

மற்றவளோடும்வந்தேன்மன்னயான்மருசியென்பே
ரற்றமில்கேள்வியெந்தையஞ்சுமானென்னும்பேரான்
பெற்றதாயருசிமாலைபெருமகளருளினால்யான்
கற்றநூல்பல்லவாகுங்கருமணிக்கடகக்கையாய். (க௦௩)

அலகைசாலாதிகாலத்தரசர்கடொடர்ச்சியெல்லா
முலக்நூல்பலவுமோதியுணர்ந்தனனுரைப்பக்கேண்மோ
விலகியகதிரவாகிவிடுசுடர்வயிரக்கோலத்
திலதம்வீற்றிருந்தகண்ணித்திருமுடிச்செல்வவென்றான். ( )

ஆதிநாளரசர்தங்களருங்குலமைந்துமாக்கி
யோதநீருலகின்மிக்கவொழுக்கமுந்தொழிலுந்தோற்றித்
தீதுதீர்ந்திருந்தபெம்மான்றிருவடிசாரச்சென்று
நீதி * நூற்றுலகங்காத்துநிலந்திருமலாகின்றான். (க௦௫)

மூசிநாட்சுரும்புபாயமுருகுடைந்துருக்குஞ்சோலைக்
காசிநாட்டரசன்செங்கோற்கதிர்முடிக்கச்சனென்பான்
மாசினாற்கடலந்தானைமன்னமற்றவற்குத்தேவி
தூசினாற்றுளும்புமல்குற்சுதஞ்சனைசுடரும்பூணாய். (க௦௬)

வேய்ந்தகநிழற்றுங்கோதைமிளிர்மணிக்கலாபவட்டம்
போந்தகந்திகழ்ந்துமின்னுப்பூந்துகில்பொலிந்தவல்கு
லாய்ந்தகங்கமழுங்கோதையவள்பெற்றவரசசிங்க
நாந்தகக்கிழவர்கோவேகமியென்பானலத்தின்மிக்கான். ( )

அங்கவனரசுவேண்டானறக்கடல்படைத்தநாதன்
பங்கயங்கமழுமேனிபவித்திரபரமயோகி
தங்கியதியானப்போழ்திற்றாழ்ந்துதன்றடக்கைகூப்பிப்
பொங்கியகாதல்கூரப்பாடினன்புலமைமிக்கான். (க௦௮)

---

* நூற்றல்—கருதுதல்.

வேறு.

அலகிலாஞானத்தகத்தடங்கநுங்கி
யுலகெலாநின்னுளொளித்தாயுநீயே
யொளித்தாயுநீயேயுயிர்க்கெலாங்கண்ணா
யளித்தாயுங்காத்தாயுநீயேவாழியறவேந்தே. (கoக)

அழனுறும்வெங்கதிரோனுணவலராது
நிழனுறுமூர்த்தியாய்நின்றாயுநீயே
நின்றாயுநீயேநிறைபொருளெல்லைக்கட்
சென்றாயும்வென்றாயுநீயேவாழிதிருமாலே. (கக0)

நிறைதருகேவலத்தோய்நின்னடியார்க்கெல்லாங்
குறைதவிவின்பங்கொடுப்பாயுநீயே
கொடுப்பாயுநீயேயெங்குற்றேவல்வேண்டாய்
விடுத்தாயுநீத்தாயுநீயேவென்றபெருமானே. (கக்க)

வேறு.

என்றவன்பாடக்கேட்டேயிறைஞ்சினகுறிஞ்சியேகா
நின்றனவிலங்குசாதிநிலங்கொண்டபறவையெல்லா
மன்றுமெய்ம்மறந்துசோர்ந்தார்கின்னரரமரர்தாழ்ந்தார்
வென்றவன்றியானத்துள்ளான்வியந்திலன்சிறிதும்வேந்தே.

மணிநிரைத்திலங்குந்தாரோய்மற்றவனுலோகநாதன்
குணநிரைத்திசைத்தகீதங்கேட்டலுமணிகொள்கோவைக்
கணநிரைத்திலங்குங்காய்பொன்முடிமிசையீரைஞ்ஞூறு
பணநிரைத்திலங்கப்புக்கான்பணதரராசனன்றே. (ககங)

பன்னகருலகங்காக்கும்பாய்கதிர்ப்பசும்பொன்மேனி
மின்னவிர்வயிரச்சூட்டுவிடுசுடர்மணிப்பொற்பூணான்
றன்னிகரிகந்ததோன்றல்சரணெனப்பரமன்பாத
மன்னர்கட்கரசன்முன்னேவலங்கொடுவணக்கஞ்செய்தான்.

தேந்துணரிலங்குகண்ணித்தேவனத்தேவர்கோனைத்
தீந்தொடைநரம்பின்றெய்வச்செழுங்குரல்சிலம்பவேத்தப்
பூந்துணர்க்கற்பலோகம்புடைபெயர்ந்திட்டபோற்று
வேந்துடைமானமெல்லாம்வேனிறல்விடுத்தவேந்தே. ( )

மாண்டதன்னிலைமையுள்ளிவருபொருண்மெய்மைநோக்கித்
தூண்டியசுடரினின்றதியானத்தைத்துளக்குவாய்போ
னீண்டுவந்திசைக்குற்றேவலெம்மிறையடிக்கட்செய்தாய்
வேண்டுவதெவன்கொலென்ருன்மிடைமணிப்பூணினானே.

பண்மிசைபடர்ந்தசிந்தைப்பணதரற்பணிந்துமாற்றத்
துண்மிசைத்தொடர்புநோக்கியுறுபலியதனைக்கேளா
விண்மிசையவர்கள்போலவேண்டியவிளைக்குஞ்செல்வ
மண்மிசைபெறுவனுகமற்றிதென்மனத்ததென்ருன். (கக௭)

இச்சையங்குரைப்பக்கேட்டாங்கிமையவரியற்கையெய்தும்
விச்சையுந்துணையும்வெள்ளிவிலங்கலுங்கொடுத்துவேந்தாய்
நிச்சமுநிலாகவென்றுநிறுவிப்போய்நிலத்தின்கீழ்த்த
னச்சமிலுலகஞ்சேர்ந்தானுயிரம்பணத்தினானே. (ககஅ)

ஆங்கவன்குலத்துளானெம்மதிபதியவனேடொப்பா
வோங்கியகுலமுஞ்செல்வப்பெருமையுமுடையையீயு
மீங்கருங்குலத்துளீர்க்குங்கருமம்வந்திசைத்தபோழ்தி
னீங்கருநறுநெய்தீம்பாற்சொரிந்ததோர்நீர்மைத்தென்ருன்.

தங்குலத்தொடர்ச்சிகூறித் * தானவனிருந்தபோழ்தி
னுங்குலநிலைமையெல்லாநூலினீயுணர்த்தவாறே
யெங்குலநிலைமையானுமுரைப்பனென்றெடுத்துக்கொண்டு
பொங்கலர்பிணையலான்றன்புரோகிதன்புகலலுற்ருன். ()

யாவனுற்படைக்கப்பட்டதுலகெலாம்யாவன்பாத்த
தேவனுல்வணக்கப்பட்டதியாவனதகலஞ்சேர்ந்து
பூவினுள்பொறியொன்ருனுள்புண்ணியவுலகங்காண
வேவினுன்யாவனம்மையாவனதுலகமெல்லாம். (க௨க)

மற்றவனருளின்வந்தான்மரகதமணிக்குன்றொப்பச்
சுற்றிநின்றிலங்குஞ்சோதித் † தோள்வலியெனும்பேரானக்
கொற்றவனுலகங்காத்தகோன்முறைவேண்டியன்றே
கற்றவரின்றுகாறுங்காவனூல்கற்பதெல்லாம். (க௨௨)

* தானவன், மேலுலகத்தவன். † தோள்வலி, வாகுவலி.

கொடிவரைந்தெழுதப்பட்டகுங்குமக்குவவுத்தோளா
னிடிமுரசதிருந்தானையிறைத்தொழின்மகனுக்கீந்து
கடிமணமனுக்குந்தெய்வக்கழலடியரசர்தங்கண்
முடிபொரமுனிவிற்றான்போய்முனிவனமுன்னினானல். ()

விண்ணுயர்விளங்குகோட்டுவிடுசுடர்விளங்கமாட்டாக்
கண்ணுயர்கதலிவேலிக்கார்கயிலாயவெற்பி
புண்ணியக்கிழவன்போகிப்பொலங்கலம்புலம்பநீக்கித்
திண்ணியதியானச்செந்தீச்செஞ்சுடர்திகழநின்றான். (கஉச)

கழலணிந்திலங்குபாதங்கலந்தனகருங்கட்புற்றத்
தழலணிந்தெழுந்தவைவாயருமணியாடுநாகம்
பொழிலணிந்தெழுந்தவல்லிபுதைந்தனபூமிநாதன்
குழலணிந்தெழுந்தகுஞ்சிகுடைந்தனகுருவிக்கூட்டம். ()

அருமுடியரசர்தாழ்ந்தவடிமிசையரவமூரக்
கருவடிநெடுங்கணல்லார்கலந்ததோள்வல்லிபுல்ல
மருவுடையுலகம்பாடல்வனத்திடைப்பறவைபாடத்
திருவுடையடிகணின்றதிறமிதுதெரியலாமோ. (கஉசு)

வண்டவாங்குவளைக்கண்ணிமன்னர்தமகுட்கோடி
விண்டவாம்பிணையலுக்கவிரிமதுத்துவலைமாரி
யுண்டவான்கழல்கள்சூழ்ந்ததிருவடியரவமூரக்
கண்டவாறிங்கணார்க்குங்கருதுவதரிதுகண்டாய். (கஉஎ)

அடுக்கியவனிச்சப்பூவினமளிமேலரத்தச்செவ்வாய்
வடிக்கயனெடுங்கணார்தம்வளைக்கையால்வளைத்தமார்பிற்
றொடுக்கியதொடுத்தபோலுந்துறுமலர்க் * கத்திமாதர்
கொடிக்கையாலிடுக்கறன்மேற்கொற்றவன்குலவப்பட்டான்.

புல்லியபொலங்கொம்பொப்பார்புலவியுட்கலவிசென்று
மெல்லியமாலைதம்மால்விசித்தலைவிடுத்துமீட்டு
மல்லுயரலர்ந்தமார்பின்மாதவிப்பேதையார்த்த
வல்லிகள்விடுக்கமாட்டாமனத்தினன்மன்னனானான். (கஉகூ)

---

* கத்தி, குருக்கத்தியின்விகாரம்.

ஓவலில்குணங்களென்னுமொளிர்மணிக்கலங்கடாங்கித்
தேவர்களுலகமெல்லாஞ்செழுமணமயர்ந்துகூட்டக்
கேவலப்பெண்ணென்பாளோர்கிளரொளிமடந்தைதன்னை
யாவியுளடக்கிப்பின்னையமரர்க்குமரியனானான். (கரு௦)

எங்கள்கோனிவன்கணின்றுமிக்குயர்குலத்துவேந்தர்
தங்களோர்புறஞ்சொல்வாராத்தன்மையாலுலகங்காத்தா
ரங்கவர்வழிக்கட்டோன்றியகவிடம்வணங்கின்ற
விங்கிவன்பெருமைமீயுமறிதியாலேந்தலென்றான். (கருக)

குடித்தொடரிரண்டுங்கேட்டேகுறுமயிரெறிந்துகண்ணுட்
பொடித்தநீர்த்திவலைசிந்தப்புகழ்ந்தனரிருந்தவேந்த
ரடுத்தெரியலர்ந்தசெம்பொனணிமணிமுடியினானங்
கெடுத்துரைகொடாதமுன்னங்கேசரனிதனைச்சொன்னான்.

இப்படித்தாயிற்பண்டையிசைந்ததுகூற்றமென்னை
யப்படியரியசெய்த * வடிகளெம்மரசனைய
கைப்புடையிலங்குசெவ்வேற்கச்சற்குமருகனாரென்
றொப்புடைப்புராணநன்னூ லுரைப்பதியா னறிவனென்றான்.

மன்னவன்மனத்தினாற்றம்மிறைவனை வணங்கிவாழ்த்திப்
பின்னிவன்றன்னைநோக்கிப்பேசினன்பிறங்குதாரோய்
முன்னியவுலகநூ லுங்குலங்களுமுறையுமுள்ளிட்
டின்னவாறறியுநீரோரில்லைநின்போலவென்றான். (கருச)

மந்திரக்கிழவர்கண்ணாமக்கடன்றாள்களாகச்
சுந்தரவயிரத்திண்டோடோழராச்செவிகளொற்று
வந்தரவுணர்வுநூலாவரசெனுமுருவுகொண்ட
வெந்திரமிதற்குவாயாத்தாதுவரியற்றப்பட்டார். (கருரு)

ஆதிநூலமைச்சர்க்கோதுமாண்பெலாமமைந்துநின்றான்
றூதனாச்சொல்லிற்சொல்லாச்சூழ்பொருளில்லைபோலா
மேதிலார்க்காவதுண்டோவின்னனபுகுந்தபோழ்திற் [றான்.
கோதிலாக்குணங்கடேற்றிக் கொழித்துரைகொளுத்தலென்

---

* வாகுபலி.

மற்றிம்மாண்புடையநின்னையுடையவம்மன்னர்மன்ன
னெற்றை * நூற்றெய்தமாட்டானிதன்றிறநிற்கவெம்மைச்
சுற்றமாகினைந்துநின்னைத்தூதனாவிடுத்துச்செல்லப்
பெற்றியாம்பிறவிதன்னாற்பெறும்பயன்பெற்றதென்றான். ()

இன்றியானின்னைமுன்வைத்தினிச்சிலவுரைக்கல்வேண்டா
வொன்றியானுரைக்கற்பாலவுரையையுமுணர்திநீயே
வென்றியால்விளங்குதானைவிஞ்சையங்கிழவன்கண்ணா
நின்றியான்வாழ்வதல்லானினைப்பினியில்லைமன்னோ. (கஙஅ)

கொற்றவன்குறிப்பிதாயிற்கூவித்தன்னடியன்மாரை
யுற்றதோர்சிறுகுற்றேவற்குரியராய்க்கருதித்தானே
யற்றமிலலங்கல்வேலோனறிந்தருள்செய்வதல்லான்
மற்றியானுரைக்குமாற்றமுடையனோமன்னற்கென்றான். ()

தூதன்மற்றதனைக்கேட்டேதொழுதடிவணங்கிச்செங்கோ
லேதமில்புகழினாயானடிவலங்கொள்வனென்னப்
போதுசேரலங்கலானும்பொலங்கலம்பொறுக்கலாகாச்
சோதியசுடரச்சேர்த்திப்பெருஞ்சிறப்பருளிச்செய்தான். ()

அற்றைநாளங்குத்தாழ்ப்பித்தகனகர்ச்செல்வந்தன்னோ
டுற்றவனுவப்பகூறியுரிமைநாடகங்கள்காட்டிப்
பிற்றைநாட்குரவர்தம்மைப்பின்சென்றுவிடுமினென்று
மற்றவர்க்கருளிச்செய்தான்மருசியுந்தொழுதுசென்றான். ()

வேறு.

உலனலனடுதிண்டோளாழிவேலோடையானைச்
சலநலசடியென்பேர்த்தாமரைச்செங்கணான்றன்
குலநலமிகுசெல்கைக்கோவொடொப்பார்கள்வாழு
நலனமர்நளிசும்மைத்தொன்னகர்நண்ணினானே. (கசஉ)

தூதுவிடுசருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம் - ருஎஉ.

---

* நூற்றல்—கருதுதல்.

ஏழாவது

சீயவதைச்சருக்கம்.

மற்றமாநகர்மருசிபுக்கபின்
கொற்றவேலவன்கோயின்மாநெறி
முற்றுவான்கடைமூன்றுஞ்சென்றுகோன்
சுற்றுவார்கழறொழுதுதுன்னினான். (க)

விலங்குவார்குழைமிளிர்ந்துவில்விடக்
கலந்துமாமணிக்கடகமின்செய
வலங்கல்வேலினானங்கையாலவற்
கிலங்குமாகிலத்திருக்கையேவினான்; (உ)

தொகுத்தமாண்புடைத்தூதன்மன்னவன்
வகுத்தமாமணித்தலத்தின்மேன்மனத்
தகத்தினாலமர்ந்திருப்பவாங்கவன்
முகத்தினாற்பொருண்முடிவுகண்ணினான். (ங)

தூதனின்முகப்பொலிவினாற்சுடர்க்
காதுவேலினான்கருமமுற்றுற
வோதிஞானிபோலுணர்ந்தபின்னது
கோதில்கேள்வியான்றொழுதுகூறினான். (ச)

வெல்கவாழிநின்வென்றிவார்கழல்
செல்கதீயனசிறக்கநின்புகழ்
மல்கநின்பணிமுடித்துவந்தனன்
பில்குமும்மதப்பிணர்க்கையானையாய். (ரு)

இங்குநின்றுபோயிழிந்தசூழலு
மங்குவேந்தனையணைந்தவாயிலும்
பொங்குதானையான்புகன்றமாற்றமுந்
தொங்கன்மார்பினாய்சொல்லுகேனெனா. (சு)

அள்ளிலைச்செழும்பலவினார்சுளை
முள்ளுடைக்கனிமுறுகிவிண்டெனக்
கள்ளுறைத்தொறுங்கழுமியூற்றறா
வள்ளிலைப்பொழின்மகிழ்ந்துபுக்கதும். (எ)

முள்ளரைப்பசுமுளரியந்தடத்
துள்ளிரைத்தெழுமொலிசெய்வண்டினங்
கள்ளிரைத்துகக்கண்டுவெண்சிறைப்
புள்ளிரைப்பதோர்பொய்கைசார்ந்ததும். (அ)

நித்திலம்மணிநிரந்துவெள்ளிவேய்
பத்திசித்திரப்பலகைவேதிகை
சித்திரங்களிற்செறிந்துகாமனு
ரத்திரம்மெனவசோகங்கண்டதும். (கூ)

தண்ணிழற்சுடர்த்தபனியத்தினன்
மண்ணிழற்கொளமருங்குசுற்றிய
வெண்ணிழற்சுடர்விளங்குகற்றலங்
கண்ணிழற்கொளக்கண்டகாட்சியும். (க0)

சுரிந்தகுஞ்சியன்சுடருமேனிய
னெரிந்தபூணினனிலங்குதாரினன்
வரிந்தகச்சையனொருவன்வந்துவண்
டிரிந்துபாயவிங்கேறுகென்றதும். (கக)

மற்றவன்றனக்குரைத்தமாற்றமுங்
கொற்றவன்விடக்கொம்பனார்சில
ருற்றமங்கலக்கலங்களோடுடன்
முற்றவூண்டொழின்முடிந்தபெற்றியும். (க2)

பங்கயக்கணொன்பணிகொண்மாமுடித்
திங்கள்வண்ணனுஞ்செம்பொனீள்குழைப்
பொங்குவெண்டிரைப்புணரிவண்ணனு
மங்குவந்துமவர்கள்சொற்றதும். (கரு)

நற்புறத்தனநாற்பதாம்வய
திப்புறத்தனவிளங்கருங்கைம்மா
மொய்ப்புறத்துமேன்முழங்குதானையோ
டப்புறத்தரசவையடைந்ததும். (கச)

மன்னவன்கழல்வணங்கிநின்றதும்
பின்னவன்றனிருக்கைபெற்றதும்
பொன்னிறப்பொறிபுக்ழ்ந்தசாதகந்
துன்னிவாசகந்தொழுதுகொண்டதும். (கரு)

ஓட்டிருனையானோலைவாசகங்
கேட்டமன்னவன்கிளர்ந்தசோதியன்
மீட்டோர்சொற்கொடாவிம்மிதத்தனு
யீட்டுமோனியாயிருந்தபெற்றியும். (கசு)

இருந்தமன்னன்மேலெடுத்தமாற்றமும்
வருந்திமற்றவன்மறுத்தவண்ணமும்
புரிந்துதொல்குலம்புகன்றபெற்றியு
மருந்தகைத்தொடர்பமைந்தவாக்கமும். (கஎ)

பின்னைமன்னவன்பேணிநன்மொழி
சொன்னவண்ணமுஞ்சுற்றமாயதும்
பொன்னகைக்குலம்பொலிந்துகண்கொள
வின்னகைச்சிறப்பருளியீந்ததும். (கஅ)

அருங்கலக்குழாத்தரசன்றேவிமார்
பெருங்குலத்தவர்பெயர்ந்துகண்டது
மொருங்குமற்றுளோருரைத்தவார்த்தையுஞ்
சுருங்கில்கேள்வியான்றொழுதுசொல்லினன். (கக)

சொன்னவார்த்தையிஃதிருக்கச்சொல்லுவ
தின்னமொன்றுளதடிகள்யான்பல
மன்னர்தங்களைமகிழ்ந்துகண்டன
னன்னனீர்மையாரரசரில்லையே. (உ0)

கற்றநூல்பிறர்கற்றநூலெலா
முற்றநோக்கினுமுற்றநோக்கல
வுற்றநூலெலாமுற்றநூல்களாப்
பெற்றநூலவன்பெற்றிவண்ணமே. (உக)

எரியுமாணையான் குளிருமீகையான்
பெரியன்பெற்றியாற்சிறியனண்பிறு
லரியன்வேந்தர்கட்கெளியனுண்டையர்க்
குரியனேங்குதற்கோடையாணையான். (உஉ)

எல்லைநீருலகினிதுகண்பட
வெல்லும்வேலவன்விளங்குதண்ணளி
யில்லையேலுலகில்லையாமென
நல்லனேயவனுமவேலினுய். (உ௩)

கற்றநூலினர்கலந்தகாதலா
லுற்றபோழ்துயிர்கொடுக்குமாற்றலாற்
கொற்றவேலவன்குடையினீழலார்
சுற்றமாண்பினர்சுடரும்வேலினுய். (உ௪)

கோதிலார்குலமக்கண்மாக்கண்மற்
றேதிலாரெனவியைந்ததின்மையா
ராதலாற்றமர்பிறர்களாவதங்
கோதிலாரவர்க்குள்ளஃதில்லையே. (உ௫)

வையமின்புறின்மன்னனின்புறும்
வெய்யதொன்றுறிற்ருனும்வெய்துறுஞ்
செய்யகோலினுய்செப்பலாவதன்
றையதாரினனருளின்வண்ணமே. (உ௬)

வீவிலங்குநீர்வேலிவாழ்பவர்க்
காவியாபவரரசராதலாற்
காவலோவுங்கொல்லென்றுகண்படான்
மாவருணையம்மன்னர்மன்னனே. (உஎ)

மங்குன்மாமழைமாரிவண்கையான்
பொங்குகாதலம்புதல்வர்தாமுமற்
றிங்கண்வேந்தர்கட்கேனைமான்கண்முன்
சிங்கவேறெனச்செப்புநீரரே. (உஅ)

கையவார்சிலைக்காமனிங்கிரு
மெய்யினல்வெளிப்பட்டனீரதால்
வையமாள்பவன்புதல்வர்வார்கழ
லையன்மார்கடம்மழகின்வண்ணமே. (உகூ)

சங்கவண்ணனூர்தம்பிதானுநீர்
பொங்குகார்முகில்புரையுமேனிய
னங்கணிவ்வுலகாளநாட்டிய
மங்கலப்பொறிமன்னகாண்டியால். (௩௦)

செங்கண்மாலவன்றெய்வமார்பகம்
பங்கயத்துமேற்பாவைதன்னுட
னங்குலக்கொடிநங்கைசேர்வதற்
கிங்கன்மாதவமெவன்கொல்செய்ததே. (௩க)

நங்கையங்கவனலத்திற்கொப்பவ
ளிங்கிவட்குவேறெந்தலில்லிவர்
பொங்குபுண்ணியம்புணர்த்தவாறிது
வெங்கண்யானையாய்வியக்குநீரதே. (௩உ)

என்றுகூறலுமேந்துநீண்முடி
வென்றிநீள்புகழ்வேகயானையா
னன்றுமற்றவற்கருளியீந்தன
னின்றுமின்சுடர்நிதியினீத்தமே. (௩௩)

மற்றவன்றனைமனைபுகப்பணித்
துற்றமந்திரத்தவர்களோடிருந்
தெற்றுநாமினிச்செய்வதென்றனன்
வெற்றிநீள்குடைவேந்தர்வேந்தனே. (௩௪)

செங்கணீண்முடிச்செல்வசென்றொரு
திங்களுளினுட்டிவிட்டனுங்கொரு
சிங்கம்வாய்பகத்தெறுவனென்பது
தங்குகேள்வியான்றான்முன்சொன்னதே. (௩௫)

ஆதலாலஃதறியும்வாயிலா
வோதுமாண்பினானொருவனொற்றனாய்த்-
தீதிருனையாய்செல்லவைப்பதே
ஸ்ரீதியாமெனநிகழ்த்தினாரரோ. (௩௬)

உய்த்துணர்ந்தவருரைத்தநீதிமேல்
வைத்தவொற்றினன்மன்னனானபி
னத்திறத்தினையமர்ந்தசிந்தைய
னொத்தசுற்றமோடுவகையெய்தினான். (௩௭)

வேறு.

இத்திசைக்கணிவ்வாறிதுசெல்லுநா
ளத்திசைக்கணஞ்சப்படுமொழியா
னெத்திசைக்கும்வெய்யோனியன்முன்னுற
வைத்திசைத்தனமற்றதுங்கூறுவாம். (௩௮)

பஞ்சிமென்மிதிக்கிற்பனிக்குந்தகை
யஞ்சிலோதியரம்முலைநாஞ்சிலா
மஞ்சுதோய்வரைமார்பமடுத்துழத்
துஞ்சலோவுந்தொழிலினனாயினான். (௩௯)

முத்தவாணகைமொய்பவளத்துணி
யொத்தவாயமுதொண்கடிகைத்திரள்
வைத்தவாயினனாய்மடவார்கடஞ்
சித்தவாரிகளூட்சென்றுதங்கினான். (௪0)

ஆரந்தங்கியமார்பனுமந்தளிர்க்
காருங்கொம்பனையாருங்கலந்துழித்
தாருங்கொங்கைகளும்பொரத்தாஞ்சில
வாரம்பட்டணிவண்டினமார்த்தவே. (௪௧)

வண்டுதோய்மதுவாக்கிவள்ளத்தினுட்
கொண்டுகொம்பனையார்கள்கொடுப்பவஃ
துண்டுமற்றவரொண்டுவர்வாயொளித்
தொண்டையங்கனியின்சுவையெய்தினான். (௪௨)

தாமமென்குழலார்தடங்கண்ணெனுந்
தேமயங்கியசெங்கழுநீரணி
காமமென்பதொர்கள்ளதுவுண்டரோ
யாமமும்பகலும்மயர்வெய்தினான். (௪௩)

சுற்றுவார்முலையார்தந்துகிற்றடம்
முற்றுமூழ்கும்பொழுதுமுனிவவ
ருற்றபோழ்துணர்த்தும்பொழுதும்மலான்
மற்றொர்போழ்திலன்மன்னவனாயினான். (௪௪)

மண்கனிந்தமுழவின்மடந்தையர்
கண்கனிந்திடுநாடகக்காட்சியும்
பண்கனிந்தவின்றீங்குரற்பாடலும்
விண்கனிந்திடவேவிழைவெய்தினான். (௪௫)

வாவியும்மதுமண்டபச்சோலையுந்
தூவிமஞ்ஞைதுதைந்தசெய்குன்றமும்
பாவும்வெண்மணலும்புனற்பட்டமு
மேவுநீர்மையனாய்விளையாடினான். (௪௬)

மின்னுஞ்செங்கதிர்மண்டிலம்வெய்தொளி
துன்னுந்திங்கட்பனிச்சுடர்தண்ணிது
வென்னுமித்துணையும்மறியான்களித்
தன்னனாயினனச்சுவகண்டனே. (௪௭)

சீறிற்றேர்ந்துணர்வின்றிச்செருத்திடு
மாறுண்டென்பதொர்மாற்றம்பொருண்மனந்
தேறின்யாரையுந்தேறுஞ்செருக்கொடிவ்
வாறுசென்றதவற்கரசென்பவே. (௪௮)

தோடுமல்குசுரும்பணிகோதையார்
கோடிமென்றுகிற்குய்யத்தடம்படிந்
தாடித்தன்னனையாமையிற்பூமக
ளூடலுற்றிடம்பார்த்துளளாயினாள். (௪௯)

ஆங்கொர்நாளிறைபெற்றறிவின்கட
முங்கினான்சதவிந்துவென்பானுள
னீங்கலாப்புகழான்றன்னிமித்திகன்
வீங்குவெல்கழலாற்குவிளம்பினான். (௫௰)

மன்னகேள்வளைமேய்திரைமண்டிலந்
தன்னையாள்பவர்க்கோதினதங்கணே
பன்னினாறுபகைக்குலமாமவை
முன்னம்வெல்கவென்றான்முகநோக்கினான். (௫௧)

தன்னைவென்றதண்டார்வயவேந்தனைப்
பின்னைவேறல் * பிறக்கரிதாதலான்
மன்னமற்றவனாளும்வரைப்பகம்
பொன்னின்மாரிபொழிந்திடுநன்றரோ. (௫௨)

மாசிறண்டன்னதோண்மன்னமன்னிய
கோசிறண்டத்தனாய்விடிற்கொற்றவ
னேசிறண்டம்பரவவிவ்வையக
மர்சிறண்டத்தனாயினிதாளுமே. (௫௩)

பெற்றதன்முதலாப்பின்பெறாததுஞ்
சுற்றிவந்தடையும்படிசூழ்ந்துசென்
றுற்றவான்பொருள்காத்துயரீகையுங்
கற்றவன்பிறர்காவலனாகுவான். (௫௪)

அருக்கன்றன்னறிவாகவலர்ந்தனீர்த்
திருக்கவின்றசெல்வச்செழுந்தாமரை
செருக்கெனப்படுந்திண்பனிவீழுமேன்
முருக்குமற்றதனைமுகத்தாரினாய். (௫௫)

இகழ்ச்சியிற்கெடுவார்களையெண்ணுக
மகிழ்ச்சியுன்மதிமைந்துறும்போதெனப்
புகழ்ச்சிநூலுட்புகன்றனர்பூவினுட்
டிகழ்ச்சிசெல்பொன்மணிமுடிமன்னனே. (௫௬)

* பிறக்கு, அசை.

நெறியினீதிக்கணேரிவையொப்பவு
மறிதிநீயவைநிற்கவழன்றுநீ
செறுதியேனுஞ்செம்பொன்முடிமன்னவோ
ருறுதியானுரைப்பானுறுகின்றதே. (ருஎ)

என்றலும்மிணர்வேய்முடிமாலையா
னன்றுசொல்லுகவென்றுநகைமணிக்
குன்றமன்னதிண்டோண்மிசைக்குண்டலஞ்
சென்றுமின்சொரியச்செவிதாழ்த்தினன். (ருஅ)

பூமிமேற்புரிசைமதிற்போதன
நாமமன்னகராளுநகைமலர்த்
தாமநீண்முடியான்றன்புதல்வர்கள்
காமவேளனையாருளர்காண்டியால். (ருகூ)

வந்துதோளவருள்ளிளையானமக்
காய்ந்ததொல்பகையாகுமென்றேயுறப்
போந்தொர்புன்சொனிமித்தம்புறப்பட
வேந்தயான்மனத்தின்மெலிகேனரோ. (சுഠ)

மூத்தநீண்முடியாய்முன்னமற்றதற்
கொத்தவா * றுணர்ந்தீயெனவென்செயும்
மைத்தகைமனத்தான்மனித்தன்னெனக்
கைத்தலங்கதிர்வீசமறித்தனன். (சுக)

மிகையின்வந்தவிச்சாதரவேந்தர்தந்
தொகையைவென்றவென்றோர்துலங்கப்பிற
பகையினிப்படர்ந்தென்செயுமென்றனன்
நகைகொணீண்முடிநச்சரவம்மனன். (சுஉ)

மாசிலாலவட்டத்தெழுமாருதம்
வீசவிண்டோடுமேருத்துளங்குமோ
பேசின்மானிடப்பேதைகளாற்றலா
லாசிறோளிவைதாமசைவெய்துமோ. (சுஙு)

---

* உணர்ந்தீ, உணர்ந்தருள்.

வேழத்தின்மருப்புத்தடம் * வீறுவ
வாழைத்தண்டினுளூன்றமழுங்குமோ
வாழித்தானவர்தானையையட்டவென்
பாழித்தோள்மனித்தற்குப்பணியுமோ. (௬௪)

வேகமாருதம்வீசவிண்பாற்சிறு
மேகசாலம்விரிந்தெதிர்செல்லுமோ
† வேகமாயவென்சீற்றமஞ்சாதெதி
ராகமானுடர்தாமசைகிற்பவோ. (௬௫)

குலிசமிந்திரன்கொண்டுபணிக்குமேன்
மலையின்மாசிகரங்களும்வீழ்த்திடு
நிலையவெஞ்சுடராழிநினைப்பனேற்
றொலைவில்வானவர்தோளுந்துணிக்குமே. (௬௬)

விச்சைமற்றவர்தம்மைவிடுப்பதோ
ரிச்சையென்கணுண்டாமெனின்யாவரே
யச்சமின்றிநிற்பாரந்நிமித்தநூல்
பொச்சலாங்கொல்புலந்தெழுநீர்மையாய். (௬௭)

புலவர்சொல்வழிபோற்றிலனென்பதோ
ரலகில்புன்சொலுக்கஞ்சுவனல்லதே
லுலகமொப்பவுடன்றெழுமாயினு
மலைவன்மற்றதன்கண்மதிப்பில்லையே. (௬௮)

ஆதலாலதற்கேற்றதமைச்சர்க
ளோதியாங் ‡ குணர்ந்திகவென்றொட்டினன்
யாதுந்தன்கணல்லார்செயற்கேன்றதோ
ரேதமுண்டெனுமெண்ணமில்லாதவன். (௬௯)

அலங்கலாழியினானதுகூறலுங்
கலங்குநூற்கருமத்தொழின்மாக்கடாம்
புலங்கொள்சூழ்ச்சியராகிப்புகன்றன
ருலங்கொடோளவனுக்குணர்வாயினர். (௭௰)

---

* வீறுவ, கீறுவ. † ஏகம், ஒப்பற்றது. ‡ உணர்ந்திக, உணர்ந்தருள்க.

எரியுந்தீத்திரளெட்டுணைத்தாயினுங்
கரியச்சுட்டிடுங்காந்திக்கனலுமேற்
றெரியிற்றெல்பகைதான்சிறிதாயினும்
விரியப்பெற்றபின்வென்றிடுகிற்குமே. (எக)

முட்கொணச்சுமரமுளையாகவே
யுட்கிகீக்கினுகிரினுங்கொல்லலாம்
வட்கிநீண்டதற்பின்மழுவுந்தறு
கட்குடாரமுந்தாங்களைகிற்பவோ. (எஉ)

சிறியவென்றிகழார்பகைசென்றுசென்
றறியலாவவன்றூலணிமாமலர்
வெறியும்வேரியும்விம்மிவிரிந்துதேன்
செறியுந்தொங்கற்செம்பொன்முடிமன்னனே. (எங)

அஞ்சிநின்றவர்கூறியபின்னரி
மஞ்சுவென்பவன்சொல்லுமற்றுங்கவன்
செஞ்செவேபகையாமெனிற்றேர்ந்துகண்
டெஞ்சிற்றெல்புகழாய்பின்னையெண்ணுவாம். (எச)

பகையலாதவரைப்பகையாக்கலு
நகையிறீமனத்தாரைநண்பெண்ணலு
முகையின்வேய்ந்தமென்மொய்ம்மலர்க்கண்ணியாய்
மிகையின்மற்றவைபின்னைவெதுப்புமே. (எரு)

அறியத்தேறுந்திறத்ததெவ்வாறெனிற்
றிறையிற்கென்றுவிடுதும்விட்டாற்றிறை
முறையிற்றந்துமுகமன்மொழிந்தெதிர்
குறையிற்கொற்றவகுற்றமங்கில்லையே. (எசு)

என்றலும்மிதுநன்றெனவேந்தொளி
நின்றநீண்முடிநீடிணர்க்கண்ணியான்
சென்றுதூதுவர்தாந்திறைகொள்கென
வென்றிவேலவன்மேல்விடையேயினான். (எஎ)

ஊட்டரக்குண்டகோலரொண்கோலத்த
ரோட்டரும்பொறியொற்றியவோலையர்
நாட்டியம்முணர்வாரொருநால்வர்சேண்
மோட்டெழின்முகில்சூழ்நெறிமுன்னினார். (௭௮)

வேறு.

தீதறுதென்மலைமாதிரமுன்னுபு
தூதுவர்சூழ்சுடர்சூடியசூளிகை
யோதினரோதியுலப்பறவோங்கிய
போதனமாநகர்புக்கனரன்றே. (௭௯)

செஞ்சுடர்மின்னொளிசென்றுதிபாத்திட
மஞ்சொடுவைகியமாமணிமாளிகை
வெஞ்சுடர்வீதிவிலக்குவகண்டுதம்
விஞ்சையர்செல்வம்வெறுத்தனரன்றே. (௮௰)

மூரிமுழாவொலிவிம்மிமுரன்றெழு
காரிமிழார்கலியான்மயிலாலுவ
சோரிமுழாமுழவிற்றெருத்துற்றபின்
சீரிமிழாற்பொலிவெய்தினர்சென்றே. (௮௧)

சூளிகைசூடியசூலவிலைத்தலை
மாளிகைமேன்மழைமாமுகில்போழ்தலி
னீளியநீரருவித்திரள்வீழ்வன
காளைகடாந்தகர்ப்பலகண்டார். (௮௨)

கூடுநர்கோவைமணிக்கலையுக்கவு
மூடினர்சிந்தியவொண்சுடர்மாலையு
மூடியமூரிநெடுந்தெருவொப்பவு
மூடுசெலற்கரிதாயிடருற்றார். (௮௩)

மூரிநடைக்களிமொய்யின்மதத்தினொ
டேரியினக்கலிமாதம்விலாழியு
* மோரிநுரைப்பவுகுத்தபெருங்கடை
வேரிவெறிக்களமொப்பதுகண்டார். (௮௪)

* ஓரி, விலங்கின்படுக்கை.

வண்டுபடக்குவளைப்பிணைவாயலர்
விண்டுமரைப்பதிமே * லனமாமதர்
கொண்டுநடைஇக்களிகூரவிரைப்பதோர்
மண்டுபுனற்புரிசைக்கரைவந்தார். (அரு)

கோயின்முகத்ததுகோடியர்சூளிகை
வேயின்முகத்திரண்மாமழைவீழ்வது
ஞாயின்முகத்தநகைத்திரண்முத்தணி
வாயின்முகத்துமடுத்திதுசொன்னார். (அசா)

வேய்தலைநீடியவெள்ளிவிலங்கலி
† னேய்தவிலொண்சுடராழியினன்றமர்
வாய்தலினின்றனர்வந்தெனமன்னன்மு
னீதலைசென்றுரைநீள்கடைகாப்போய். (அஎ)

என்றவர்கூறவிருங்கடைகாவல
னன்றெனநாறுளிநீண்முடியானடி
மன்றவணங்கிமொழிந்தனன்மன்னனு
மொன்றியபோதகவென்பதுரைத்தான். (அஅ)

பொன்னவிர்நீள்கடைகாவலன்போதக
வென்னவினெய்தியிலங்கொளிநீண்முடி
மன்னவன்வார்கழல்வாழ்த்திமடக்கிய
சொன்னவிலோலைகைதொழுதனரீந்தார். (அகூ)

வாசகன்மற்றதுவாசினைசெய்தபின்
மாசகனீண்முடிமன்னவன்முன்னிவை
தேசகமூசியவாழியன்சீர்த்தம
ரோசைகளோலைகொடொப்பவுரைத்தார். (கூ0)

ஊடகமோடியெரிந்தொளிமுந்துறு
மாடகமாயிரகோடியுமல்லது
சூடகமுன்கையர்தோடகமெல்லடி
நாடகராயிரநாரியர்தம்மையும். (கூக)

---

* அன்னந்தொக்கது. † ஆய்தலிலென்றும்பாடம்.

தெண்டிரைசிந்தியசங்கொடுசெங்கதி
ரெண்டரளம்பவழக்கொடியீட்டமுங்
கண்டிரண்முத்தொடுகொழகிலந்துகில்
பண்டருநீரனவும்பலபண்டமும். (கூஉ)

வெண்கதிர்முத்தகில்வேழமருப்பொடு
கண்கவர்சாமரைவெண்மயிரின்கணந்
தண்கதிர்வெண்குடையாய்தரல்வேண்டுமிஃ
தொண்சுடராழியினானுரையென்றார். (கூ௩)

வேறு.

வேந்தன்மற்றதனைக்கேட்டேவேற்றுவனெறிந்தகல்லைக்
காந்தியகந்தாகக்கவுட்கொண்டகளிறுபோலச்
சேந்தவருரைத்தமாற்றஞ்சிந்தையுளடக்கிவைத்து
நாந்தகக்கிழவர்கோமானயந்தெரிமனத்தனானான். (கூச)

கருத்துமாண்குலனுந்தேசுங்கல்வியும்வடிவுந்தம்மிற்
பொருத்தினாற்பழிக்கலாகாப்புலமைமிக்குடையரேனு
மொருத்தனுக்கொருத்தன்கூறக்கேட்டுற்றுச்செய்துவாழத்
திருத்தினானிறைவனேகாண்செய்வினைக்கிழவனென்பான். ( )

மதியினைமலராச்சூழ்ந்துவருந்தித்தாம்படைக்கப்பட்ட
நிதியினைநுகர்துமென்றுநினைத்தினிதிருந்தபோழ்திற்
பதியினைக்கலக்கிச்சென்றுபறித்துத்தாம்பிறர்க்குநீட்டும்
விதியினைவிலக்கமாட்டாமெலிபவால்வெளியநீரார். (கூசு)

ஒளியினாற்பெரியனாயவொருவனுக்குவப்பச்செய்தோ
ரளியினால்வாழ்துமென்னுமவாவினுளழுந்துகின்றாந்
தெளியநாமிதனைக்கண்டுஞ்செய்வினைத்திறங்களோரா
மளியமோவளியஞ்சாலவறிவினாற்பெரியமேகாண். (கூஎ)

அன்றுநாமுயலப்பட்டவினைகண்மற்றனையவானா
லின்றுநாமவனித்தென்னையினிச்செய்வதெண்ணினல்ல
வென்றியான்விளங்குமாழியவர்கட்குமேலைவேந்த [ன்றே.
ரொன்றியாங்குவப்பித்தாண்டதுரைப்பக்கேட்டுணர்ந்தாம

என்றுதன்மனத்தினெண்ணியிலங்குகோற்கையராகி
நின்றகேசரரைநோக்கிநிலமன்னனனையசொன்னார்க்
கொன்றியாமிங்கனுள்ளதொருப்படுத்துய்ப்பக்கொண்டு
சென்றுநும்மிறைவர்க்கெம்வாயின்னுரைதெரிமினென்றான்.

ஆளிகட்கரசனன்னவரசர்கோனதனைக்கூறி
வாளிவிற்றடக்கைவெம்போர்மணிவரையனையமார்பிற்
காளைகளிதனைக்கேட்பிற்கனல்பவாலிவரையின்னே
மீளுமாறமைப்பனென்றுவேண்டுவவிதியினீந்தான். (௧௦௦)

செய்யவாய்ப்பசும்பொனோலைச்சீறடிப்பரவையல்கு
லையநுண்மருங்குநோவவடிக்கொண்டகுவவுக்கொங்கை
வெய்யவாய்த்தண்ணெனீலம்விரிந்தெனவிலங்கிநீண்ட
மையவாமழைக்கட்கூந்தன்மகளிரைவருகவென்றான். ()

அணிமுழாவனையதோளானருளியதறிந்தபோழ்தின்
மணிமுழாச்சிலம்பக்கொண்டமண்டலவரங்கினங்கட்
குணிமுழாப்பெயர்த்தபாணிகுயிற்றுதலிலயங்கொண்ட
கணிமுழாமருங்குற்பாடற்கலிப்பிவைதவிர்த்துச்சென்றார்.

மஞ்சிடைமதர்த்தமஞ்ஞைவான்குழாமென்னவாங்கண்
வெஞ்சுடர்விளங்குமாட்டத்திடைநிலைவிரவித்தோன்றி
வஞ்சிநுண்மருங்குனோவமணிநகைக்கலாவமின்னச்
செஞ்சுடர்ச்சிலம்புபாடத்தென்றிசைபரவச்சேர்ந்தார். ()

மாடெலாமெரிந்துமின்னும்வயிரக்குண்டலத்தோடம்பொற்
றோடுலாந்துளங்கித்தோன்றுஞ்சுடிகைவாண்முகத்துநல்லார்
பாடலாநரம்பின்றெய்வம்படிவங்கொண்டனையரீரா
ராடலாலரம்பையொப்பாரவரிலாயிரரையீந்தான். (௧௦௪)

காய்ந்தொளிபவழச்சாதிக்கடிகைகள்காணமின்னுப்
பாய்ந்தெழுசுடர்ச்சங்கீன்றபருமணித்தாளக்கோவை
யேய்ந்தெழிற்காகதுண்டமருப்பிணைகவரிக்கற்றை
யாய்ந்தெழின்மகரப்பூணுவப்பனவனைத்துமீந்தான். ()

அஞ்சுடர்வயிரப்பூணனருளினன்விடுப்பவாங்கண்
விஞ்சையர்விமானந்தோற்றமேலருங்கலங்களேற்றிச்
செஞ்சுடர்த்திலகச்செவ்வாய்மகளிரைவிமானஞ்சேர்த்திக்
கஞ்சிகைமறைக்கும்போழ்திற்காளைகளதனைக்கண்டார். ()

என்னிதுவிளைந்தவாறித்தூதுவர்யாவரென்று, கன்னவி
ல்வயிரத்திண்டோட்கடல்வண்ணன்வினவயாருஞ், சொன்
னவின்றுரைக்கமாட்டார் துட்கென்றுதுளங்கவாங்கோர்,
கொன்னவில்பூதம்போலுங்குறமகளிதனைச்சொன்னாள். ()

அறைகழலரவத்தானையச்சுவக்கிரீவனென்பா
னிறைபுகழாழிதாங்கிநிலமெலாம்பணியநின்றான்
றிறைதரவேண்டுமென்றுவிடுதரச்செருவந்தானை
யிறைவனுமருளிச்செய்தானிதுவிங்குவிளைந்ததென்றாள். ()

வேறு.

இறைக்கடனென்னுமத்தீச்சொற்கேட்டலு
நிறைக்கடனிரம்பியநெஞ்சத்தீங்கலுண்
முறைக்கடமுளைப்பதோர்முனிவினொள்ளெரி
கறைப்படுபடையவன்கனலமூட்டினான். (௧௦௯)

முடித்தலைமுத்துதிர்ந்தாங்குநெற்றிமேற்
பொடித்தனசிறுவியர்ப்புள்ளியொள்ளெரி
யடுத்தெழுசுடரகத்துக்கநெய்த்துளி
கடுத்தசெங்கண்ணுமீர்த்திவலைகான்றவே. (௧௧௦)

படத்திடைச்சுடர்மணிதீண்டப்பட்டெரி
கடுத்திடுமரவெனக்கனன்றநோக்கமோ
டடுத்தெரிந்தழனகைநக்குநக்கிவை
யெடுத்துரைகொடுத்தனனிளையகாளையே. (௧௧௧)

உழுதுதங்கடன்கழித்துண்டுவேந்தரை
வழிமொழிந்தின்னணம்வாழுமாந்தர்போ
லெழுதியதிறையிறுத்திருந்துவாழ்வதே
லழகிதுபெரிதுநம்மரசவாழ்க்கையே. (௧௧௨)

நாளினுந்திறைநுமக்குவப்பத்தந்துநா
டாளுதுமன்றெனிலொழிதுமேயெனிற்
றேளினுந்தொடுகழல்வலியினுனுமிவ்
வாளினும்பயனெனைமயரிமாந்தர்காள். (௧௧௩)

விடமுடையெரிக்கொடிவிலங்குநோக்குடை
யடலுடைக்கடுத்தொழிலரவினரழற்
படமுடைமணிகொளக்கருதிப்பார்ப்பதோர்
மடமுடைமனத்தனம்மயரிமன்னனே. (௧௧௪)

இருங்கலிப்படையினுமிகலினலுமெம்
மருங்கலமிவைபெறற்கரியதாவதோர்
மருங்குளதெனினதுமகளிராற்சில
பெருங்கலந்தாங்கினற்பெறலுமாகுமே. (௧௧௫)

பாழியான்மெலிந்தவர்திறத்துப்பண்டெலா
மாழியால்வெருட்டிகின்றடர்த்திர்போலுமஃ
தேழைகாளினியொழிந்திட்டுச்செவ்வனே
வாழுமாறறிந்துயிர்காத்துவாழ்மினே. (௧௧௬)

அன்றெனிற்றிறைகொளக்கருதினங்கொரு
குன்றின்மேற்பெறுவதென்வந்துகொள்கயா
னின்றுதன்னெஞ்சகநிறையவீழ்வன
வென்றியம்பகழியும்விசும்புமீவனே. (௧௧௭)

இறைவனைமகளிர்போற்கழறியென்னையெங்
குறையிதுகூறுமின்சென்றுதூதிர்கா
டிறையினைமறுத்தவர்திறத்துச்செய்வதோர்
முறையுளதெனினதுமுயன்றுகொள்கவே. (௧௧௮)

உட்கவாங்குரைத்தலுமொளிர்பொன்மாலையுங்
கட்கமழ்கோதையர்கணமுமீண்டது
வட்கிநம்மிறைவற்குவலிதுதெவ்வெனத்
துட்கெனுமனத்தினர்தூதரேகினர். (௧௧௯)

வே று.

போகியதூதர்தங்கோன்பொலங்கழற்றொழுதலஞ்சி
யாகியதறிந்துசூழுமரிமஞ்சுவவனைக்கண்டே
யேகியபுகழினனைக்கண்டதுமீயப்பட்ட
தோகையஞ்சாயலார்தங்குழாங்களுநெறியுஞ்சொல்லி. ( )

மீட்டிளங்குமரர்கண்டுவிடுசுடரிலங்கநக்கு
மோட்டிளங்கண்ணிதியமுனிந்தழன்முழங்கநோக்கி
யூட்டிலங்குருவக்கோவேலார்தங்களுக்குரைத்ததெல்லாந்
தோட்டிலங்குருவத்தொங்கலமைச்சற்குச்சொல்லியிட்டார்

அரும்பெறலறிவன்செல்வனரிமஞ்சுவதனைக்கேட்டே
பெரும்பகையதனைக்கேட்பிற்பெரியவன்சிறிதுநோவு
னிரும்பகையிதனையென்சொல்விலக்குமாறென்றுதானே
சுரும்பிவர்தொடையன்மார்பன்சூட்சிகொண்மனத்தனானன்

மின்றொடர்ந்திலங்குபூணான்விளைவுறுவிளைமைதன்னு
னன்றுதீதென்னுந்தேர்ச்சிநவின்றிலனுதலால்யா
னென்றவோர்மாயங்காட்டியுளைவித்துக்குறுகவோடிக்
குன்றிடைச்சீயந்தன்மேற்கொளப்புணர்த்திடுவனென்றான்.

அன்னணமனத்தினாலேயிழைத்தரிகேதுவென்னு
மின்னணங்குருவப்பைம்பூண்விஞ்சையன்றனைக்கூவிக்
கன்னவிற்றோளினாற்குக்கருமமீதென்றுகாட்டி
மன்னுமோர்மாயச்சீயமாகெனவகுத்துவிட்டான். (௧௨௪)

ஒள்ளெரிநெறிப்பட்டன்னசுரியுளைமலைகண்போழும்
வள்ளுகிர்மதர்வைத்திங்கட்குழவிவாளெயிற்றுப்பைங்க
ணுள்ளெரியுமிழநோக்கியுருமெனவதிரும்பேழ்வாய்க்
* கொள்ளரியுருவுகொண்டான் கொடியவன்கடியசூழ்ந்தான்.

இலைத்தடஞ்சோலைவேலியிமவந்தமடைந்துமீண்ட
சிலைத்தடந்தோளினார்தஞ்சிந்துநாடதனைச்சேர்ந்து
மலைத்தடம்பிளந்துசிந்தமண்புடைபெயரமுந்நீ
ரலைத்துடன்கலங்கிவிண்பாலதிரநின்றுரறியிட்டான். (௧௨௬)

---

* கோளரியின்விகாரம்.

பொடித்தலைபுலம்பிக்கானம்போழ்ந்துமாநெரிந்துவீழ
வடித்தலைகலங்கிவேழம்பிடிகளோடலறியாழப்
புடைத்துழிப்பதடிபோலத்துறுகற்கள்புரண்டுபொங்க
விடித்தலின்மனித்தரெல்லாமெயிறுறவிறுகிச்சோர்ந்தார். ()

அப்படியவனையவ்வாறமைத்தபினமைச்சனுங்கண்
மெய்ப்புடைதெரிந்துசொன்னதூதுவரவரைமீட்டே
யிப்படியிவைகள்சொல்லிப்பெயர்மினீரென்றுவென்றிக்
கைப்படைநவின்றவெம்போர்க்காளையைக்கனற்றவிட்டான்.

வேறு.

ஆங்குத்தூதுவரதிர்முகிலாறுசென்றிழிந்து
பூங்கட்டேமொழிப்போதனத்திறைவன்றன்புதல்வர்
வீங்குபைங்கழல்விடுசுடர்மிடைமணிப்பூணோ
ரோங்குதானையோடுலாப்போந்தவிடஞ்சென்றீதுரைத்தார்.

திறையின்மாற்றமுந்திறையினைவிலக்கியதிறமுங்
குறையென்றெங்களைக்குமரநீபணித்ததுங்கூற
வறையும்பைங்கழலாழியந்தடக்கையெம்மரைச
னறையுங்குஞ்சியானன்றுநன்றெனச்சொல்லிநக்கான் (௧௫௦)

தளையின்விண்டுதேன்றயங்கியதடங்கொடார்மார்ப
விளையையென்பதுமெங்கள்வாய்க்கேட்டபினிறைவ
னெளியுமாற்றலுந்தன்கணென்றுள்ளதுநினையா
னளியன்பிள்ளைதானுரைத்தவென்றழன்றிலனமர்ந்தான். ()

அறியுமாயிற்றனரும்பெறனாட்டினையரிய
வெறியுமின்னுருமெனவிடித்திறுவரைமுழையு
ளுறையுங்கோளரியொழிக்கலாநமக்குவந்தீயுந்
திறையுமீட்கியவலித்தவச்செருக்குடைச்சிறியோன்.(௧௫௨)

என்றுமற்றதுமொழிமினென்றுரைத்தெமைவிடுத்தா
னென்றமாற்றமஃதிசைத்தலுமிளையவனென்னே
சென்றநாட்டகஞ்சிலம்பகின்றிடித்துயிரலறக்
கொன்றோர்கோளரிகொடுமுடியுறைவதேதாவென்றான். ()

உளதுவாழியின்னெனவிபுனற்சிந்துநன்னாட்டிற்
களைதல்யாவர்க்குமரியதுகனமணிக்குன்றி
னுளதுகோளரியுருமெனவிடித்துயிர்பருகி
யளவிலாமுறைமையுறைகின்றதடிகளென்றுரைத்தார். (கருச)

ஆயின்மற்றதனருவரைப்பிலமெனவகன்ற
வாயைப்போழ்ந்துடலிருபிளப்பாய்வகுத்திடுவ
னேயிப்பெற்றியேயிளைத்திலனாயினும்வேந்தன்
பேயிற்பேசியபிள்ளையேயாகென்றுபெயர்ந்தான். (கருரு)

புழற்கைத்திண்ணுதிமருப்பினபொருகளிறிவைதா
நிழற்களேனுக்கிங்கின்றழன்றனநிலையிடம்புகுக
வழற்கணுறுபவடுபடைதொடுதலைமடியாத்
தொழிற்களுளருந்தவிர்கெனச்சூளுற்றுமொழிந்தான். ()

இவருமாமணிக்கொடுஞ்சிலையிவுளித்தேர்காலாள்
கவரிநெற்றியபுரவிதங்காவிடம்புகுக
வெவருமென்னொடுவரப்பெறுர்தவிர்கெனவெழில்சே
ருவரிநீர்வண்ணனுழையவரொழியுமாறுரைத்தான். (கருஎ)

நகரமாசனமிரைப்பதுதவிர்த்தபினளிநீர்ப்
பகருமாகடல்படிவங்கொண்டனையவன்படாச்
சிகரமால்வரைதெளிந்தனன்றிருவமார்பினன்பின்
மகரமாகடல்வளைவண்ணனுடன்செலவலித்தான். (கருஅ)

புழைக்கைமால்களிற்றெருத்திடைபுரோசையிற்பயின்ற
கழற்கொள்சேவடிகருவரையிடைநெறிகலந்த
வழற்கொள்வெம்பொடியவைமிசைபுதையவவ்வரிமான்
றுழிற்கொண்டாருயிர்செகுக்கின்றசூழல்சென்றடைந்தார்

அடைந்தவீரரைக்காண்டலுமழலுளையரிமா
வுடைந்துபோகவோரிடியிடித்தெனவுடன்றிடிப்ப
விடிந்துபோயினவிறுவரைதுறுகலங்குடனே
பொடிந்துபோயினபொரியெனநெரிவொடுபுரளா. (கசo)

காளைகாளொளிமுகில்வண்ணன்கழல்களைவிசியாத்
தோளின்மேற்செலச்சுடர்விடுகடகங்கள்செறியாச்
சூளிமாமணித்தொடர்கொண்டுசுரிகுஞ்சிபிணியா
வாளிமொய்ம்பனங்கார்த்தனனுடைந்ததவ்வரியே. (௧௪௧)

எங்குப்போவதென்றுடைநெறியிறுவரைநெரியப்
பைங்கட்கோளரியுருவுகொண்டவன்மிசைப்படர்ந்து
வெங்கட்கூற்றமுந்திசைகளும்விசும்பொடுநடுங்கச்
செங்கட்காரொளிநெடியவன்விசையினாற்சிறந்தான். (௧௪௨)

கழலங்கார்த்திலகால்களுநிலமுறுமுடங்கா
வழலுஞ்செஞ்சுடர்க்கடகக்கையவைபுடைபெயரா
குழலுங்குஞ்சியுமாலையுங்கொளுவியதொடரு
மெழிலுந்தோளினுமெருத்திலுங்கிடந்திலவெழுந்தே. (௧௪௩)

மரங்கள்வேரொடுங்கீழ்ந்தெனவழிதொடர்ந்தெழுந்த
நிரந்தமான்களும்பறவையுநிலங்கொண்டுபதைத்த
வரங்கொள்வெம்பரலணிவரைக்கொடுமுடியவைதா
முரங்கொடோளவன்விரனுங்கியுறவுடைந்தொழிந்த. (௧௪௪)

மூடியிட்டனமுகிற்கணமுரன்றிடைநொறுங்காய்க்
கூடியிட்டனகொடுமுடித்துறுகற்கள்குளிர்ந்தாங்
காடியிட்டனவனதெய்வமரியுருவுடையா
னோடியிட்டனனொளிவரைமுழையகத்தொளித்தான். ( )

உலத்தின்வீங்கியவொளிமணிச்சுடரணிதிணிதோ
ணலத்தின்வீங்கியகளிர்புகழிளையவன்விசையி
ணிலத்தின்கம்பமும்நெடுவரையதிர்ச்சியுமெழவப்
பிலத்தின்வாழரியரசுதன்றுயில்பெயர்ந்ததுவே. (௧௪௬)

ஈங்குவாழியவிருள்கெழுமுழையகத்தொளித்தா
யோங்குகோல்வரைபிளக்கிடுகெனவுளைந்துரவோ
னாங்கமாமுழைமுகத்துலகதிரநின்றார்த்தான்
வீங்குவாய்திறந்தொலித்ததுவிலங்கலிற்சிலம்பே. (௧௪௭)

அதிரவார்த்தலுமழன்றுதன்னெயிற்றிடையலர்ந்த
கதிருங்கண்களிற்கனலெரிச்சுடர்களுங்கனல
முதிர்வில்கோளரிமுனிந்தெதிர்முழங்கலினெரிந்து
பிதிர்வுசென்றதுபெருவரைபிளந்ததப்பிலமே. (௧௪௮)

எரிந்தகண்ணிணையிருவரைமுழைநின்றவனைத்தும்
விரிந்தவாயொடுபிணைத்தனவெளியுகிர்பரூஉத்தாள்
சுரிந்தகேசரஞ்சுடரணிவளையெயிற்றொளியா
விரிந்ததாயிடையிருணின்றங்கெழுந்ததவ்வரியே. (௧௪௯)

தாரித்திட்டதன்றறுகண்மைக்குணங்களினுலகை
வாரித்திட்டிவண்வந்ததோரரியெனமதியாப்
பூரித்திட்டதன்பெருவலியொடுபுகழரிமாப்
பாரித்திட்டதுபனிவிசும்புடையவர்பனித்தார். (௧௫0)

அளைந்துமார்பினுளழிதருகுருதியைக்குடிப்பா
னுளைந்துகோளரியெழுதலுமுளைமிசைமிதியா
வளைந்தவாளெயிற்றிடைவலித்தடக்கையிற்பிடித்தான்
பிளந்துபோழ்களாய்க்கிடந்ததப்பெருவலியரியே. (௧௫௧)

சீயமாயிரஞ்செகுத்திடுந்திறலதுவயமா
வாயவாயிரமாயிரமடுதிறலரிமா
வேயெனுமுனிங்கழித்தனனிவனெனத்தகத்தம்
வாயின்மேல்விரல்வைத்துநின்றமரர்கண்மருண்டார். (௧௫௨)

அழிந்தகோளரிகுருதியதடங்கடங்களிற்றோ
டொழிந்தவெண்மருப்புடைந்தவுமொளிமுத்தமணியும்
பொழிந்துகல்லறைப்பொலிவதுகுலிகச்சேறலம்பி
யிழிந்தகங்கையினருவியொத்திழிந்தவவ்விடத்தே. (௧௫௩)

யாதுமற்றதற்குவந்திலன்வியந்திலனிகலோ
னேதகித்திலம்புரிவளையொளியவற்குறுகி
யேதமற்றிதுகடிந்தனனின்னினியடிகள்
போதும்போதனபுரத்துக்கென்றுரைத்தனன்புகழோன். (·)

தம்பியாற்றல்கண்டுவெந்துதன்மனந்தளிர்த்தொளியால்
வம்புகொண்டவன்போனின்று வளைவண்ணன்மொழிந்தான்
நம்பிகாமினிநளிவரைத்தாழ்வர்கண்டல்லா
லிம்பர்போம்படித்தன்றுசெங்குருதியதிழிவே. (கருரு)

ஆங்கண்மால்வரையழகுகண்டரைசர்கள்பரவும்
வீங்குபைங்கழலிளையவன்வியந்துகண்மலர
வீங்கிமாண்பினவிணையினவிவையெனவினிதின்
வாங்குநீரணிவளைவண்ணனுரைக்கியவலித்தான். (கருசு)

புள்ளுங்கொல்லெனவொலிசெயும்பொழில்புடையுடைய
கள்ளினுண்டுளிகலந்துகாலசைத்தொறுங்கமழ
வுள்ளுந்தாதுகொண்டேதுவண்டருதனவொளிசேர்
வெள்ளென்றேன்றுவகயமல்லபளிக்கறைவிறலோய். (கருஎ)

காளைவண்ணத்தகளிவண்டுகதுவியதுகளாற்
றாளைமூசியதாமரைத்தடம்பலவவற்று
ளாளிமொய்ம்பவங்ககலிலையலரொடுங்கிழிய
வாளைபாய்வனகயமல்லவனத்திடர்மறவோய். (கருஅ)

மன்னுவார்துளித்திவலையமலைமருங்கிருண்டு
துன்னுமார்ந்தர்கள்பனிப்புறத்துணைமையோடதிர்வ
வின்னவாம்பலவுருவுகளிவற்றினுளிடையே
மின்னுவார்ந்தனமுகிலல்லகளிறுகள்விறலோய். (கருகூ)

உவரிமாக்கடனுரையெனவொளிர்தருமயிர
வவரைவார்புனத்தருந்திமேயருவிநீர்பருகி
யிவருமால்வரையிளமழைதவழ்ந்தெனவிவையே
கவரிமாப்புடைபெயர்வனகடல்வண்ணகாணாய். (ககூo)

வேறு. (....)

துள்ளிவாரும்புனற்றுளங்குபாறைக்கலத்
துள்ளுராவிக்கிடந்தொளிருமொண்கேழ்மணி
நள்ளிராவின்றலைகுபவானத்திடைப்
பிள்ளைநாளம்பிறைபிறழ்தல்போலுங்களே. (ககூக)

வழையும்வாழைத்தடங்காடுமூடிப்புடங்
கழையும்வேயுங்கலந்திருண்டுகொண்டற்கரு
முழையுமூரிம்மணிக்கல்லுமெல்லாஙின
திழையினம்பொன்னொளியெறிப்பத்தோன்றுங்களே. (கசுஉ)

பருவமோவாமுகிற்படலமூடிக்கிடந்
திரவுண்டேனைப்பகலில்லையொல்லென்றிழிந்
தருவியோவாபுரண்டசும்புபற்றித்தட
வரையின்றாழ்வார்நிலம்வழங்கலாகார்களே. (கசுங)

சூரலப்பித்தொடர்ந்தடர்துளங்கும்மரில்
வேரலோடும்மிடைந்திருண்டுவிண்டுவ்விடா
ஞரலோவாதனன்றுயிரையுண்டிடுதலாற்
சாரலாகாதனசாதிசாலப்பல. (கசுச)

பரியபாறைத்திரள்படர்ந்தபோலக்கிடந்
திரியவேழங்களைவிழுங்கியெங்குந்தமக்
குரியதானம்பெருவுறங்கியூறுங்கொளாப்
பெரியபாம்பும்முளபிலங்கொள்பேழ்வாயவே. (கசுரு)

அவைகள்கண்டாய்சிலவாவமாலிப்பன
வுவைகள்கண்டாய்சிலவுளியமொல்லென்பன
லிவைகள்கண்டாய்சிலவேழவீட்டம்பல
நவைகள்கண்டாயிவைநம்மலாதார்க்கெலாம். (கசுசு)

குழல்கொடும்பிக்கணங்கூடியாடநகு
மெழில்கொடாரோய்வியந்தியங்கலிங்குள்ளஙின்
கழல்களார்க்குங்களேகலங்கிமேகக்குழாம்
பொழில்கொள்வெள்ளத்திடைப்புரளநூறுங்களே. (கசுஎ)

ஆக்கலாகாவசும்பிருந்துகண்ணிற்கொரு
நீக்கமீங்காகிலம்போலத்தோன்றிப்புகிற்
காக்கலாகாகளிறுழவாழும்புறந்
தூக்கந்தூங்குந்தொளிதொடர்ந்துபொன்றுங்களே. (கசுஅ)

இதுவித்தாழ்வார்கிலத்தியற்கைமேலாற்பல
மதியம்பாரித்தனமணிக்கற்பாறையின்மிசை ம்
கிதியம்பாரித்தொளிகிழன்றுதுஞ்சன்னிலைக்
கதியின்வாழ்வாரையுங்கண்கள்வாங்குங்களே. (கசகூ)

வேறு.

இருதுவேற்றுமையின்மையாற்
சுருதிமேற்றுறக்கத்திறை
டரிதுவேற்றுமையாகவே
கருதுவேற்றடங்கையினய். (கஎ0)

வேறு.

தொல்லுறுசுடர்போலுஞ்சூழொளிமணிப்பாறைக்
கல்லறையவைகோங்கின்கடிமலர்கலந்துராய்
மல்லுறுவரைமார்பவளரொளியின்முளைக்கு
மெல்லுறுசுடர்வானத்தெழிலவாயினியவ்வே. (கஎக)

வேறு.

திரைத்தசாலிகை
கிரைத்தபோனிரங்
திரைப்பதேன்களே
விரைக்கொண்மாலையாய். (கஎ2)

வேறு.

வரைவாய்கிவந்தவடுமாவடுமா
விரைவாய்கிவந்துவிரியாவிரியா
புரைவாயசும்புபுலராபுலரா
விரவாயிருட்செயிடமேயிடமே. (கஎஙு)

வேறு.

இளையாரிளையாருடனய்முலையின்
வளையார்வளையார்மனம்வேண்டுருவம்
விளையார்விளையாட்டயருந்தொழிருன்
றளையார்தளையார்பொழிலின்றடமே. (கஎச)

வேறு.

அளியாடுமமரங்களமரங்கள்மகிழ்ந்தாள
விளையாடும்விதமலர்ந்தவிதமலர்ந்தமணிதூவும்
வளையார்கண்மகிழ்பவான்மகிழ்பவான்மலர்சோர்வ
விளையாரையிளையவேயிளையவேயிடமெல்லாம். (கஎ௫)

வே று.

தாமரைத்தடத்திடைமலர்ந்தசாரல்வாய்த்
தாமரைத்துளையொடுமறவித்தாவில்சீர்த்
தாமரைத்தகுகுணச்செல்வன்சண்பகந்
தாமரைத்தடித்தலர்தகைந்துதோன்றுமே. (கஎசு)

வே று.

நாகஞ்சந்தனத்தழைகொண்டுகளிர்வண்டுகடிவ
நாகஞ்சந்தனப்பொதும்பிடைநளிர்ந்துதாதுமிழ்வ
நாகஞ்செஞ்சுடர்நகுமணியுமிழ்ந்திருள்கடிவ
நாகமற்றிதுநாகர்தம்முலகினைநகுமே. (கஎஎ)

வே று.

நகுமலரனநறவம்மவைசொரிவனநறவந்
தொகுமலரனதுருக்கம்மவைசொரிவனதுருக்க
மகமலரனவசோகம்மவைதருவவசோகம்
பகுமலரனபாங்கர்பலமலையனபாங்கர். (கஎஅ)

அணங்கமர்வனகோடலரிதவைபிறர்கோடல்
வணங்கிளர்வனதோன்றிவகைசுடர்வனதோன்றி
யிணங்கிணர்வனவிஞ்சியெரிபொன்புடையிஞ்சி
மணங்கமழ்வனமருதம்வரையயல்வனமருதம். (கஎகூ)

வே று.

சாந்துந்தண்டழையுஞ்சுரமங்கையர்க்
கேந்திநின்றனவிம்மலையாரமே
வாய்ந்தபூம்படையும்மலர்க்கண்ணியு
மீந்தசாகையவிம்மலையாரமே. (கஅO)

இயங்குகின்னரரின்புறுநீரவே
தயங்குகின்றனதானமந்தாரமே
பயங்கொள்வார்பயங்கொள்பவனைத்தையுந்
தயங்குகின்றனதானமந்தாரமே. (கஅக)

வே று.

பொன்விரிந்தனையபூங்கோங்கும்வேங்கையு
முன்விரிந்துக்கனமொய்த்தகற்றல
மின்விரிந்திடையிடைவிளங்கியிந்திரன்
வின்முரிந்திருண்முகில்வீழ்ந்தபோலுமே. (கஅஉ)

நிழற்பொதிந்லமாமணிக்கலந்திரள்
பொழிற்பொதியவிழ்ந்தபூப்புதைந்துதோன்றுவ
தழற்பொதிர்கெனத்துகிறரித்தகாஞ்சியர்
குழற்பொதிதுறுமலர்க்கொண்டைபோலுமே. (கஅங)

மேவுவெஞ்சுடரொளிவிளங்குகற்றலந்
தாவில்பூந்துகளொடுதைதைந்துதோன்றுவ
பூவுகவிளையவர்திளைத்தபொங்கணைப்
பாவுசெந்துகிலிடைப்பள்ளிபோலுமே. (கஅச)

வேறு.

அழலணியசோகஞ்செந்தாதணிந்துதேனரற்றநின்று
நிழலணிமணிக்கன்னிலநிறத்தொடுநிமிர்ந்ததோற்றங்
குழலணிகுஞ்சிமைந்தர்குங்குமக்குழம்புபூசி
யெழிலணிதிகழநின்றாலெனையரீரனையதொன்றே. (கஅரு)

இணைந்துதேன்முழங்கவிண்டவேழிலம்பாலைவெண்பூ
மலிந்துதாதணிந்துதோன்றுமரகதமணிக்கற்பாறை
கணங்கெழுகளிவண்டாலப்பாசடைகலந்தபொய்கை
கணங்தொளிவிடாதவெண்டாமரைததைந்தனையதொன்றே

காரிருட்குவளைக்கண்ணிக்கதிர்நகைக்கனபொற்றோட்டுக்
கூரிருள்சுரிபட்டன்னகுழலணிகொடுநுண்கூந்தற்
பேரிருள்கிழியத்தோன்றும்பிறையெயிற்றமரநோக்கிற்
சூரரமகளிர்வாழுமிடமிவைசுடர்பவெல்லாம். (கஅஎ)

வாரிருபுடையும்வீக்கிவடஞ்சுமந்தெழுந்துவேங்கை
யேரிருஞ்சுணங்குசிந்தியெழுகின்றவிளமென்கொங்கைக்
காரிருங்குழலங்கொண்டைக்கதிர்நகைக்கனகப்பைம்பூ
ணீரரமகளிர்கண்டாய்நிறைபுனற்றடத்துவாழ்வார். (கஅஅ).

மேகமேற்றவழ்ந்துவேய்கண்மிடைந்துகீழிருண்டதாழ்வ
ரேகமாமலையினெற்றியிருஞ்சுனைத்தடங்களெல்லா
நாகமாமகளிரென்னுநங்கையர்குடையப்பொங்கி
மாகமேற்றரங்கஞ்சிந்திமணியறைகழுவுமன்றே. (கஅகூ)

ஆவிவீற்றிருந்தகாதலவரொடுகேவரிவேய்ந்து
நாவிவீற்றிருந்துநாறுநளிர்வரைச்சிலம்பின்மேயார்
காவிவீற்றிருந்தகண்ணார்கந்தர்வமகளிர்கண்டாய்
பாவின்வீற்றிருந்தபண்ணினமுதினூற்படைக்கப்பட்டார். ()

அலங்கிணரணிந்தவிஞ்சையரிலையவரிடங்கள்கண்டாய்
விலங்கலின்விளங்குகின்றவெள்ளிவெண்கபாடமாட
மிலங்கொளிமகரப்பைம்பூணியக்கியரிடங்கள்கண்டாய்
கலங்கிளர்பசும்பொற்கோயினகுகின்றநகரமெல்லாம். (கக௧க)

போய்கிழற்றுளும்புமேனிப்புணர்முலையமிர்தனாரோ
டாய்கிழற்றுளும்பவானோரசதியாடிடங்கள்கண்டாய்
சேய்கிழற்றிகழுஞ்செம்பொற்றிலதவேதிகையவாய
பாய்கிழற்பவழச்செங்காற்பளிக்குமண்டபங்களெல்லாம். ()

எழின்மணிச்சுடர்கொண்மேனியிமையவரிடங்கள்கண்டாய்
முழுமணிப்புரிசைவேலிமுத்தமண்டபத்தவாய
கழுமணிக்கபாடவாயிற்கதிர்நகைக்கனகஞாயிற்
செழுமணிச்சிகரகோடிச்சித்திரகூடமெல்லாம். (கக௧௩)

தும்பிவாய்துளைக்கப்பட்டகீசகம்வாயுத்தன்னால்
வம்பவாங்குழலினேங்கமணியறையரங்கமாக
வும்பர்வான்மேகசாலமொலிமுழாக்கருவியாக
நம்பதேன்பாடமஞ்ஞைநாடகநவில்வகாணாய். (கக௧௪)

பொன்னவிர்மகரப்பைம்பூட்பொலங்குழையிலங்குசோதிக்
கன்னவில்வயிரத்திண்டோட்கடல்வண்ணனுவப்பக்காட்டி
மன்னவின்றிறைஞ்சுஞ்செய்கை வளைவண்ணன்மலையின்மே
லின்னனபகர்ந்துசொல்லுமெல்லையுணீங்கலுற்றார். [லா

பாசிலைப்பாரிசாதம்பரந்துபூகிரந்தபாங்கர்
மூசினமணிவண்டார்க்குமுருகருமூரிக்குன்றங்
காய்சினவேலினன்றன்கண்களிகொள்ளக்காட்டி
யோசனையெல்லைசார்ந்துபின்னையிஃதுரைக்கலுற்றான். ()

வலிகற்றமதர்வைப்பைங்கண்வாளெயிற்றரங்கச்சீயங்
கலிகற்றகளிறுண்பேழ்வாய்க்கலிங்கினுனிழிந்துபோந்து
குலிகச்சேறலம்பிக்குன்றங்கொப்புளித்திட்டதொப்ப
வொலிகற்றவுதிரநீத்தமொழுகுவதின்னநோக்காய். (ககஎ)

வெம்பவெங்குயிரையெல்லாம் விழுங்கியவெகுண்டுநோக்கி
கம்பமாவுலகந்தன்னைக்கண்டிடுங்களிகொள்சீய [க்
நம்பநீயழித்ததல்லானகையெயிற்றதனைநண்ணல்
வம்பறுமகரப்பைம்பூண்வானவர்தமக்குமாமோ. ககஅ)

ஆங்குநீமுனிந்தபோழ்தினரியதுவகலநோக்கி
வாங்குநீர்வண்ணகேளாய்மாயமாமதித்துநின்றே
ஞேங்குநீண்மலையின்றாழ்வரொலிபுனலுதிரயாறு
வீங்கிவந்திழிந்தபோழ்துமெய்யென்வியப்புச்சென்றேன். ()

குன்றிற்குமருங்குவாழுங்குழூஉக்களிற்றினங்களெல்லா
மன்றைக்கன்றலறக்கொன்றுண்டகலிடம்பிளப்பச்சீறி
வென்றிக்கண்விருப்புநீங்காவெங்கண்மாவிதனைக்கொன்று
யின்றைக்கொண்டுலகமெல்லாமினிதுகண்படுக்குமன்றே. ()

உரைசெய்நீளுலகின்வாழுமுயிர்களுக்குறுகண்கண்டால்,
வரைசெய்தோண்மைந்தர்வாழ்க்கைமதிக்கிலார்வனப்பின்மி
க்கார், திரைசெய்நீருலகங்காக்குஞ்செய்கைமேற்படைக்கப்ப
ட்ட,வரசர்தம்புதல்வர்க்கையாவறம்பிறிதனினுண்டோ.()

கற்றவர்கடவுட்டானஞ்சேர்ந்தவர்களைகணில்லா
ரற்றவரந்தணாளரன்றியுமனையநீரார்க்
குற்றதோரிடுக்கண்வந்தாலுதவுதற்குரித்தன்றாயிற்
பெற்றவிவ்வுடம்புதன்னாற்பெறுபயனில்லைமன்னே. (உ0உ)

மன்னுயிர்வருத்தங்கண்டும்வாழ்வதேவலிக்குமாயி
லன்னவனாண்மையாவதலிபெற்றவழகுபோலா [ன்னு
மென்னையான்கொடுத்தும்வையத் திடுக்கணேய்கெடுப்பனெ
கின்னையேபோலுநீரார்கிலமிசைசிலவின்றார். (உ0௩)

ஒருவனதிரண்டியாக்கையூன்பயினரம்பின்யாத்த
வுருவமும்புகழுமென்றுங்கவற்றினூழ்காத்துவந்து
மருவியவுருவமிங்கேமறைந்துபோமற்றயாக்கை
திருவமர்ந்துலகமேத்தச்சிறந்துபின்னிற்குமன்றே. (௨௦௪)

வே று.

என்றுதங்கதையோடிருநீண்முகிற்
குன்றுசூழ்ந்தகுழுமலர்க்கானகஞ்
சென்றோர்வேங்கடஞ்சேர்ந்தனருச்சிமே
னின்றுவெய்யவனுமிலங்காய்த்தினன். (௨௦௫)

ஆங்கவேங்கடஞ்சேர்ந்தபிணையகா
ணீங்கிவ்வெங்கடுங்கானகத்தீடென
வேங்குநீர்க்கடல்வண்ணனுக்கின்னணம்
வீங்குவெண்டிரைவண்ணன்விளம்பினன். (௨௦௬)

முழையுடைந்தழல்காலுமுரம்பயற்
கழையுடைந்துகுகண்கவர்கித்தில
மழையுடைந்துகுநீரெனவாய்மடுத்
துழையுடைந்துகுகின்றனவூங்கெலாம். (௨௦௭)

மிக்கநீள்கழைமேல்விளைவுற்றழ
லொக்கவோடியுறைத்தலினுன்மிசை
யுக்கநெற்பொரியுற்றொருசாரெல்லாந்
தொக்ககற்றலமேற்றுடிக்கின்றவே. (௨௦௮)

ஈங்குவெங்கதிரோனெறிப்பநிழல்
வேங்கொலென்றொளித்திட்டிபம்வீழ்ந்துசேர்
பாங்கலார்மனைபோலப்பறைந்தரோ
வோங்கிநின்றுலவுற்றனவோமையே. (௨௦௯)

அற்றநீரழுவத்திடைநெல்லியின்
வற்றலஞ்சினையூடுவலித்தரோ
மற்றவெவ்வெயிலுங்கிழல்வாயழ
லுற்றுவீழ்ந்ததுபோன்றுளவாங்கெலாம். (௨௧௦)

பைத்தலைப்படநாகமழன்றுதம்
பொய்த்தளைத்தலைபோதரக்கார்செய்வான்
கைத்தலம்முகிழ்க்கின்றனகாந்தளென்
றத்தலைச்சிலமானயர்வெய்துமே. (௨௧௧)

விசையினோடுவெண்டேர்செலக்கண்டுநீர்
நசையினோடியகவ்வியிருங்குழா
மிசையில்கீழ்மகன்கண்ணிரந்தெய்திய
வசையின்மேன்மகன்போலவருந்துமே. (௨௧௨)

துடியர்தொண்டகப்பாணியர்வாளியர்
கொடியசெய்துமுனைப்புலங்கூட்டுணுங்
கடியநீர்மையர்கானகங்காக்குமின்
னடியால்லதல்லாரவணில்லையே. (௨௧௩)

வேறு. முல்லை

அங்கவெங்கடங்கடந்தலங்குதாரிலங்குபூண் [த்
சிங்கம்வென்றசெங்கண்மாலொ டம்பொன்மாலைவெண்டேர்
திங்கள்வண்ணன்வெங்கண்யானைவேந்துசேர்ந்தநாடுசார்ந்
திங்கணின்னவின்னகாணெனப்புகழ்ந்தியம்பினான். (௨௧௪)

மாலும்வாரிதிங்கண்மூன்றும்வந்தருதமாண்பினா
லாலுமாவருனைநம்மடிகளாளுநாட்டகங்
காலமாண்பினன்றியுங்கார்கவின்றநீரவே
போலுமாண்பினோர்கலந்துபொங்குநீரபுறணியே. (௨௧௫)

கொண்டல்வாடையென்னுங்கூத்தன் யாத்தகூத்தின்மாட்
விண்டமாமலர்ப்பொதும்பரங்கமாவிரும்புநீர் [சியால்
வண்டுபாடவல்லியென்னுமாதராடுநாடகங்
கண்டுகொன்றைபொன்சொரிந்தகாந்தள்கைமறித்தவே. ()

கைமலர்த்தகாந்தளுங்கரியநீர்கருவிளை
மைமலர்த்தடங்கணோர்வகுத்தலர்ந்தவட்டமும்
மொய்மலர்ப்பொதும்பின்மேன்முறுவலித்தமுல்லையுங்
கொய்மலர்க்குழற்றிரட்சிகொண்டுகொய்த்தகொன்றையும். ()

தொண்டைவாய்நிறங்கொளக்கனிந்து தூங்குகின்றவும்
வண்டுபாயவார்கொடிமருங்குலாய்வளர்த்தவுங்
கண்டபாலெலாங்கலந்துகண்கவற்றுமாதலால்
விண்டுமாலைமாதராரின்மேவுநீரகானமே. (உகஅ)

தண்ணிலாவிரிந்தமுல்லைதாறுசோர்தளிர்மிடைந்
தெண்ணிலாயசாயலம்மிடாமலர்ப்பிறங்கன்மேற்
பண்ணிலாயவண்டுபாடுபாங்கரோடுபாங்கணிந்து
வெண்ணிலாவிரிந்தவெல்லைபோலுமிங்கொர்பாலெலாம். ()

தேனவாவிமூசுகின்றதேம்பிறழ்பூதாங்கலந்து
கானநாவல்கொம்பினிற்கனிந்துகாலசைந்தவற்
றேனைமாடுவண்டிருந்திருண்டகானமிங்கிதற்
கூனமாயிருட்பிழம்புறங்குகின்றதொக்குமே. (உஉ0)

வாயிதழ்த்திறங்கொளக்கனிந்ததொண்டைவந்தொசிந்து
தூயிதழ்த்துணர்துதைந்துதோன்றுகின்றதோன்றியின்
பாயிதழ்ப்பரப்பின்மேலரத்தகோபமூர்ந்தயற்
சேயிதழ்ப்பொலிந்தகாடுசெக்கர்வானமொக்குமே. (உஉக)

ஆடிணர்க்கொடிப்படரகிற்பொதும்பயற்பொலிந்த
கூடிணர்க்குழாநிலைக்கொழுமலர்க்குமிழ்மிசைக்
கோடிணர்க்குலைக்கொசிந்த கொன்றைவிண்டதாதுசோர்ந்
தோடிணர்ச்சுடர்ப்பொனுக்ககானமொக்குமிங்கெலாம். ()

பார்மகிழ்ந்தபைஞ்சுருட்பயிர்மிசைப்பயின்றெழுந்
தேர்கலந்துபாசிலைப்பரப்பினூடிரைத்தரோ
கார்மகிழ்ந்தகார்மயிற்கலாபமொய்த்தகானகம்
நீர்மகிழ்ந்தநீர்க்கடனிரந்தரதொக்குநீரதே. (உஉ௩)

ஏறுகொண்டகோவலரேந்துதண்ணவக்குரன்
மாறுகொண்டகோடியர்மணிமுழாமுழங்கலிற்
ஆறுகொண்டதோகைமஞ்ஞைபாடல்கண்டுகண்மகிழ்ந்து
சாறுகொணடுமான்கணந்தயங்குநீரசாரெலாம். (உஉச)

கார்மணந்தகானயாறுகல்லலைத்திழிந்தொலிக்கு
நீர்மணந்தநீள்கரைநிரைத்தெழுந்தகாணல்சூழ்
வார்மணற்பிறங்கன்மாலைவல்லிவிண்டதாதணிந்து
தார்மணந்தவாரமார்பயாகசாலைபோலுமே. (உஉரு)

கறவைகன்றுவாய்மிகுத்தவமிழ்தினோடுகண்ணகன்
புறவின்மாமரைம்முலைப்பொழிந்தபாறெகிழ்ந்தெழப்
பறவையுண்டுபாடவும்பால்பரந்தபூமிகின்
னறவுவிண்டநாகுமுல்லைவாய்திறந்துநக்கவே. (உஉசு)

வேரல்வேலிமால்வரைக்கவானின்வேய்விலங்கலிற்
சாரன்மேகநீர்முதிர்ந்துதண்டளிதுளித்தலான்
மூரல்வாயசும்பருதமுல்லைவிள்ளுமெல்லைபோய்
நீரவாளைபூவின்வைகுநீள்பரப்புநண்ணினர். (உஉஎ)

வேறு. மருதம்

புதுநாண்மலர்விண்டுபொழிந்திழியும்
மதுநாறுபுனன்மருதத்தினைமற்
றிதுகாணெனவின்னனசொல்லினனே
விதுமான்மிகுசோதிவிளங்கொளியான். (உஉஅ)

அயலோதமிரட்டவலம்பொலிநீர்
வயலோதமயங்கமயங்கவதிர்ந்
தியலோதையிளஞ்சிறையன்னமெழக்
கயலோடியொளிப்பனகாண்கழலோய். (உஉகூ)

வளவாசநிலப்பலவின்சுளையு
மிளவாழையினின்னெழிலங்கனியுங்
களமாங்கனியின்றிரளுங்கலவிக்
குளமாயினயோசனைகொண்டனவே. (உ௩0)

வனமாவினிருங்கனியுண்டுமதர்த்
தினவாளையினாத்தெழுகின்றனகாண்
கனவாழைமடற்கடிவன்மறையப்
புனமாணரமந்திபுலம்புவகாண். (உ௩க)

வளமாகிலைமேதிமருப்பினிட
விளவாழைநுதிக்கமழ்தேனொழுகிக்
குளமார்குளிர்தாமரைகொண்டநகைத்
தளவாயுகுகின்றனகாண்டகவோய். (உ௯உ)

இவைசெங்நெலிடைக்கருநீலவன
மவையங்நெலிடைக்கழுநீரழுவ
முவையொண்டுறைவிண்டொளிவிம்முநகுந்
நவைவென்றனதாமரைநாண்மலரே. (உ௯௩)

கழையாடுகரும்பினறைக்கடிகைப்
பொழிசாறடுவெம்புகைபொங்கியயற்
றழையோடுயர்சோலைகடாம்விரவி
மழையாடுமலைத்தடமொத்துளவே. (உ௯௪)

கருநீலமணிந்தகதுப்பினயற்
கருநீலமணிந்தனகண்ணிணைகள்
கருநீலமணிக்கதிர்கட்டியெனக்
கருநீலமணிந்தகருங்குழலே. (உ௯௫)

வளர்செங்கிடையின்னெழில்வைத்தநுதல்
வளர்செங்கிடையின்னொளிவவ்வியவாய்
வளர்செங்கிடையின்விளையாடும்வயல்
வளர்செங்கிடைமாமலர்மல்குசிகை. (உ௯௬)

வயலாம்பனெறித்தவகைத்தழையள்
வயலாம்பன்மலைத்தவடிச்சவியள்
வயலாம்பன்மலிந்தபரப்பிடையள்
வயலாம்பன்மலர்த்தொகைமாலையினள். (உ௯௭)

வளர்தாமரையல்லிமலர்த்தியகை
வளர்தாமரையல்லிமயக்குமொளி
வளர்தாமரையல்லிமகிழ்ந்தனபோல்
வளர்தாமரையல்லிவனத்திடையாள். (உ௯௮)

நளிர்வார்கழலாய்புகழ்நாடிநயந்
தொளிர்வார்குழலாளொருமாதவருள்
ளூளர்வார்கனியும்மதுவுந்தெகிழக் 226
கிளர்பார்வையுறக்கிளர்கின்றதுகேள். (உ௩௯)

மதிகாணகிமிர்ந்தமதிற்சிகர
நுதிமாளிகைமேலநுடங்குகொடி
கதிரோனொளிமாழ்கவெழுந்துகலந்
ததுகாணமதாரொளிமாநகரே. (உ௪௦)

அறவேதியராகுதியம்புகையா
றுறவேதிகைவிம்மியவொண்புறவ
கிறவேதிகைமீதுகிமிர்ந்தபொழிற்
புறவேதிகையேறுவகாண்புகழோய். (உ௪௧)

வேறு.

இன்னனவிளையவற்கியம்புமெல்லையுட்
பொன்னகரடைந்தனர்பொழுதுஞ்சென்றது
நன்னகரிரைத்தநரன்றவின்னிய
மன்னவகுமாரரும்வறுமைநீங்கினர். (உ௪௨)

இளங்களிக்குஞ்சரமிரட்டித்தாயிரந்
துளங்கொளிக்கலினமாத்தூளியெல்லைய
வளங்கெழுகுமரரைவலங்கொண்டெய்தின
வளந்தறிந்திலமகன்படையினெல்லையே. (உ௪௩)

துன்னியதுணரிளந்தோன்றிமென்கொடி
மன்னியவனத்திடைமலர்ந்துநீண்டபோற்
கன்னியர்கைவிளக்கேந்தக்காவலன்
பொன்னியல்வளநகர்பொலியத்தோன்றினர். (உ௪௪)

காவியங்கருங்கணார்கமழவூட்டிய
வாவியங்கொழும்புகைதழுவியாய்மலர்க்
கோவையங்குழிலைமாடம்யாவையும்
பாவியபனிவரைப்படிவங்கொண்டவே. (உ௪௫)

பல்லிகைபனங்கமழ்மதுப்பெய்மாலையு
முல்லையம்பிணையலுமொய்த்தபூண்கடை
யெல்லியங்கிளம்பிறைக்கதிர்கள்வீழ்ந்தன
தொல்லையங்கடிநகர் துயில்வபோன்றவே. (உசகூ)

செம்பொன்மாமணிநகர்ச்செல்வவீதியுட்
கொம்பனாரடிதொழக்கோயிலெய்தலு
நம்பிமார்வருகெனநாறுநீரொளி
யம்பொன்மாமணிமுடியரசனேயினன். (உசஎ)

அருளுவதென்கொலென்றஞ்சிவெஞ்சுட
ரிருளுகவெழுந்ததொத்திருந்தகோனடிச்
சுருளுறுகுஞ்சிகடுதையத்தாழ்ந்தனர்
மருளுறுமனத்தினன்மன்னனுயினன். (உசஅ)

திருவரையனையதோட்சிறுவர்தம்மையக்
கருவரையனையவெங்களிநல்யானையா
னிருவரும்வருகெனவிரண்டுதோளினு
மொருவரையகலத்தினெடுங்கப்புல்லினன். (உசகூ)

மானவாமதகளிற்றுழவன்மக்கடந்
தேனவாஞ்செழுமலர்செறிந்தகுஞ்சியுட்
கானமாமலர்த்துகள்கழுமிவீழ்ந்தன
வானவாந்தடக்கையான்மகிழ்ந்துநோக்கினன். (உருo)

என்னைநும்மீரலர்க்குஞ்சிதம்முளித்
துன்னியவனத்துகடுதைந்தவாறென
மன்னவனருளலுமகரவார்குழை
மின்னிவர்மணிக்கழல்விசயன்செப்பினன். (உருக)

போற்றிநம்புறணிசூழ்காடுபாழ்செய்வான்
சீற்றமிக்குடையதோர்சீயஞ்சேர்ந்தது
வேற்றுவன்றமர்கள்வந்துரைப்பவெம்பியிவ்
வாற்றல்சாலடியன்சென்றதனைநீக்கினன். (உருஉ)

யானுமங்கிவனெடுமடிகளேகினன்
வானுயரிமகிரிமருங்கிலென்றுபூந்
தேனுயரலங்கலான்சிறுவன்சொல்லலுந்
தானுயிர்தளிர்ப்பதோர்சவியனாயினான். (உருங)

வேறு.

சுடரொளிமிகுசோதிசூழ்கழற்காளைமார்த
மட்டொளிமுடிமன்னனேவலானுய்பொன்னகத்
தொடரொளிசுடர்ஞாயிற்குளிகைசூழ்நெற்றிப்
படரொளிநெடுவாயிற்பள்ளியம்பலங்கள்சேர்ந்தார். (உருச)

சீயவதைச்சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம் - அஉசு.

எட்டாவது

கல்யாணச் சருக்கம்.

செங்கண்மால்சிங்கம்வென்றுசெழுமலர்த்திலதக்கண்ணித்
திங்கண்மாவண்ணனோடுந்திருநகர்பெயர்ந்தபின்னை
யங்கண்மாற்குரியநங்கையரும்பெறலவட்குத்தாதை
வெங்கண்மால்களிறன்னான்றன்றிறமினிவிளம்பலுற்றேன். ()

உற்றவான்குழவித்திங்களொளிமுழையகட்டுப்போந்து
முற்றுவான்முளைத்தபோலுமெயிறுடைமூரிச்சிங்க
மற்றம்மாலழித்ததெல்லாம்வானமாருகச்சென்ற
வொற்றனாலுணர்ந்துவேந்தனுவகையங்கடலுளாழ்ந்தான். ()

கரியவாய்விலங்கிநீண்டுகளிக்கயலிரண்டுதம்முட்
பொரியபோகின்றபோலும்பொங்கரித்தடங்கட்பேதைக்
குரியமாலவற்குச்சென்றுகொடுப்பனென்றுலகங்காக்கும்
பெரியவன்றமரோடெண்ணிக்கடிவினைபெருக்கலுற்றான். ()

கிளரொளிமாடக்கோயிற்கின்னரர்கெழுவலோவா
வளரொளிவயங்குதோன்றல்வருத்தமானத்துமன்ன
னுளரொளியுமிழும்பூணன்பிரீதிவர்த்தனனென்றேறுந்
தளிரொளிதயங்குமேனித்தாமரைச்செங்கணானே. (௪)

மண்ணலங்கனியுஞ்சாதிமணிமுழாவதிருமாடக்
கண்ணலங்கனியுந்தோன்றல்கந்தர்வகரங்காப்பான்
விண்ணலங்கனியுஞ் * சீர்த்திவிருகவெல்கடிகொள்பேரான்
பெண்ணலங்கனியுநீர்மைபெருகியவுருவத்தோளான். (௫)

பூமருபொலங்கொள்சோலைப்பொன்னணிபுரிசைவேலிக்
காமருகபாடவாயிற்கந்தமாதனத்தைக்காப்பான்
றேமருதிலதக்கண்ணித்திவாகரதேவனென்பான்
றாமரைதயங்குசோதித்தாரணிதுரகத்தேரான். (௬)

சுந்தரப்பொடியும்பூவுஞ்சுரும்பொடுதுதைந்துவீசிச்
சுந்திரன்றவழுமாடச்சக்கிரவாளமன்னன்
மந்தரமலைக்கும்யானைவச்சிரதாடனென்பா
னந்தரத்தமரர்கோமானணிந்துபோந்தனையசீரான். (௭)

காரணங்குருவமேகங்கருவுகொண்டதிர்ந்துவெய்யோன்
றேரணங்குறுக்குமாடத்தேவரவணத்துச்செல்வ
னேரணங்குறுக்கும்பைந்தாரிரமியதரனென்றெங்குஞ்
சீரணங்குறுக்குஞ்செய்கைச்செஞ்சுடர்த்திலகப்பூணன். (௮)

கண்ணிலாங்கனகமாடக்கதலிகைமுகிலோடாடி
விண்ணிலாவிருண்டுதோன்றும்விசயகூடத்துமன்னன்
வெண்ணிலாவிரிந்தபூணன்வேகமாரதனீன்றுநீர்
மண்ணெலாம்வணங்கநின்றமழகளிற்றரசோடொப்பான். (௯)

மென்னரம்பனுக்குந்தீஞ்சொன்மெல்லியலார்தம்பாடல்
கின்னரம்பிணிக்குஞ்செய்கைக்கிருதமாதனத்தைக்காப்பா
கைநவின்றிலங்குஞ்செவ்வேற்காவலன் † கருடன்சேர்த[ன்
மெய்நவின்றிலங்குஞ்செம்பொனங்கதன்விளைத்தபேரான். ( )

---

* விருககடி. † கருடாங்கதன்.

ஓங்குநீர்ப்புரிசைவேலியொண்டுறைக்குவளைவேய்ந்த
தூங்குநீருடுத்தபாங்கிற்சோபனமுடையதோன்ற
றேங்குநீர்க்கடலர்தானைச்சித்திரதரனிவ்வையக்
தாங்குநீரொளியோடொன்றித்தண்ணளிதயங்கநின்றான். ()

என்றிவரெண்மர்தம்மையிரதநூபுரத்துளானு
நின்றநீர்காமினென்றுநிறீஇயபின்னீதிமன்ன
னென்றியவுலகமெல்லாமொருங்குடன்விழுங்கலுற்றுச் [ன்.
சென்றுயர்கடலோடொக்குஞ்சேனைபண்ணமைக்கவென்று

வெண்ணிலாக்குழவித்திங்கண்மேகத்துப்பதித்தபோலு, மொண்ணிலா வுருவக்கோட்ட வோடைமால்களிற்றின் மேலோர், பண்ணெலாமணிந்துதோன்றப்பருமித்துக்கருவியேற்றிக், கண்ணிலாம்பதாகைசேர்த்திக்காழகில்கமழவிட்டார்.

கட்டியகம்மச்செய்கைக்கதிர்மணிக்கனகச்சூலம்
பட்டமொடிலங்கப்பண்ணிப்பக்கரைபதைப்பயாத்து
மட்டவிழலங்கல்வீரர்சேர்தலும்வலத்துமுன்னுற்
கொட்டியகுரத்தவாலித்தெழுந்தனகுதிரைச்சேனை. (கச)

மணித்தொழில்வளைந்தகூட்டின்மருப்பறுத்தியற்றப்பட்ட
வணித்தொழிலாரக்கோவையாடகக்கொடிஞ்சியம்பொன்
றுணித்திடைபதித்ததட்டிற்சுடர்மணித்துரகத்திண்டேர்
கணித்தளப்பரியநீரகல்லெனக்கலந்தவன்றே. (கரு)

ஒட்டியகலிங்கர்தாண்மேற்றிரைத்துடுத்துருவக்கோடிப்
பட்டிகைபதைப்பயாத்துப்பரட்டையநாலவீக்கிக்
கட்டியகழலர்தாரர்கதிரொடுகனலும்வாளர்
மட்டியரலங்கல்சூடிமறங்கிளர்மள்ளர்சூழ்ந்தார். (கசு)

இன்னிசையமரர்பேர்கொண்டியன்றமாநகரங்காக்கும்
பொன்னவில்கடகப்பைம்பூட்புரந்தரனனையமாவ்பின்
மன்னவற்கிளையவேந்தன்வயங் * கெரிப்பெயர்கொடோான்
கன்னியைக்காக்குநீர்மைக்கடற்படைபரப்பிச்சென்றான். ()

---

* சுலனரதன்; சுலனன், அக்கினி.

அங்கலமலர்ந்தசோன்றலரிபுரத்தவர்கள்கோமான்
பொங்கலரணிந்தபைந்தார்ப் * புலிப்பெயர்ப்பொலங்கொடோ
மங்கலக்களிற்றினுன்றன்மருமகன்மகரமுந்நீர்த் [ரான்
தங்கொலிமிகுத்ததானையொடுகதிரெறிப்பச்சார்ந்தான். (கஅ)

வாரணிமுரசமார்ப்பவரிவளைவயிரொடேங்கத்
தாரணிமறவர்சூழத்தமனியக்கலங்கடாங்கி
யாரணியுருவத்திண்டேரானைமேலருக்கீர்த்தி
நீரணிகடலந்தானைநிலநெளிபரப்பநின்றான். (கக)

சேனைபண்ணமைத்துச்சென்றுதிருக்கடைசெறிந்தபோழ்தி
னானையுள்படனர்மாண்பிற்றாரவர்தொழுதுகூற [ற்
† வேனவிற்றடக்கைவேந்தன்விண்ணியல்விமானமொன்று
வானவில்லுமிழ்ந்துமின்னமனத்தினுனிருமித்திட்டான். ()

மற்றதன்வடிவுகேட்பின்மரகதமணிக்கறன்மேற்
பெற்றதன்னிலையிற்றாகிப்பெருகியவளமைதோன்றிச்
சுற்றியபசும்பொற்சோதிசொரிந்துபோய்த்துறக்கங்காண
முற்றியமுகட்டுநீலக்குவட்டிடைமுடிந்ததன்றே. (உக)

பாரித்தபவழத்திண்காற்பளிங்குபோழ்பலகைதன்மேற்
பூரித்தசுடரின்செம்பொற்போதிகைப்புடங்கடோறு [மு
மூரித்தண்சுடர்வெண்முத்தின்பருஉத்திரண்முயங்கினான்
வேரித்தண்டுவலைகாலமாலைகள்விசித்தவன்றே. (உஉ)

தடுத்துவில்லுமிழுஞ்செம்பொற்றண்டிகைதிரள்கடாங்க
மடுத்தனவயிரத்தம்பமாடநீண்மதலைதோறுந்
தொடுத்தனசுரும்புபாயுந்துணரணிதயங்குமாலை
யடுத்தனநிறத்தவாகவழுத்தினமணிகளெல்லாம். (உ௩)

ஊன்றியமகரப்பேழ்வாயொளிமுகந்தெளிப்பவீழ்ந்து
நான்றனமணிசெய்தாமநகைமுகநிறைந்தசோதி
கான்றனகனகசாலங்கலந்தன ‡ கங்கணீகந்
தோன்றினபதாகைசூழ்ந்துசுடர்ந்தனசூலநாயில். (உச)

* வியாக்கிரரதன். † வேனம், அழகு.
‡ கங்கணீகம், கங்கையலை.

அஞ்சிறைப்பறவைச்சோதியாலிப்பவணிந்துமேலால்
விஞ்சையர்மிதுனத்தேவர்விண்ணியங்குருவமெல்லாஞ்
செஞ்சுடரெறிப்பச்சேர்ந்துசெங்கதிர்ப்பரவைசிந்தி
வெஞ்சுடர்விலங்கநீண்டுவிண்ணிடைவிரிந்ததன்றே. (உரு)

வாரணிபசும்பொன்வாழைமரகதக்கமுகொடோங்கித்
தோரணத்தூண்கடோறுஞ்சுடர்மணிசிலம்பநான்று
நீரணிகிழல்கொண்முத்தமணன்மிசைநிரந்துதோன்றிப்
பூரணக்குடங்கள்செம்பொற்கொழுங்கதிர்புதைந்தகீழால். ()

கொழுந்திரள்வயிரக்கோடிக் கூர்முளைசெறித்துச்செம்பொ
செழுந்திரட் * புடகஞ்சேர்ந்ததிருவளர்கபாடவாயிற் [ற்
பொழிந்ததண்சுடரவாகிப்பொலந்தொடர்புலம்பத்தூங்கி
யெழுந்தொலிசிலம்பவிம்மியிணர்கொண்டமணிகளெல்லாம்.

பாய்கதிர்ப்பளிங்கிற்கோத்துப்பருமணிவயிரஞ்சூழ்ந்த
வாய்கதிர்ச்சாலவாயிலகிலயாவுயிர்த்தவாவி
மாயிருவிசும்பின்மான்றுமழைதவழ்குன்றம்போலச்
சேயவர்க்குருவங்காட்டித்தேகிறைகொண்டவன்றே. (உஅ)

செம்பொனங்களியிற்செய்துசித்திரந்தெளிப்பத்தீட்டி
வம்பவெண்முத்தஞ்சாந்தின்மட்டித்துமணிகளெல்லா
நம்பியவொளியவாகத்தெளித்துநன்கெழுதப்பட்டுத்
தம்புலந்தெரிந்துதோன்றுந்தட்டத்தினதலங்களெல்லாம். ()

பாடகமிலங்கச்செங்கேழ்ச்சிறடிப்பரவையல்கு
ஞடகமகளிராடுநாடகவரங்குநன்பொன்
மாடகந்தெளிப்பவேய்ந்தமண்டபத்தலமும்வண்ண
வாடகமணிந்தகூடகிலைகளுமயலவெல்லாம். (௩௰)

மரகதமணிகளீன்றகதிரெனுந்தளிர்கள்வார்ந்து
சொரிகதிர்வயிரங்கான்றசுடரெனுங்கொழுந்துதோன்றிப்
புரிகதிர்முத்தமென்னும்புதுநகையரும்புபம்பி
விரிகதிர்ச்செம்பொன்பூத்துவிண்ணணங்குறுப்பவீங்கி. (௩க)

* புடகம், தாமரை.

கதிர்நகைக்கனபொற்சோதிக்கனகசாலங்களென்னு
மதுநகப்பருதிமான்றமணிவண்டுமயங்கிவானோர்
விதிநகுவிமானமென்னுங்கற்பகம்விரிந்தபோழ்திற்
பதிநகர்க்கிறைவன்பாவைசயம்பவைவருகவென்றான். (௩உ)

வேறு.

இன்னதருண்மன்னவனதென்றுகடைகாக்குங்
கன்னியருணர்த்தலினிணர்க்கொடிகடுப்பாள்
பன்னியபளிக்கறையொர்பஞ்சணையின்மேலாண்
மன்னுமணிமாடமிசைமஞ்ஞையினிழிந்தாள். (௩௩)

மாகமலையன்னமணிமாடநிலையுள்ளாற்
போகமிகுபூந்தவிசின்மீதுபுதைவுற்ற
வாகைவனமாலைபுனைமன்னன்மகள்செல்வாண்
மேகபடலத்திடைமினற்கொடியொடொத்தாள். (௩௪)

அங்கையினயிற்படையராணுடையர்பூணர்
கொங்கைவளராதகுழலார்கள்புடைகாப்பப்
பங்கயமுகத்தவர்பலாண்டுபலகூறி
நங்கையடிபோற்றியெனநங்கைநடைகற்றாள். (௩௫)

காவன்மிகுகன்னிநகர்கன்னியர்கள்காக்கும்
வாவியகிஞறுமணிவாயிலவைநீங்கி
நாவிகமழ்கொம்பனையநங்கைநகைவேலான்
றேவியமர்கோயிலதுசெவ்வனமடைந்தாள். (௩௬)

மௌவன்மலர்வேய்ந்துமதுநாறுமணியைம்பாற்
கொவ்வைதுயில்கொண்டதுவர்வாய்க்கொடியொடொப்பா
டெய்வமணநாறுதிருமேனிபுறங்காக்கு
மவ்வையரொடெய்திமுதலவ்வையடிசேர்ந்தாள். (௩௭)

வணங்கியகனங்குழையைவாங்கிமுலைநோவக்
குணங்கெழுகுலத்தலைவிகொண்டுமிசைபுல்லி
மணங்கமழ்குழற்சிகையுள்வண்டிரியமோந்தாங்
கணங்கினையாளுவகையாழ்கடலுளாழ்ந்தாள். (௩௮)

செம்பொனணிசீரியனசேரினிடைநோமென்
றம்பொனணிநொய்யனவணிந்தலர்மிலேச்சி
வம்பினணிவாட்கணிடைமைபிறழவைத்துக்
கொம்பினனையாள்குளிருமாறுகுயில்வித்தாள். (௩௯)

அன்னவகைத்தவியர்களோடமருமெல்லை
முன்னுமுகவோரையொடுமூர்த்தநலநோக்கி
மன்னுபுலவோர்கள்சொலமன்னன்மகடன்னை
யின்னகைவிமானதலமேறுகினிதென்றான். (௪0)

தொண்டைதொலைவித்ததுவர்வாய்மகளிர்சூழக்
கண்டுவளர்தாயரொடுகஞ்சுகியர்காப்ப
விண்டுவளர்சோதிகொள்விமானமதுசேர்வாள்
வண்டுவளர்கற்பமுறைவான்மகளொடொத்தாள். (௪௧)

முன்னிமுடிவித்தமிகுவிஞ்சையின்முதிர்ந்தா
ரன்னநடையாட்கடிமையார்வமொடடைந்தார்
பின்னிவிடுகூந்தலர்பிடித்தவயில்வாளர்
கன்னியரிராயிரவர்கன்னிபுடைகாத்தார். (௪௨)

அஞ்சுடர்மணிக்குழவியாடுகழன்மாடம்
பஞ்சுடையபந்துகிளிபாவையொடுபூவை
மஞ்சுடையமின்னினனையாண்மகிழுநீர
செஞ்சுடர்விமானமதுசேர்ந்தனசெறிந்தே. (௪௩)

கற்பகமலர்ப்பிணையல்சேர்ந்துகமழ்கின்ற
பொற்பமைசெங்கோடிகமொடாடைபுதைவுற்ற
நற்புடையபேழைநறுஞ்சாந்துநனிபெய்த
செப்பொடுகடப்பகமடுத்தனசெறிந்தே. (௪௪)

பெருங்கலநிறைந்தமிகுபெட்டகமொடெல்லா
வருங்கலமுமார்ந்தவறையாயினபிறைய்பொன்
னெருங்கொளிநிறைந்தமிகுசோதிநிழல்சூழப்
பொருங்கலிவிமானமதுபோந்ததுபெயர்ந்தே. (௪௫)

வே று.

முரசமார்த்தனமுரன்றனமுரிவளைமுகிலிடைவயிரேங்க,
வரியொட்டாகுளியாலித்தவதிர்ந்தனவணிமுழவருகெல்லாம்,
விரைசென்மாவொடுவிரவினகளிறுகண்மிடைந்தனகடுமான்
றேர்,புரைசையானையினொருத்திடையரசனும்புகழொடுபொ
லிவுற்றான். (சசு)

சிகரயானையின் கவிழ்மணிசிலம்பின சிலம்பினபணிலங்க
ளா, முகரவாயினபணவங்கண்முரன்றனமுரன்றனமுகிலெ
ல்லா, மகரமால்கடல்வரைமிசையெழுந்தெனவெழுந்ததுப
டைமாற்ற, நகரவாயிலின்புறம்பணைநடுங்கினநடுங்கினகொடி
யெல்லாம். (சஎ)

ஒளிறுவாட்படையுளர்ந்ததுகிளர்ந்தன ருழைக்கலவுழை
யோர்கள், களிறுகாத்திரமுறுத்தலினெறித்தலைகருமுகினெ
ரிவுற்ற, குளிறுமின்னியங்குழுமலிற்செழுமலைக்கொடுமுடியு
டனுர்த்த, வெளிறில்கேள்வியான்பெரும்படைவிசும்பிடைநி
ரந்தொளிவிரிந்தன்றே. (சஅ)

அமிதமாகியபெரும்படையகன்கடலகல்விசும்பழகெய்த
வமிதமாகியபெருவரைநிமிர்சிகையதனயலமர்ந்தேக
வமிதமாகியநிலைத்தலைமலையணியருவிகளவையெல்லா [ள்.
*மமிதமாபவைசயம்பவைக்கடிதொழுதவையவையறிவித்தா

நங்கைகாணிதுநம்மலைக்கும்பரப்பொன்மலைப்புடைவீழு
ங், கங்கையாறிதன்கரையனகற்பகக்காவுகளிவைகண்டா,யி
ங்குநாமிருவிசும்பிடையியங்கலிற்சிறியவொத்துளவேனு,மங்
கணூர்க்குநம்முலகினையளப்பவொத்துளவவையறியுங்கால்.

இரைக்குமஞ்சிறைப்பறவைகளெனப்பெயரினவண்டுபு
டைசூழ, நுரைக்களென்னுமக்குழம்புகொண்டெதிர்ந்தெழ
நுடங்கியவிலையத்தாற், றிரைக்கரங்களிற்செழுமலைச்சந்தன
த்திரள்களைக்கரைமேல்வைத், தரைக்குமற்றிதுகுணகடற்றி
ரையொடும்பொருதலதவியாதே. (ருக)

---

* அமிர்தப்பிரபை.

மூந்துமற்றிதன்முதன்மலைப்பிறந்துகம்மலையதுமுழைப்பேருஞ், சிந்துவென்பதுவலத்ததுசெழுங்கலஞ்சிதர்கின்றதிகழ்யாறு, நுந்துபொன்னொளித்திரையெனுங்கரதலப்புடங்களினுரையென்னும், பந்துபொங்கநின்றடித்திடத்திளைப்பதொத்துளததுபகருங்கால். (ருஉ)

உய்யருஞ்சந்தனப்பொழிலலைத்தொளிர்மணிக்கலங்களையுமிழ்ந்திட்டுப், பெயருந்தெண்டிரைப்பிறங்கலுட்பிணங்கியபெருவரையகிறேக்கி, வயிரவேதிகைமலைவதுகோபுரவாய்தவின்படிதீண்டி, யயிரைவார்கரைக்குடகடற்றிரையொடும்பொருதலதவியாதே. (ருங)

தேனெய்பாலொடுகலந்தனசின்மொழிச்சிறுநுதற்றிருவேநஞ், சேனைமாமுகிற்படலங்கண்மிசைச்செலச்சினைமுகில்முரலக்கேட், டேனையானைகளிணையெனவிருந்திடவிருங்கைம்மாவினங்காக்குங், கானயானைகள்கருவரையனையனகனல்வனவிவைகாணாய். (ருச)

பேய்மயானங்கொண்டிருந்தன்னபெருவரைநெரிதரத்திரைசிந்தித், தீமையானைகள்செவிபுகுசெறிகடாந்திளைத்தலிற்றிசைநாறிப், போய்மயானங்கொண்டிழிதரும்பெருந்திசைப்புடையனபுனல்யாறு, சேய்மையானமக்கொளிர்முத்தின்பருவடந்தெளிப்பவொத்துளபாவாய். (ருரு)

கருவிவானத்தினகடுதொட்டனவெனநிலத்திடைகவின்செய்ய, மருவிநங்கட்குமணிவட்டுச்சிதர்ப்பவொத்துளசிலமலையெல்லா, மருவிவெண்டிரைசொரிகின்றவருவரைக்குவடுகளவைமுன்னூற், பாவைவெண்கொடியெடுத்துநம்படைக்கெதிரெழுவதொத்துளபாவாய். (ருசா)

அலங்கல்வார்குழலமிர்தன்னசின்மொழியரிவைநம்மருங்கெல்லாம், விலங்கல்போல்வனவெண்மருப்பிரட்டையவேழங்கள்விளையாடி, யிலங்குமால்வரையிருவரைத்தடங்குத்தியிடந்திடவிருபாலுங், கலங்கொள்பேழைகள்கவிழ்ந்தெனக்கதிர்மணிசொரிகின்றவவைகாணாய். (ருஎ)

அங்கண்மால்வரையருவிதந்தடக்கையிற்புடைத்துவின்ற
மர்த்தாடிப், பைங்கட்செம்முகப்பரூஉக்கையம்பகடுதம்பாற்
பிடிக்கணஞ்சூழச், செங்கற்றூளிதஞ்செவிப்புறத்தெறித்தவி
ற்சிகரங்களிடையெல்லாம், பொங்கிக்குங்குமப்பொடியொத்
துப்பொலிகின்றபொலங்கொடிபுடைநோக்காய். (ருஅ)

துளங்குவார்குழைத்துவரிதழ்த்துடியிடைச்சுடர்நுதற்
சுரிகோதாய், விளங்குவெங்கதிர்விலங்கியவிசும்பிடையியங்
குதல்புலன்கொள்ளார், பளிங்கினொள்ளறைப்பரப்பிடைப்
பாய்வித்தபருமணிநெடுமான்றேர், வளங்கொணம்படைக்க
டலிடைமறித்தவைசுழல்கின்றவலைகநோக்காய். (ருகூ)

எடுத்தமாருதமெறிதலினெகிழ்ந்தனசிகழிகையிணரோடு
ந், தொடுத்தமாலைகள் துணர்கொளப்புனைவன துகிலிடைபு
டைசோர, வுடுத்தகாஞ்சியினொளிமணிக்கதிர்நகைப்பட்டங்
களுடையாக, வடுத்துவீழுமொரணியிழையிளையவள்படுகின்
றதுகாணாய். (சுo)

மல்குமும்மத மழகளிறுழக்கலின் மயங்கியமழைமேகம்,
பில்குநுண்டுழியுறைத்தலிற் பனித்தநம் பெரும்படைமடவா
ர்க, ணல்குகாதலரகலத்துளொடுங்குதல் பலர்முன்னைநனி
நாணி, மெல்குபூந்துகில்விரித்தவாவருகின்றவிநலைகண்மிக
னோக்காய். (சுக)

இலையநாடகத்தெழில்கெழுவிமானமஃதியல்கின்றவிசை
தன்னான், மலையினம்மொடுவருவவொத்துளவவைவரவிலம
டனோக்கி, யுலைவில்வையகத்தொளிசெய்யும்பகலவனுறுசுடர்
சொரிகின்ற, வலையங்கையலவருவதுமற்றிதன்சலத்துவலி
கண்டாய். (சுஉ)

இன்னபோல்வனவிளையவட்குழையவளினியனபலகாட்
டிப், பன்னுமாயிடைப்பழனங்கள்வளாவியபடுகலிக்கெடிநீ
த்தந், துன்னுநீர்வயற் சுரமியத்தகணியுட்சுடரணிநகர்சார்ந்
து, தென்னென்றேனிமிர்திருநிலையகமெனுஞ் செறிபொழில
துசேர்ந்தார். (சுங)

வே று.

மோடுவிட்டலர்மொய்மலர்க்காவினுட்
பாடிவிட்டதுபாவைதன்கோன்படை
கூடிவிட்டிளையாரனகோதைமேன்
மூடிவிட்டமர்தேன்முரிவித்தவே. (௬௪)

ஆர்ந்தவெங்களியானைக்கவுட்புடை
வார்ந்துவீழ்மதமூசியவண்டினஞ்
சோர்ந்துவீங்கெருத்திற்றொடர்கண்ணிடைப்
பேர்ந்துவீழ்வனபோலப்பிறழ்ந்தவே. (௬௫)

பூந்திகின்றிமிர்தேன்முரன்றாக்கிய
மந்தவின்னிசைவாங்கவனத்திடைச்
சந்தனத்தடந்தாளொடுசார்ந்தன
கந்தினைக்கனலுங்களியானையே. (௬௬)

குங்குமக்குளிர்பூஞெரிதூளிமேற்
பொங்குளைக்கலிமாக்கள்புரண்டுவிற்
றங்கொளிப்பலகைத்தலம்பாவிய
மங்கலப்பெரும்பந்தியின்வந்தவே. (௬௭)

பட்டமார்நெடுந்தேர்பைம்பொனுன்மிடை
கொட்டில்சேர்ந்தனகோனுறைகோயிலும்
வட்டமாகவகுத்தனர்வானுல
கிட்டமாய்வந்திழிந்ததுபோலுமே. (௬௮)

செம்பொன்மாளிகையும்வயிரத்திரட்
டம்பமுற்றதமனியக்கூடமு
மம்பொன்னாடரங்கும்மகிற்சேக்கையும்
வம்புநீர்மையவாய்வளங்கொண்டவே. (௬௯)

தெள்ளுவெண்பவழத்திரளூன்றிய
வெள்ளிமண்டபமும்விரைநாறுப
பள்ளியம்பலமும்பகற்கோயிலும்
வள்ளனன்னகர்வாய்மலிவுற்றவே. (௭0)

வௌவுநீரென்னவாவியுமாடெலாந்
தெய்வநாறுவதேதங்கொள்செய்குன்றமு
மௌவன்மண்டபமும்மணற்றூழ்வரு
மெவ்வபாலுமிசைந்துளவென்பவே. (எக)

கொற்றவன்கொடிக்கோயிற்புறம்பணை
சுற்றிவிட்டதுசுற்றும்பெரும்படை
மற்றைமன்னரெல்லாம்வனத்தின்புடை
முற்றிமுன்னினர்முத்தணிமாலையார். (எஉ)

கன்னிமூதெயில்சூழ்கடிகாவினுட்
கன்னிதாதைகண்ணார்நகரிஞ்சியுட்
கன்னிமார்பலர்காக்குங்கடையதோர்
கன்னிமாநகர்கன்னிக்கியற்றினர். (எங)

மின்னினார்ந்தவிமானத்தலத்திடைப்
பொன்னனார்பலர்போற்றவிழிந்துதன்
மன்னனாருருளான்மணிமாளிகைக்
கன்னிமாநகரெய்தினள்கன்னியே. (எச)

வேறு.

மற்றவரிருத்தலுமருகிசென்றுபின்
சுற்றுநீர்வளவயற்சுரமைநாடுடைக்
கொற்றவன்கழலடிதொழுதுகூறலும்
வெற்றிவேலவனொளிதுளும்பவீங்கினன். (எரு)

ஏரணிமணிக்கலமணிகயாருமென்
றூரணிவளநகரறைகவோடணை
தோரணந்திசைதொறுஞ்சுடரநாட்டுக
பூரணபொற்குடம்பொலியவைக்கவே. (எசு)

இரவலிருநெதிகவர்கவீண்டியற்
புரவலர்வருகெனப்போகதூதுவர்
திருவலர்சினகரன்செல்வப்பொன்னகர்
விரவலர்மழையொடுவிழவுசெய்கவே. (எஎ)

எரிமணிச்சுடரணியிலங்குநங்கைதன்
றிருமணிக்காவினுட்செல்லுஞ்செய்கையாற்
புரிமணிப்பொலங்குழைப்பொம்மல்வெம்முலைக்
குருமணிக்கொம்பனார்கோலஞ்செய்கவே. (எஅ)

உழைக்கலமகளிரொடுவந்துசெல்வன
புழைக்கையவிளம்பிடிபுகுந்துபண்ணுக
தழற்புகைநவின்றகைத்தானைவீரர்த
மழற்படையொடுபுகுந்தமைககாவலே. (எகூ)

இன்னனவுழையவர்க்கருளியேந்துதோண்
மன்னவன்மருசியைமருளக்கட்டுரைத்
தென்னெடும்பெயர்திரும்பாடிக்கென்றொரு
பொன்னகர்மாளிகைபுகுதன்மேயினான். (அ0)

வேண்டுபவவன்றிறத்தருளிவேந்தர்கோ
னீண்டியமந்திரக்கிழவர்க்கென்னையாங்
காண்டகுதிறலவற்காணுமாறென
வாண்டகைக்கவர்களுமறியச்செப்பினார். (அக)

விண்ணியல்விஞ்சையர்க்கிறைவன்வேந்தரார்
கண்ணியபெருங்குலக்கடலுட்டோன்றினா
னண்ணியதொடர்ச்சியுமிக்கநண்ணுமா
லெண்ணுவவவன்றிறத்திறைவவில்லையே. (அஉ)

குலத்தினுங்குணத்தினுங்கொண்டகோலமா
நலத்தினுநின்னொடுநிகர்க்குநன்மையன்
மலைத்தவில்வயத்தினும்பெரியன்மல்லினு
முலத்தினும்பெருகியவுருவத்தோளினன். (அங)

ஆதலாலவன்றிறத்தியாதுசெய்யினு
மேதமாங்கில்லைகோவிறைவவென்றனர்
கோதிலாக்குணம்புரிகுன்றனார்க்கொரு
நீதிநூற்கடலினின்றனையநீர்மையார். (அச)

வேறு.

ஆங்கவர்மொழியைக்கேட்டேயறிவினுக்கரசரென்று
வாங்கிருங்கடலந்தானை மன்னவன் மகிழ்ந்துமற்றைப்
பூங்குழைமகளிர்காக்கும்பொன்னணிவாயில்போகித்
தேங்கமழலங்கன்மார்பன் றிருநகர்முற்றஞ்சேர்ந்தான். (அ௫)

அடுகடாமாவிநாறுமழிமதங்கருவிவீழத்
தொடுகடாவயிரத்தோட்டியுடையனதொடர்கணூன்ற
விடுகொடாவியாளகிற்பமெல்லவன்பணிகள்செய்யும்
படுகடாக்களிறுங்தேரும்புரவியும்பண்ணுகென்றான். (அசு)

பணித்தசொல்லதனைக்கேட்டேபகைகிலைக்கந்திறோடும்
பிணித்தபொற்றொடர்கண்விட்டுப்பெயர்ந்தகானிகளகீக்கி
மணித்தொடர்மருங்கின்வீழ்த்துவரிபுரிக்கச்சைவீக்கி
யணித்தகைப்பாகர்பண்ணிக்கொடியெடுத்தருகுசேர்ந்தார்.

செம்பொன்செய்கிடுகுகோத்துத் திகிரிவாய்ப்புளகஞ்சேர்த்திப், பைம்பொன்செய்பரவைத்தட்டிற்பருமணிபதித்ததிண்டேர், கம்பஞ்செய்துலகமெல்லாங்கைவளைக்கொள்வபோல, வம்பொன்செய்கொடிஞ்சிநெற்றிகொடியெடுத்தணைந்தவன்றே. (அஅ)

முற்றத்தானெரியுஞ்செம்பொன் முகனணிகருவிசேர்த்திச்
சுற்றுத்தாதணிந்துகாமர்சூழ்மணிக்கோவைசூழ்ந்து
மற்றுத்தாம்வகுக்கற்பாலமங்கலமரபிற்பண்ணிப்
பொற்றத்தார்க்கவரிவேய்ந்துபோந்தனபுரவியெல்லாம். ()

ஒட்டியவூழினன்றியுயிர்கொளலொழிகவென்று
சுட்டினர்சொல்பவாயிற்கூற்றமுந்துளங்குசீரார்
கட்டியகழலர்தாழ்ந்தகச்சையர்கனலும்வாளர்
மட்டியரலங்கல்சூடிவயவரும்வந்துசூழ்ந்தார். (கூ0)

அன்னணந்தானைபண்ணியணைந்தபின்னமைச்சரோடு
மன்னவன்மருங்கினின்றமருசியைவருகவென்று
பொன்னுதல்மேவழமொன்றுபோலங்கலம்புலம்பவேர்தி
முன்னுறகின்றுகாதன்முறுவலோடருளிச்செய்தான். (கூக)

தேங்கமழலங்கன்மார்பன்சித்திரதரனைக்கூவிப்
பாங்கமைபஞ்சும்பட்டுந்துகில்களும்பரப்பிமேலால்
வீங்கியசுடரவாயமிடைமணிக்கலன்கள்விஞ்சை
நீங்கருந்திறலினான்றனெடுநகர்நிறைக்கவென்றான். (கூஉ)

பொன்னணிகலத்தின்குப்பைபுரிமணிக்கோவைப்போர்வை
மன்னியவயிரக்குன்றம்வலம்புரிமணியின்கோவை
பின்னியபவழவல்லிப்பிறங்கலோடனையவெல்லாங்
கொன்னவில்வேலினான்றன்கோயின்முன்குவிக்கவென்றான்.

ஆண்டுறவிரைந்துவேதித்தழிகின்றமதுவின்றண்டோ
டுண்டிகின்றினவண்டார்க்குமின்சுவைநறவின்சாதி
வேண்டுநர்வேண்டுமாறுவிருந்தயர்ந்துயரும்வண்ணந்
தீண்டரும்விஞ்சைவேந்தன்றிருநகர்ச்செறிக்கவென்றான். ()

* தேங்கனிகுழவித்தீர்செம்பழத்திரளின்கண்ணி
பாங்கமைபளிதச்சாதிபாசிலைத்தழையின்கற்றை
தீங்கழைகரும்பின்கட்டிதிரளரைக்கடிகையின்ன [ன்.
தோங்கலந்திலாதசொல்லான்றொன்னகர்ச்சொரிகவென்றா

கண்ணியுங்கமழுஞ்சூட்டுங்கற்றையாக்கட்டப்பட்ட
தண்ணியமலருந்தாமமாலையுஞ்சதங்கைதம்மோ
டெண்ணியவண்ணமாலையெழினகரெல்லையெல்லாம்
விண்ணியல்விமானவீதிவெறிகொளமிடைவிவேலோய். ()

குங்குமக்குழம்புகொட்டிச்சந்தனத்தொளிகண்கூட்டி
யங்கனாழ்விரையின்சேற்றோடகநகரளறுசெய்து
மங்குலாய்விசும்புமூடவகிற்புகைமயங்கமாட்டிப்
பொங்குபொற்சுண்ணம்வீசிமணவினைபுனைவியென்றான். ()

அனையனவவனையேவியரசிளங்குமரர்தம்மைப்
புனைமலர்க்கண்ணிசூடிப்பொன்னெழிலாரந்தாங்கி
நனைகவுள்வேழமேறிநம்மொடுவருகவென்றான்
கனைகுரன்முரசமார்க்குங்கடிபடைக்காலவேலான். (கூஅ)

* காயின்புணர்ச்சியே கனிக்குமாயினது.

திங்களையிரண்டுகூறுச்செய்துமுன்செறித்தபோல
மங்கலவடிவின்வந்தவலனுயர்வயிரக்கோட்டுச்
செங்களிவிதித்தபோலுஞ்செம்பொறிச்சிறுகண்வேழம்
வெங்களிவியாளம்வல்லவிறலதுவருகவென்றான். (கூகூ)

அருளறிந்துழையரோடியரசுவாவருகவென்ன
மருளிவண்டுழலுந்தாரைமழகளிறதனைமேய்ப்பா
னிருளிருங்குன்றமேய்க்குமிரும்பிணரெருத்தமேறி
வெருவருமொழியிற்றேறிமேன்முறைத்தொழிலனானான். ()

அரசுவாவதனோடாடியியலறிந்தணைந்தபாகன்
புரைசைதாணெகிழ்த்துமற்றோர்புதுவடம்புரளவீக்கி
யுரைசெய்காற்சுவடுநுங்கச்செறித்தொன்றுபுறத்ததாகி
நிரைசெய்காணிகளம்விட்டுநிலத்தவரேறுகென்றான். (க0க)

பின்னவனெறித்தூசப்பெருவடம்பிடித்தபின்னைப்
பொன்னவிர்தொடர்கண்விட்டுப்புறத்துக்காற்புரோசைகோ
மன்னவனருளுமாறுமங்கலக்கோலஞ்செய்வான் [த்து
றுன்னருங்கவைமுட்கோலோர்சூழ்ந்துவந்தணைகவென்றான்

கரும்பொடுமுடித்தகாய்நெற்கதிரணிக்கவளக்கற்றை
யிரும்புடைவயிரக்கோட்டினிடையனபயிரினீக்கிச்
சுரும்பொடுமலர்கள்வாய்ந்ததுகளையுமகலவாரி
யரும்புடையலங்கன்மார்பன * ரத்தநீரெறிவித்தானே. ()

குங்குமக்குழம்புகோட்டிச்சந்தனவெள்ளைகொண்டு
மங்கலவயிரக்கோட்டுவலங்கொளவரைந்துமற்றுச்
சங்கினதுருவினாலும்வலம்புரிச்சவியினாலு
மங்கதன்பாகத்தீரத்தருகெலாமணிவித்திட்டான். (க0ச)

பொற்பிரட்கடிகைபூட்டிப்புரிமணியோடைசேர்த்தி
முற்றியபுளகச்சூழிமுகம்புதைத்திலங்கவீழ்த்துச்
சுற்றிநின்றெரியுஞ்செம்பொற்சுடர்நிலைப்பட்டஞ்சேர்த்திக்
கற்றையங்கவரிக்கண்ணிகருணமூலத்துவைத்தான். (க0ரு)

* செஞ்சந்தனக்குழம்பு.

தாரணிதயங்கச்சாத்தித்தவிசின்மேல்விரித்துமஞ்சி
லேரணிதிருவில்லேய்ப்பவிருவடம்விலங்கவீக்கிச்
சீரணிமணிகள்வீழ்த்துச்செம்பொன்செய்சுண்ணஞ்சிந்திக்
காரணிமின்னிற்றோன்றக்கதலிகைநடுவித்தானால். (௧௦௬)

வேழமாங்கணிந்தபின்னைவேந்தர்போற்றிசைப்பவேறிச்
சூழொளியாரமின்னச்சுடர்க்குழைதிருவில்வீச
வேழையர்கவரியேந்தவெரிகதிர்விரிவதொத்தா
னூழிநீருலகங்காக்குமுழவுத்தோளுருவத்தாரான். (௧௦௭)

ஒத்துநின்றுலகமெல்லாமொருங்குடன்குளிரவோம்பி
வித்தகர்புகழுமோரார்வெள்ளிவெண்குடையொன்றோங்கி
முத்தவெண்மாலைநான்றுமுடிமிசைநிழற்றமூரி
மத்தமால்களிறுநுந்திவளநகர்மருவச்சென்றான். (௧௦௮)

வேறு.

அரசிறையரசரொடெழுதலுமதிர்தரு
முரசெறியிமிழிசைமுழவொடுகெழுமின
திரைசெறிநெடுவரைகடைதொறுதிசைதிசை
கரைசெறிகடலொலிகடுகியதெனவே. (௧௦௯)

துளைபடுகுழலிசைதுடியொடுசிறுபறை
கிளையொடுபடலிகைகிளையொடுகிளர்தர
வளையொடுவயிரிசைமருவினமழையென
வளைபடுமணியரவறிவயர்வுறவே. (௧௧௦)

சொரிவனமலர்மழைசுழல்வனவெழுபுகை
யிரிவனமதுகரமிருள்வனதிசைமுக
மெரிவனசுடர்மணியெழுவனகதலிகை
தெரிவனவரியனதெருவொடுதிசையே. (௧௧௧)

கொடியொடுகுடையிடைமிடைவனவிருள்செய
முடியொடுசுடர்குழைமுளைவெயிலொளிசெய
வடியொடுபுனைகழலரசிறைபடையெழ
விடையிடையிரவொடுபகலிசைவனவே. (௧௧௨)

புரவியகுரமுகமிடுதொறுபொடியெழு
மருவிகொண்மதமழைபொழிதொறுமளறெழு
மருவியமனிதருமனநனியயர்வுறு
தெருவுகள்படுவதுசிலரிடைதெரிவார். (ககங)

செருவியல்களிறுகள்செவிபுடையரவமு
முருவியவிவுளிகளொலிகலவரவமுங்
கருவிகொள்வயவர்கள்கழனரலரவமும்
விரவியசெவிபிறவிளிகொளவிலவே. (ககச)

வளையவர்மனநிறையழிதருவடிவுடை
யிளையவரிருபுறவுரைகளினிடையிடை
திளையொடுநகைநனிசிலபலகனிவன
விளைவுடையவர்களும்விழைவுறுதகவே. (ககரு)

குயிலுவரொலியொடுகுடமுழவதிர்வொடு
மயிலினமகளிர்தமவிநயமடநடை
யயிலியலரசர்தமருகவைபெருகலி
னியலியவளநகரிடமிடமிலவே. (ககசா)

சுரமையரதிபதிவருவதுமருசியி
னருமைகொள்புகழவனதிதலினெதிர்கொள
வரமிகுநெடுவரைமணிமுடிநெடியவ
னுரமிகுபுடையெழவுரைநனியரிதே. (ககஎ)

கருவரைவருவனவெனவுளகளிறுகள்
பெருவரையருவிகளெனவுளபெயர்கொடி
யருவரையடுபுவியெனவுளரிளையவர்
பருவரையிறைபுடையெழுவதொர்படையே. (ககஅ)

நிலமிசையவர்படைநிலநெளிவுறவரு
மலைமிசையவர்படைமலைநெரிவுறவரு
மலைதிரையொலிகடலலைபுடைபெயர்தரு
கிலைபெரிதரிதிபநெடுவரைநிரையே. (ககசு)

முகிலிடைபுகுமுறைபுரவிகளெனினவை
முகிலிடைபுகுவதொர்முறைமையையுடையன
அகிலிடுநுழைபுகையவைகமழ்வனவெனி
னகிலிடுநுழைபுகையவர்புகழதுவே. (கஉ௦)

வனமலர்பொழிவனமழைமுகின்மழைமுகி
லினமலரிடையிடைவிரைமழைசொரிவன
கனமலிகழன்மணிவரையவனுழையவ
ரினமலியமரரினிழிவநர்சிறிதே. (கஉக)

அலர்மிசையிளையவரடியிடவடியிட
மிலைமிசையியல்பவரியல்புகளெழினல
நிலமிசையவரொடுகிலநடைபடர்கென
மலைமிசையவரிறையருளியவகையே. (கஉஉ)

வேறு.

சங்குபோலொளியவன்றூதைதன்படையு
கங்கைபோற்படர்ந்ததுகலக்குங்காதலா
லிங்குநீரமுனையினிழிவதொத்தது
மங்குல்சேர்மணிவரைமன்னன்றானையே. (கஉஙு)

மாவியல்கடற்படைமயங்கிவானிடைப்
பூவியலிணரொடுகவரிபொங்கலாற்
பாவியபனித்திரைப்பரவைபாற்கடன்
மேவியவிசும்பிடைவிரிந்ததொத்ததே. (கஉச)

கழுமியமுகிலொடுகளிறுகான்மிடைந்
தொழுகியவருவிநீருகுக்குமாதலான்
மழைமுகின்மழகளிறென்னும்வேற்றுமை
யுழையவருழையவர்க்குணர்த்தல்வேண்டுமே. (கஉரு)

புண்ணியமணிநிரைபரந்துபூவுதிர்ந்
தெண்ணியல்கொடிமிடைந்திருண்டுபொங்கெலாங்
கண்ணியல்கவரிமாக்கலந்துகானக
மண்ணியல்பரவையாய்வருவதொக்குமே. (கஉசா)

நந்தியசுடர்மணிநாகமீமிசைப்
பைந்துகிற்கதலிகைபரந்துதோன்றுவ
நந்தியசுடர்மணிநாகமீமிசைப்
பைந்துகிற்கதலிகைபரந்தபோலுமே. (கஉஎ)

கணங்கெழுகவரிகள்கலந்துகாழகி
லணங்கிவர்நாவிகாலளைந்துநாறலா
லிணங்கியகடற்படைப்பரவையிவ்வழி
மணங்கமழ்மகிரிவருவதொக்குமே. (கஉஅ)

காமருபூங்குழைக்காமவல்லிகட்
டாமரியனையவர்தயங்கியுண்மையாற்
காமருபூங்குழைக்காமவல்லிகட்
டாமரியனையதத்தானைவண்ணமே. (கஉகூ)

மணிமருங்குடையனவயிரக்கோட்டின
வணிமருங்கருவியவரைகளன்னவான்
மணிமருங்குடையனவயிரக்கோட்டின
வணிமருங்கருவியவரசவேழமே. (கஙo)

மஞ்சிவர்மணிவரைமகளிர்சீறடி
விஞ்சையந்தொழிலியல்விடுத்தமெல்லியற்
பஞ்சின்மேன்மிதிப்பினும்பதைத்துப்பையவே
யஞ்சிமேலிவர்வதற்கார்வஞ்செய்யுமே. (கஙக)

மணிவரையரசனுமகரமால்கட
லணிவரைநிலமுடையானைவேந்தனுங்
கணிவரைப்பொழுதினுற்கண்ணுற்றாரரோ
பணிவரையிலாத்தொழிற்பரவைத்தானையார். (கஙஉ)

அம்மலரலங்கலான்றடக்கையென்னுமம்
மொய்மலர்த்தாமரைமுகிழ்க்குமெல்லையுண்
மைமலர்நெடுவரைமன்னன்மற்றவன்
செம்மலரங்கையிற்செறியப்புல்லினன். (கஙங)

வலம்புரிவண்ணனுமகரமால்கட
னலம்புரிநல்லொளிநம்பிதானுமவ்
வுலம்புரிதோளினொளிகொள்பைங்கழல்
கலம்புரிதடக்கையாற்கதழக்கூப்பினார். (கநசு)

காமருகவினொளிக்காளைமார்களைத்
தாமரைச்செங்கணுற்றழுவிப்பின்னவர்
பூமருபொன்வரையகலம்புல்லினான்
சாமரைநன்னுதற்றடக்கையாணையான். (கநரு)

எழில்விரிநெடுவரையிறைவன்றன்மக
னழல்விரிசுடரொளியருக்ககீர்த்தியும்
பொழிலணிபோதனத்திறைவன்பொன்னணிக்
கழலவனடியிணைகையிற்கூப்பினான். (கநசு)

ஆங்கவனழுகுகண்பருகமற்றவன்
றூங்கெழுவணையதோடழுவித்தன்னொடு
மோங்கியமழகளிற்றும்பரேற்றினான்
வீங்கியகனைகழல்வென்றிவேந்தனே. (கநஎ)

வேறு.

மன்னியவிஞ்சைவேந்தன்றம்பியுமருகன்றானுந்
துன்னியசுரமைநாடன்றொடுகழறொழுதலோடும்
பின்னியகாதல்வெள்ளம்பெருகியவிரிவிற்றாகிப்
பொன்னியல்கழலினார்க்கோர்பொங்கொளிபுணர்ந்ததன்றே.

வெஞ்சுடராழியானும்விறலவற்கிளையதாதை
மஞ்சுடைவிஞ்சைநாடன்மலரடிவணங்கிமற்ற
வஞ்சமில்புகழினன்றன்மனத்தையும்வணங்கியிட்டான்
செஞ்சுடரிலங்குபூணான்றிறற்சிறீபாலனென்பான். (கநகூ)

ஆய்ந்தசீரரசராங்குக்கலந்தபின்னமுதவெள்ளம்
பாய்ந்ததுபரவைநன்னீர்ப்பாற்கடல்பரந்ததேபோ
லேந்தியகாதல்கூரவெழினகர்பெயர்ந்துபுக்கார்
காந்தியகனகப்பைம்பூட்கருவரையணையதோளார். (கசாO)

எழில்கொள்கந்தனையதிண்டோளிளையரோடரசரீண்டிப்
பொழிலகந்தழீஇயசோலைப்பொன்னகர்க்கோயில்புக்குத்
தழுமலர்க்கோதைநல்லார்பலாண்டிசைததும்பவாழ்த்தச்
செழுமலர்த்திரள்கடாழுஞ்சித்திரகூடஞ்சேர்ந்தார். (கசக)

வெள்ளொளியெயிற்றுப்பேழ்வாய்விரியுளையரசசிய
மொள்ளொளிதவழவேந்துமொளிமணியணையின்மேலார்
கள்ளொளிகமழுங்கோதைமகளிர்கள்கவரிவீசத்
தெள்ளொளிக்குமரரோடமிருந்தனர்திருந்துவேலோர். ()

காமருமகளிர்வீசுங்களமணிப்பவழத்திண்காற்
சாமரைபயந்ததென்றல்தகைமுடித்தாதுசிந்தப்
பூமருபொறிவண்டார்ப்பப்போலிந்தவிருந்தபோழ்தி
னேமருகடலந்தானையிருநிலக்கிழவன்சொன்னான். (கசரு)

விண்ணிடையிழிந்துவந்தவிண்ணவர்கிழவனைப்பாய்
மண்ணிடையென்னையிங்கோர்பொருளெனமதித்துவந்த
தெண்ணிடையுணருமாந்தர்க்கிடைதெரிவரியதொன்றாற்
கண்ணிடையுமிழுஞ்செந்தீக்கடாக்களிற்றுழவவென்றான். ()

ஏங்குநீர்வளாகங்காக்குமிக்குவாமன்னரேறே
தூங்குநீர்மருதவேலிச்சுரமைநாடுடையதோன்றா
றேங்குநீரமிர்தின்மீர்த்தஞ்சென்றனர்தெளித்தலன்றே
யோங்குநீருலகந்தன்னுளுயர்ந்தவர்க்குரியதென்றான். ()

வருதற்குமுதலுமுன்பேமருசிவந்துணர்த்தக்கேட்டேன்
பொருதற்கண்ணரியவேலோய்புராணநூற்புலவர்யாருங்
கருதற்கண்ணரியகண்ணிகடல்வண்ணற்குரியளென்னத்
தருதற்குமகிழ்ந்துவந்தேன் * றாழமீங்கொழிகவென்றான். ()

அன்னணமரசர்பேசியிருந்தபின்னருக்கனோடும்
பொன்னணிபுரிசைவேலிப்புதுநகர்புகுகவென்று
மன்னவகுமரர்தம்மைமணிவரையரசனேவப்
பின்னவர்வேழமேறிப்பெயர்ந்தனர்போதுகின்றார். (கசஎ)

---

* தாழம், தாமதம்.

ஆயிடையரசசியமனையவர்பெயரும்போழ்தின்
வேயுடையருவிச்சாரல்வெள்ளிவேய்விலங்குநாடன்
தீயுடையிலங்குவேலான்றிருமகளமிர்தின்சாயல்
வீயுடையலங்கன்ஞான்றமிடைமணிவிமானஞ்சேர்ந்தாள். ( )

பொலங்கலம்புலம்பவாயம்புடைநின்றுபோற்றுக்கூவ
வலங்கலுங்குழலுந்தாழவணிஞிமிறரவஞ்செய்ய
விலங்கலங்கனகமாடத்தெழுநிலையேறலுற்றாள்
விலங்கலின்குவடுசேருமெல்லியற்றோகைபோல்வாள். ( )

ஆயத்துளலர்கொம்பன்னாளமிர்தமாபிரவையென்ற
வேயொத்தபணைமென்றோளிமிடைமணிக்கபாடநீக்கி
வாயிற்கண்வருககங்கைவளநகர்காண்கவென்று
கோயிற்கணருகுசெல்லுங்குமரரைக்காட்டினாளே. (கருo)

விண்ணதிர்த்தனையவாகித்திசைமுகஞ்சிலம்பவீங்கிக்
கண்ணதிர்முரசுஞ்சங்குங்கடற்பெயர்முழக்கமாக
மண்ணதிர்கொள்ளச்செல்லுமைந்தர்கள்யார்கொலென்னு
மெண்ணதிர்மனத்தினாட்குத் தோழிமற்றிதனைச்சொன்னாள்.

முன்னவனம்பிவெய்யோன்பெயரவன்முழவுத்தோளான்
பின்னவன்சுரமைவேந்தன்பெருமகனவற்குத்தம்பி
கன்னவில்வயிரத்தோளான்கருமுகிலுருவக்காளை
யின்னவனென்னவேலோடுமிலங்கொளிமுறுவல்கொண்டாள்.

நீலமாமணிக்குன்றேய்ப்பநிழலெழுந்திலங்குமேனிக்
கோலவாயரசகாளைகுங்குமக்குவவுத்தோளான்
மேலவாநெடுங்கணோடமீட்டவைவிலக்கமாட்டாண
மாலைவாய்க்குழலிசாலமம்மர்கொண்மனத்தளானாள். (கருக)

தாமரையனையகண்ணுந்தடக்கையும்பவழவாயும்
பூமருபூவைக்கண்ணிப்புதுமலரொளியுங்காட்டித்
தாமருநீலமென்னுமணிதுணர்ந்தனையகுஞ்சிக்
காமருகாளைகன்னிகண்களைச்சிறைகொண்டிட்டான். (கருச)

சிறையென்பதில்லைச்செவ்வேசெம்புனல்பெருகுமாயி
னிறையென்பதில்லைக்காமனேர்நின்றுசிறக்குமாயி
னிறைநின்றதுளதென்பார்சென்றரும்பெறலிவளதுள்ள
நறைநின்றுகமழுங்குஞ்சிநம்பிபாற்பட்டதன்றே. (கருரு)

கோணின்றமதியம்போலக்குழைமுகஞ்சுடரக்கோட்டித்
தாணின்றகுவளைப்போதிற்றூதகங்குழையமோந்து
வாணின்றநெடுங்கண்காளைவடிவினுக்கிவரமற்றை
நாணின்றுவிலக்கநங்கைநடுவுநின்றுருகுகின்றாள். (கருசு)

அவ்வழியமுதம்பூத்தவருங்கலக்கொம்பைத்தங்கோ
னிவ்வழிவருகவென்றதவடமரிசைப்பக்கேட்டு
மைவழிநெடுங்கணாளுமனம்புக்கநம்பிறனை
செவ்வழிமழலைநாணேயெழினியாமறைத்துச்சென்றாள். ()

ஆயிரங்கண்ணிலாதார்க்கழகுகாண்பரியநங்கை
வேயிரும்பணைமென்றோளார்மெல்லடிபரவச்சென்று
மாயிருஞ்செல்வத்தாதைமலரடிவணங்கிநின்றாள்
சேயிருங்குன்றமீன்றசெழுமணிச்சலாகைபோல்வாள். ()

மங்கையைவலத்துக்கொண்டுமாலையுங்குழலுந்தோடு
மங்கையாற்றிருத்திமாமனடிகளைப்பணிகவென்று
செங்கயற்கண்ணிதாதைசெவ்விரல்குவியப்பற்றிப்
பங்கயப்பழனத்துடன்பாதமூலத்துவைத்தான். (கருக)

மருமகள்வணங்கமுன்னேவலப்புடைக்குறங்கினேற்றிக்
கருமைகொள்குவளைக்கண்ணிகழிநலக்கதிர்ப்புநோக்கித்
திருமகளிவளைச்சேருஞ்செய்தவமுடையகாளை
யருமைகொடிகிரியாள்தற்கையமொன்றில்லையென்றான். ()

அருங்கலமகளிர்க்கேற்றவழகெலாந்தொகுத்துமற்றே
ரிருங்கவியுலகங்காணப்படைத்தவனியற்றினன்கொ
லொருங்கலர்த்துலகின்மிக்கமகளிரதுருவமெல்லாம்
பெருங்கலவல்குறன்பாற்புகுந்துகொல்பெயர்ந்ததென்றான்.

அருந்தவமுடையனேயானன்றெனிலணங்குபோலும்
பெருந்தகைநங்கைதன்னைப்பெற்றவன்ருதையென்னுந்
திருந்தியமொழியுந்தெய்வச்செல்வமுந்தெய்வமன்னீர்
பொருந்தியதொடர்புமெய்தப்புணருமோபுவியினென்ருன்.

ஆங்கமர்ந்தரசர்பேசியலர்மிசையணங்கன்னுளைப்
பூங்கமழ்சோலைவேலிப்பொன்னகர்புகுகவென்னத்
தேங்கமழ்குழலினருந்தாயருஞ்செவ்விகாப்ப
வீங்கொளிவிமானத்துச்சிவெண்ணிலாமுற்றஞ்சேர்ந்தாள். ( )

மதுநனைந்தலர்ந்ததாரான்றிறத்தையான்மறப்பனென்னின்
விதிநனிதுரப்பமீட்டுவினைப்பதேவிளக்குமுள்ள
மிதுநனியறியுமோவிவ்வுலகமென்றிதயத்தோடும்
புதுநனைவிரிந்தகோதைப்பொன்னனுள்புலம்புகொண்டாள்.

காதலார்திறத்துக்காதலாக்கியகாதலாரை
யேதிலார்போலநோக்கினிருமடங்காகவெய்தும்
போதுலாஞ்சிலையினன்றன்பொருகணைக்கிலக்கஞ்செய்யு
மாதலாற்காமநோய்க்கோரருமருந்தில்லையன்றே. (கசுரு)

தேமிடைகாவல்வேலிச்செழுமணற்குவாலுங்குன்றும்
பூமிடைதடமுங்காவும்புக்கவர்க்கரணமாகா
தாமுடைமனமுங்கண்ணுநிறைவுந்தம்பாலவாகா
காமுடைமனத்தினர்கட்கியாருளர்களைகணுவார். (கசுசு)

அனையவளரசகன்னியாகியபொழுதினிப்பாற்
புனைமலரலங்கன்மார்பிற்பூமியங்கிழவன்றேவி
வனமலருருவக்கண்ணிமணிவண்ணன்மார்புதோயுங்
கனமணிப்பூணினளைக்காண்கெனவிடுக்கப்பட்டார். (கசுஎ)

மதுகரிவயத்தசேனையெனவிவராதியாகப்
புதுமலர்க்கொடியும்பூவுந்துணர்களும்புணர்ந்தபேரார்
கதிரனகலங்கடாங்கிக்காப்புமங்கலங்களேந்தி
யெதிர்தருமிளமையாரோராயிரத்தெண்மர்சூழ்ந்தார் (கசுஅ)

மாதவக்குலத்துளார்கண்மாதவசேனையுள்ளிட்
டோதியபெயரின்மிக்காருலகறிகலையின்வல்லார்
கோதையுங்குழையுந்தோடுங்குளிர்முத்தவடமுந்தாங்கிப்
போதிவர்குழலிதாதைபொன்னகர்முன்னினாரே. (கசுக)

நன்னுதலவருநம்பிதாயருநடையிற்றூய
பொன்னுதற்பிடியுந்தேரும்வையமுமிழிந்துபுக்கு
மன்னனைவணங்கியன்னோன்பணிகொண்டுமடந்தைகோயி
லின்னிசைமகளிர்முன்சென்றெதிர்கொளவெய்தினாரே. ()

பொன்னியலமளிமேலாள்பூவணைமருங்குதீண்டக்
கன்னியர்கவரிக்கற்றைகைவலனசைப்பக்காய்பொ
னின்னிசைக்குழைவில்வீசவினிதினிங்கிருந்தநங்கை
துன்னியமகளிர்தம்மைத் தமர்தொழுதுணர்த்தக்கண்டாள்.

வலங்கொண்டுதொழுதுவாழ்த்திமற்றவரடைந்தபோழ்தி, னுலங்கொண்டவயிரத்தோளானுழைக்கலமகளிரென்று, நலங்கொண்டோரார்வங்கூரநகைமுகமுறுவரோன்றிப், புலங்கொண்டததனைக்காப்பான்பூவொன்றுநெரித்துமோந்தாள்.()

விண்விளக்குறுக்குந்திங்கட்சுடர்நுதல்விளக்கினாலும்
பெண்விளக்குறுக்குமேனிபெருகியவொளியினாலும்
பண்விளக்குறுக்குமின்சொற்பாவையம்பாவைமாரைக்
கண்விளக்குறுக்குமாதுகாண்டலுக்கரியளானாள். (கஎ௩)

செஞ்சிலம்பொலிக்குஞ்செல்வச்சீறடித்தெய்வப்பாவை
பஞ்சிலங்கணையின்மேலாள்பரந்தொளிதிருவில்வீச
மஞ்சிலங்குருவவானின்மழையிடைநுடங்குமின்போ
லஞ்சிலம்படியினார்தமறிவினையயர்வித்திட்டாள். (கஎச)

மற்றவர்காணும்போழ்தின்மாதவசேனையென்பாள்
சுற்றியபளிங்கிற்சோதிச்சுவர்மிசையன்னதோன்ற
விற்றிவளுருவமென்றுங்கிதயத்துளெழுதிவைத்துப்
பிற்றையோர்பலகைதன்மேற்பெய்வனையெழுதலுற்றாள். ()

பண்களைமருட்டுமின்சொற்பாவையைப்பருகலுற்ற
கண்களைமருளநீருங்கண்களென்கண்களாகப்
பெண்களைமருட்டுஞ்சாயற்பேதையைக்காண்மினென்று
மண்களைமருட்டுஞ்சீர்நும்மாமியாரடிகள்சொன்னார். (கஎசு)

ஆதலாலவர்க்குச்சொல்லு மாற்றமொன்றருளிச்செய்மி
ன், மாதலாஞ்சாயலென்னமாதவசேனையென்பா,ளேதமாங்
கில்லையன்றேயெங்கண்முன்மொழியவென்றாள், கோதிலாக்
குணக்கொம்பன்னாள்குறுநகைமுறுவல்கொண்டாள். (கஎஎ)

அங்கவள்குறிப்புநோக்கியமுதமாபிரபையென்னு
மங்கலத்தோழிகூறுமாமியாரடிகடம்மை
யெங்கண்மெய்ச்செய்கையாகவிணையடிபணிமினென்றாள்
செங்கனிகனிந்தசெவ்வாய்ச்சிறுநுதற்பெரியகண்ணாள். ()

ஆங்கவண்மொழிந்தபோழ்தினணங்கினைவணங்கிமற்றத்
திங்களியமிர்தமன்னதிருமொழிப்பண்ணிகாரம்
வாங்குநீருலகங்காக்குமன்னவன்பட்டத்தேவி
யோங்கிருங்கற்பினாளுக்குய்ப்பனென்றுணர்த்திப்போந்தாள்.

பளிங்கியல்பலகைதன்மேற்பாவையதுருவந்தான்முன்
றெளிந்தவாறெழுதிக்கொண்டுசெந்துகிலுறையின்மூடி
வளந்தருகோயின்முன்னிமணிவண்ணற்பயந்ததேவி
யளந்தறிவரியகற்பினமிர்தனாளருகுசேர்ந்தாள். (கஅ௦)

மையகத்தலர்ந்தவாடகண்மாதவசேனைசென்று
வையகத்தரசன்றேவிமலரடிவணங்கலோடு
மெய்யகத்துவகைகூரவிரும்பித்தன்னருகுகூவிக்
கையகத்ததுவென்னென்னக்கன்னியதுருவமென்றாள். ()

அணிகலமபரிந்துநங்கையணிமருளுருவந்தந்த
மணிமருண்முறுவற்செவ்வாய்மாதவசேனைக்கீந்து
பணிவரும்பலகைதன்மேற்பாவையைக்காண்டுமென்று
துணிவரும்பவழத்துண்டந்துடிக்கின்றதனையவாயாள். ()

மணிதெளித்தமைக்கப்பட்டவண்ணமேவண்ணமாகத்
துணியமுன்கலந்துசெய்த துகிலிகைத்தொழில்கணோக்கி
யணியினதொளிகளோவிவ்வணங்கின துருவமோவிக்
கணிநலங்கருதலாகாக்கண்கவர்சோதியென்றாள். (கஅந)

பழுதியலிலாதபாவையுருவமோர்படியினாலு
மெழுதுதற்கரிதியார்க்குமிலங்கொளியுருவமேனி
மொழிதலுக்கரிதாலத்தைமுருகுவேய்குழலிமற்றுன்
றெழுதகையருளினன்றேதுணிந்தியானெழுதிற்றென்றாள்.

அல்லதுமடந்தைதோழியவளதுமுகத்தினாலோர்
சில்லணிமழலைச்செவ்வாய்த்திருமொழிபிறந்ததுண்டு
வல்லிதன்மொழிபோய்நீரெம்மாமியாரடிகட்கெம்வா
யெல்லையில்கிழமைதன்னாலிறைஞ்சுகவென்பதென்றாள். ()

என்றவண்மொழிந்தபோழ்தி னிலங்கொளிப்பலகைதன்மே
மின்றவழ்மேனியாளைமென்பணைத்தோளிற்புல்லி [ன்
யின்றினிதாகுமன்றேயிருந்தவப்பயங்கணம்மா
லொன்றினவிளைந்தவென்றாங்கொளியினாற்புதியளானாள். ()

போதவிழலரிநாறும்புரிகுழலுருவப்பாவை
சோதிசூழ்வடிவுநம்பிசுடர்மணிவண்ணன்காண
மாதவசேனைகாட்டவல்லையோவென்னவையற்
கோதுவதுணரினன்றேயடிகள்யாமுருவமென்றாள். (கஅஎ)

மற்றவடொழுதுபோகிமணிவண்ணன்மகிழ்ந்தகோயிற்
சுற்றிநின்றெரியுஞ்செம்பொற்சுடர்மணிவாயினண்ணி
யிற்றெனவிசைத்துப்புக்காங்கிளையவர்கழல்கைகூப்ப
வெற்றுநீவந்ததென்றாற்கிதுவெனாவெடுத்துச்சொன்னாள். ()

அருங்கலமுலகின்மிக்கவரசர்க்கேயுரியவன்றிப்
பெருங்கலமுடையரேனும்பிறர்க்கவைபேணலாகா
விருங்கலிமுழவுத்தோளாயெரிமணிப்பலகைமேலோர்
நெருங்கொளியுருவங்கொண்டுநின்னையானினைந்துவந்தேன்.

அப்படித்தாயிற்காண்பாமென்றனனரசநம்பி
மைப்புடைநெடுங்கணுளுமருங்குநின்றவரைநீக்கிக்
கைப்புடைப்பலகைமேலாற்கன்னியதுருவங்காட்ட [ன்.
மெய்ப்புடைதெரியமாட்டான்விருந்துகொண்மனத்தனு

வானவர்மகள்கொல்விஞ்சை மாதுகொன்மண்ணுளாள்கொ
றேனிவர்குழலிமற்றித்திருநுதன்மடந்தையென்ன
மானிவர்நோக்கிவிண்ணோர்மகளல்லண்மற்றுநின்ற
வூனிவரலங்கல்வேலோயுய்த்துணர்ந்தருளுகென்றாள் (கக௯க)

மண்மிசைமகளிரின்னவடிவுடையவர்களில்லை
விண்மிசைமடந்தையல்லளாய்விடின்விஞ்சைவேந்தன்
கண்மிசைநவிலுங்காதற்கன்னியதுருவமாமென்
றெண்மிசையிவரும்போழ்தினிதுவெனவவளுஞ்சொன்னாள்.

கன்னியதுருவங்காளைகாண்டலுங்கேடில்காமன்
பொன்னியல்கழலன்றூரன்பூட்டியசிலையனாகி
மன்னியவிற்கைநோக்கிமலரணிகணையுநோக்கித்
துன்னியபொழுதுநோக்கிச்சுடுசரந்தொடுக்கலுற்றான். ()

மண்ணியல்வளாகமெல்லா மகிழ்ந்துடன்வணங்கும்போழ்து
முண்ணனிமகிழ்தல்செல்லாவொளியுடையுருவக்காளை
கண்ணினிற்காதலாடன்கண்ணியவுருவங்கண்டே [ன்.
வெண்ணெயின்குன்றந்தீயால்வெதும்புகின்றதனோடொத்தா

மாகத்துமதியமன்னவானுதன்மடந்தைதன்னை
யாகத்துளடக்கிமன்னுமணிநுதலழகுநோக்கி
நாகத்தைநடுக்குமல்குனங்கைதன்றிறத்துக்காம
வேகத்தைமெல்லமெல்லவில்வலான்பெருக்கிவிட்டான். ()

குழலையான்திருத்திக்கோதைசூட்டுவன்குறிப்புண்டாயின்
மழலைவாய்திறந்தோர்மாற்றமருளுகமடந்தையென்னு
நிழலவாம்பகழிபோலுநெடுங்கணேக்கென்னும்வெய்ய
வழலினுலளியனாவியடுவதோவழகிதென்னும். (கக௯௬)

சீறடிப்பரடுதோயுஞ்சிலம்பிணை திருந்தவைப்பன்
வீறுடைநங்கைமீண்டுந் தன்கவான்மிசையிருத்தியென்னுஞ்
சேறுடைக்கோதைமேலாற்சிறந்துவார்கூந்தல்கையால்
வேறிடத்துநுவல்செய்யவிரும்பியமனத்தனாகும். (ககூஎ)

அந்துகிலசைத்தசோர்கையவிழ்ந்தசைகின்றதென்னும்
பைந்தளிர்மேனிதன்மேற்பன்மணிக்கலங்கடீண்டுஞ்
செந்தளிர்புரையுமேனிச்சேயிழைதிறத்திற்காம
வெந்தழல்கனலமூட்டிவில்வலான்மெலியலுற்றான். (ககூஅ)

வாளையாநெடுங்கணல்லாண்மணவினைதொடங்குகால
நாளையானமர்களோடுசூழ்ந்துவந்தறிவலென்று
காளைபாற்பட்டுவெய்யோன்குடதிசைக்கனபொற்குன்றிற்
சூளிவாயருவிமாலைச்சுடர்முடிச்சென்னிசேர்ந்தான். (ககூகூ)

விண்ணியலுருவவீதிமேனின்றுமிழிந்துவெய்யோன்
கண்ணியல்விலங்கனெற்றிகதிரென்னுங்கையினூன்றி
மண்ணியன்மரத்தின்சாகைநுதிபிடித்தவையும்விட்டுப்
பண்ணியல்பிறிதொன்றாகிப்பையவேமறைந்துபோனான். ( )

வெய்யவனென்னுஞ்செந்தீச்சுடரினால்வெதும்பப்பட்டு
மையொளிபரந்தபோன்றுகருகினதிசைகண்மற்று
மொய்யழல்மேலவிந்ததழன்மீளமூள்வதேபோற்
செய்யதோருருவமேல்பாற்றிசைமுகஞ்சிறந்ததன்றே. (உ0க)

கள்ளுலாங்கழனிநீத்துக்கருங்கயல்கவுளுட்கொண்டு
புள்ளெலாங்குடம்பைசேர்ந்துபார்ப்பினம்புறந்தோம்பி
யுள்ளுலாவுவகைகூரத்துணைபுணர்ந்தொலித்துவைக
வள்ளலார்மனத்துக்கெஃகாய்மாலைவந்திறுத்ததன்றே. ( )

காதலாரகன்றபோழ்திற்கற்புடைமகளிர்போலப்
போதெலாங்குவிந்தபொய்கைத்தாமரைபொலிவுநீங்க
மீதுலாந்திகிரிவெய்யோன்மறைதலுஞ்சிறுவெள்ளாம்ப
லூதெலாமலரக்குத்தம்மையேமிகுத்தவன்றே. (உ0௩)

செய்யொளிச்செக்கரென்னுஞ்செம்புனல்பரந்துதேறி
வெய்யொளிநிறைந்தநீலவிசும்பென்னு மணிகொள்பொய்கை
மையிருளென்னுஞ்சேற்றுள்வளர் திங்கட்கதிர்களென்னு
மொய்யிளங்கமலநாளவளையங்கண் முளைத்தவன்றே. (உ௦ச)

அங்கொளிவிசும்பிற்றோன்றியந்திவானகட்டுக்கொண்ட
திங்களங்குழவிபால்வாய்த்தீங்கதிர்முறுவனோக்கித்
தங்கொளிவிரிந்தவாம்பன்மரைகுவிந்தவாங்கே
யெங்குளருலகுக்கெல்லாமொருவராயினியரோர். (உ௦ரு)

வே று.

மணவாயமல்லிகையின்மதுநனைந்துவண்கனிகண்மதர்ப்ப வீசி, யிணர்வாயவனமுல்லையிதழ்வாரியிளந்திங்கட்கதிர்கா லூன்றித், துணைவாயசுரும்பிரங்கவரவிந்தவனத்துதிர்ந்தது களுஞ்சித்துத், திணைவாயகருங்குவளைதிளைத்தசைக்குந்தென்றலுமொன்றுடைத்தேமாலை. (உ௦சு)

மைபருகுநெடுங்கண்ணார்மணிமாடமிசையிட்ட வளைவாய்ப்பாண்டி,னெய்பருகுகொழுஞ்சுடரினகிலாவியிடைநுழைந்துநிழல்கால்சீப்பப், பைபருகுமணியுமிழ்ந்துபணநாகமிரைதேரும்பருவமாலை, கைபெருகுகாமநோயுடையவர்க்கோர்கனல்போலவருமேகாணில். (உ௦எ)

கணிமிடற்றநறவேங்கையவிர்சுணங்கின்மடவார்தங்கை மேற்கொண்டு, பணிமிடற்றுமொழிபயிற்றும்பைங்கிளியின் செவ்வழியினிசைமேற்பாட, மணிமிடற்றசெங்கண்ணபவழக்காற்கபோதங்கண்மதலைதோறு, மணிமிடற்றிணுலகவவனங்கனையுமனல்விக்குமளியமாலை. (உ௦அ)

வெஞ்சுடர்வேலிளையவனுங்கினையனவின்மேலிவெய்த விசும்புசெல்லும், விஞ்சையரையன்மடமாமகணிலையாதெனவினவில்விளம்பக்கேண்மின், பஞ்சிலகுதோல்குற்பாடகக்காற்பாவையர்கள்பலர்பாராட்டச், செஞ்சுடரோன்மறைபொழுதிற்சினவரன்றன்றிருக்கோயில்சென்றுசார்ந்தாள். ()

திண்ணிலையமணிக்கதவந்தாழ்திறந்துதிருவிளக்குத்திகழ மாட்டி, விண்ணியலநறும்புகையுங்காழகிலும்விசும்பிவர்ந்து விம்மமூட்டிக், கண்ணியுடன்செறிமலருநறும்பொடியுங்கமழ் சாந்துங்கையினேந்திப், பண்ணியலைரம்பிசைமேற்பரமனை யேபணிமொழியாள்பரவாநின்றாள். (உகo)

மணங்கமழுந்தாமரையின்மதுத்திவலைகொப்பளித்துமத ர்த்துவாம,னணங்கிவர்சேவடியினழகெழிலேரொளிபரு கியலரும்போலு, மணங்கிவர்சேவடியினழகெழிலேரொ ளிபருகியலருமாயின், வணங்கினவரொளிவிரிந்துகளிசிறந்து மதிமகிழன்மருளோவன்றே. (உகக)

அரும்பிவருமரவிந்தமறிவரனதடிநிழலதடைந்தோமெ ன்று, சுரும்பிவரியிசைபாடச்செம்மாந்துசுடருமிழ்ந்துதுளு ம்பும்போலுஞ், சுரும்பிவரியிசைபாடச்செம்மாந்துசுடருமிழ் ந்துதுளும்புமாயின், விரும்பினரர்தொழுதெழுவார்மெய்ம றப்புமுண்மகிழ்வும்வியப்போவன்றே. (உகஉ)

அழலணங்குதாமரையாரருளாழியுடையகோனடிக்கீழ் ச்சேர்ந்து, நிழலணங்கிமுருகுயிர்த்துநிரந்தலர்ந்துதோடேந் திகழ்றும்போலு, நிழலணங்கிமுருகுயிர்த்துநிரந்தலர்ந்து தோடேந்திகழ்றுமாயிற், றெழிலணங்குமனமுடையார்கு ழொளியும்வீழ்களிப்புஞ்சொல்லோவன்றே. (உகங)

வேறு.

மணிமருடிருமொழிவாமன்சேவடி
யணிமருளுருவுடையமிர்தின்சாயலாள்
பணிமொழிபலவுடன்பரவிவாழ்த்தினாள்
பிணிமொழிபிறவிநோய்பெயர்கவென்னவே. (உகச)

வென்றவன்றிருவடிவணங்கிமெல்லவே
சென்றுதன்வளநகர்ச்செம்பொன்மாளிகை
நின்றொளிவிரிவதோர்நிலவுவேதிகை
முன்றில்சென்றெய்தினாண்முகிழ்த்தவேட்கையாள். (உகரு)

செய்யவன்செங்கதிர்சுருங்கச்செக்கர்வான்
பையவேகருகலும்பரவைபாற்கதி
ரையவேயவிர்கதியரும்புவந்தது
வையமேதொழப்படும்வளர்வெண்டிங்களே. (உகசு)

இருங்கயத்தெழின்மலர்விரிந்துமேலதோர்
சுருங்கையங்கவிழ்ந்தெனத்தோன்றுமீன்குழா
மரும்பியபசலைவானகட்டுத்தாரகை
யொருங்கியன்றொளிநகையுமிழநோக்கினாள். (உகஎ)

திங்களங்கொழுநனைச்சேர்ந்துதாரகை
யங்கொளிமுகிழ்நகையரும்புமாதலான்
மங்கலமணமகன்மணந்தபோதலா
லெங்குளதிளையவர்க்கிளைமையின்பமே. (உகஅ)

என்றுதன்னகம்புடையியலக்காளையா
லொன்றியவுள்ளநோயொளிக்கலுற்றன
ளின்றிவளகத்ததுகாமநோயெனப்
பொன்றவழ்பசலைமெய்புகலலுற்றதே. (உகக)

ஆயினதிருவனாளாயத்தோழியர்
வேயெனத்திரண்டதோள்விளங்குமேனியாண்
மேயினகுறிப்பினையறிந்துமெல்லவே
பாயினபணிமொழிபலவுங்கூறினார். (உஉ0)

விஞ்சையருலகினுமினிதுவீங்குநீர்
மஞ்சிவர்பொழிலணிமண்ணென்றோதினா
ளஞ்சிலமொழியவளொருத்தியாங்கயர்
பஞ்சிலங்ககலல்குற்பாவைபாங்கினே. (உஉக)

பனிவரைப்பாங்கரும்பழுச்செய்சோலையுந்
தனியவர்க்கினனனிபயக்குந்தன்மனக்
கினியவரெவ்வழியிசைவரவ்வழித்
துனிவரவில்லெனவொருத்திசொல்லினாள். (உஉஉ)

காதலார்காதன்மைகலந்துகாதலர்க்
கேதிலாரயலராயியல்பவாய்விடிற்
சாதலும்பிறத்தலுமிலாததானமுங்
கோதெனக்கொண்மினென்றொருத்திகூறினள். (உஉரு)

திணைவிராய்ப்பொய்கையுந்திகிரிப்புள்ளினுக்
கிணையிராப்பிரிந்தபினெரியொடொக்குமாற்
றுணைவராற்றனியவர்திறத்துச்சொல்வினோர்
புணைவராம்படியவரில்லைப்பொன்னனீர். (உஉச)

முல்லையின்முருகுகொப்பளித்துமூரல்வாய்
மல்லிகையிணர்த்துணர்மயக்குமாருதத்
தெல்லியுமிளம்பிறைக்கதிருமென்பவான்
மெல்லியலவர்களைமெலிவுசெய்பவே. (உஉடு)

விரைசெறிபுரிகுழல்வேற்கணங்கைதன்
புரைசெறிகடிவினைநாளைப்போழ்தென
முரசெறியிமிழிசைமுழங்கக்கேட்டன
ளுரைசெறிமறுகிலென்றொருத்திகூறினள். (உஉசு)

நாளைநாளென்பதுநனித்துஞ்சேய்த்தென
வாளையாநெடுங்கணீர்மயங்கியென்னையிக்
கோளையாம்விசும்பிடைக்குளிர்வெண்டிங்களார்
தாளையாம்வணங்குபுதாழ்ந்துகேட்டுமே. (உஉஎ)

காமனுங்கணைப்பயன்கொண்டுகண்களா
லூமுநன்னலவினைநுகருநாளவாய்
யாமமிங்கொருங்குடனகலவென்றுபோய்
வாமன்றனகருழைவரங்கொள்வாங்கொலே. (உஉஅ)

இன்னனநகைமொழியின்பக்கோட்டிபோ
டன்னமென்னடையவளமரவாயிடை
மன்னவற்கேழிசைமலிந்ததூரியங்
கன்னியுங்கடிகமழமளியேறினள். (உஉகூ)

மல்லிகைமணங்கமழ்மாலைபோகலும்
பல்லியமவிந்தனபரந்தபார்கதிர்
மெல்லவேமெல்லவேசுருங்கிவீங்குநீ
ரெல்லைசென்றொளித்ததவ்விளவெண்டிங்களே. (உகூ0)

நல்வினைகழிதலுநலியுந்தீவினை
செல்வதேபோலிருள்செறிந்துசூழ்ந்தது
பல்வினைமடிந்தனபடர்ந்ததாயிடை
வல்வினைக்கயவரேவழங்குங்கங்குலே. (உகூக)

ஊடலாய்ச்சுடரொளிமழுங்கிமங்கைய
ராடுவார்முழவங்கண்ணயர்ந்தயாழொடு
பாடுவார்பாணியுஞ்சுருங்கினன்னக
ராடுநீர்க்கடற்றிரையவிந்ததொத்ததே. (உகூஉ)

மடந்தையர்முலைமுகமடுத்தமார்பின
ரடைந்துதேனுறங்கியவலங்கன்மாலையார்
மிடைந்ததோடமூஉப்பிணைநெகிழமெல்லவே
யிடங்கழித்தொழிலொழிந்திளையர்துஞ்சினர். (உகூகூ)

மதுக்கடைவழிபிழித்துவலைகாவலைத்
தொதுக்கமும்வெறியயர்களனுமூடலாய்ச்
செதுக்கமும்பலிபெறுதெருவுந்தேர்ந்துபோய்க்
* கதுப்புகுந்துறங்குபுகழுதுஞ்சோர்ந்தவே. (உகூச)

இடஞ்சிறையிளம்பெடைக்கீந்துபார்ப்பின்மேற்
றடஞ்சிறைவலத்ததுகோலித்தாந்தம
தொடுங்குதாண்முடங்கவைத்துறங்குகின்றன
புடங்கொள்பூம்பொழிலிடைப்புள்ளின்சேவலே. (உகூரு)

கனைந்ததங்காதலிற்கனவிற்கண்டிறந்
தினைந்தபோன்றிடையிடைநோக்கியின்குரல்
புனைந்தகம்புணர்பெடைபுல்லிமெல்லவே
யனந்தருண்முரன்றனவன்றிற்சேவலே. (உகூகா)

---

* கது, மலைப்பிளப்பு.

மன்னியமணித்தடத்தாம்பல்வாய்குடைந்
தின்னியன்மாருதமியங்குங்கங்குல்வாய்க்
கன்னியுங்காளையுமொழியக்காரிரு
டுன்னியவுலகெலாந்துயில்கொண்டிட்டதே. (உகஎ)

நள்ளிருளிடையதுநடப்பவைகறை
புள்ளிமிழிசையொடுபுகுந்துபோம்வழித்
தெள்ளியமதியவன்செய்ததீமைபோன்
மெள்ளவேகளையிருண்மெலிவுசென்றதே. (உகஅ)

கிளர்த்தனகிலுகிலுப்பரவப்புட்குலாம்
வளர்த்தனமகரயாழ்மருளியின்னிசை
தளர்த்தனகருங்கடற்றரங்கந்தன்னமே
விளர்த்ததுகுணதிசைவேலைவட்டமே. (உகக)

ஆணைசெய்தரசுவீற்றிருப்பவாயிடைக்
கோணைசெய்குறும்புகூர்மடங்குமாறுபோற்
சேணுயர்திகிரியான்கதிர்சென்றூன்றலும்
பாணியாற்கரந்தமுன்பரந்தசோதியே. (உசo)

விளித்தனபுலரிவெண்சங்கம்வேரியாற்
களித்தனகயமலர்த்தொழுதியம்மல
ரொளித்துமுன்னுறங்கியவொலிவண்டார்த்தன
தெளித்ததுசெறிபொழிற்றேம்பெய்மாரியே. (உசக)

தூண்டியசுடர்விளக்கன்னகன்னியோ
டாண்டகையழல்வலஞ்செய்யுமாரணி
காண்டகையுடைத்ததுகாண்டுமாமென
வீண்டியகதிரவனுதயமேறினன். (உசஉ)

உருகினபனிபொதிபாறையுக்கநீர்
பருகினபகலவன்பரவைவெங்கதிர்
கருகினகயம்வளராம்பல்கண்கொளப்
பெருகினதிசைமுகம்பெயர்ந்ததொத்தவே. (உசங)

வே று.

நிறைந்தார்கடிநல்விழைநீதியினு
லறைந்தாங்கதுசென்றதுசென்றவகை
சிறந்தாளொடுகோளைதிறத்துரையா
மறந்தாமதுவல்லவர்சொல்லுகவே. (உசச)

குருமாமணிவேய்குடைமும்மையுடைப்
பெருமானடிபேணியபூசனைநாள்
கருமால்களியானைகண்மேற்கனபொன்
னருமாமுரசார்ப்பவறைந்தனரே. (உசரு)

முரசும்முழவின்குழுவும்முடிசே
ரரசன்னகரார்குழுவுங்கெழுமி
விரையும்புகையும்விரவும்பலியின்
னிரையுங்நெடுவீதிநிறைத்தனவே. (உசசு)

பிடியுங்களிறும்பிறவுந்நெரிவுற்
றடியும்மிடவாமிடமின்றிலகுங்
கொடியுங்குடையுங்குளிர்சாமரமும்
முடியின்சுடரும்மிசைமூடினவே. (உசஎ)

வழுவின்னெறிவாமனமாநகர்வாய்
விழவின்னணமாகவிதித்தனராய்க்
கழுவும்மணிபோல்பவடன்கடிநா
ளெழுவும்முரசெங்குமியம்பினவே. (உசஅ)

நடைமாலைகடந்ததுநந்திமுகம்
புடைமாலைபுகுந்தனர்புண்ணியரீ
ரிடைமாலைநிகழ்ந்ததொரேத்தரவங்
கடைமாலைநிகழ்ந்ததுகாப்பணியே. (உசகூ)

திரைசங்கொலியோடுசிறந்தனபோன்
முரசங்கொலியோடுமுழங்கியெழ
வுரைசங்கொலியோடுணராவகையா
லரசங்கொலியோடெழுவார்த்தனவே. (உருo)

துணிமுத்தநகைத்துவர்வாயிளையார்
கணிமுத்தணிசிந்தியகண்விரவி
மணிமுத்தமணற்றிடலாகிமறைத்
தணிமுத்துமிழ்வீதியடுக்குநவே. (உருக)

துகிலார்கொடிபொங்கினதொங்கனிமிர்ந்
தகிலார்புகையாவியடுத்தமையாற்
பகலாறொடுவெந்திரவும்பகலே
யிகலாதுடனுகியியைந்துளவே. (உருஉ)

பலர்மன்னியபாடலுமாடலுமே
வலமன்னிமயங்கிமுயங்குதலா
னிலமன்னவருந்நெடுமால்வரைமேற்
குலமன்னவருங்குளிர்தூங்கினரே. (உருங)

அகல்வானிடையங்கிழிவானவரும்
முகிலாறிழிவிஞ்சையரும்முடுகிப்
பகலாறொடுதாரைபரந்தனபோற்
புகலாலொளிபோந்ததுபொன்னகரே. (உருச)

வடமேருமுகட்டலரும்மலரும்
புடமேருபொலிந்தலரும்மலருந்
தடமேலுளபொன்னவிழ்தாமரையுந்
திடமேவியவிஞ்சையர்சிந்தினரே. (உருரு)

அணிவேண்டினர்கொள்ளவடுத்தனவும்
மணிவேண்டினர்கொள்ளவகுத்தனவுங்
கணிவேண்டினநாள்கழியுந்துணையும்
பணிவேண்டினர்வீதிபரந்தனவே. (உருசு)

நறவுண்டொருபானகுவாரொருபாற்
புறவுண்டகலாவமிர்தம்புணர்வா
ருறவுண்டமரத்தொடர்பாலுறைவார்
பிறவுண்டையுமின்னனபின்னினவே. (உருஎ)

இழிகின்றனாவிஞ்சையரெத்திசையும்
பொழிகின்றதுபொன்மழையம்மழையுட்
சுழிகின்றதுதொல்சனவெள்ளமதற்
கொழிகின்றதுநாமுரையாததுவே. (உருஅ)

வேறு.

தாமரைமுகத்தமணியக்குடமவற்றுற்
சாமரைமுகத்தனமதக்களிறுதம்மேற்
பூமரைமுகத்தெறிபுனற்றிரைமுகந்து
தூமரைமுகத்தரசர்சென்றுபலர்சூழ்ந்தார். (உருக)

வண்டுபடுமாலையர்மடப்பிடிகடம்மேன்
மண்டயலுழைக்கலமழைக்கண்மடவார்க
ளெண்டிசையுமெங்குமிடமின்றிமிடைவுற்றூர்
கண்டவரைமேல்விரவுகார்மயிலொடொத்தார். (உசுo)

மாளிகைநிரைத்தமணிமாடநகர்முன்னு
லாளியரசேந்துமணியாசனமதன்மேற்
காளைகழல்வேந்தர்பலர்சூழ்தரவிருந்தா
னொளொடுபொலிந்தநகைமாமதியமொத்தான். (உசுக)

அங்கணயிராவணமிரண்டுடனெடுத்த
மங்கலமணிக்கலசநீர்சொரியவாடிப்
பொங்குதிரையொன்றிருபுயற்பொலியவேந்தித்
தங்குபுனல்பெய்ததடமால்வரையொடொத்தான். (உசுஉ)

மன்னர்கள்சொரிந்தமணிநீரருவியாடிப்
பின்னைமலர்மாரியகல்வானினவர்பெய்ய
மின்னவிர்விளங்குசுடர்வேல்விடலைமெய்யிற்
பொன்னணிபுனைந்துபுதுவேளிவிநகாபுக்கான். (உசுங)

மங்குன்மழைசூழுமணிமால்வரையின்மேலார்
கங்கைமுதனீரருவிகொண்டுகவிவான
மெங்குமிடமின்றியெழில்விஞ்சையரிழிந்தார்
நங்கைமணநீரணியைநாமொழிவதென்னே. (உசுச)

ஆறுகுலமால்வரையின்மேலருவிநீரும்
வீறுபெறுமெல்லியலையாட்டியபின்மீட்டு
நாறுமலர்நந்தனவனத்தனவொடெல்லா
வேறுபடுபூமழையுமாடவிளைவித்தார். (௨௬௫)

சாந்துசொரிமாரிபொழிகின்றதகையோடுந்
தேந்துவலைவீசியுளர்கின்றதொருதென்றல்
வேந்தருலகங்கொண்மிசைவிண்கொலிஃதென்று
மாந்தர்மருள்வாருமகிழ்வாருமுளரானார். (௨௬௬)

மங்கலவனப்பினதொர்கோடிமடிதாங்கி
யங்கலிவிசும்பினவர்தந்தவணிசேர்த்திப்
பங்கயமுகத்தவர்பலாண்டிசைபராவச்
செங்கயனெடுங்கணவள்வேள்விநகர்சேர்ந்தாள். (௨௬௭)

நங்கைமணவேள்விநகரெய்துவதன்முன்னைப்
பொங்குபுரிநூலனலர்தாமரைபுனைந்தார்
மங்கலவுழைக்கலநிரைத்தமணமாட
மங்கதுபுகுந்தழல்வளர்க்கியவமைத்தார். (௨௬௮)

சாந்துமெழுகிட்டதடமாமணிநிலத்தைச்
சேர்ந்துதிகழ்பொன்னியல்சலாகைநுதிதீட்டிப்
பேர்ந்துமொருகால்விரைபெருக்கிமெழுகிட்டா
னாய்ந்தமறையோதியதனாரிடமறிந்தான். (௨௬௯)

பருத்தமணிமுத்தமணல்பாய்சதுரமாகத்
திருத்தியொருவால்வளைபயின்றுதிடர்சூழத்
தருப்பையினுனித்தலைவடக்கொடுகிழக்காய்ப்
பரப்பினனதற்குமொருவால்வளைபயின்முன். (௨௭௦)

நான்முகன்வலத்துநல்லிடத்துமொர்கடித்தாய்
மேன்முகமிருந்துகுணபால்வெறுவிதாகப்
பான்முறைபயின்றபருதிக்கடிகைபாய்த்தித்
தான்முறையினோதுசமிதைத்தொழுதிசார்ந்தான். (௨௭௧)

ஆயிடைநடுக்கடமுளானமரராசா
னேயுடையனுயசுரமந்திரியெழுந்தான்
போயுடைவிசும்பின்மதியும்புகுதுகின்றான்
மேயுடையணிந்தகணிவேலையிதுவென்றான். (௨௭௨)

அங்குமுன்வளர்த்தவழலேகடவுளாக
மங்கையைமணக்குழுவின்முன்னைவரைவேந்தன்
கொங்குவிரிதாரவற்குநீரொடுகொடுத்தான்
நங்கையொடுநாண்மலருளாளையுமடுத்தான். (௨௭௩)

மன்னியழல்வேள்வியிலவற்குவலமாகப்
பின்னியதருப்பைகள்பிடித்தவைவிடுத்தாங்
கன்னமனையாளொடயில்வேலவனிருந்தான்
கன்னியொடியைந்தகதிர்மாமதியமொத்தான். (௨௭௪)

கந்துளுமிழுங்கரியசூழ்புகைகள்விம்ம
வந்துசுடரேந்திவலனேசுழலமாட்டி
யந்தணனுமங்கழலமைத்துமிகவேட்டான்
மைந்தனுமடநதையைமனத்தின்மிகவேட்டான். (௨௭௫)

பொங்கழல்செய்வேள்விமுறைபோற்றலுமெழுந்தா
னங்கையினணங்கினணிமெல்விரல்பிடித்து
மங்கையொடுகாளைவலனாகவருகின்றான்
கங்கையொடியைந்துவருகார்க்கடலொடொத்தான். (௨௭௬)

கைமலரின்வீரனவள்கைமுகிழ்பிடிப்ப
மெய்மயிரெதிர்ந்துமணிவேர்நுதலரும்பிச்
செய்யதனசீறடிகள்செவ்வனிடமாட்டா
வம்மயிலினணைதனையாவரறைகிற்பார். (௨௭௭)

பின்னுமுளவேள்விமறைபேசுமுறையாக
வின்னணமியன்றவெரியோம்புதொழிலார்க்குப்
பொன்னொடுமணிக்குவியல்போந்துபொழிகின்றார்
கன்னிதமர்காளைதமரென்றிவர்கலந்தே. (௨௭௮)

அங்கமிருமூன்றுமறைநான்கலகில்கற்ப
மிங்குமுடிவிஞ்சையெனவின்னகரைகண்ட
பொங்கெரியவேள்விவல்புரோகிதனவற்குச்
சங்கநிதியென்னநெதிமாரிதருவித்தான். (உஎகூ)

வானநெறியெங்கும்வளர்சோதிவடமீனைக்
கானமயிலன்னவடன்முன்னைநனிகாட்ட
யானுமிவள்போலுலகுகாணவியல்வேனோ
வீனமொடுநாணமிலனோவெனவிகழ்ந்தாள். (உஅ0)

வேறு.

ஏனமணவினைகள்செல்லவின்னணமெய்துகென்று
புனவரைகானமுன்னிமாதவம்போகுவாரு
மினமலிசெல்வமற்றுமிப்படிவருவதுண்டோ
கனவினுமென்னமாந்தர்கண்டுமீள்வாருமானார். (உஅக)

இடிபடுமுரசிற்சாற்றியேற்பவராசைதீரச்
சுடர்விடுமணியின்மாரிபொன்னொடுசொரியவேவிக்
கடிபடுநெடியமாடங்கன்னியோடேறினான்
முடிவுகொளுலகமெய்துமின்பமாமூர்த்தியொப்பான் (உஅஉ)

கழுமியகாகதுண்டங்கமழ்தொறுங்காளமேகங்
குழுமியதனையமாடக்குவட்டிடையமளிசேர்வார்
விழுமலர்ப்பிணையன்னாளும்விடலையுமேருநெற்றிச்
செழுமணிச்சிலைசென்றேறுந்தெய்வமாமிதுனமொத்தார். ()

பொன்னியல்கொடியினெல்கிப்பூவணைப்பொருந்தும்பாவை
கன்னிநாணேற்றங்காளைகண்களிகொள்ளநோக்கிப்
பின்னவளொடுங்கவாங்கிப்பெருவரையகலஞ்சேர்த்தி
யின்னகைமழலைகேட்பானென்கொலிம்மிகைநாணென்றான்.

நின்றநாணெனுநீள்கன்னிச்சிறைவிண்டுகாளைதிண்டோட்
குன்றினுற்செறிக்கப்பட்டகுமரிநீரமிர்தயாறு
சென்றுதேன்பகர்ந்துசெம்பொற் கலஞ்சிந்தித்தினைத்துவிம்மி
யன்றவனுர்வவெள்ளக்கடலிடையமுந்திற்றன்றே. (உஅடு)

பருவத்தாலரும்பிப்போதாய்ப்பையவேயலர்ந்துமுற்றி
மருவித்தேங்கனிகொண்டுள்ளான் மனங்கொளவழிந்தகாமத்
திருவொத்தகளியின்றீஞ்சாறூரவுண்டாரமாட்டா
ருருவத்தாலிருவராகியுள்ளத்தாலொருவரானார். (௨௮௬)

உலவியவலங்கன்மாலையொளிர்மலருடையமார்பிற்
குலவியமணிமுத்தோடுங்குவிமுலைக்குவடுபாயக்
கலவியுங்களிப்புங்காமப்புலவியுங்கலந்துசால
நிலவியமதுவுண்டார்போனெஞ்சுணமயங்கிவிட்டார். ()

அடிக்கலத்திருத்தியம்மென்புரிகுழற்சுருளைநீவி
முடிக்கலரணிந்துகாதன்முகிழ்நகைமுகிழ்ப்பப்புல்லிக்
கடைக்கணியாயகாளைகவான்மிசையிருத்திக்காமர்
குடிக்கணியாயகொம்புகேட்கமற்றிதனைச்சொன்னான். ()

வேறு.

செங்குவளைநாறுந்திருமேனிசெவ்வாய
மங்குவளையீரிதழுமாம்பலுமேநாறுமா
லிங்கிவளைமுன்படைத்ததேவனென்னின்னுயிரைப்
பைங்குவளைமாலையாட்களாய்ப்படைத்தானே. (௨௮௯)

அன்புருகுகாமத்தீமாட்டியளியவென்
னென்புருகவேவவிணைநெடுங்கட்பூம்பாவை
முன்பெருகுமுந்நீரமுதாய்விளைத்தினிய
மின்பருகுநுண்ணிடையார்மெல்லுருவங்கொண்டதே. ()

பானனெடுங்கணிவையேபகழியா
வேனிலுடைவேந்தன்வென்றிக்குநோற்றானே
யானுமளியற்றேனித்துணையோர்காலமுந்
தேனார்நறுமேனிதீண்டுதற்கேநோற்றேனே. (௨௯௧)

காவியாகின்றகருமாமழைக்கண்ணி
மேவியானுண்ணுமமிர்தாய்விருந்தாகி
யாவியாகின்றாளருமருந்துமாகின்றாள்
பாவியேன்பாவைக்கோராளேயாகின்றேனே. (௨௯௨)

செம்பவழமேய்ப்பத்திகழ்ந்திலங்குசீறடியின்
வம்பழகுநோக்கிவழிபடுவதேசாலு
மம்பவழவாயுமளகஞ்சேர்வாணுதலு
மெம்பவமோநுங்கயாமெம்மையறியேமே. (உகூங)

வண்டேமடந்தைமணிலயம்பான்மேவியிருந்
துண்டேயெனநுடங்குமுண்மருங்குநோவியீர்
தண்டேகாணீருந்தளிர்மேனிநாற்றத்தாற்
பண்டேபோல்வந்துபயிலாதுபோமினே. (உகூச)

கள்ளமடநோக்கிதன்னைக்கரந்தென
துள்ளத்தின்வைப்பினுருவமதுகாணேன்
மெள்ளவென்றோளணைவாளென்னும்விருப்பாரா
தெள்ளுமனத்தினுக்கெய்திற்றறியேனே. (உகூரு)

காதலால்வந்தென்கவான்மேலிருப்பினு
மேதிலார்போலுமிமைப்பினிமையாதே
போதுலாம்வாண்முகமேநோக்கிப்பொலிவேனென்
மாதராளுனும்யான்வாழுமாறோரேனே. (உகூசு)

வேறு.

உலம்பாராட்டுந்தோளவனொண்பூங்குழலாளை
நலம்பாராட்டிநாகிளமுல்லைகுவிக்கும்
வலம்பாராட்டிவந்ததோர்மாரிப்புயலொத்தான்
குலம்பாராட்டுங்கொம்புமோர்முல்லைக்கொடியொத்தாள். ()

தேனார்கோதைச்செங்கயல்வாட்கண்சிறைகொள்ள
வூனார்வேலானுள்ளமிழந்தானுழையாரை
மேனாள்போலமெய்ப்படமாட்டான்விளையாடுங்
கானார்சோலைக்காவகம்புக்கான்கமழ்தாரான். (உகூஅ)

தண்டாரீன்றுசெந்தளிரேந்தித்தழல்பூத்த
வண்டார்பிண்டிவார்தளிர்நீழன்மணிவட்டங்
கண்டாங்கேறிக்காரிகையோடுவிளையாடிப்
பண்டான்கொண்டபாவையர்பாடலிசைகேட்டான். (உகூகூ)

வே று.

வரைவேந்தன்மடமகளை மணியேர்மேனிநிறங்கொண்டு
விரையேந்துதளிரீனல்விழையாய்வாழிதேமாவே
விரையேந்துதளிரீனில்வேனிற்றென்றலலர் தூற்ற
நிரையேந்துவடுவீயேபடுதிவாழிதேமாவே. (கூ00)

அடிமருங்கினரசிறைஞ்சவாழியாள்வான்பெருந்தேவி
கொடிமருங்கினெழில்கொண்டுகுழையயல்வாழிகுருக்கத்தி
கொடிமருங்கினெழில்கொண்டு குழைவாயாயிற்பலர்பறிப்பக்
கடிமருங்கிற்புக்கலரேகாண்டிவாழிகுருக்கத்தி. (கூ0க)

வணங்கிவையந்தொழுநின்றமன்னன்காதன்மடமகள்போன்
மணங்கமழும்பூம்பாவைவளரல்வாழிநறுங்குரவே
மணங்கமழும்பூம்பாவைவளர்த்தியாயிவிளையாராற்
கணங்களோடுபறிப்புண்டிகண்டாய்வாழிநறுங்குரவே. (கூ0உ)

வே று.

இன்னணமிளையவர்பாடக்கேட்டலு
மன்னவன்மடமகண்முகத்துவாணிலா
மின்னியோரணிநகைமுகிழ்த்துமீள்வது
கன்னவிறோளவன்கண்கொண்டிட்டவே. (கூ0கூ)

உழையவரடிமுதல்பரவவொண்சுடர்க்
குழையவளொளிமனங்கவரக்கோடுயர்
மழைதவழ்மாலையமாடமேறினன்
முழையமரரியரசனையமொய்ம்பினன். (கூ0சு)

கல்யாணச்சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம் - கககூ0.

ஒன்பதாவது

அரசியற்சருக்கம்.

நாவியேகமழுந்தொங்கனகைமணிவயிரப்பூணு
ஞவியினகத்துளாளுமருவரையகலத்தாளுந்
தேவியேயாகவன்னதிருவொடுமிருவராவான்
பூவினுண்மடந்தைவந்துபுகுந்தவாறுரைக்கலுற்றேன். (க)

கண்மிசைகனிந்தகாதற்கனிபடுசெல்வமுந்நீ
ருண்மிசையுக்கோர்நச்சுத்துள்ளிவந்துறைப்பதேபோல்
விண்மிசையிழிந்துவந்தவொற்றனேர்வெஞ்சொன்மாற்ற
மண்மிசையிருந்தவிஞ்சைமன்னனைவணங்கிச்சொன்னான். ()

விரைசெலலிவுளித்தேரோய்விஞ்சையருலகமாளு
மரைசர்கடிகிரிவேந்தனச்சுவகண்டனேடுந்
திரைசெலவுரறிஞாலந்தின்னியகடல்களேழுங்
கரைசெலவருவபோனம்மேல்வரக்கருதுகின்றார். (௩)

அரைசர்கள்வருகபோகவதுபண்டேயறிந்ததன்றே
வரைசெறிசிங்கவேறுமணிவண்ணனெழித்தனான்றே
விரைசெறிபொழில்கொள்சோலைவிஞ்சையருலகிற்பட்ட
துரைசிறிதென்னலோடுமொற்றனுமுரைக்கலுற்றான். (௪)

அருளுமாறடிகள்கேண்மோவரியரசதனையாரு
மருளுமாறிளையகாளைவாய்பிளந்திட்டவார்த்தை
தெருளுமாறொருவன்கூறக்கேட்டலுஞ்சேணில்வாழ்வார்
வெருளுமாறுள்ளமெல்லாம்வெருளிமெய்விதலைகொண்டார்.

விஞ்சையருலகமெல்லாம்வெய்துறவிரிந்தமாற்ற
மஞ்சினன்மறைத்துச்சின்னாளமைச்சரிமஞ்சுவென்பான்
வஞ்சனைச்சீபமாயவார்கழலவனைக்கூவி
யெஞ்சலில்புகழினானுக்கின்னணமிசைத்தானன்றே. (௬)

சொரிகதிர்வயிரப்பைம்பூணரசர்கள்பலருஞ்சூழ
வெரிகதிராழியாள்வானினிதினிங்கிருந்தபோழ்தி
னரியதுகேட்கவென்னவரிகேதுவென்பானுங்குப்
பெரியதோர்வியப்புச்சென்றுபட்டதுபேசினானல். (எ)

கரியவன்வளர்ந்தவெள்ளையெயிற்றவன்காளமேகம்
பெரியதொன்றிரண்டுகொம்மைப்பிறைகவ்விருந்ததன்ன
னரியதங்கென்னையென்னையெனவரிகேதுசொன்ன
வுரையெதிர்கபிலவட்டக்கண்ணெரியுமிழ்ந்தமாதோ. (அ)

மடித்தவாயெயிறுகவ்விமருங்கினோர்வயிரக்கற்றூ
ணடித்தனனசனிவீழவருவரைநெரிவதேபோற்
படித்தலேடுங்கமற்றப்பரூஉத்திரள்வயிரத்தம்பந்
தொடித்தலேசிதைந்துநுங்கத்துகளெழுந்தொழிந்ததன்றே.

விஞ்சையரதனேக்கண்டுமெய்பொதிரெறிந்துவிம்ம
வெஞ்சினங்கனன்றுமீட்டும்விஞ்சையனவனேநோக்கி
வஞ்சனேமனத்தராயமனிசரைவலியரென்பா
யஞ்சினேபெரிதுமேடாவென்றனனசனியொப்பான். (க0)

நிலத்திடைமக்களாற்றனின்னேப்போலஞ்சுவார்க்கு
மலேத்துணேபெருகிக்காட்டுமெற்றதிங்கெம்மனோர்க்கோ
ரிலேத்தனுமில்லேமன்னேவென்றனனிரண்டுதிங்கள்
பிலத்திடைபொடித்தபோலும்பிறழ்ந்திலங்கெயிற்றினனே.

கனேகதிர்க்கடகக்கையாற்கற்றிரளுதிரவெற்றிச்
சினவழலெறிப்பநோக்கிச்சிவந்தனன்றெழித்தலோடு
மனநனிமயங்கிமற்றவிஞ்சையரஞ்சகின்ற
நனேமலரலங்கற்கேதுநகைகொண்டமனத்தனானன். (கஉ)

அடுகுரலரசசீயமதனேயோராம்பற்றுள்போ
னெடிவரையளவிற்கீறிநுனித்ததுவியத்தல்செல்லாக்
கடிவரையலங்கன்மார்பிற்காளேயேபெரியனென்று
தடவரையனேயதோளான்றன்னுளேவியந்துநின்றான். (கங)

இன்றிவனனலும்போழ்தினெதிர்நின்றுகனற்றியென்னே
சென்றவனூற்றநானேகண்டபின்றேறுமன்றே
யென்றுதன்மனத்தினெண்ணியியைந்தவாமுகமன்சொல்லிக்
குன்றுடையரசன்முன்னேக்கூப்பியகையனானன். (கச)

அமர்நனிதொடங்குமென்றீண்டயர்ந்தனிராகுமென்று
குமரனேக்குறித்தவெஞ்சொற் குறைசென்றுமுடியுமெல்லேத்
தமருளங்கொருவன்வந்துசக்கிரவாளந்தன்னு
ணமரதுகிலேயுநங்கைபோந்ததுநடுங்கச்சொன்னான். (கரு)

அடிகளிவ்வவனிதன்மேலிழிந்ததுமணங்கோடொப்பாள்
கடிவினைநிலையுமன்றேகண்டுவந்தொருவன்கூறச்
சுடுசொலிஃதொழிகவென்று துணைச்செவிபுதைத்துவல்லே
முடிமுதறுளங்கத்தூக்கிமுனிவினைமுடிவுகொண்டான். ()

பெருகினான்வெகுளிகண்ணுட்பிறந்ததுபிறங்குசெந்தீ
யுருகினான்போன்றுதோன்றமயிர்த்துளையுகுத்ததெண்ணீர்
திருகினானெயிறுசெவ்வாய்கறித்தனன்றிசைகளோடு
மருகினோர்நடுங்கநோக்கியழனகையடுத்துநின்றான். (கஎ)

மலைகளைமறித்துமற்றோர்மறிகடனடுவணிட்டவ்
வலைதிரைமகரமுந்நீரதுவிதுவாக்குவேன்கொ
லுலகினையுள்ளங்கைக்கொண்டுருளையாவுருட்டியீட்டென்
பலபுனைமடந்தைதன்கீழ்ப்பதித்திடுவேன்கொலென்றான். ()

அனன்றனன்றவைகள்பேசியமையுமவ்வரசர்தீமை
மனங்கொளப்படுவதாயின்மணிவரையுலகின்வாழுஞ்
சனங்களைத்திரட்டிப்பின்னைத்தக்கதொன்றறிவனென்றான்
சினங்கெழுகாலன்மற்றோர்காலன்மேற்சிவந்ததொப்பான். ()

சிறந்தெரியனலோடொப்பான்பணிகொண்டுதிசைகளோடி
யறைந்தனர்முரசிற்சாற்றியறைதலுமரசரெல்லா
மறைந்தனவுலகமென்னமாய்ந்தனதிசைகளென்னப்
பறந்தனர்விசும்புபோர்ப்பக்கடற்படைபரப்பிவந்தார். (உ௦)

மற்றவரடைந்துவெய்யோன்மலரடிவணங்கிநின்று
செற்றவனிருந்தவாறுஞ்செங்கண்டீயுமிழ்ந்தவாறு
மெற்றியவயிரத்திண்டோணெரிந்திடைகிடந்தவாறு
முற்றனபிறவுநோக்கியுள்ளங்கணடுங்கியிட்டார். (உக)

சுரியுளைத்துளைகளாவிவிடுகின்றசுழலுஞ்செங்கண்
கருமுகினுடங்குகண்போற்புருவங்கண்முரிந்துநீங்கான் [பா
பெரியதோர்முனிவுகொண்டான் பிறையெயிற்றரியோடொப்
னொரியினுள்விளியவுற்றார்யார்கொலோவளியரென்பார். ()

ஞாலமேற்றிரிந்துநாளுமுயிர்களைநடுங்கப்பார்க்குங், காலனைக்கதம்பட்டான்கொலன்றெனிற்கற்பமாள்வார், மேலெனக்கிருப்பார்போலுமெனவெகுண்டனல்கின்றான்கொல், வேலைநீருலகின்மற்றிவ்வெகுளிக்குமுதலென்னென்பார். (உ௩)

ஊழிகள்பெயர்க்கலுற்றிவ்வுலகினைப்பிறிதொன்றாக்கி
வாழுயிரொருங்குவாரிமறிகடனடுவட்பெய்வான்
சூழியதொடங்குகின்றதாங்கொலோசொல்லினீடோன்
றாழியான்வெகுளிக்குண்டோவாரிரையாவதென்பார். (உ௪)

தானவரரக்கர்பண்டேதஞ்சமாமிவற்குமண்மே
லூனவர்மனித்தரேகவுவனுக்கோர்துகளுமாகார்
வானவரிவற்குமாறாய்வருபவர்மதிப்பினில்லை
யெனவர்முனிவுசெய்வார்யார்பிறருரைமினென்பார். (உ௫)

இற்றதிவ்வுலகமென்பாரெரிந்தனதிசைகளென்பா
ரற்றனமகரமுந்நீரகம்புலர்ந்தொழியுமென்பார்
மற்றினிமொழியல்வேண்டாவருவனவறியலாகா
வுற்றபினறிதுமென்றாங்குரையொழிவாருமானார். (உ௬)

அச்சமோடுலகமின்றேயவிந்தனபொன்றுமென்பார்
நச்செரிநகையினாலேநடுங்கினதிசைகளென்பா
ரிச்சைகள்பிறந்தவாற்றால்வினையனவினையும்போழ்திற்
கச்சையங்களிநல்யானைக்காவலன்கனன்றுசொன்னான். ()

இரதநூபுரத்தையாள்வான்புதல்வியையெனைவஞ்சித்துப்
புரிமனுசர்க்கீவாக்கேபுகன்றனன்போலுமென்ற
வுரைதனக்குரைத்தவாறேயுரைத்தனனுலகமெல்லா
மிரைதனக்கென்றுமாற்றாவெரிபடுவெகுளித்தீயான். (உ௮)

முரசொலிமுழையினுள்ளான்முழங்குகின்றதனோடொப்ப
விரையொலிவிளங்குதாரான்விளம்பியவெகுளிமாற்ற
மரைசர்களாங்குக்கேட்டாரடிகண்மற்றிதற்கோவிவ்வா
றுரைசெலமுனிவதென்றேரொல்லொலியெழுந்ததன்றே. ()

செழுமலரலங்கன்மார்பன்செங்கண்டீயுமிழக்கண்டு
மெழுமலர்ந்தனையதிண்டோளிவைசுமந்திருப்பதென்னே
கழுகுபோர்க்களத்துவென்றுகதலிகைநடுதுமன்றேல்
விழவயர்விசும்பினோர்க்குவிருந்தினமாதுமென்பார். (௫௦)

ஏவதுசெய்துவாழும்யாமுளராகவெங்கோ
னேவதுசெய்தவேந்தர்நுனித்துயிர்வாழ்பவாயிற்
சாவதுபோகவாழ்க்கைதவந்தலைநிற்றலொன்றோ
வீவதுசெய்தலொன்றோநமக்கினிவிளைவதென்பார். (௫௧)

நாண்டொழின்மகளிர்முன்னுநகைக்கிளையாயத்துள்ளும்
வீண்டொழில்விளம்பியென்னைவீரங்கள்வெறியவாக
வாண்டொழில்புகுந்ததம்மாவதோவினிதாயிற்றென்று
தூண்டொழவளர்ந்ததத்தந்தோள்களைநோக்குகிற்பார். ( )

நாள்வடுப்படாமைநம்மைப்புறந்தந்தாற்குதவிநங்க
டோள்வடுப்படாதுதோன்றல்புகழ்வடுப்படுதலுண்டோ
வாள்வடுப்பிளவுபோலுங்கண்ணியைமகிழ்ந்தகாலை
கேள்வடுப்படரும்பூசல்கேட்டிரானுலையென்பார். (௫௩)

இனியிருந்தென்னைபாவமெழுமின்போய்ப்பொருதுமென்பா
முனிவனசெய்தவேந்தன்முடித்தலைகொணர்துமென்பார் [ர்
கனிவளர்கிளவியாளைக்கைப்பற்றித்தருதுமென்பார்
பனிவரையரசர்மாற்றம்பற்பலபரிதிவேலோய். (௫௪)

சினமெனப்பட்டதீயுட்பிறந்ததுசெருக்குநன்னீர்
மனவுணவுண்டுமாணப்பூணின்றவயிரவொள்வா
ளனலதொன்றகத்ததாகவாரமர்குருதிவேட்டுக் [ன்றான்.
கனல்வதோர்காலவொள்வாள்கடைக்கணித்தொருவன்சொ

தோள்களைப்புடைத்துவீக்கித்துணைக்கரங்கொட்டியார்த்து
வாள்களைத்துடைத்துநோக்கிவகைசெய்வதெளிதியார்க்கு
நீள்கதிரிமைக்குமொள்வாண்முகம்பெறநெருப்புச்சிந்தித்
தாள்களைவெதுப்பும்வெம்போர்தாங்குவதரியதென்றான். ( )

தானவரெனினுமிப்போரிழிந்துபோய்த்தரணிவாழு
மூனமருலகமாளுமூழியொன்றிதுவன்றாயில்
வானவருலகுமண்ணும்வந்துநின்வாயில்பற்றி
யீனமொடிறங்கக்காட்டியிடுவென்யான்றெளியிதென்றான். ()

வாளினற்செருவுண்டேனுமாயமற்றாகுமேனுந்
தோளினலாகுமேனுஞ்சொல்லெலாமொழிகமற்றக்
காளைதன்னுயிரினோடுங்கன்னியைக்கொணர்ந்துதந்து
தாளிலேயிட்டபின்றைத்தவிர்கநின்சீற்றமென்றான். (௩அ)

ஆளிகட்கரசன்பாங்கோர்குறுநரியறிவில்லாது
மீளிமைபெறாதுவெம்பிவெகுண்டெழுகின்றதென்றா
ளினுங்கள்போல்வார்நகைசெயப்படுவதன்றே
வாளொளிவயிரமின்னுமணிமுடிமன்னர்கோவே. (௩கூ)

ஆதலாலெங்களாலங்காவதொன்றில்லையாயிற்
போதுலாமலங்கன்மார்பபொருவதுபொருந்திற்றென்னுங்
காதலான்கனகசித்திரன்கட்டுரையதனைக்கேட்டே
கோதிலாமாரிபெய்தகோடையங்குன்றமொத்தான். (சு0)

மற்றவனுரைத்தபோழ்தின்வச்சிரகண்டனென்பான்
கொற்றவற்கிளையகாளைகோற்றொழிற்பாகம்பூண்டா
னிற்றதாலெங்களாண்மையாங்களுமிழிந்துநிற்பச்
செற்றதோர்படையுண்டாயிற்றென்றுகண்சிவந்திட்டானே.

மகரமால்கடலையல்லாற்சிறுகயமதலைசேரா
சிகரமால்யானைவேந்தேதானவர்செருவன்றாயி
னிகரலார்சேர்தம்மேனீசெலற்பாற்றன்றென்று
புகரெரியவிக்கலுற்றான்பொழிமழைபொழிவதொத்தான். ()

வேறுவேறாகிநின்றுவெஞ்சினஞ்செருக்கிவிஞ்சைக்
கேறனன்றம்பிமாருமக்களுமின்னபோல்வ
கூறினர்கூறலோடுங்குரையழலவிவதேபோ
லாறினனென்னைசெய்யுமாயபண்பதுவதானல். (சுஉ)

அரசர்கணெறியிற்கண்டீரயர்விழைப்பிலாமையென்று
முரசெனவதிரும்பேழ்வாய்முழங்கிசைமொழியிற்சாற்றி
வரைசெறிந்தனையதோளான்மந்திரசாலேசேர்ந்தா
னுரைசெறிந்தங்குப்பட்டசூழ்ச்சியுமுணர்ந்துபோந்தேன். ()

கன்னிதன்றிறத்துச்சீறிக்காவலன்கனலக்கண்டீ
ரென்னினிக்கருதுகின்றதென்றனனெரியுமாழி
மன்னவற்குணர்வுங்கண்ணுமாற்றமும்வலியுந்தோளு
முன்னவனமைச்சர்க்கேறுமவனரிமஞ்சுவென்பான். (சரு)

அணிநகர்மேககூடமதனையாண்டரியசெய்கை
துணிபவன்றாமகேதுசூழ்ந்தனன்சொல்லலுற்றான்
மணிவரைப்பிறந்துமாண்டவருங்கலமன்னர்கோமான்
பணிவரையன்றியாரேபெறுபவர்பகர்மினென்றான். (சசு)

வரைதன்மேற்றழலின்பேரோன்வளநகரதனையாளு
மரசனங்காரவேகனதனைக்கேட்டமூன்றுசொல்வா
னிரதநூபுரத்தையாள்வானிகழ்ந்தனன்பெரிதுநம்மைப்
பொருதவன்கிளையைமுந்நீர்ப் புறங்கரைப்படுத்துமென்றான்.

மல்லினன்மலர்ந்தமார்பீர்மறைந்துநாமிருந்துவல்ல
சொல்லினல்வெல்லலாமேற்சொல்லுமினின்னுமன்றி
வில்லினல்விரவுதானைச்செருவினுள்வீரந்தன்னல் [றான்.
வெல்லலாமென்னினென்னை விடுமின்போய்ப்பொருவலென்

பூவினும்பொருதல்வேண்டாசூழ்ச்சியேபொருந்தநோக்கி
யாவதுகாண்டலாகுமரசர்க்குநீதியென்று
சாவதையஞ்சுவார்க்குந்தகைமையில்லவர்க்குமன்றே
யோவுதலின்றியோதிவைத்ததங்கொருவனென்றான். (சகூ)

அழலவிரலங்கல்வேலோனவ்வரிசேனனென்பான்
கழலவன்காதற்றோழன்கனன்றவண்கருதிச்சொன்ன
மொழியெதிருலகமாள்வானுவந்தவன்முகத்தைநோக்கிப்
பழிபெரிதொழியச்சொன்னான்படைத்திறலாளனென்றான்.

பொருவதோவெளிதியாங்கள்பொருந்திறமுரைமினென்னே.
மருவியமனிதப்போரோவான்கெழுதெய்வப்போரோ
விருமையினியன்றபோரோயாதுநாந்துணிவதென்றான்
விரிசிறையுவணஞ்சேர்ந்தவென்றிநற்கொடியினானே. (ருக)

செப்பியமாற்றங்கேட்டே திறற்சிறீபாலனென்பான்
றிப்பியர்புகழுஞ்செல்வத்திருநிலையகமதாள்வா
னப்படித்தாயிற்கேண்மினறிந்தவரறைந்தவாறென்
றிப்படைநிலைமையோராமெனடுத்தெடுத்தியம்புகின்றான். ()

பொருபடைத்தொகையோர்மூன்று போர்த்தொழிற்றனுமூ
மருவுடைமனுடந்தெய்வமிருமையுமென்னமற்ற [ன்றே
வெருவுடைப்படையின்குப்பைமேலதுநான்குவீற்ற
திருபடையொழிந்துநின்றவிவையும்பாங்குடையவென்றான்.

அத்திரமாதியாகவோதியநான்குவிஞ்சை
தொத்தெரிசுடருமொள்வாளெனவிரண்டாகுமுன்னும்
வைத்தவுட்கடையதேனையொழிந்ததுபரமமாயை
யித்திறத்தினையவென்றானெரிமணியிமைக்கும்பூணான். (ருச)

படைக்கலவிகற்பும்போரின்பகுதியும்பரப்பினுங்க
ணிடைப்புகுந்துரைப்பிற்சாலப்பெருகுமஃதிருக்கவென்று
நடப்பதுமக்களோடுமக்கட்போர்நல்லவேனும்
புடைப்பிலபுகுதுமாயிற்புறனுரைபுணர்க்குமென்றான். ()

விஞ்சையர்பொருவராயில்விஞ்சையிற்பொருதுமன்றி
வஞ்சனையின்றிமக்கள்பொருபவேன்மக்கட்போரே
யெஞ்சுதலின்றியேற்றபொருதுமென்றின்னசூழ்ந்து
நஞ்சனற்குரைப்பக்கேட்டுநன்றதுதுணிமினென்றான். (ருசு)

ஆய்ந்தவரோடுபோதந்தாழியானருவிக்குன்றிற்
காய்ந்துவந்திறுத்தபின்றைக்கடிநகர்மதுதன்மேற்
சேர்ந்தெரித்திடுதுமென்றுதென்மலையரசர்சென்றார்
வாய்ந்துமற்றெழுந்தமன்னர்வரவவித்திருந்தாரென்றான். ()

ஒற்றனுங்குரைப்பக்கேட்டேயொளியவன்பெயரனேடுஞ்
சுற்றமாயவருஞ்சூழ்சீர்ச்சுரமைநாடுடையகோவு
மற்றவன்புதல்வர்தாமும்வருகெனவந்தார்மாற்ற
முற்றவாறறியச்சொன்னனொளிவரையரசர்கோவே. (ருஅ)

விச்சையின்செருக்கினாலும்வீங்குதோட்டருக்கினாலுங்
கச்சையங்களிற்றோடேனைக்கவனமாவலத்தினாலு
மச்சுவக்கிரீவனாதியரசர்களமன்றுவெம்போர்
கச்சிமேல்வருபவாயினன்றதுபோல்வதுண்டோ. (ருகூ)

எரியெனச்சுரிந்தகேசத்திருளெனத்திரண்டமேனிப்
பெரியனவளைந்தவெள்ளையெயிற்றினர்பிலங்கொள்வாய
ரரியனசெய்பவன்றேயசுரரென்றுருவங்கொண்டே
யிரிவனரோடுவாருணம்மையுமெண்ணிற்றென்பார். (கூ0)

எரிபொங்கவெழுந்தவெள்ளையெயிற்றிடையிலங்காக்குப்
புருவங்கணெரியவேற்றிப்புகுந்துதாம்வெருட்டும்போழ்தி
லுருவங்கள்பெரியவாறுமுள்ளங்கள்சிறியவாறுஞ்
செருவங்கண்விளைந்தபோழ்திற்காட்டுதுந்தெருட்டியென்பார்.

இமையவரரசன்றானுமிகல்செயக்கருதிவந்தா
லமையுமஃதஞ்சலாமேயாண்கடனதுவதான
நவையினருளரென்றஞ்சிநடுங்கினர்தமக்குநாளுஞ்
சுமைபெறுதோளும்வாளுஞ்சொல்லுமின்சுருங்கவென்பார்.

மானமர்நெடுங்கணார்தம்மனமெனவெஃகிமைந்த
ரூனமிலகலமூழ்கியுள்ளுறச்சிவந்தவொள்வா
ளீனமாமருங்கிறாதிரைக்கிடைந்தனல்பவின்று
தானவர்குருதிமாந்தித்தம்பசிதணியுமென்பார். (கூங)

ஆள்வரையனையதானையச்சுவக்கிரீவனென்னு
நீள்வரைமருங்கினின்றதிருவெனுமருவிநீத்தந்
தாள்வரையிழிந்துவந்துதகைமணிநீலவண்ணன்
வாள்வரையகலமென்னுங்கருங்கடன்மடுக்குமன்றே. (கூச)

ஆதலாலதனுணுமுமயிற்படைப்புணைகள்பற்றி
யேதிலாமன்னரென்னுமிருமரக்கடப்புவாரி
மீதுலாம்வெகுளியென்னும்வெவ்வழன்முழங்கமாட்டிக்
காதலார்கண்கள்பூப்பக்காய்த்துதுங்கைக்கோளென்பார். ( )

உயிரினுமதிக்கற்பாலதுள்ளப்பேருறையினுள்ள
தயிறரும்பணிக்குந்திண்மைமானநாணதனையேற்றி
வயிரவின்மனத்ததாகக்கையதுவையங்காக்குஞ்
செயிரில்வில்லதனைநோக்கிச்செங்கதிர்ப்பெயரன்சொன்னான்

அடுந்திறல்வெகுளிக்காற்றோடருக்கப்பேருடையமேகங்
கொடுஞ்சிலைகுலவக்கோலிக்குருதிநீர்வெள்ளமோடக்
கடுங்கணையென்னுந்தாரைகலந்துமேற்பொழியவேந்தர்
நடுங்கினார்பனிக்கும்போழ்தினம்மையுமறிவதென்றான். ( )

அலைகடல்வண்ணன்றம்முனலர்குழைபுரளுங்காதிற்
சிலைபடுவயிரத்தோளான்செங்கதிர்முறுவறோன்றி
யிலைபடுவயிரப்பைம்பூணிமையவரல்லராயின்
மலைபடுகிருமியோநம்மாறுநிற்பனமற்றென்றான். (சுஅ)

வானவர்மருளநாஞ்சின்மற்றிதுமடுத்துமாற்றார்
தேனமரகலமென்னுஞ்செறுவுசெஞ்சால்கள்போக்கி
யூனமர்குழம்புபொங்கவுழுதிட்டுவென்றிவித்தி
யேனவர்செவிகளாரவிரும்புகழ்விளைப்பனென்றான். (சுகூ)

இன்னனபிறவுமேனையிருநிலத்தரசர்பேச
மன்னவகுமரன்மாமன்மலரடிவணங்கிவாழ்த்தி
மின்னொடுவிளங்குவேலோயுளங்கொடுவிளம்பியென்னை
யென்னொடுபடுவதன்றேயினியிப்பால்வருவதென்றான். (எ0)

ஆங்கவன்மொழிந்தபோழ்தினைமையுமிஃதிழிவதன்றே
தேங்கமழலங்கன்மார்பவினிச்சிறிதுண்டுநின்ற
தோங்கியவிஞ்சைநின்னுள்ளத்துக்கொள்ளற்பால
வீங்கிவையென்னவோடுமிறைவனைத்தொழுதுகொண்டான்

மந்திரவெழுத்துவள்ள லுள்ளத்துப்பொறித்தபோழ்தே
* யந்தரவிசும்பிற்றெய்வமனுகினபணியென்னென்று
வெந்திறல்விஞ்சைக்கேற்றவியன்சிறப்பியற்றிவேலோ
னுந்தொழில்புகுந்தபோழ்தினைக்குமினெம்மையென்றான்.

ஓதியவிஞ்சைவாய்ப்பவுலகடிப்படாதுநின்ற
காதிசாலமரகற்பமாமெனவமருங்காலைத்
தூதுவருருவக்காளைசெவிசுடுசரம்பெய்தூணி
மாதிரத்தொசிந்தவேபோல்வந்தொருங்கிருவர்நின்றார். (எ௩)

பொன்னவிர்திகிரியாளும்புரவலருரைப்பவந்த
மன்னவன்றமரம்யாமேவாய்மொழிகேண்மின்மன்னீர்
கன்னியைத்தருதிரோவக்கன்னியைமகிழ்ந்தகாளை
யின்னுயிர்தருதிரோவிவ்விரண்டிலொன்றுரைமினென்றார்.

வேறு.

கடுத்தவர்கன்னிபேருரைக்கக்கண்களுட்
பொடித்தனபுகைத்திரள்பொழிந்ததீப்பொறி
யடுத்தெழுகின்றதோராவியாரழன்
மடுத்ததுமனத்திடைமைந்தற்கென்பவே. (எ௫)

கண்கனலுமிழ்ந்துதம்புலமுங்காணல
வெண்கதிர்மணிமுத்தம்விதிர்க்குமேனியன்
புண்களுளெஃகெறிந்தனையபுன்சொலால்
விண்களைவெதுப்பினன்வீரனென்பவே. (எசு)

நகுதொறுமழற்கொடிகடுங்குநுண்டுளி
யுகுதொறுமயிர்த்துளையுயிர்க்கும்வெம்புகை
புகுதொறுஞ்செவிசுடுபுன்சொலாரழன்
மிகுதொறும்விசும்புறகிமிர்ந்துகாட்டினன். (எஎ)

தோற்றமுஞ்சுடரொளிவடிவுமுன்னிவா
வேற்றுமையுடையவாய்விரிந்துதோன்றின
மாற்றமஃதொழிந்தனன்மனித்தனன்மையைத்
தேற்றினன்றிருமகிழ்தெய்வக்காளையே. (எஅ)

---

* யந்திரவென்றும்பாடம்.

மாண்டனமாற்றலர்நாள்கள்பூமக
ளீண்டுவந்திவனொடுதிளைக்கலுற்றனள்
காண்டுமிக்காளைதன்கண்ணிப்போரெனா
வீண்டினர்விண்ணிடையமரரென்பவே. (எகூ)

தூதுவர்முறைப்படுந்தொன்மையாலிவண்
டூதுரைகொணர்ந்துநஞ்செவிகள்சுட்டவிப்
பேதையர்பிழைத்ததுபொறுக்கல்வேண்டுமாற்
போதலேபொருளிவர்போகபோகவே. (அ0)

வில்லவன்மொழிதலும்வீரவேந்தர்க
ளொல்லெனவொலித்தெழுந்துடன்றுசொல்லுவார்
கல்லுயர்கருவரைகருதியாமிவை
சொல்லியதெனச்சிலர்சுருங்கச்சொல்லினார். (அக)

ஆழியுமகலத்ததிருவும்வாங்கியிப்
பாழியந்தோளினான்பாலவாக்கினா
லேழையுமெம்மையுமறியுமென்றனர்
வாழைமேல்வயிரங்கூர்த்தனையமாண்பினார். (அஉ)

வாணிலாமணிநகைமுறுவலாடிறத்
தேணிலாரியம்புவதியம்பினல்லது
காணலாமெல்லையுட்பகர்ந்துகட்டுரை
பேணலாம்பிறபிறபீடுகொண்பதே. (அங)

கலைமிசையின்னியசொற்கன்னிகாளைதன்
னிலைமிசையலங்கன்மார்பிசையக்கேட்டுமோர்
மலைமிசைமறைத்துவாயுரைக்கும்வல்லதில்
சிலைமிசைத்தோளினான்சேவகங்களே. (அச)

துன்னிவந்திவனடிதொழுவனேலுயிர்
தன்னதாமன்றெனிற்றனதன்றாதலான்
மன்னுயிருவக்குமோமானம்வேண்டுமோ
வென்னவனுவப்பதென்றெண்ணிவம்மினே. (அ௫)

என்றவர்மொழிதலுமெழுந்துதூதுவர்
சென்றனராயிடைதெய்வவாய்மொழி
வென்றிவீற்றிருக்குமிவ்விடலையேயென
நின்றதுநிலமகள்பரிவுநீங்கினாள். (அசு)

வரிவளைமுரன்றனவானதுந்துபி
திரிவனவறைந்தனசெங்கண்டீப்பட
முரிவன்வீரர்தம்புருவமுரிவிற்
பரிவிறையின்றிவன்பாடிவட்டமே. (அஎ)

ஆளியேறனையவனணிபொன்மேனிமே
னீளொளிதவழ்ந்ததுநெடுங்கணேழையர்
தோளுமங்கிடவயிற்றுடித்தவீரர்கை
வாளும்பூநின்றனமலர்ந்ததுள்ளமே. (அஅ)

அரசிளங்குமரனையனற்றுமாற்றலர்
முரசினுண்மணியரவுறைந்தமுத்தணி
நிரைசுடர்நெடுங்குடையகடுநெய்கனி
பிரசங்கள்புரைபுரைவிலங்கப்பெய்தவே. (அகூ)

கதிர்மணித்தேர்க்கொடிஞ்சேறிக்காக்கைக
ளெதிரெதிர்சிலம்பினவெரிந்தமாதிர
முதிரநீர்ப்புதுமழைசொரிந்ததுச்சியி
னதிர்தருகவந்தங்களாடியிட்டவே. (கூ0)

விடலருமியல்புகடிரிந்துமெல்லியன்
மடவரலவரொடுமாறுபட்டனர்
படவரவல்குலார்காதிற்பையெனச்
சுடர்தருகுழைகடாமழிந்துசோர்ந்தவே. (கூக)

தூவொளிமணிமுடிசுடருங்கிம்புரி
நாவலைக்கொண்டனநாமவென்றிவேல்
பூவொளிமழுங்கினபோர்செயாடவ
ரேவிலைகொடுஞ்சிலையிற்றுவீழ்ந்தவே. (கூஉ)

உள்ளடியுமித்துமித்தழன்றமேனியுங்
கள்ளவிழ்கண்ணியுங்கரிந்தகண்களு
மெள்ளுநாக்கிடவயிற்றுடித்தவேழையர்
வள்ளிதழ்க்கருங்கணும்வலந்துடித்தவே. (கூங)

வானமீனுச்சியுணின்றமாற்றலர்
தானையுணடுவுவீழ்ந்ததிரத்தங்களுக்
கூனமுண்டென்பதையுணர்ந்துமுள்ளிடை
மானமஃதொழிந்திலர்மறங்கொண்மன்னரே. (கூச)

வேறு.

போகியதூதுவர்பொன்னவிராழியொ
டேகியநாளுடையாற்கிதுவாலென
வாகியவாய்மொழிகூறலுமாயிடை
நாகமழுன்றெறிநச்செனநக்கான். (கூரு)

மண்டணிமானிலமன்னரைமால்வரை
யொண்டொடிதாதையொடேயிர்வெளவுபு
திண்டிறல்பேசியவச்சிறியானையுங்
கொண்டணிர்கூடுதிரோகடிதென்றான். (கூசு)

ஆழியினதுகூறலுமாயிடை
வாழியரோவெனமால்வரைவாழ்வபவர்
சூழியமாவொடுதேர்பலதேர்பல
தாழலர்பண்ணினர்தாமுமெழுந்தார். (கூஎ)

காரணிகண்முரசார்த்தகறங்கின
நீரணிசங்கிரைத்தனவெம்பறை
தாரணிதானைசிலம்பினதாழ்ந்தனர்
போரணிவிஞ்சையர்பூமியின்மேலே. (கூஅ)

வேறு.

குடையுங்கொடியுங்குளிர்சாமரையும்
படையும்முடியும்பலசின்னமுமே
யிடையும்புடையும்மிருபாலகமும்
மடையும்படையும்மறிதற்கரிதே. (கூகூ)

வேறு.

பொன்றவழ்தேர்கலிமாவொடுபோதக
மென்றிவையெங்குமிடம்பிறிதின்றி
நின்றனநின்றதுவாட்படையப்படை
சென்றுபெருந்திசையார்த்தனர்சேர்ந்தார். (க00)

கொண்டல்கிளர்ந்துபரந்துகுவிந்தலை
மண்டுவபோன்மணமாநகர்முன்னி
விண்டவழ்மின்னிடுவாளினர்வில்லின
ரெண்டிசையும்மிருள்கூரவிழிந்தார். (க0க)

வேறு.

படையென்றலுமேபடைபாரதுவு
மிடையின்றியெழுந்ததிரண்டுகடல்
விடையின்றிவெகுண்டெழுகின்றனபோற்
புடையின்றிநிரந்தனபோர்த்தொழிலே. (க0௨)

வேறு.

காரொடுகார்கடலோடுகருங்கட
னீரொடுசென்றெதிர்நேர்வனபோல்வன
தேரொடுதேர்கலிமாவொடுமாபல
போரொடுவந்துபுகுந்தனவன்றே. (க0௩)

வேறு.

இலையேரயில்வாளியொடெண்டிசையுஞ்
சிலையேயெனவுண்டுசிலைத்தொழுதி
மலையேமலையோடுமலைந்தனபோற்
கொலைவேழமொடேற்றனகுஞ்சரமே. (க0௪)

கொடிமேலுடையானைகள்கும்பமுதைத்
தடிமேலனவாகவெழுந்தரசர்
முடிமேலனவாமுகின்மேலனவாய்ப்
படிமேலனவாயினபாய்பரியே. (க0௫)

ஒருபான்முடிமேலுருளாழியுதைத்
திருபாலுமெழுந்தெறிபாறுசெலப்
பொருபாலவர்கண்சுழலப்பொருதேர்
வருபாலறியாமைமயங்கினவே. (க0௬)

நெறியார்கிரைமாவொடுதேர்களொடுத்
தெறியாவுதையா நுதலேறுகரம்
பறியாமுறியாப்படையோர்படையுட்
செறியாமதயானைதிரிந்தனவே. (க௦எ)

கடுநீரவர்கண்ணெரிகொண்டுகனன்
றிடிநீருருமின்னெதிரேயெறிய
வடிநீரென * வானிடையேமுரியாப்
படுமீனெனவீழ்ந்துபதைத்தனவே. (க௦அ)

வடிநூனுதிகவ்வியவாளையொடும்
விடுமீனெறிதூண்டில்விசைத்தனபோ
னடுநாணிடையேறியவம்பினொடு
நெடுநாணறவிற்கணிமிர்ந்தனவே. (க௦௯)

வேறு.

ஆரழலான்பெயரானணிவெஞ்சிலை
போரழல்வார்கணைமாரிபொழிந்தது
சீர்கெழுவிஞ்சையர்செங் † தடிநுந்துபு
நீர்கெழுவெள்ளமிரந்ததையன்றே. (கக௦)

தென்மலையார்திறன்மன்னவன்மன்னிய
வின்மலைவார்தனியின்மையின்விஞ்சையர்
பொன்மலையொன்றொடுபோர்செயமேவிய
மன்மலைபோலவெழுந்துமலைந்தார். (ககக)

கோளெனநாளெனமின்னுபுகுன்றெறி
வேளனையான்மிசைவிஞ்சையர்வெஞ்சுடர்
வாளினர்வில்லினர்மால்வரைபோல்வன
தோளினர்தாளினர்தோன்றினரன்றே. (ககஉ)

தோன்றியவிஞ்சையர்மேற்றொடுவெங்கணை
கான்றதுதிண்சிலைகான்றலுமேதிசை
மான்றதுமங்குல்பரந்ததுகாரிரு
ளூன்றதுகண்ணலர்நண்ணலரானார். (கக௩)

---

* வாளிடையென்றும்பாடம். † தடி—ஊன்.

தூணிமுகத்ததுசோர்விலொர்கையொரு
பாணிமுகத்ததுபண்புறுவெஞ்சிலை
வேணுமுகத்ததுமண்டலம்வெங்கணை
காணுமுகத்ததுவோவுணர்காலே. (ககச)

ஒன்றுதொடுத்ததொராயிரமாம்பல
வென்றுதொடுத்தனவெண்ணிலவாஞ்சர
மன்றுதொடுத்தவனெய்தனவையக
நின்றுதொடுத்துநிரந்தனவன்றே. (ககரு)

விண்மிசையேறியவெஞ்சரம்விஞ்சையர்
கண்மிசையேறலுமேகடிதேதிசை
யெண்மிசையின்றியிருண்டனவோவென
மண்மிசைவீழ்ந்துமயங்கினரன்றே. (ககசு)

வேறு.

இருள்பாயினவாலிதுவென்னெனவே
மருள்வார்வெருள்வார்மறைவார்மறிவார்
தெருள்வார்திரிவார்செருவார்கணையா
லுருள்வார்களுமாகியுடைந்தனரே. (ககஎ)

வேறு.

உடைந்திடுபடையிடையொலிகொண்மால்வரை
யிடைந்திடும்படியெழுந்திடறியேகினர்
படர்ந்தொடினுடன்றெழுபணிகள்போற்பகை
கடைந்திடுங்கடுந்திறற்காலவீரரே. (ககஅ)

இடுதவிசொடுதொடர்பிரியவெந்தகத்
தடுசரம்படுதொறுமலறிவாலதி
நெடிதெனநிறுத்திநீருகுத்துநீள்செவி
மடிதரமுடுகினமானயானையே. (ககக)

முரசுகளுடைந்தனமுடிகண்மூழ்கின
வரசுகளவிந்தனவரவத்தேர்க்குழாம்
விரைசெலவிவுளிகளிடறிவெந்தடி
நிரைசெலவிழ்ந்ததுகுருதிநீத்தமே. (கஉ0)

காலெதிர்கடலுடைந்திட்டதொப்பநம்
பாலதுபடையுடைந்திட்டதின்றென
மாலெதிர்கடற்படைமானவேந்தனைக்
கோலெதிர்கையவன்றொழுதுகூறினன். (க௨க)

நூற்பயம்பலவொடுநுணங்குகேள்வியே
போற்பயம்பலவொடுபுகழ்களேதரும்
வேற்பயங்கொண்டனர்விரவலார்நமர்
காற்பயங்கொண்டனர்காலவேலினாய். (ச௨௨)

பெரியவாய்ப்பிறையெயிறிலங்காக்குநக்
குரியவாளெரியெழவோச்சிநம்மொடு
* பொரியவர்தார்களும்புறந்தந்தாரினி
யரியதென்னெனாக்காரவனிமன்னரே. (க௨௩)

கலையினைக்கடந்தசொற்கன்னிகாதல
னலையினுக்குடைந்திலராக்கன்கையதோர்
சிலையினுக்குடைந்துதஞ்சிறுமைநாணிநம்
மலையினுக்கடைந்திலர்மானமன்னரே. (க௨௪)

ஒன்றுவில்லிரண்டுதோளொருவனெய்யவே
யின்றுநம்படையுடைந்திட்டதாய்விடி
னென்றுபோர்நமர்களதென்றுநக்கனன்
குன்றுபோற்பெருகியகுவவுத்தோளினான். (க௨௫)

இரதநூபுரத்தின்மேலெழுந்தவேந்தரும்
பொருதுதாமழிந்தமர்புறக்கிட்டோடினா
ரிரிதினின்விளைவதையன்றியாவருங்
கருதியமுடிப்பவரில்லைகாண்மினே. (க௨௬)

பாழிப்போருடைந்தனர்பகைவர்க்கின்றென
வாழிப்போர்த்தடக்கையாற்கவர்கணீர்மையைத்
தாழிப்போர்விலன்றமனொருவன்கூறினா
னூழிப்பேரெரியுணெய்யுகுத்தவொப்பவே. (க௨௭)

* பொரீஇயவென்பதன்விகாரம்.

விண்மிசைசென்றவர்மெலிவும்வேற்றவர்
மண்மிசைசென்றவர்மறிந்தமாற்றமும்
புண்மிசையெஃகம்புக்கொளிப்பபோன்மனத்
துண்மிசையொழிபடையாகியூன்றவே. (கஉஅ)

இருத்தினியென்னையீங்கெழுகவென்றுபோய்ப்
பெருந்தகையருங்கலப்பெயர்கொள்குன்றின்மேற்
பரந்தனபடையொடுபொடிவிட்டனன்
கருந்திரண்மூகில்புரைகாளமேனியான். (கஉகூ)

அச்சுவக்கிரீவனுக்கிளையராயினோர்
கச்சையங்கருங்களியானைவல்லவர்
விச்சையர்கடற்படைபரப்பிவிண்மிசை
நச்செரியுமிழ்தருநகையர்தோன்றினர். (கநூ0)

இளையருட்பெரியவன்சொல்லுமெம்மிறை
யுளைவனசெய்தவருயிரைமற்றவர்
கிளையொடுங்கீண்டரசாண்டுமென்றெனில்
வளையொடுந்தலைமுடித்திருந்துவாழ்துமே. (கநூக)

மாலுமாங்குடையர்கொன்மனிதர்நம்மொடு
போலுமாற்பொரலுறுகின்றதென்றுதன்
கோலவால்வளையெயிறிலங்கக்கூறினன்
நீலமாமணிக்கண்டனென்னுநேரிலான். (கநூஉ)

மூளைந்தவாளெயிற்றவர்முலைகள்பாய்ந்துதேன்
விளைந்ததார்வெறிகொளவைகும்வேற்றவ
ருளைந்தபோர்நிலத்தினுள்ளுருள்பவென்றனன்
வளைந்தவாளெயிற்றவன்வயிரகண்டனே. (கநூந)

ஒத்திலங்கொண்சிறையுவணன்றன்னொடு
பைத்திலங்கரவுகள்பகைப்பபோன்மெனக்
கைத்தலங்கையொடுபுடைத்துநக்கனன்
ஜொத்திலங்கலங்கலான்சுகண்டனென்பவே. (கநூச)

தம்பியர்மொழியெனுந்தயங்குமாரியால்
வெம்பியகோடுமனங்குளிர்ந்துவெய்யவ
னம்பெயர்முனிந்தவர்நயந்தமண்மிசை
நும்பெயர்கிறுத்துமினென்றுநோக்கினன். (கநரு)

நஞ்சினைநஞ்சுசென்றெரிக்கலுற்றபோல்
விஞ்சையர்வெஞ்சினம்பெருக்கிமேல்வர
வஞ்சமின்மணியொளிவண்ணன்றானையு
மெஞ்சலின்றெழுந்தெதிருன்றியேற்றதே. (கநசு)

விண்ணினதளவுமேல்வந்தவேற்படை
மண்ணினதளவுமாறேற்றவாட்படை
கண்ணியகடற்படையிரண்டுதம்மையு
மெண்ணினிநமக்கெளிதாவதில்லையே. (கநஎ)

கடலிரண்டுளவெனிற்கடுக்குமக்கட
லிடைநிலமுடைமையினென்றுமொப்பில
வடலரும்படையவையிரண்டுமெவ்வழி
யடலரும்படையவையிரண்டுமொக்குமே. (கநஅ)

திண்டிறற்றேர்களேசெறிந்தவென்னவுங்
கொண்டபோர்வேழமேகுழீயவென்னவும்
விண்டவழ்புரவியேமிடைந்தவென்னவுங்
கண்டவர்கண்டுழிக்கலந்துதோன்றுமே. (கநகூ)

கைவலப்படையினர்கழலர்கச்சையர்
செவ்வலர்க்கண்ணியர்செங்கணுடைய
ரிவ்வுலகிவர்க்கிடமில்லைமுன்னிவ
ரெவ்வுலகுடையவரென்னத்தோன்றினர். (கசo)

அன்றுபோர்மலைந்ததுதானையாயிடைச்
சென்றுபோர்படுமிடந்திசைகளின்மையா
னின்றுபோராடவர்நேரொப்பார்களோ
டொன்றுபோருலகினையூழியொத்ததே. (கசக)

பேரினும்பெருகியசின்னந்தன்னினுந்
தாரினுமாறுமாறெறிந்துதம்முளே
தேரினுந்தேரினுந்திளைக்கின்றார்சிலர்
காரினும்பெரிதவர்கணைபெய்மாரியே. (கசஉ)

தாளிடைமிடைந்தனதாள்கடம்முளே
தோளிடைமிடைந்தனதோள்கடோளிடை
வாளிடைமிடைந்தனவாள்கண்மற்றிவை
நாளிடைப்படுங்கொலோநாங்கள்சொல்லினே. (கசங)

குடைநிலமறைப்பவுங்கொடிகளோப்பவு
மிடைநிலமிருண்மெழுக்கிட்டதாயிடைப்
படைநிலவிலங்கவும்பணிகண்மின்னவு
மிடைநிலமிடையிடையிலங்கித்தோன்றுமே (கசச)

கருப்புடைக்கைகளாற்புடைத்துக்கண்களு
ணெருப்பொடுநெருப்பெதிரெறிப்பயானைகண்
மருப்பொடுமருப்பிடைமிடைந்துமான்றரோ
பொருப்பொடுபொருப்பவைபொருவபோன்றவே. (கச௫)

கறங்கெனக்காலசக்கரங்கடாமென
மறங்கிளர்மன்னர்தம்மகுடநெற்றியு
முறங்கவில்கடாக்களிற்றுச்சிமேலுமாய்த்
திறங்கிளர்புரவிகடிரிதர்கின்றவே. (கசசு)

செம்பியல்கிடுகினசெம்பொற்றட்டின
வம்புபெய்தூணியவரவத்தேர்க்குழாம்
வெம்பியகணைமழைவிரவிவில்லொடு
வம்புபெய்மழைமுகில்பொருவபோன்றவே. (கசஎ)

இன்னவாரின்னுழியின்னசெய்பவென்
றென்னவரறிவுமங்கிடைபுகாவகை
மின்னவிரெஃகினுமிடைந்தவாளினு
மன்னவர்செருத்தொழின்மயங்கியிட்டவே. (கசஅ)

வே று.

அச்சமுடையாரகல்கவாற்றுபவரேற்க
வெச்சமில்குடித்தலைவர்போகவெனவெங்குங்
கச்சையர்கருங்கழலர்காலணையுநோனார்
வெச்செனவிழித்துவிறல்வீரர்திரிகின்றார். (கசசுகு)

ஏற்றவரிமைப்பினுமிகழ்ந்தெறிதல்செய்யார்
தோற்றவர்புறக்கிடைதொலைந்தவரைநோக்கார்
வேற்றவரைவீரநெறிகாண்மினிதுவென்று
தேற்றுவனர்போலவுணர்சென்றுதிரிகின்றார். (கருo)

தாருடையமார்பினிடைசார்கணைகுளிப்ப
வேரொடுபறித்தனரெழுத்துவரிநோக்கிப்
பேரொடுறுபீடுடையனாரெனவினவி
நேர்படுதுமென்றுசிலர்நேடுபுதிரிந்தார். (கருக)

கேடகமிடத்ததுவலக்கைகிளரொள்வா
ளாடகமடுத்தவணிபூணனலர்தாரான்
றோடகமடுத்ததுதைகண்ணியொடுதுன்னு
நாடகமடுத்தொருவனூர்திநனிவந்தான். (கருஉ)

வெறிமின்விரிகின்றவிறலாழியிறைதோழ
னறிமின்பெயர்யானவ்வரிசேனனெனநின்றே
னெறிமினெதிரென்னொடிகல்வல்லிருளராயின்
மறிமினதுவன்றியுயிர்வாழலுறினென்றான். (கருங)

அங்கவன்மொழிந்தமொழிகேட்டலுமருக்கன்
வெங்கணைதெரிந்ததுவிலக்கிவிறல்வெய்யோ
யிங்கிவனினக்குநிகரோவெனவிசைத்தே
பொங்குபுலித்தேர்ப்பெயரன்போந்துபொரலுற்றான். (கருச)

பொன்னையணிகொண்டபுனைகேடகமெடுத்து
மின்னையுமிழ்கின்றசுடர்வாண்மிளிரவீசி
நின்னையறியாதவர்கணின்றிரியவந்தா
யென்னையறியாயறியினித்தவிர்தியென்றான். (கருரு)

நின்னையறிவன்பெரி துநின்முறையுளாய
கன்னியையோர்காளைபிறனெய் துவ துகண்டு
மன்னுமணவில்லுள்வயிறாவயில்கின்றாய்க்
கின்னுமுளவோபுதியவென்றுமிகாக்கான். (கருசு)

கன்னியர்தம்பான்மைவழிசெல்பவதுகண்டாய்
முன்னியமொழிப்புலவர்நூன்முறைமையேடா
வன்னதறியாதவனயக்கிரிவனன்றே
யென்னையறியாமைநினக்கின்னுமுளதென்றான். (கருஎ)

வாயுரையிருக்கமவாளிஞெளிவாயாற்
றீயுரைசெருத்துமலேகென்றுசெயிர்கொண்டு
காயெரிவிழித்தனர்களித்தனர்தெளித்தார
மாயிருவிசும்பிடைமடுத்துமலேகுற்றார். (கருஅ)

தங்கொளிதயங்குமணிகேடகமுமேனைச்
செங்களிமயிர்ப்புளகசேடகமுமேந்தித்
திங்களொளிஞாயிறுதினைத்திருவிசும்பி
னங்கண்மலேகின்றவுளவேலவையுமொத்தார். (கருகூ)

போரிகலியாரமொடுபூண்மணிகண்மின்ன
நேரிகலும்வாள்களொடுகேடகமிழற்றச்
சாரிகைகறங்கெனமலேந்துதனிசுற்றி
நீரகவளாகமடுசக்கரமிகர்த்தார். (கசுo)

ஓவிலயில்வீசுமொருவன்னதுவிலக்குங்
காவலொடுமீளுமொருவன்னவர்கருத்தி
னுவதுவன்றியயனின்றவர்கள்காணும்
பாவனையரல்லர்பலபாடியினியென்னே. (கசுக)

கொங்கெரியிரும்பெறிஞர்கோற்செய்களஞெத்தும்
வங்குவனவேங்கைமலர்கால்சிதர்வபோன்று
நுங்கியவர்வீசுமொளிவாணுதிகடாக்கிச்
சிங்கினதழற்பொறிசிதர்ந்ததிசையெல்லாம். (கசுஉ)

ஆளமொடற்றகையனுயவரிசேனன்
றோளொடுதுதைந்தெறியும்வாளதனைநோக்கிக்
கோளொடுமெடுத்தகுளிர்மாமதியமேய்ப்ப
வாளொடுமெடுத்துமணிகேடகமறைத்தான். (ககூங)

ஆங்குமுன்னெறிந்துபெயர்கின்றவரிசேனன்
பூங்கமழலங்கலுடைமார்பமிருபோழாய்
நீங்கவெறிந்தானெடியமாற்கிளையகாளை
யோங்கியவிசும்பினவர்கண்டனரொளித்தார். (ககூச)

வேறு.

அழலான்பெயரவன்மைத்துனனரிசேனனையெறியக்
கழலான்கடலொளியான்றமர்கலந்தார்த்தனர்கரிய
கிழலான்றமர்கரிந்தார்சிலரிரிந்தார்பலர்நெரிந்தார்
தழலாரயில்வலனேந்துபுசார்ந்தார்தலைசரிந்தார். (ககூரு)

அரிசேனனங்கழிவாதல்கண்டயில்வாளொளிமிளிரா
விரிசீர்வட்டமிகுகேடகஞ்சுழலாநகுவருவான்
பரிசேரணியுயர்தேர்பலமதயானையுமெறியாத்
திரிசாரிகைகிகாயெவர்திறலாரெனவினவும். (ககூகூ)

சிகரிம்முடிதிருமாமணிசெறிகுண்டலமிலங்கத்
திகிரிப்படையரசன்றிறல்சிறக்கவெனப்புகழ்ந்து
பகருங்கலகுணசேனனும்பருவம்முகிலிடிபோற்
புகரும்மதகளிறென்னவும்புலியென்னவுந்திரிவான். (ககூஎ)

வேறு.

அருக்ககீர்த்திதன், பெருக்கம்வாழ்த்தியே
திருக்கைவேலினு, னெரிக்குமாற்றலான். (ககூஅ)

பொன்னங்குன்றவன், மின்னும்வாளினன்
மன்னன்றோழனு, முன்னிவந்தனன். (ககூகூ)

வந்தவன்பெய, ரிந்திரன்னெனுங்
கந்துகொல்களி, றுந்துகாமனே. (கஎ0)

இருவரும்மெதிர், பொருதும்வேலையி
னருகுகின்றவர், வெருவியோடினர். (களக)

வாளினலொரு, தோளைவீழ்த்தவோர்
தோளினலவன், வாளையிட்டனன். (களஉ)

இட்டவாள்கர, மொட்டித்தட்டிப்பி
னட்டமாகென, வெட்டிவீழ்த்தினன். (களங)

வேறு.

குணசேனன்வீழக்கண்டுகூற்றினுங்கொடியவீரா
னிணைசேனைதன்னுளுள்ளோனியம்பியகளிப்பின்மிக்கான்
கணைசேர்ந்ததூணித்தோளான்கைச்சிலைபிடித்துக்கொண்டு
திணைசேரவருகவென்றுவரசேனன்றிகழ்ந்துநின்றான். ()

மற்றவனிற்பதோர்ந்துமதகளிறனையகாளை
சொற்றவனருக்கீர்த்திகுணம்புகழ்ந்தாடிப்பாடிக்
கற்றவன்கலைகளெல்லாங்காமுகனென்னும்பேரான்
பற்றியவில்லுமம்பும்பாங்குடன்பரித்துவந்தான். (களரு)

வில்லொருகையினேந்திவெங்கணைகுழையவாங்கிச்
சொல்லருமாரிபோலத்தொடுத்தவன்விடுத்தலோடு
மல்லுறுகாளைதன்மேல்வராமலேவிலக்கியிட்டுக்
கல்லெனக்கலங்கிவீழக்கைச்சிலைகணையேறிட்டான். (களசு)

கார்செயன்முழங்கியார்ப்பக்காளையுங்கனன்றுமிக்க
வார்சிலைவணங்கவாங்கிவாய்புகவிடுத்தலோடும்
போர்செயுங்களத்துவீழ்ந்தான்புகழ்வரசேனனென்னத்
தார்செய்தானவர்கடம்முட்டானவனொருவன்வந்தான். ()

வேறு.

சூடர்மாலைகடலைசூடினகுழவித்தலைகுழையாப்
படர்காதினுள்ளவைபெய்தனபகுவாயதுகுருதித்
தொடர்மாமழைமதயானைகைதுணியாவவையிடையே
சுடர்மாலைகள்விடுசூலமொடொருவன்றிரிகின்றான். (களஅ)

கள்ளாவதுகுருதிப்புனல்கலனாவதுகையே
நள்ளாதவருடலம்பிறகறியாவதுநமக்கென்
றுள்ளாதவருளராங்கொலிவ்வுலகின்னெனவுரையா
விள்ளாதவர்சிலர்பின்செலவிரல்வீணைகள்விளியா. (கஎகூ)

களியானையினெயிறாயினபறியாவவைகறியா
வளியாதுபல்படையாளர்களடையார்களையுடனே
யொளிவாளிடையிடைவிட்டுடலுருவாவுயிர்பருகாத்
தெளியாதெதிர்வருவாரயிலுருவாவவைசெறியா. (கஅ0)

எரிபோல்வனசுரிபங்கியொடிருள்போலிருண்மெய்யோ
டரிபோலதிரகல்வானுறங்கிமிராவடிபுடையாப்
பரிபோல்வனபிடியாவுடலடியாவிடைபடுதேர்
பொரிபோலெழவுதையாவிவன்வருகின்றதொர்பொலிவே. ()

ஆழிப்படையுடையான்றமனரிகேதனனென்போன்
பாழிப்படைபொருவாரொடுபயில்போரலதறியே
னேழைப்படையிதுவோவெனக்கெதிராகுவதாயில்
வாழிப்படைபொருதென்னெனவையாநனிவந்தான். (கஅஉ)

கள்ளாற்களியிலனாவிகல்களமண்டியசெருவி
னுள்ளாற்களியுற்றானிவனுயிருண்கெனவுருவி
நள்ளாதவர்தலைவவ்வியகைவாளதுவீசித்
தள்ளாதவனெதிரேமிகுசார்த்தூலகனேற்றான். (கஅங)

வரையாலெனமுகிலாலெனவிருளாலெனமறியுந்
திரையார்கடலளவேசெலவிரியுங்கனிசிறுகுந்
கிரையாமுகின்முடிதேய்தரங்கிமிருங்கிலமிதனுட்
புரையாரிடமறையும்மிதுபொருகின்றதொர்பொலிவே. ()

மாலைத்தலைவளர்மாமதிநிகரும்வளையெயிறுஞ்
சோலைத்தலைமலைபோல்வனதோளும்மிவையுடையான்
காலைத்தலையிளஞாயிறுபுரைவான்மிசைகதுவாச்
சூலத்தலைநுதியாலவனாகத்துளையிட்டான். (கஅரு)

இடுவானெயவ்விடுசூலமொடெலும்இருதுணியாப்
படவிசினனயில்வாளதுபடலும்பலமாய
னடைவாய்மையினுருவம்முதலனவேதனதாகத்
தடமால்வரையெனவீழ்தலுமுடைவார்தமரானர். (கஅசு)

வேறு.

வாழுநாளுலந்து மற்றவன்மண்மேன்மலையெனமறிதலும
லைமே, லாழியான்றமர்க ளஞ்சினரஞ்சு மாயிடையடுதிறலு
டையா, னூழிநாளெரியுங்கூற்றமுமுருமுமொப்பவன்கைப்
படைநவின்றான், சூழிமாலியானைத் துணைமதஞ்செறிப்பத்
தோன்றினன்றாமகேதனனே. (கஅஎ)

மலையெடுத்திடுகோமாநிலம்பிளக்கோ மறிகடலறவிறைத்
திடுகோ, வுலமடுத்துலகம்பதலையாவூழித்தீமடுத்துயிர்களட்
டுண்கோ, சிலையிடத்துடையார்களைவலத்துடையார்சிலர்நி
ன்றுசெய்வதீங்கென்னே, நிலையிடத்தவருணிகரெனக்குள
ரேனேடுமின்சென்றெனநின்றான். (கஅஅ)

வண்டினம்பாடு மாலையன்விசித்த கச்சினன்வயிரப்பூணி
னைத்த, தண்டினன்கழலன்றமனியத்தாரான்சார்ந்தனன்சா
ர்தலுமவனைக், கண்டனனன்றேகடலொளிமேனிக்காளைத
ன்மாமனுக்கிளையா, னுண்டினிநமக்கோர்போரெனவெதிரே
யுவந்துசென்றவற்கிவையுரைத்தான். (கஅகூ)

மலையெடுத்திடுவாய்மாநிலம்பிளப்பாய்மறிகடலறவிறைத்
திடுவாய், யுலமடுத்துலகம்பதலையாவூழித்தீமடுத்துயிர்களட்
டுண்பாய், நிலையிடத்துளரோ நிகரெனக்கென்பாய் நின்றனை
நிகருனக்காகித், தொலைவிடத்தல்லாற்சொல்லிவைநுங்கட்
கொழியுமோதாமகேதனனே. (ககூ0)

என்றலுமதுகேட் டெரியுடைத்தேரோ னென்பவனுமிவ
னென்றே, நன்றுநன்றென்று நக்கனனக்கே நாணிலர்நம்மலை
வாழ்வா, ரின்றெனக்கெதிராய்நீகொலோபொருவாயென்றனை
னிளையனமொழியாக், குன்றினும்பெரியான்கூற்றினும்வெய்
யோன்கொண்டனன்றண்டுகைவலித்தே. (ககூக)

இன்றெனக்கெதிராய்நீகொலோபொருவாயென்றிகழ்ந்து
ரைத்தனையேடா, நின்றெனக்கெதிராநீர்மையர்நின்போனிர
ம்பவாய்திறந்துரைப்பவரோ,வென்றனனெனலுமெதிர்தெழி
த்தவனுமெழுந்தனனெழுந்தனனிவனு, மன்றுமபோர்மலைந்தா
ரதிர்ந்ததிவ்வுலகமமரொழித்தரசருநின்றார். (கக௨)

ஆர்த்தனதிசைகளதிர்ந்ததிவ்வுலகமலைகடல் கலங்கினவி
ருளாற்,போர்த்ததுவிசும்புபுலம்பினவிலங்கல்புரண்டனபொ
ருவரைத்துறுகற், சார்த்தினர்புடைக்குந் தண்டினரெதிரத்
தாங்கியும்வாங்கியுந்தடுத்தும், வேர்த்தனர்மெய்யால்வெது
ம்பினர்மனத்தால்விசும்பினைமயங்கவேதிரிந்தார். (ககங)

கண்டவர்க்கெல்லாங்கண்ணுளார்போல்வார்காண்டலுக்
கரிதவருருவந், தண்டினதொளியுந்தங்களார்ப்பிசையுந்தயங்
குதாராரமும்விரவி,யெண்டிசைமருங்குமிடைநிலத்திடைய
மிருள்கெழுவிசும்பினதகமுங், கொண்டனசிலம்புகுலுங்கின
விலங்கல்கூற்றமுந்தலைபனித்ததுவே. (ககச)

தட்டுப்போரதனுட்டமனியக்கடிப்புந் தாரினோடாரமுஞ்
சரியப், பட்டுப்போயுருண்டா னவருளங்கொருத்தன் பருவ
ரைகரியதொன்றனையான், றுட்டப்போரியானைத்தூமகேத
னனுந்தோற்குமோவொருவனுக்கென்று,மட்டுப்போரணிந்த
மணிமுடிமன்னர்மயங்கினர்மானமுமிழந்தார். (ககரு)

வேறு.

பொருதாங்கழிந்து புகைகேதுவீழ வரிகேதுமுன்னமுடி
ய,வெரிதாங்குவேலொடினியீங்குநின்றுபெறுகின்றதென்னை
யெழுகென், றரிதாங்களாவதெளிதாகுமாறுரமர்செய்கை
கொண்டபிறர்முன், கரிதாங்களானகழன்மன்னரேறுவருமங்
கொர்காளைகடிதே. (ககசு)

கணிகொண்டலர்ந்த நறவேங்கையோடுகமழ்கின்றகாந்த
ளிதழா, லணிகொண்டலர்ந்தவனமாலைசூடியகிலாவிகுஞ்சி
கமழ, மணிகுண்டலங்களிருபாலும்வந்துவரையாகமீதுதிவ
ளத், துணிகொண்டிலங்குசுடர்வேலினோடுவருவானிதென்
கொறுணிவே. (ககஎ)

அருமாலைவேல்வல்லழல்வேகனுகுமவனுயிலாகவமைக, வெரிமாலைவேல்வ விளையார்கணிற்க விவனென்றெ டேற்க வெனவே, பொருமாலைவாள்கைபொலிகேடகத்தனணிபோ திலங்குமுடியன், செருமாலைமன்னரிறைதேவசேனனெதிரே சிவந்துசெலவே. (ககூஅ)

மலைமேலுமென்னைமதியாதுவாழ்திமனிதர்க்குவந்துபடை யாய், நிலமேலுநின்றபொருவானிளைந்துவருவாய்நினக்கிது றுமே, சலமேலுமின்னவுடையாயைவென்றுதலைகொண்ட பின்னைநுமரைக், குலம்வேர்களைந்துகுடிபொன்றுவிப்பனி துயான்மகிழ்ந்தகுணனே. (ககூகூ)

மலைமேலுநின்னைமதியாதுவாழ்வன்மனிதர்க்குவந்துப டையாய், நிலமேலுநின்றுபொருவான்புகுந்தநிலைகண்டுநின் றுமிங்னே, சலமேயுரைத்தியிதுவோவுணண்மைதழல்வேக வென்னவெதிரே, யுலமேசுதோளினொளிவேலினோடுமொரு வானெதிர்ந்துபொருவான். (உ00)

வாள்வீசுமாறும்வடிவேலின்வந்த வடிவேல்விலங்கும்வ கையுந், தோள்வீசுமாறுமவைமீளுமாறுமிடைசொல்லும்வீ ரமொழியுந், தாள்வீசுபோழ்துகழலேங்குமாறுமெதிர்தாங்க ளார்க்குமொலியும், நாள்வீயலன்றியுரைவீயயாவர்நவில்வார் நமக்குமரிதே. (உ0க)

மாலாலெதிர்த்துமலைவாயைநீடுபொரவைப்பதென்னையி னியென், வேலாலழிப்பனெனவேலெறிந்துவிறல்வேகனுர்ப்ப மறவோன், மேலாவிலங்குமணிகேடகத்தினொருபால் விலங்கியொருபாற், றோலாதவாளினெறியத்துணிந்துசுடர்கான் றுவீழ்ந்ததுவே. (உ0உ)

எய்வேலறுத்துவறியானைநோக்கியெறியாதுநிற்பவலனே நெய்வேல்பெயர்த்துநிருமித்தஃதேந்தியுருமொத்துநேர்ந் துபொருதான், வெவ்வேறெருட்டியொருதோணிமிர்த்திவிர லொன்றுசுட்டிவரவே, வைவேலினோடுகிமிர்கின்றதோளைய றவீசினனம்மறவோன். (உ0ங)

நெய்யுற்றவேலுமொருதோளும்வீழ வொருதோளினீடு செருவே, செய்யுற்றபோழ்தினெதிரேவிலங்கியிதுதேவசே னன்மொழியுங், கையுற்றதொன்றுகவலேலுனக்கிதுறுமாறு போகவெனவு, மையுற்றகாளைவருவானைவாளினுயிர்வவ்வினு னம்மறவோன். (உ0௪)

வேறு.

தாமமார்ந்தமணியைம்பாற்றையருதைமைத்துனனுஞ்
சேமமார்ந்ததனிச்செங்கோற்றேவசேனன்கைவாளாற்
சாமவண்ணன்றழல்வேகன்சாய்ந்தான்சாய்ந்தபொழுதத்தே
தூமமாரங்கமழ்குஞ்சிச்சுவணகேதுதோன்றினனால். (உ0௫)

அஃதேயஃதேயங்காரவேகனுங்கோரயில்வாளால்
வெய்தாங்குற்றுவீடினனன்றேனன்றேமறுமாற்ற
மைதோய்மலையுமண்ணகமு நமதாச்செய்வன்செய்யேனேற்
செய்தாரமரருலகாள்வனிரண்டிலொன்றுதிண்ணமிதே. ( )

என்னுவிரண்டுமெருங்கினுமற்றிளநல்யானைக்குழாஞ்சூழப், பொன்னூர்தேரும்புரவிகளுமிடைந்துபூமிபொறைகூர, முன் னூற்செல்லவருவானைமுந்நீர்வண்ணன்றன்மாமன், மின்னூர் விளங்குவிறல்வேலான்கண்டேவெகுண்டுமேற்சென்றான். ( )

கானற்புரவிகலிமாவோடெதிர்ந்தகருங்கைமதவேழ
மானயானைதம்மோடேமலைந்ததேருமாறேற்ற
வினைமிலலாவிளையாரோடிளையார்திளைத்தாரிவ்வகையே
தானைதம்முட்டாக்கலுறத்தாமுந்தம்முட்டலைப்பெய்தார். ( )

அருவியிலங்குமதயானையனலவூன்றியணைபோழ்திற்
றேரவரோடுபடைபொருதல்கூடிற்றன்றுகுலவேந்தே
பொருவரென்னப்படுவாரங் கொருவர்போந்துபொரவொருவ
ரொருவிநிற்றலுரங்கொல்லோவென்றானுவணமேந்தினன்.

தேரவரென்னுமுபசாரமிருக்கவோதைமிளிர்வேலாய்
பொருவராயின்யாரோடும்பொருவர்பூமிவேண்டுபவ
ரொருவிநிற்பதுரங்கொல்லோவென்னுமுரையுமுணர்தியிவ
ணிருவேமுள்ளும்யார்பாலஃதுறுவதென்றானெளிமுடியான்

ஆகவமைகவதுவேயவ்வரசநீதியாகிவிடிற் [னேந்தி
போகபொருவனெனப்புகைந்து பொருவெஞ்சிலேயொன்றிட
வேகயானேசெலவுந்திச்சிறுநாணெறிந்துவெஞ்சரங்கண் [ன்.
மாகமெல்லாமுடனடுங்கத் தொடங்கினனம்மழைபோல்வா

தொடங்குகின்றசுடுசரங்கள்சுருக்கியொருகைசெவிகாறு,
முடங்குமொருகை சிலேவளேயா முடுக்குங்கண்டதித்துணே
யே, யிடங்களின்றிவிசும்பெல்லாமிருளவீர்க்கோடீர்க்குதை
யத்,தடங்கலின்றியடுசரமேமிடைந்ததரணிவட்டமெல்லாம்

சொல்லான்மலிந்தபுகழினன்சுவணகேதுசொரிகின்ற [தன்
கல்லார்கொண்டற்பெயல்போலுங்கணேயின்மாரி கழல்வேந்
வில்லாற்செய்தவிசாலவட்டமேலுநாலுமருங்கினுமாய்க்
கொல்லாற்செய்தவேலாற்குக்குடையாய்நின்றுகவித்ததுவே

வில்லாற்செய்தவிசாலவட்டந்தன்னலந்தில்விலக்கப்பட்
டெல்லாத்திசையுஞ்சரஞ்சிந்தியிருளவீழுமெல்லேதன்னுட்
சொல்லாற்புகழ்தற்கரியான்பாற்றாணிவறியவாதலுந்திண்
மல்லாற்பெய்ததோளான்மேன்மாயவெம்போர்செய்குற்றான்

செய்யலுற்றமாயமதுஞ்சிலேயுகிலேயுஞ்சுருங்கியவைத்
தெய்யலுற்றபகழியையுமெண்ணிவேந்தனெதிர்செறுப்பான்
மையலுற்றமதயானேமலேப்பவுந்திமாற்றானே
னையலுற்றாயெனவுரையாநாமவாளிசிந்தித்தான். (உ௧௫)

தொடுத்தான்றெழுதவாளியதுசுவணகேதுகையகத்து
மடுத்தசிலேயும்பகழியும்வெம்மனத்துக்கொண்டமாயமது
மடுத்துத்துணித்தப்புறமேகியரசர்குழாங்களிரியப்பாய்ந்
துடுத்ததூவிதோன்றாமைநிலத்தினுள்புக்கொளித்ததுவே.()

அம்புஞ்சிலேயுங்கைம்மறியவகத்தவிஞ்சைதுணிப்புண்டு,
வெம்புகின்றமனத்தினனாய் வெய்யோன்மீட்டும்விறலோன்
மேல், வம்புகொண்டவளேயங்கள்கணேயம்விட்டுவிட்டேறு,
செம்பொன்னாழியிவையெல்லாஞ்சென்றுபாயச்சிந்தித்தான்.

இப்பாலிவர்கள் பொரும்பொழுதினியானையிரண்டுமெதிர் தாக்கிக், கைப்பாலெடுத்துக்கறைமருப்புமிடைந்துகண்களெ ரிசிந்தி, மெய்ப்பாலெடுத்துக்குத்தியுமெய்விலங்கிப்பாய்ந்து மொன்றொன்றைப், பொய்ப்பாலின்றியெடுத்திட்டுப்புடைத் தும்பெயர்த்தும்பொருதனவே. (உகஅ)

துண்டவேகப் புள்ளுயர்த்தான் றுளைக்கையானைசுடர் முடியான், புண்டரீகக் கொலையானைக் குடைந்துபோகும் பொழுதகத்துக், கொண்டவாளன் கேடகத்தன் குதிகொள் வான்போலெழுந்தெதிரே, மண்டுவானைவயவேந்தன் கண்டு வாளிமழைபொழிந்தான். (உகக)

மடுத்தவாளுங்கேடகமுங்கவசக்கண்ணுமார்பகமு, மடுத் துக்குத்தினூற்போலக்கழிந்ததம்புகழிதலுமே,யெடுத்துமறிக் கப்பட்டான்போலிலங்குபூணுமாரமுந்தேந், தொடுத்ததாம மாலையுமுன்சொரியவீழ்ந்தான்சுடர்வேலோன். (உஉ0)

வேறு.

தூவியார்சுவணக்கொடி, மேவினான்படைவேமிகை
மாவினார்படைவாரிபோ,ரோவியாங்குடைவுற்றதே. (உஉக)

வென்றுவேற்றவர்நின்றன, ரென்றமாற்றமிசைத்தலு
நன்றுநன்றெனக்குமேற், சென்றனன்சிறீசேனனே. (உஉஉ)

கடைந்தகார்க்கடல்போற்கலங், துடைந்தவாட்படையோ டுநீர்க், கடைந்தனான்சிறையாயினான், மிடைந்தவேற்படை வீரனே. (உஉ௩)

விஞ்சைவேந்தர்களைமிகை, யஞ்சுவாரெனவாயிடை
நஞ்சனார்களைநக்குவை, வெஞ்சொலானவிளம்பினான். ()

வாளர்வார்கழல்வீக்கிய, தாளர்தாமுடைந்தோடினு
ளோளாணுடைநங்கைமார், தோளைநாணிலர்தோய்வதே. ()

பொன்றுமிவ்வுடலின்பொருட், டென்றுநிற்குமிரும்புக
ழின்றுநீர்கழிந்திர்களாற், குன்றின்மேற்குடைவேந்திர்காள்.

மானமாமணிவீழ்த்துயிர்க், கூனமாமெனவோடிவீர்
ஈன்வார்மயிர்க்கேதமாங், கானமாவதுகாணுமே. (உஉஎ)

ஈண்டவின்னனசொல்லலு, மீண்டுவிஞ்சையரேற்றன
ராணடகைச்சுடராயிடைத், தூண்டினான்சுடர்வேலினன்.

மிண்டுவாளினர்விஞ்சையர், மண்டினரெதிர்மண்டலுங்
கண்டகண்டமதாயினர், விண்டவாபடைவீரரே. (உஉகூ)

கருவிப்புட்டிலின்கண்டமும், பொருவில்புத்தரைப்போழ்களும், விரவிவெங்களவாயெலாம், புரவித்துண்டங்கள்போர்த்தவே. (உஙo)

உருப்புநீரவொள்வாள்களா, னெருப்புநீரவர்வீசலும்
பொருப்புவீழ்வனபோன்றன, மருப்புநீண்மதயானையே. ()

சீர்முகந்தசெஞ்சேற்றினுள், ளார்முகம்புகவாழ்ந்தரோ
நீர்முகக்கிலமுற்றபொற், றேர்முகஞ்சிதைவுற்றதே. (உஙஉ)

மாலும்வாட்படைப்போரினு, ளாலுமாமிசையானவன்
காலன்காணெனவந்தனன், சீலமானசிறீசேனனே. (உஙங)

மண்ணின்மேல்வருவாரொடு, மண்ணின்மேற்செருவல்லனே, விண்ணின்மேல்வருவாரொடு, விண்ணின்மேற்செருவல்லனே. (உஙச)

வாய்ந்தபோரிவைவல்லீரே, லேந்துமின்படைபோந்தெனக், காய்ந்தகட்டுரைகேட்டலுஞ், சேர்ந்தனன்சிறீபாலனே

வேறு.

உவரியோங்குதிரையெனக், கவரிவேய்ந்தகலினமா
விவரவேறினனரோ, வெவருமஞ்சுமீட்டினான். (உஙரு)

திரிவில்சாரிகைச்செயல், புரவிசேர்ந்துபொங்கின
வரிவில்வாளிமன்னரும், மருவுபோர்மயங்கினர். (உஙஎ)

வில்லும்வாளும்வேல்களுஞ், சொல்லினாற்றொழிற்கொளீஇ
யெல்லையின்றிபொழுதெலாந், தொல்லமர்தொடங்கினர். ()

வெல்லுரீரவிஞ்சையன், வில்லும்வீசுருந்தமும்
வல்லிதின்மடித்தனன், மல்லலர்ந்தமார்பினன். (உருக)

அற்றகுந்தமாண்டவச், செற்றலன்றெழித்துமேற்
கொற்றவன்றன்கோகின்மேல், வெற்றிவாளின்வீசினன். ()

ஒளிதயங்குமொண்டயத், தெளிதமாவெறிந்தவா
ளுளிதமாவுடற்றினன், பளிதாறுபண்பினன். (உசக)

தளிதயங்குதண்மதுக், களிதயங்குகண்ணியாற்
குளிதவாளினுற்றபுண், ணெளிதமாயிலங்குமே. (உசஉ)

இட்டவாளிறுத்தபின், விட்டமாவின்மேற்செலாத்
துட்டமர்த்துரந்தனன், மட்டுவார்ந்தமாலையான். (உசங)

மாதிபோகுமானமா, மீதுபோகவிட்டவன்
சோதிசூடுசுடர்முடிக்; கேதமாகவெண்ணினன். (உசச)

எண்ணினன்னெடுப்பலுங், கண்ணியஃதுகருதிமா
மண்ணில்வாவியாங்குமேல், விண்ணின்மேலுமிக்கதே. ()

கொண்டதன்குசைக்குறி, கண்டுமன்னுகதியினல்
விண்டலத்தின்மீதுபோ, யண்டயத்தடுத்ததே. (உசரு)

வானின்வாவுவிஞ்சையன், மானமாமணிம்முடி
யேனைமன்னனேதியான், மீனின்வந்துவீழ்ந்ததே. (உசஎ)

வேறு.

திருநிலையகமுடைச்செல்வன்செங்கதிர்
விரிநிலைமணிமுடிமிளிர்ந்துவீழ்தலும்
பொருநிலையழிந்துபிற்புறக்கொடுத்தது
பருநிலமலையவர்பரவைத்தானையே. (உசஅ)

வேயுடைவெள்ளிசேர்விலங்கல்வேந்தர்க
ளாயிடையுடைதலுமாழியான்மகன்
காய்வுடைமனத்தவன்கனகசித்திரன்
சேயிடைபுகுந்தனனின்றுசெப்பினன். (உசகூ)

உருவியவாளினனுடுத்தகச்சினன்
வெருவரவிழித்தனன்வீரம்வேட்மோ
டொருவனையொருவனங்கஞ்சியோடுமே
லருவருப்புடையதவ்வாண்மையாகுமே. (௨௫௦)

மதிதொடுநெடுவரைமானவிஞ்சையர்
விதிபடுமனிதரைவெருவிமீண்டன
ரதிசயுமிதுவெனவலரக்கனன்
கதிர்விடுவளையெயிறுடையகாளையே. (௨௫௧)

உடைந்தவர்மனங்களையுருவவீழ்த்திடு
மடந்தையர்வடிக்கணம்பல்லவாய்விடின்
மிடைந்தவர்தொடங்கியவீரக்கோட்டியு
ளடைந்தவரடுபடைக்கஞ்சல்வேண்டுமோ. (௨௫௨)

தானுடம்பிறந்ததற்பின்னுந்தன்றிறல்
வானுடன்புகழ்தரநிற்குமண்மிசை
மானுடருயிர்கொளமானமில்லிர்கா
ளூனுடம்பிதன்பொருட்டுடையல்வேண்டுமோ. (௨௫௩)

நெய்யினுனிழன்றுநீர்நின்றநீளொளி
வெய்யவாளமரிடைவெருவியிட்டதங்
கையினுற்கருணையின்கவளங்கொள்ளிய
வையன்மார்போந்தென்றசதியாடினன். (௨௫௪)

இன்னணமொழிந்தெதிர்தெழித்துமாற்றலர்
மன்னியகடற்படைமண்டிவாளினுற்
கன்னவிற்ருளினன்கண்டங்கண்டமாத்
துன்னியதுணிபலதொடரத்தோன்றினன். (௨௫௫)

விலங்குவேல்கொண்டையையுந்திவேற்றவர்
மலங்கமேற்செல்வதுமானமாமெனப்
பொலங்கலங்கழலொடுபுலம்பப்பூமிமே
லலங்கலானடந்தமரழுவந்தாங்கினன். (௨௫௬)

பத்திரக்கடிப்பினன் பைம்பொற்றாரினன்
சித்திரமணித்தொடர் திளைக்குந்தானையன்
கத்திகைக்கண்ணியன் காணும்பாலெலாந்
தொத்திணர்க்குஞ்சியான் காளைதோன்றினான். (உருஎ)

வம்பமாவிருதுணிபட்டமாவொடு
செம்பொனாசியன்றதேர்சிந்திவீழ்ந்தன
கம்பமாவொழிந்தனகளிறுகாளைவாள்
வெம்புலால்விரையினும்வெறுத்ததில்லையே. (உருஅ)

வார்குலாங்கருங்கழன்மன்னரேற்றவர்
நீர்குலாங்குருதியுட்குளிப்பநேரினி
யார்கொலேற்பவரெனவஞ்சவெஞ்சினக்
கார்குலாமுருமெனக்காளைதோன்றினான். (உருகூ)

காளைங்கணைகழற்கனகசித்திரன்
வாளமரழுவத்துமண்டினானெனக்
கேளவர்மொழிதலுங்கிரீவன்றம்பிமா
ராளிவர்கடற்படையனன்றெழுந்ததே. (உசுO)

வெருவிமுன்னுடைந்துபோய்ப்பெயர்ந்துவேற்றவ
ரொருவில்வாளழுவம்வந்துந்துமப்படை
யுரவுநீருங்கடலோதம்போந்தபி
னரவநீர்வேலைமீதலைப்பதொத்ததே. (உசுக)

மன்னவற்கிளையவர்வயிரமால்வரை
யன்னவரயிற்படையரசவீரர்க
டுன்னலர்க்கரும்படர்தோன்றத்தோன்றுபு
முன்னினர்கனன்றுபோர்முறுகமூட்டினார். (உசுஉ)

கண்ணிடைசிவந்துகைசுட்டிக்காய்ந்துதம்
பண்ணுடைமழகளிறுந்தினார்படை
யெண்ணிடையிடமிடமின்றியெங்கணு
மண்ணிடையவரொடுமயங்கிகின்றதே. (உசுங)

இலைதடுமாறினபகழியெங்கணுஞ்
சிலைதடுமாறினசிலைத்தேர்க்குழா
மலைதடுமாறினபோலமான்றரோ
தலைதடுமாறினதடக்கைவேழமே. (௨௬௪)

முரிந்தனமணிநெடுந்தேர்கண்முத்துக
நெரிந்தனகளிறுடைமருப்புநேர்முகஞ்
சரிந்தனதலைபலதறுகணில்லவ
ரிரிந்தனரிழிந்ததுகுருதிநீத்தமே. (௨௬௫)

மரைமயிரணிந்தனமானமாப்பல
திரையெனவுருண்டனதிலதவெண்குடை
நுரையெனசிவந்தனநுந்துமப்புனற்
கரையெனக்கிடந்தனகளிற்றின்குப்பையே. (௨௬௬)

பெருகியகுருதியுட்பிறங்குசெந்தடி
யருகுடையளற்றினுளழுந்திப்பாகமே
சொரிகதிர்க்கேடகமுடிகடோன்றலாற்
பொருகளம்புற்றெடுக்கின்றபோலுமே. (௨௬௭)

மாடடைந்தெதிர்ந்துதம்வயிரத்தண்டினாற்
பீடடைந்தவர்பிடர்புடைப்பவானையின்
கோடுடைந்துதிர்ந்தனகொடுமுட்கேதகைத்
தோடுடைந்தொருவழித்தொகுதலொத்தவே. (௨௬௮)

குழைசுடர்ந்திலங்குதாரரசர்கோலமா
ணிழைசுடர்தோள்களாவெறியயானையின்
றழைசெவிமதமுகத்தொளிக்குஞ்சக்கர
மழைசொரிமுகில்புகுமதியமொத்தவே. (௨௬௯)

செருவரையனையதோண்மன்னர்சேனையு
ளருவரைபுகுமயிலனையவாயின
கருவரையனையனகளிநல்யானையின்
பெருவரைமுகம்புகும்பிண்டிபாலமே. (௨௭௦)

மண்ணியன்மன்னர்கைமுறுக்கிவிட்டிடக்
கண்ணியல்யானைமேற்கணையம்பாய்வன
திண்ணியநெடுவரைச்சென்னிமீமிசை
விண்ணியல்விளங்குமின்விழுவபோன்றவே. (உஎக)

கடுத்துவீழ்கடாக்களிற்றுழவர்தந்தலை
யடுத்த * சீசகந்தமோடற்றுவீழ்வன
தொடுத்ததேன்றொடர்ந்தவீப்பிறங்கலோடட
னுடுத்தமால்வரைமருங்குருவமொத்தவே. (உஎஉ)

அணியமுமாரமுங்கொடிஞ்சுங்கோலுமாத்
துணிவினைக்கவனமாத்துரக்கும்பாகரா
மணியவிர்தேரெனுமதலைநாயகர்
பணிவருங்குருதிநீர்ப்பவ்வத்தோட்டினார். (உஎங)

நுதலியசெருநிலநொறிற்செந்நீரினுண்
முதலையின்முதுகெனசிவந்ததோற்பரங்
கதலிகைகாம்பொடுகெடுகித்தாமரை
மதலையந்தாளணைவாளைபோன்றவே. (உஎச)

கைவரையொழுகியகணையம்பாய்ந்துதம்
மெய்வரைநிரைத்திடவீந்தயானைக
ணெய்வரைநீணிலத்தலத்துமேற்பல
மொய்வரைமுனையடிப்புண்டவொத்தவே. (உஎரு)

ஊடகமொளிர்மணிநாகங்கவ்விய
நாடகவிரிமதிநடுங்கிவீழ்வபோ
லாடகமணியவிர்கடகக்கையொடு
கேடகந்திசைதிசைகிளர்ந்துவீழ்ந்தவே. (உஎசு)

துளைப்படுபுண்ணுமிழ்சோரிபாய்ந்தெழுக்
களிப்படுசிலம்பினகவந்தமாடுவ
முளைப்புடைமுடைத்திடைசுடரமூட்டிய
விளக்கிடுகுற்றியின்விரிந்துதோன்றுமே. (உஎஎ)

* தலைச்சிரா, சீசகமென்னும் வடமொழித்திரிபு.

அஞ்சலரமர்க்களமென்னுமார்வயல்
விஞ்சைபர்குருதிநீர்வெள்ளந்தேர்த்தெழ
வெஞ்சினநாஞ்சிலாலுழுதுவெள்ளியான்
றஞ்சமார்தன்புகழ்தயங்கவித்தினன். (உஎஅ)

வெளியவன்மிளிர்மறைபுரையுஞ்செங்கணு
னளியினனமர்க்களங்கடாக்கொள்கின்றவவ்
விளையவன்யாரெனவினவிக்கேட்டனர்
கிளையமர்கிரீவனுக்கிளையவீரரே. (உஎகூ)

சுரமையரதிபதிதோமின்மக்களுட்
பெரியவனிவனெனப்பிறந்தசெற்றமோ
டெரியவிர்வெகுளியாரிளையகாளையிங்
கொருவன்மேனல்வரும்யானையோட்டினார். (உஅ0)

இரத்தினகண்டனுமேனைவீரரும்
வரைத்தனர்வருவடைவீதிவாயெலா
மெரித்தனர்நால்வருமிளையகாளையை
முரித்திடுமுனிவினராகிமுற்றினர் (உஅக)

அடங்கினனரசிளங்குமரனேவென
வுடங்கலந்தொல்லொலியெழுந்ததாயிடை
மடங்கவில்கருங்கடன்மலங்கிற்றொத்தது
தடங்கமழ்சுரமைநாட்டரசன்றானையே. (உஅஉ)

எரிபுரையுளைகளோடிலங்குவெண்பிறை
விரிவனவெனவிளங்கெயிற்றொடாயிடை
யரியரசடைந்ததொன்றதனையேறினன்
புரிவகைநாஞ்சிலும்புதியதெய்தினன். (உஅ௩)

தெய்வவாய்நாஞ்சிலுஞ்செங்கட்சீயமு
மையனுங்கெய்தலுமதிரவார்த்தது
வையமாளிளையவன்றானைமாற்றலர்
மையன்மாயானைகண்மயங்கியிட்டவே. (உஅச)

பொருபடை புகைந்தவர்வழுங்குமாயிடைச்
செருவுடையவரகன்செல்வமார்பக
முருவுடைநாஞ்சிலானுழுதிட்டானரோ
மருவுடையவர்தமைமயக்குமைந்தனே. (௨௮௫)

ஒருவனோர்நாஞ்சிலானூழித்தீப்புரை
யிருவரோடிருவரையானைநான்கொடு
செருவினுளமர்வெலக்கேட்டுச்சேர்ந்தனன்
கருவரையனையமேதாட்கனககாமனே. (௨௮௬)

காளையக்கனகசித்திரனுங்காய்ந்துதன்
வாளைவாய்துடைத்தெதிர்மடுப்பமற்றவன்
றோளையுஞ்சுடர்கெழுநாஞ்சில்வாயினா
லாளியேறனையவனழுந்தவூன்றினான். (௨௮௭)

வனைகதிரிலங்குதோள்வயிரகண்டனோ
டனைவருமலாயுதற்கமர்தொலைந்ததுங்
கனகசித்திரனதுபாடுங்கண்டரோ
வனல்படுமனத்தனங்கொருவனாயினான். (௨௮௮)

பொடித்தலைநிலத்தவர்போருமாண்மையு
முடித்திடுகெனமுனிந்தெழுந்துமூரிவான்
மடுத்ததோர்வரைதனைவயிரக்கைகளா
லெடுத்தனனிரத்தினகிரீவனென்பவே. (௨௮௯)

வரிந்துவீழ்கச்சையன்வனைந்ததாடியன்
முரிந்தெழுபுருவத்தன்முழங்குதீயென
வெரிந்தனனிறுவரையெடுத்துமேற்செல
விரிந்ததுசுரமையரிறைவன்றானையே. (௨௯௦)

ஆங்கவனடைதலுமருக்ககீர்த்திகை
வாங்குவிற்புகுந்ததுவாளியொன்றவ
னோங்கிருந்தாணியிற்சுடர்ந்ததொல்லெனத்
தாங்கருந்திறலவன்தாரித்தேவினான். (௨௯௧)

தொடுத்ததுந்துரந்ததுவிடலைதோளிடை
மடுத்ததுகிழித்ததுமண்ணினுட்புகக்
கடுத்ததுகண்டுநின்றவர்கடம்மையும்
படுத்ததுபகலவன்பகழியென்பவே. (௨௬௨)

வரையொடுவரையெனமறிந்துமண்ணின்மேல்
விரையுடையலங்கலான்வீழுமாயிடைத்
திரையொடுகனைகடல்கலங்கிச்சிந்தின
புரையுடைவிலங்கலும்புலம்புகொண்டவே. (௨௬௩)

வேறு.

தம்பியர்பாடுமக்களிறந்ததுந்தனக்குப்பாங்காய்
வெம்பியவீரர்போருள்விளிந்ததும்விரைவினோடிச்
செம்பினையுருக்கிவெய்தாய்ச்செவிமுதற்சொரிந்ததேபோ
லம்பொன்செயாழியானுக்குரைத்தனரரக்குண்கோலார். ()

ஆங்கவர்மொழிந்தபோழ்தினருவரைகரியதொப்பா
னீங்கிவர்மாற்றநன்றீண்டிருந்தினியென்னையென்னா
வாங்குநீருலகில்வாழுமுயிர்களைவாரிக்கொண்டு
வீங்குநீர்க்கடலுட்பெய்யும்விஞ்சையைவிடுக்கநேர்ந்தான். ()

ஓர்ந்தவன்மனத்துவிஞ்சையொருபுடையெய்தலோடுஞ்
சார்ந்ததுசண்டவேகைபணிபணியென்றுசார
வார்ந்தநீருலகின்வாழுமனிதரைவல்லையேகித் [ன்.
தேர்ந்துகொண்டொருவரின்றித் தெய்வநீசெகுத்திடென்றா

கொடியவன்விடுத்தபோழ்திற்கூற்றுவன்றன்னைக்கூவி
வடியெயிறிலங்கநக்குவாழியதோள்களின்று
விடுகதிராழிவெய்யோன்வேண்டவென்வாயுட்பட்டு
முடியுமிவ்வுலகநீயுமுறைத்தொழின்முடித்தியென்ன (௨௬௭)

அணங்குகள்குழுமியாழும்பெருவயிறார்துமென்று
துணங்கைகோத்தாடிநக்குச்சுடரிலைச்சூலமேந்தி
வணங்குபுசூழமற்றமாபெருந்தெய்வம்வந்து
மணங்கமழ்சுரமைநாடன்றனைமேன்மடுத்ததம்மா. (௨௬௮)

பட்டடிநெடியவீங்குபரட்டினநொடிக்குங்கால
வொட்டியவயிற்றவற்றலுகிரிடைமயிரமுன்கை
கட்டியகண்ணிபீலித்தலையினகழற்காய்போல
வட்டமாயுருளுங்கண்ணகணங்கள்வந்திரைத்தவன்றே. ( )

வரைகளையுருளவுந்திவந்ததோர்சண்டவாயு
நிரைகிளர்சுடரதாகிநிமிர்ந்ததோருருவச்செந்தீ
திரைகளைமறியவீசிச்சிறந்ததோரழுவமுந்நீர்
விரைகிளருருவத்தெய்வம்விளைத்தவாறிதுவாமன்றே. ( )

வரைகளுமரனுமண்ணுமறித்திடும்வாயுசெந்தீப்
புரைகிளர்பொடிகளாரப்புணர்த்திடும்புணர்த்தபோழ்திற்
றிரைகிளர்பரவைமுந்நீர் திரைத்துக்கொண்டொழுகுமஃதா
லுரைகிளருலகைத்தெய்வமுண்ணியவுடன்றவாறே. (௯0௧)

மருங்கவைபுணர்த்தபின்னைவானகவளாகமெல்லாங்
கருங்கலொன்றகன்றமேலாற்கவித்ததுகவித்தலோடு
மிருங்கலியுலகமெல்லாமிருள்கொளவெருவிநோக்கிப்
பொருங்கலியரசர்தானைபோக்கிடமற்றதன்றே. (௯0௨)

வாளொடுவாள்கள்வீழமைந்தரைமைந்தருந்தித்
தாளொடுதாள்கடாக்கித்தலையொடுதலைகண்முட்டித்
தோளொடுதோள்கடேய்ப்பச்சுடரணிசுடர்ந்துசிந்த
வாளுடையரசன்றானையரவமோடுடைந்ததன்றே. (௯0௩)

அன்னணமுடைந்தபோழ்தினருக்கனைமுகத்துநோக்கி
யென்னிதுவிளைந்தவாறென்றிருங்கடல்வண்ணன்கேட்பக்
கன்னவில்வயிரத்தோளாய்காய்ந்தவன்விடுக்கவீண்டு
மன்னுயிருண்ணுஞ்சண்டவேகையாம்வருவதென்றான். ( )

செற்றலன்விடுத்தபின்றைச்செகுத்துயிர்பருகினல்லான்
மற்றிதுமறிதலில்லைமறிப்பவர்பிறருமில்லை
யிற்றிதனிலைமையென்னவிருங்கடல்வண்ணனக்காய்
கற்றமிலலங்கல்வேலோயஞ்சினைபோறியென்றான். (௯0௫)

பேயெரியுமிழ்ந்தும்மேல்வருமெனப்பேசுகின்றாய்
நீபெரிதினியையென்றுநெடியவனதனைநோக்கிக்
காயெரிசுடர்விட்டாங்குக்கனன்றனன்கனலலோடு
மாயிருவிசும்புமஞ்சும்வடிவினன்வள்ளலானன். (கூ0சு)

நலம்புரிசெய்கைமேனுட்பெற்றநற்றேழனேபோ
லுலம்புரியுருவத்தோளாற்குற்றபோழ்துதவ லுற்று
வலம்புரிவலத்ததாகவிடத்ததோர்வயிரவல்விற்
கலம்புரிகனபொற்பூணுன்கைவந்துபுகுந்ததன்றே. (கூ0எ)

நிதிசொரிசங்கமேந்திநெடுஞ்சிலையிடங்கைகொண்டு
விதிதருநீலமேனிவிரிந்தொளிதுளும்பநின்றான்
மதியொருபாலதாகவானவின்மருங்குகோலிப்
புதியதோர்பருவமேகம்போந்தெழுகின்றதொத்தான். (கூ0அ)

வலம்புரிசிலம்பவாய்வைத்திருஞ்சிலைவளையவேற்றிக்
கலம்புரிகனபொன்னூழிகைவிரல்கதிர்ப்பச்சூட்டி
யுலம்புரிவயிரத்தோளானுரப்பினுனுரப்பலோடுஞ்
சலம்புரிதெய்வமஞ்சித்தன்னுருவடைந்ததன்றே. (கூ0கூ)

நிலத்திடைநின்றுவானமுடியுறநிமிர்ந்துகண்ணின்
புலத்தினதளவுநீங்கிப்பொம்மெனவுயிர்த்துவிம்மிப்
பிலத்தினதளவிற்பேழ்வாய்பிறழ்ந்திலங்கெயிற்றதாகிச்
சலத்தினைப்புரிந்ததெய்வந்தலைபனித்துடைந்ததன்றே. ()

தெய்வமாங்குடைந்துதன்பாற்படையினைத்திரைத்துக்கொ
மையிருவிசும்பினேறக்கண்டபின்மாற்றுவேந்தன் [ண்டு
ங்கயினைப்புடைத்துக்கண்கள்சிவந்துவாயெயிறுகவ்வி
வையகாடுங்கநோக்கிமழகளிறணைகவென்றான். (கூகக)

மாலுமால்களிறுநுந்திமற்றவன்வருதலோடு
மாலுமாலபுரவித்திண்டேரரசனதரவத்தானை
வேலினுனுடங்குகில்லாதுடைந்திடவெகுண்டுநோக்கி [ன்.
நீலமாமணிக்குன்றொப்பா னெடுஞ்சிலையிடங்கைகொண்டா

வாய்ந்தநல்வயிரத்துண்டம்வளைந்தொளிதுளும்பவள்ளாற்
சேர்ந்தனசிறுகணோடுதிசைமுகஞ்சிறகுதம்மால்
வேய்ந்தெனவிரித்துவீசிவிசும்பிடையிழிந்துவந்து
காய்ந்தெரிகணையினாற்குக்கருடனுமுழையனானான். (௲௧௩)

கருடனைவலங்கொண்டேறிக்கார்முகங்கையினேந்தி
மருடருவிசும்பினேறிமணிவண்ணனெதிர்ந்தபோழ்தி
னிருடனக்கெய்திற்றோராளெரிகதிராழிவேந்தன்
பொருடனக்கினியிலாதபுகழுரைபுகலலுற்றான். (௲௧௪)

தானவர்நின்னைப்போலத்தந்திறலறிவிலாதா
ரீனவரிரங்கிவீழ்ந்தாரேனையர்தொழுதுவாழ்ந்தார்
வானவரென்னையஞ்சிவானிடைமறைந்துசெல்வா
ரூனவர்தம்முணீயேயுயிரெனக்கிழக்கலுற்றாய். (௲௧௫)

மண்ணுள்வாழ்சிதலைசேர்திமற்றவைவாழுநாள்க
ளெண்ணியாங்கிகந்தபின்னையிறகுபெய்தெழுமதேபோற்
கண்ணினாலின்றுநீயுங்கருடப்புள்ளதனையேறி
விண்ணினாறெதிர்ந்துவந்தாய்வேற்கிரையாகியென்றான். ( )

மாறலாமனிதர்தம்மேல்வண்சுடராழியானுஞ்
சீறினானென்றபோழ்திற்சிறுசொலாய்கிற்குமென்று
தேறினார்மொழிகள்கொண்டுசெவிசுடுசொற்கள்கேட்டு
மாறினேனென்பதோராயளியற்றாயனல்விக்கின்றாய். ( )

என்றலுமதனைக்கேட்டேயிருங்கடல்வண்ணனக்கு
நன்றுநன்றுரைத்தியீட்டுநல்லையேபெரிதுமேடா
குன்றின்மேலிருந்துநீநின்குழுவினுண்மொழிவதல்லா
லின்றுவந்தென்முனின்றுமிதுகொலோகருதிற்றென்றான். ( )

சிறியவனுரைகள்வந்தென்செவிசுடும்பொறுக்கலாற்றே
னெறிகடல்வளாகந்தன்னுளிவன்பெயரொழிப்பனென்று
செறிமணிக்கடகக்கையாற்றிண்சிலைகுழையவாங்கிப்
பொறிநுதல்யானைமேலான்சரமழைபொழிதலானான். ( )

கடுத்தவனெய்தபோழ்திற்கருடன்றன்சிறகுதன்னாற்
புடைத்திடவெரிந்துபொங்கிச்சரங்கள்போய்ப்புரளநோக்கி
விடைத்திறல்விடலைதன்மேல்வெய்யமனத்தனாகிப்
படைத்திறலாளன்றெய்வப்படைத்தொழில்பயிறலுற்றான்.

காயிரும்பனையவெய்யோன்கருமணிவண்ணன்றன்மே
லாயிரம்பணத்ததாயவருமணியாடுநாக
மாயிரும்புகழினான்றவண்சிலைவாங்கியெய்யச்
சேயிருஞ்சுடர்கள்சிந்தித்தீயுமிழ்ந்தோடிற்றன்றே. (௧௨௧)

கண்டனனதனைமற்றக்கருங்கடல்வண்ணன்கண்டே
யொண்டிறலுவணப்புள்ளினுருவினோர்தெய்வவம்பு
கொண்டனன்றொடுத்தலோடுங் கொடுஞ்சிறைநுடங்கவீசித்
துண்டமாநாகந்தன்னைத்துண்டத்தாற்றுணித்ததன்றே. ()

ஆயிடையனன்றுமீட்டுமழலுமிழாழிவேந்தன்
தீயொடுபுணர்த்தபோதத்தெய்வவம்பெய்தலோடும்
வேயுடைவிலங்கல்சுட்டுவிசும்பிடைவெம்பிவெம்பிச்
சேயிடையெரிந்துசிந்திச்செல்வன்மேற்சென்றதன்றே. ()

காரணிவண்ணன்கண்டேகதிர்மணிக்கடகக்கையால்
வாருணமென்னுமம்புவாங்கினன்றொடுத்தலோடுஞ்
சீரணிவிசும்புமண்ணுந்திசைகளுமிருளச்சேர்ந்து
நீரணிபுயலின்றாரைநிரந்துவீழ்ந்தவித்ததன்றே. (௧௨௪)

விண்களைவெதுப்புநீர்மைவெய்யனுள்வெகுண்டுமீட்டுங்
கண்களைத்துயிற்றுமம்புகார்முகமணைத்தபோழ்தின்
மண்களைமயக்கிமாக்கடுயில்கொளமரங்கள்சாயப்
புண்களையணையும்வேலான்படைமுகம்புக்கதன்றே. (௧௨௫)

ஆயிலுடையனல்செய்வேலோனதனையுமறிந்துமற்றுத்
துயில்விடைசெய்யுமம்புதொடுத்தனன்றொடுத்தலோடும்
வெயிலிடைவிரிந்துவிண்பால்விளங்கிவீழிருளைநீக்கப்
பயிலுடையுலகந்தேறிப்பட்டதுமுணர்ந்ததன்றே. (௧௨௬)

சீற்றமொடிரியுஞ்செல்வத்தெய்வவம்பெய்தவெல்லா
மாற்றினன்மறுப்பநோக்கிமற்றவன்மாற்றலான்பே
ராற்றலேயறிந்துவெய்யவாழிகையேந்தியின்னு
மேற்றனைபொருதியோவென்றிலங்கெயிறிலங்கநக்கான். ()

தாழியாதெய்யுந்தெய்வப்படைமுதலழிந்துஞ்சாலப்
பாழியான்மெலிந்தும்பண்டைப்பாவனைபயிற்றியென்னை
யாழியால்வெருட்டலுற்றாயலந்தனைபெரிதுமென்றான்
சூழிமால்யானைவல்லசுரமைநாட்டினையகோவே. (௩௨அ)

புனைகதிராரமார்பன்புகைந்துகைமுறுக்கிவிட்ட
கனைகதிர்த்திகிரிகான்றகனசுடர்வளைக்கப்பட்டு
முனைகதிர்கானச்செந்தீமுழங்கிமேன்மூடப்பட்ட
வனைகதிர்க்குன்றம்போலமணிவண்ணன்மறைதலானான். ()

உலங்கொண்டவயிரத்தோளாற்குற்றதையுணரமாட்டார்
நிலங்கொண்டுமனிதராழிநிரந்தழலுமிழ்ந்துநேமி
புலங்கொண்டவயிரக்குன்றின்புடைவரும்பரிதிபோல
வலங்கொண்டுவந்துமைந்தன்வலப்புடைநின்றதன்றே. ()

கன்னவில்கடகத்தோளான்கண்டுகைதொழுதுகொண்டு
மின்னவிர்விளங்குநேமிவிடுத்தனன்விடுத்தலோடு
மன்னனைமார்புகீண்டுமணிமுடியெறிந்துமற்றைப்
பொன்னவிரோடையானைப்புகர்நுதற்புக்கதன்றே. (௩௩௧)

கழலவன்கனன்றுவிட்டகதிர்நகைநேமிபோழ
மழகளியானைதன்மேன்மறிந்துவீழ்கின்றமன்ன
னிழலவிர்விலங்கனெற்றிகிமிர்ந்ததோர்காளமேக
மழலவன்றிகிரிபாயவற்றுவீழ்கின்றதொத்தான். (௩௩௨)

நெறிதலைதிரிவிலான்மேனினைவிலான்மொழியப்பட்ட
மறுதலைமுடிக்குமேதுவாய்வழியழிப்பதேபோற்
பொறிதலைமணந்தகானைமேல்வரப்புணர்த்தநேமி
செறிதலையிலாதமன்னன்றன்னையேசெகுத்ததன்றே. ()

வேறு.

கொலையானைமேலோர் குளிர்வெண்குடைக்கீழ்ப்
பலயானைமன்னர்பலர்போற்றவந்தான்
மலையாகம்போழாகமற்றிவனேசாய்ந்தான்
நிலையாமைசாலநிலைபெற்றதன்றே. (௩௩௪)

நெருநல்நெடுங்குடைக்கீழ்நேமிமுன்செல்லப்
பொருநல்வயவேந்தர்போற்றிசைப்பவந்தான்
செருநன் மறநேமிசென்றதுவேபோழ
வெரிபொன்மணிமுடியானின்றிவனேசாய்ந்தான். (௩௩௫)

தானெறிந்தநேமிதனக்கேபகையாகித்
தேனெறிந்ததாரான்சிறுவரைக்கண்வீடினன்
யானறிந்தவாற்றாலெளியவுலகத்தில்
வானறிந்தவாழ்க்கையுமாயமேபோலுமால். (௩௩௬)

வலியுமடுதிறனும்வாழ்வும்வனப்பும்
பொலிவுங்கடைபோகாபூமிமேல்வாழ்வீர்
கலியன்மினென்றிதனைக்காட்டுவான்போல
மலிபொன்மணிமுடியான்மற்றிவனேமாய்ந்தான். (௩௩௭)

மாகமழைவண்ணன்மாற்றான்மேல்விட்டெறிந்த
வேகவிறலாழிமீட்டேபெயர்ந்துதன்
போகவரைமார்பம்போழ்படுப்பப்பொன்றினு
ஞகுவதாமதனையாவரறிகிற்பார். (௩௩௮)

இன்னனகண்டார்மொழிந்திரங்குமாயிடை
யன்னமனையாரயகண்டன்றேவிமார்
பொன்னவிர்பூங்குழையார்பொங்கேந்திளமுலையார்
மின்னவிர் நுண்ணிடையார்மேல்வந்தணுகினார். (௩௩௯)

வண்டார்மணிமுடியான்மார்புதுணிகிடப்பக்
கண்டாள்பெருந்தேவிகண்டேதன்கைசோர்ந்து
வெண்டாரைவேனெடுங்கணீர்மூழ்கிமேற்பிறழ
விண்டாளுயிர்பின்னும்வெற்றுடலமாயினாள். (௩௪௦)

கோதைசரியக்கொடிமருங்குலேரழிய
மாதர்மடமஞ்ஞைமாகிலத்துவீழ்வனபோற்
காதலன்மார்பகலங்கண்டேதங்கண்புடைத்துப்
பேதைமடமகளிர்வீழ்ந்தார்பிணையன்னார். (௩௪௧)

வாங்குகொடிமுறுக்கிமாநிலத்துவிட்டனபோற்
ருங்கார்புரண்டுதலைதடுமோருய்க்கிடந்தங்
கேங்கினரெத்துணையோர்போழ்தங்கழிந்தெழுந்து
நீங்காதவாருயிரார்நீராயுருகினர். (௩௪௨)

வேறு.

அரைசர்கோவேயடலாழி வலவவார்க்குந்தோலாதாய்,
புரிசைநகர்நூற்றொருபதுடையாய்பூமிமுழுதாண்டா, யுரை
செய்துலகம்பாராட்டுமொளியாயோடையானைமேல், வரை
செய்தனையதிரடோளாய்மறிதல்பொருளோவயவேந்தே. ()

வானுமண்ணுமுடனஞ்சும்வரையாய்மன்னர்மணிமுடிமே
ற், றேனும்வண்டும்பலசென்றுதிளைக்குஞ்செம்பொற்செறிக
ழலாய், கானமண்ணியகிறேக்கிராவிகமழுமெழிலாக, மீனம
ண்ணிவிவர்காணக்கிடத்தலினிதோவியல்வேந்தே. (௩௪௪)

குழலிகாயிற்றெழிலேய்க்குங்குழம்பார்கோலக்குங்குமமே
மெழுகிமீதோர்மணியாரம்வீசிக்கிடந்தவிரையாக
மொழுகுகுருதிச்சேறுடியோடையானைநுதன்மீது
வழுவிவீழ்ந்தவகைநாடின்மாயம்போலுமறவேந்தே. ()

பொன்னினுயவமளிமேற்பூவினுயவணைபொருந்தி, யன்
னமனையாரடிவருடவமரும்பள்ளியமராதே, மன்னுமிங்கோர்
மதயானைநுதன்மேன்மறிந்துமலனிமுடிசாய்த், தென்னுமுழை
யாய்துயில்கோடலிசையோவெங்கள்பெருமானே. (௩௪௬)

மகரப்பைம்பூண்மடவார்கள்வயிரக்குழையும்பொற்றோடுந்
தகரக்குழலுமெழினுதலுந்திருத்திப்பயின்றதாழ்தடக்கை
சிகரமனையமதயானைச்செவிமேற்சரிந்துசெங்குருதி
பகரக்கழுகுபாராட்டக்கிடத்தறகுமோபடைவேந்தே. ()

வெய்யசுடரோன்றண்கதிரோனெனவீங்கிவர்கண்மதிலியங்
பையவந்துதாமரையின்பரவைத்தடத்துமாளிகைமே [கார்
லேயதலத்துமெலவிரிந்ததலராச்செல்லுமாணையாய்
செய்யகுருதிச்சேருடிச்சிறுமானிடர்க்கேதோற்ருயே. ()

பணங்கொளுகம்பலசூழ்ந்துபகல்செய்மணியின்சுடரேந்தி
யணங்கியகல்லாதுழைநிற்குமாணையுடையவடல்வேந்தே
வணங்கிவந்துபலதெய்வம்வழிபாடாற்றுமறைநேமிக் [னே.
குணங்கொள்படையாய் கூடாருமுளரோமினக்குக் கோமா

பெருமாமழைக்கண்மாதேவிபிணையின்மாழ்கிவணழிய
வருமாமுரசம்பிறர்பெயர்கொண்டறையவாழியயனீங்கத்
திருமாநகரஞ்செல்வமுற்றுஞ்சிதையக்கண்டுஞ்சீருயா
லுருமாலென்னுந்திறலினுயுல்கம்வேண்டாதொழிந்தாயே. ()

மூரிமுந்நீருலகங்கண்முழுதுங்காவன்முனிந்தாயோ
வாருமில்லாவடியோங்கள்வழிபாடாற்றமாட்டாயோ
சீரின்மன்னும்வளநாடுந்தெய்வப்படையுஞ்செல்வமுநீ [தே.
பாரின்மன்னர்பிறர்கொள்ளப் பணித்ததென்னே படைவேந்

தொழுதுஞ்சூழ்ந்துமடிபற்றித்தொடர்ந்துஞ்சுரும்புண்
கோதைசிலே, வழுவமயங்கிமாழாந்துமருண்டுந்தெருண்டுமெட
வார்க, ளழுதகண்ணீரகன்ஞாலத்தரசருருகவருவியா, யொ
ழுகநெடுமான்முனிவென்னுமெழிந்தீயுமவிந்ததே. (கூடுஉ)

மஞ்சுதோயும்வரையார்தமன்னன்றன்னைமதயானை
யஞ்சுதோன்றநுதலினிழித்தந்தணாளர்மெய்தீண்டிப்
பஞ்சுந்துகிலும்பூம்பட்டும்பாயபள்ளிபடுத்ததன்மேல்
வஞ்சமில்லாப்புகழானைவயங்குசெந்தீவாய்ப்பெய்தார். ()

மன்னன்றம்பிமார்களையுமக்கடமையுமற்றெழிந்த [பீ
பொன்னம்புனைதார்வேந்தரையும் பொருதுபட்டபோர்க்கள
தென்னுஞ்சாடுமெரிவாய்ப்பெய்திரங்கியழுதாங்கேகினரா
லுன்னிவந்தமுடிக்கிலாதுடைந்தவேந்தனுழையாரே. ()

ஆவியாயவயக்கிரீவற்கமிர்தம்பூத்தவஞ்சாயற்
றேவிமார்கள்கலனழித்துச்சேணியுலகஞ்சென்றெய்தி
வீவில்காமன்வருவீதிகற்புவேலியால்விலக்கித்
தாவினிறையின்றுழுதனுற்பொறியின்வாயிருழ்ப்பெய்தார்.()

வேறு.

எரிவளரொளிதருநேமியெய்திய
திருவளர்படரொளிச்செங்கண்மாலவன்
சுரிவளர்குஞ்சிமேற்சொரிந்தபூமழை
வரிவளைமுரசொடுமயங்கியார்த்தவே. (நடுசு)

அரிதினினவனெய்ததெய்வவம்புக
ளுரிதினினறுத்தொளிர்நேமிகொண்டது
பெரிதிதுசித்திரமென்றுபேரொலி
விரிதருவிசும்பிடைவிரவிநின்றதே. (நடுஎ)

வெஞ்சினஞ்செருக்கொடுவீயமானமும்
விஞ்சயரொழிந்தனரொழிந்துவீரனை
மஞ்சிவர்மணிவரைவண்ணவாழிய
வஞ்சினம்பெரிதெனவடிவணங்கினர். (நடுஅ)

அஞ்சியமன்னர்கட்கருளியாயிடைத்
துஞ்சியமன்னவன்றமாங்தோமில்சீர்
விஞ்சையருலகினின்மீணடுவாழ்கென
வெஞ்சலில்கடிமுரசறையவேயினன். (நடுகூ)

கருமுகில்வண்ணனுங்கருடன்மேலிழிந்
தருமெனவதிர்தருமோடையானைமேற்
பொருமிகல்வேந்தர்போற்றிசைப்பப்போந்தரோ
பரிமிகுபடைவிடுபொடிநண்ணினன். (கூகூ0)

விரிதருதிங்களின்விளங்குமேனியன்
பெரியவன்றன்னொடும்பெயர்ந்துதாதைதன்
றிருவமர்சேவடிசென்றுதாழ்ந்தனன்
கருவரையனையதேர்ட்கனபொற்றூரினன். (கூகூக)

மக்களதாற்றலான்மலர்ந்தகண்ணினன்
மிக்குமேல்விரிந்தொளிதுளும்புமேனியன்
ஞெக்கீர்ச்சுரமைநாடுடையகோனிவை
பக்கநின்றரசர்கள்பணியச்சொல்லினன். (நசஉ)

தீதறுமணிமுடிச்செல்வக்காளையர்
தாதையென்றியலுரைதவத்தினெய்தினே
னுதலாலிவர்தமதரசகோலமெங்
காதலங்கண்ணிவைகாணலாகுமே. (நசந)

என்றவன்மொழிதலுமிலங்குநீண்முடி
மின்றவழவிரொளிவிஞ்சைவேந்தனோ
டொன்றியவரசர்களுவந்துசூட்டினா
ரன்றவர்க்கரசியன்முரசமார்த்தவே. (நசச)

கங்கையுஞ்சிந்துவுங்கருதுமாநதி
தங்குநீரெனையவுந்தந்துதாமரை
பொங்கியமுகத்தபொற்குடங்களாற்பல
மங்கலமரபினன் மன்னராட்டினர். (நசரு)

திருமணிகிழலொளித்தெய்வவான்படை
பருமணிப்பாற்கடற்பரவைநீர்முகந்
தெரிமணிக்குடங்களினேர்ந்தியேந்தறன்
சுரிமணிக்குஞ்சிமேற்சொரிந்ததென்பவே. (நசசு)

வெந்திறல்விறலொளிவிஞ்சைவேந்தரு
மந்தரமணிமலைமலருமம்மலை
யந்தரவருவியும்விரவியாட்டினா
ரிந்திரனனையவற்கிறைஞ்சியென்பவே. (நசஎ)

திருமகள்பரிவொடுசென்றுசார்தரு
முருவினுமொளியினுமுலகந்தன்னின்மேன்
மருவியநூலதுமரபினுமக்
கருமுகில்வண்ணனைக்காவனாட்டினர். (நசஅ)

விட்டெரிமணிவரைநேமிவேந்தனை,
யட்டிவனெய்தினுழியாதலான்
மட்டிவரலங்கலான்வாசுதேவனென்
றொட்டியவொளிமுடியொன்றுசூட்டினர். (௩சுசு)

பெருகியமிகுதிறற்பெரியநம்பியை
மருவியவளைவணனென்னநீண்முடி
கருவியமரபினுற்கவித்துக்காவலன்
றிருவமர்சேவடிசிலம்பவாழ்த்தினர். (௩எ௦)

இருங்கலிவிழவினேடர்சியற்றலும்
பெருங்கலிவிழவினதெய்வம்பேணுவ
சுருங்கலில்சுடரொளிதுளும்பத்தோன்றல்பா
லருங்கலமொழிந்தவுமடைந்தவென்பவே. (௩எக)

சக்கரந்தண்டுவாள்சங்குவிற்குடை
மிக்கெரிமணியிவையெய்திவீரியன்
மக்களுளரசர்கள்வணங்குந்தெய்வமாய்த்
தொக்கெரிசுடரொளிதுளும்பத்தோன்றினன். (எ௩உ)

சென்றுயர்வலம்புரிசெம்பொற்றாமரை
யென்றியல்பெயரினவிரண்டுமாகிநி
யொன்றலமணிகளுமொளிபொன்மாழையு
நின்றிவைசொரிந்தொளிகிழற்றுகின்றவே. (௩எ௩)

மிக்கெரிசுடர்முடிசூடிவேந்தர்க
டொக்கவரடிதொழத்தோன்றுந்தோன்றலா
யக்கிரிபெருஞ்சிறப்பெய்தியாயிடைச்
சக்கரப்பெருஞ்செல்வஞ்சாலைசார்ந்ததே. (௩எச)

அருங்கலப்பெருந்தெய்வமவையுந்தத்தமக்
கொருங்குசெய்வளநகரடைந்தவொண்சிறை
சுருங்கலில்கருடற்குச்சுடருந்தோன்றலாற்
பெருங்கலிமாளிகைபேணப்பட்டதே. (௩எரு)

முரசுவிற்றிருந்ததிர்மூரித்தானையா
னரசுவிற்றிருந்தனன்பின்னையாயிடைக்
கரைசெய்நீர்க்கருங்கடல்வேலிகாவலற்
குரைசெய்நூற்சரிதைகள்புலவரோதினர். (௲எசு)

ஆதிநாளரசியனீதியாங்கெடுத்
தோதினர்புலவர்களோதுமாயிடைத்
தீதிலாத்திகிரியஞ்செல்வர்செய்கைமேற்
கோதிலாத்திறல்சிலகூறப்பட்டதே. (௲எஎ)

எழுவகையருங்கலமிரண்டுமாநிதி
தழுவினசனபதமீரெண்ணாயிரம்
விழுவணிநகர்களும்வேந்தர்கூட்டமு
மெழுவினமுரைப்பினிவ்வெண்ணவென்பவே. (௲எஅ)

வன்றிறன்மலிபலதேவர்தம்மொடு
சென்றவர்செற்றலர்ச்செகுத்துப்பின்னரே
குன்றமொன்றெடுத்தலுங்கொண்டுகூறினர்
பொன்றலில்புராணநூற்புலவரென்பவே. (௲எகூ)

ஆங்கவர்மொழிதலுமருங்கலக்குழா
மீங்கிவையென்னினுமுன்னமெய்தினர்
வாங்குநீர்மணலினும்பலர்கொலோவென
வீங்கியசெருக்கிலன்வீரனாயினன். (௲அ0)

அறிபவரவையவைமொழியக்கேட்டலு
நெறிபடுநிதியமேநிறைந்தசிந்தைய *
னெறிகடற்படையினோடெழுந்துசென்றரோ
குறுகினன்கோடிமாசிலைவன்குன்றமே. (௲அக)

எரிமணிக்கடகக்கையிரண்டுமூன்றியப்
பெருமணிகிலம்பிலமாகக்கீழ்நுழைத்
தருமணிநெடுவரையதனையேந்தினன்
திருமணிநெடுமுடிச்செல்வனென்பவே. (௲அஉ)

கைகிலம்புகநுழைந்தெடுப்பக்கல்லென
மைகிலநெடுவரைமறியமற்றதன்
செங்கிலமுழைமுகஞ்சிலம்புஞ்சீரிறு
லங்கிலம்வாய்திறந்தழைப்பதொத்ததே. (கூஅகூ)

பிலங்களுளுறைவனபெரியநாகத்தின்
புலங்கெழுதிரட்சியபுச்சந்தாழ்வன
வலங்கலானெடுத்திடவகழ்ந்தெழுந்தவவ்
விலங்கலின்விழுகதிர்வேர்களொத்தவே. (கூஅச)

குழுவியகுவளையங்குண்டுமாச்சுனை
யொழுகியவருவிநீருக்குவீழ்வன
கழுமியகிலம்விடவெடுப்பக்கார்வரை
யழுவதன்கண்ணுணீரழிவதொத்ததே. (கூஅரு)

தழுவியதடவரைத்தாழ்வர்வாயெலாங்
குழுமியகொழுமுகில்வழுவிவீழ்வன
செழுவரைசெறியமுன்னுடுத்தசெந்துகி
லழிவனவருகுவந்தசைந்ததொத்தவே. (கூஅசு)

ஒன்றுதன்செறிகுறங்கூன்றிக்கைத்தல
மொன்றினொளிவரையுயரவேந்துபு
நின்றனனெடியவனீலமாமணிக்
குன்றமோர்குன்றங்கொண்டெழுந்ததொப்பவே. (கூஅஎ)

வேறு.

பொருமாலைவேலரசர்போற்றிசைப்பப்பூவி
னருமாமழைபெய்தமருலகமார்ப்பக்
கருமானெடுவரையோர்கைத்தலத்தினேந்தித்
திருமாமணிவண்ணன்செம்மாந்துநின்றான். (கூஅஅ)

அடிமேலபூங்கழல்களம்பொன்னிலங்கு
முடிமேலசூளாமணிமுளைத்தசோதி
கடிமேல்விரிதாரோன்கைத்தலத்ததன்று
படிமேன்மணியருவிபாரித்தகுன்றம். (கூஅகூ)

வரையெடுத்தமாணிக்கஙீள்கடகக்கையா
னுரையெடுப்பான்போனிமிர்ந்துநோக்கானிற்ப
விரையெடுத்தபூந்தார்விறல்வேந்தரஞ்சிப்
புரையெடுத்தமாமகரப்பொன்முடிகள்சாய்த்தார். (௩௯0)

வேறு.

கோடிக்குன்றங்கோடியல்போலுங்குவவுத்தோள்
கோடிக்குன்றங்கொண்டதுமீட்டேகொளநாட்டிக்
கோடிக்குன்றம்போந்தெனநின்றகொலைவேழங்
கோடிக்குன்றமன்னவனேறிக்குளிர்வித்தான். (௩௯௧)

தாமரைதங்குந்தண்புனல்வேலித்தடநீந்தித்
தாமரைதங்குந்தண்புனனன்னாட்டகமெய்தித்
தாமரைதங்குந்தண்சுடரொண்பொற்கலைநல்லார்
தாமரைதங்குந்தண்புகழ்பாடத்தகைபெற்றார். (௩௯௨)

மாலைத்தண்கேழ்மாமதிபோலும்வளர்சோதி
மாலைத்தண்கேழ்மாமணிமுத்தக்குடைநீழன்
மாலைத்தண்கேழ்வண்புனனாட்டார்மகிழ்வெய்து
மாலைத்தண்கேழ்மால்கடல்வட்டம்வளாயிற்றே. (௩௯௩)

மையார்சென்னிமாளிகைமுன்றின்மலர்மேயு
மையார்பொய்கைத்தண்புனனுடன்வரலோடு
மையார்கண்ணினும்பயமெல்லாமடவாரிம்
மையாநின்றேயெய்தினமென்றேமகிழ்வுற்றார். (௩௯௪)

ஆம்பன்னூனுஞ்செந்துவர்வாயாரமிர்தூறி
யாம்பன்னூனுந்தேமொழிநல்லாரலர்தூவி
யாம்பன்னூனும்விட்டனராரர்வக்களிகூர
வாம்பன்னூனும்பல்புகழானந்நகர்புக்கான். (௩௯௫)

தாமரைநாறுந்தண்பணையெல்லாமகிழ்நாறச்
சாமரைவீசத்தாழ்குழைசெம்பொன்சுடர்வீசத்
தேமரையாளுஞ்சேயிழையாளுந்திருமாலும்
பூமரைவேலிப்போதனமென்னுந்நகர்புக்கார். (௩௯௬)

வே று.

முன்வாயின்முகமெல்லா முத்தடுத்துத்தாமரைவெண்மு
ளைகள்பாய்த்தி, மின்வாயமணிக்கலசம்பொற்செந்நெற்கதிர்
சூட்டிவிளங்கவைத்துப், பொன்வாழைமரகதப்பைங் கமு
கொடுதோரணம்வாயல்புணரநாட்டி, மன்வாயில்வளநகரார்
மணிமாலைதொடர்ந்தொலிப்பவகுத்தாரன்றே. (௩௯௭)

சூழிணர்மென்மல்லிகையும் வளையமுமின் சூட்டுமெழிறு
தையச்சூட்டி, யாழுகவிமணிவண்டுமெணிஞிமிறுமதுகரமுமி
சைப்பச்செய்ய, காழகிலுநறுஞ்சாந்துங்கடிவாசப்பூப்பொடி
யுங்கமழ்ந்துகைபோ, யேழுலகுமணங்கொடுப்பவெழினகரா
ரெதிர்கொள்ளவிறைவன்புக்கான். (௩௯௮)

கோபுரமுங்கழிந்துகுளிர்நகரைவலங் கொடுவீதிகுடை
யோன்செல்ல, நூபுரமுமேகலையுங்கலந்தொலிப்ப நுண்மரு
ங்குனுடங்கவோடி,மாபுரத்துமாளிகைதம்மணிக்கதவந்தாழ்
திறந்துமனத்தின்றூழும், வேய்புரையுமென்பணைத்தோண்
மெல்லியலார்மெல்லமெல்லத்திறந்தாரன்றே. (௩௯௯)

போர்மேகமன்னதிறற் பொருகளிற்றுமேலரசர்போற்றுக்
கூவச், சீர்மேகமெனச்செறிகணிடிமுரசங்கடிததிர்ந்துதிசை
மேலார்ப்ப, நீர்மேகமுத்தினெடுந்தண்குடைக்கீழ்நிழற்றுளு
ம்புநேமிதாங்குங், கார்மேகவண்ணனிவன்வருவானைக்காண்
மினேகண்களார. (௪௦௦)

செந்தாஅமரைபுரையுஞ் செழுங்கண்ணுந்தடக்கையும்ப
வளவாயு, மந்தாஅமரைநாறுமடியிணையுமவையவையேகாண்
மின்காண்மின், நந்தாஅமரைநாடன்கையிலங்குமணியாரநவி
ன்றமார்பம், பைந்தாஅமரைமடந்தைபாராட்டப்பொலிந்தில
ங்கும்படியுங்காண்மின். (௪௦௧).

* உரற்காலமுறச்செவியவோங்கெருத்திரேனுடைமால்யா
னைமேலொளிசூழ்மாலை, நிரற்காலமணிநிரைத்தநெடுங்கு

---

* இச்செய்யுள் முதலடிமிக்கும், ௪௦௪-ம் செய்யுள் இடையடி யொன்று குறைந்தும் விருத்தப்போலிசவலைகளுக்கு இலக்கியமாக அமைந்தனபோலும்.

டைக்கீழ்முடிகிழற்றநெடுமாலபின்னே, சரற்காலசந்திரனோதடவரைமேல்வெண்முகிற்கீழ்த்தயங்கியாங்கே,யரக்காமபல்வாயினிரிவ்வருநனலர்தாரான்மற்றவன்சிரகாண்மின். ( )

சேதாம்பல்விழ்ந்தனையசெவ்வாயுஞ்செங்குவளை திளைத்தகண்ணு, மீதார்ந்தவெண்ணிலாச்சுடரொளியும்வெள்ளிக்குன்றனையதோளும், போதார்ந்தகருங்குஞ்சிமணிதொடர்ந்தாற்போற்புறந்தாழ்ந்திருண்டவாறுங், காதார்ந்தகுழைதாழக்கதிருமிழ்ந்ததிருமுகத்தின்கதிர்ப்புங்காண்மின். (௪0௩)

வேய்காயுமென்பணைத்தோளினில்வெண்சந்தனமெழுகிமுத்தந்தாங்கி, யேகாயமிட்டவெண்டுகிலின்மகளிருழைநின்றேத்த, வாகாயமியல்கின்றவருமணிநல்விமானத்தினகத்தாள்போலு, மாகாயவரையாளுமன்னர்கோன்மடமகளைவம்மின்காண்பாம். (௪0௪)

அருமணிசேர்விமானத்தி னாகாயப்பளிங்கியன்ற விளிம்பினாலுந், திருமணியினொளிமேனிநிழலெறிப்பத்திகழ்ந்திலங்குந்தெய்வப்பாவை, கருமணியின்கதிர்குழற்றிக்கடைசுருட்டிக்கைசெய்துவளர்த்தபோலும், புரிமணியொண்குழறிகழப்பொன்னணைமேலினிதிருந்தபொலிவுகாண்மின். (௪0௫)

மாநீலமிடைபதித்து வெண்பளிங்கிற் செவ்வரத்த விரேகைவாங்கிப், பானீரவேல்வடிவுபடத்திருத்தித்தாமரையுட்பாரித்தன்ன, தூநீலவாணெடுங்கண்குழைமுகத்தினுள்ளிலங்கத்தோன்றுகின்ற, வாய்நீலமணியைம்பாலிவ்வணங்குவரையணங்கோவன்றோகாண்மின். (௪0௬)

எழுதாது மையொளிருமிருமருங்குமெறித்திடையேசெங்கேழோடிக், தொழுதார்க்குவரங்கொடுக்குந்தடங்கண்ணிதுணைமுலையின்வளாகஞ்சூழ, விழுதாயகுங்குமத்தாலிலைதையபுங்கொழுந்திணையுமிழைத்தார்பின்னு, முழுதாரமுத்தணிந்தார்நுண்மருங்குலுளதாகமுயன்றாரல்லர். (௪0௭)

போதாவி யேகமழ்ந்து புரைவட்டம் பொன்னிழையாற்பொலிந்துதோன்றி, யூதாவியானுடங்குமொள்ளரத்தநுண்கலிங்கமொன்றுசேர்த்தி, மீதாடிவில்லுமிழுமிடைமணியொ

ண்கலாபங்கண் மிளிரவீக்கி, யாதானுமிவரடக்கமிவளல்குல
கலாமையறிந்துசெய்தார். (சoஅ)

கந்தாரங்கொளவீக்கிக்கடி விரிந்துபூம்பாளைகமழுங்காலே,
நந்தாஅவனத்திளையாரெழுவியாழ்நரம்பினுக்கு நலஞ்சாலின்
சொன், மந்தாரமலர்கமழுமணியைம்பான்மைமதர்த்தமழை
க்கண்மாதர், செந்தாஅமரையடியின்செவ்வியுமற்றிதுவாயிற்
றெய்வமேயாம். (சoகூ)

வேறு.

இன்னனபலவுங்காட்டியிளையவர்காணும்போழ்தின்
மன்னவர்மன்னர்தம்மேன்மாலையுமலருஞ்சிந்தி
மின்னவிர்சிவிறிதம்மால்விரைபொழிதாரைவீக்கித்
தொன்னகரார்வமென்னுங்களித்தொழிறொடங்கிற்றன்றே.

செம்பொன்செய்பொடியினாலுஞ்சிவிறியின்றாரையாலு
மம்பொன்செய்மலரினாலுமகிற்புகையாவியாலும்
பைம்பொன்செய்பதாகையாலும்பரந்திருள்பட்டவீதி
கம்பஞ்செய்யானையானைக்கண்விளக்குறுத்தவன்றே. (சகக)

மன்னியபுகழினான்மேல்வாங்குவிற்புருவமாக.
மின்னவிர்பகழிகண்ணாப்புரிசைவெண்மாடமாகத்
துன்னியசாலவாயிற்றுளைகளேதுளைகளாகக்
கன்னிபரெய்துதத்தங்கடிநகர்காவல்கொண்டார். (சகஉ)

ஆடுவாரணங்குகொள்வாரார்வஞ்செய்கருவிவீக்கிப்
பாடுவார்கண்டுகூறிப்பரவுவார்பணிந்துமுன்னாற்
கூடுவார்கொற்றங்கொள்ளக்கூறுவாராகியெங்கு
மூடுபோக்கரியதாகவொளிநகருழையர்சூழ்ந்தார். (சகங)

அங்குலாங்கொடியினாலுமகிற்புகையாலுமெங்கு, மங்குல்
வாய்விசும்புமூடமழுங்கியசுடரானகி, யிங்குலாவிளங்கமாட்
டேனினியெனவெண்ணிவெய்யோன், கொங்குலாங்குளிர்
கொள்சோலைக்குடவரைக்குவடுசேர்ந்தான். (சகச)

மணிவரையரசன்மற்றைவாழ்நகர்க்கோயில்புக்கான்
பணிவரைபுழையராகிப்பயாபதிபக்கநின்றார்
தணிவரையிலாதசெய்கைத்தத்தமக்கியன்றகோயி
லணிவரையனையதிண்டோளருக்கனோடரசர்சேர்ந்தார் ()

மஞ்சுடைமாடக்கோயில்வளைவண்ணன்புக்கபின்னைச்
செஞ்சுடர்மகரப்பூணான்றிருவெதிர்கொள்ளச்சென்று
விஞ்சையம்பாவைமேயவிடைமணிவிமானஞ்சேர்ந்தா
னெஞ்சலில்செல்வர்தன்னாலிந்திரனிரட்டியுள்ளான். (௪௧௬)

மாலையாங்கடைந்தபோழ்தின்மங்கலத்தேவிப்பட்டங்
காலையாமணிவதென்றுகண்ணதிர்முரசிற்சாற்றிப்
பாலையாழ்மழலையாளைக்காப்பணிபயின்றசெல்வம்
வேலைசூழுலகமெல்லாம்விம்முறவிளைந்ததன்றே. (௪௧௭)

அங்கொளிவிளக்கினாலுமணிகலச்சுடரினாலுந்
திங்களையனையசெல்விதிருநுதலொளியினாலு
மங்கலமரபிற்றல்லாமயங்கிருண்மறைந்துபோகக்
கங்குலுமெல்லமெல்லக்கையகன்றிட்டதன்றே. (௪௧௮)

காரிருளகன்றபோழ்திற்கமலினியென்னுஞ்செல்விக்
கோருருளாழிவெய்யோனருளியவுதயஞ்சேர்ந்தா
னாரிருளனையகூந்தற்கருளியமனத்தனாகிப்
போருளாழியானும்பெயர்ந்துபொன்மாடஞ்சேர்ந்தான். ()

விஞ்சையருலகுமண்ணும்விண்ணுமொன்றாயதேபோற்
செஞ்சுடர்மணியும்பொன்னுமாலையும்விரையுஞ்சேர்த்தி
யஞ்சுடர்வயிரப்பைம்பூணலைகடல்வண்ணன்றன்னாற்
பஞ்சுடையல்குல்பாகவரசொடுபட்டங்கொண்டாள். (௪௨௦)

தேவிதன்றுணைதக்கேற்றபெருஞ்சிறப்பியற்றிச்செல்வன்
வேய்விரிவெள்ளிக்குன்றின்விஞ்சையருலகமெல்லா
மோவில்புகழினானுக்குடன்கொடுத்துரிமையோடும்
பூவிரிப்புருவத்தாரான்பின்சென்றுவிடுத்துப்போந்தான். ()

தெவ்வரங்கின்மையா லுந்திசையினில்வணக்கற்பால
வவ்வழியின்மையா லுமருமணிவண்ணனாங்கு
மௌவலங்குழலியா லுமணிநிலமடந்தையா லுஞ்
செவ்வலர்த்திருவினா லுஞ்செருக்கியகளியனானான். (௪௨௨)

வே று.

தேவர்கடிசைமுகங்காப்பமாநிதி
யோவலவிரண்டுநின்றொருங்குவீழ்தர
மேவியவருங்கலம்விளங்கநோக்கிய
காவலன்செல்வநீர்க்கடலுண்மூழ்கினான். (௪௨௩)

திருவமர்தாமரைச்செம்பொனாயிதழ்
மருவியதிருவடிவாமன்பொன்னகர்
விரவியவிழவொடுவேள்விக்கொத்தரோ
கருவியவளநகர்கண்குளிர்ந்ததே. (௪௨௪)

அரசியற்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் - ௧௫௫௬.

பத்தாவது

சுயம்வரச் சருக்கம்.

தேவருமனிதர்தாமுஞ்செறிகழல்விஞ்சையாரு
மேவருந்தகையசெல்வம்விருந்துபட்டனகடோற்ற
மாவரசழித்தசெங்கண்மணிவண்ணன்மகிழ்ந்தகாலைத்
தாவிருஞ்செல்வமொன்றுதலைவந்ததுரைக்கலுற்றேன். (௧)

பானிலாநிறைவெண்டிங்கள்பனிக்கதிர்பரப்பியாங்கு
மேனிலாவிரியும்வெள்ளிவெண்குடைவிசும்புகாப்பக்
கோனிலாவுலகமோம்புநீஇயபின்குவளைவண்ணன்
மானிலாமடக்கணோக்கின்மகளிர்தம்வலையிற்பட்டான். (௨)

திருமணிநிழற்றுஞ்செம்பொனெடுமுடிமுகட்டோர்தெய்வக்
குருமணியுமிழுஞ்சோதிகுலவியவொளிகொள்வட்டம்
புரிமணியோதவேலிப்புதையிருளிரியல்செய்யக்
கருமணிவண்ணன்றானேகதிரவன்றொழிலும்பூண்டான். (௩)

தேங்கமழ்தெய்வச்செம்பொற்றாமரைசுரிவெண்சங்க
மீங்கிவைநெதிகளாகவேழரதனங்களெய்தி
யாங்கமர்செல்வந்தம்மாலற்றைக்கன்றமர்ந்தமாதோ
வோங்கினனுருவத்தாலும்வில்லெண்பதுயர்ந்ததோளான். ()

தெய்வங்கள்செப்பினீரெண்ணாயிரந்திசைநின்றேம்ப
மையறுமன்னரீரெண்ணாயிரர்வணங்கவான்மே
னெய்தியல்விஞ்சைவேந்தர்நூற்றொருபதின்மர்தாழக்
கையமைதிகிரியானைக்காமனேகலவிக்கின்றான். (ரு)

மன்னவர்மகளிரீரெண்ணாயிரர்மயிலொடொப்பா
ரன்னவரமிர்தச்செப்பேரணிமுலைக்குவடுபாயப்
பின்னியதாதுமல்கப்பில்கியதேம்பெய்மாரி
துன்னியசுரும்பொடேங்கத்துணருடைகின்றவன்றே. (சு)

அன்னணமியலுநாளுளக்கிரத்தேவிதங்கோன்
பொன்னணியுலகின்வந்தபூவிரிபாரிசாத
மன்னியலரும்புவைப்பமற்றதனோடுசேர்த்திக்
கன்னியகாமவல்லிக்கடிவினைகாணலுற்றாள். (எ)

சுரும்பிவர்சோலைவேலித்துணர்விரிபாரிசாத
மரும்பியபருவச்செல்வமடிகளுக்கறிவியென்று
பெரும்பிணாவொருத்திதன்னைப்பெய்வளைவிடுதலோடும் [ள்.
விரும்பினள்சென்றுவேந்தற் கிறைஞ்சிவிண்ணப்பஞ்செய்தா

அடிகண்முன்னடித்தியாராலங்கைநீர்குளிரவூட்டி
வடிவுகொடளிர்கண்முற்றிமகனெனவளர்க்கப்பட்ட
கடிகமழ்பாரிசாதமதனொடோர்காமவல்லிக்
கொடிமணம்புணர்க்கலுற்றகுறிப்பறிகசென்றென்றாள். (அ)

என்றவண்மொழிந்தபோழ்தினிலங்கொளிமுறுவறோன்றி
நன்றதுபெரிதியாமுநங்கைதன்மகனைக்காண்டு
மென்றவனருளக்கேட்டேயிளையவள்பெயர்ந்துபோக
மின்றவழ்வேலினாற்குவிதூடகனுழையனானன். (கூ)

காதுபெய்குழையுஞ்செம்பொற்சுருளையுங்கலந்துமின்னப்
போதலர்குஞ்சியாங்கோர்பூந்துணர்வடத்தின்வீக்கி
யோதியமருங்குறன்மேலொருகைவைத் தொருகைதன்னுன்
மீதியல்வடகம்பற்றிவெண்ணகைநக்குநின்றான். (௧௧)

மூடியபுகழினற்குமுகிழ்நகைபயந்துகாட்டுங்
கோடியகிலேயின்முன்னற்குஞ்சித்தவடிவனுகிப்
பாடியசாதிப்பாடல்பாணியோடிலயங்கொள்ள
வாடியமெலடுத்துக்கொண்டாங்கந்தணனுடுகின்றான். (௧௨)

வேறு.

பாடுபாணியிலயம்பலதோற்றி
யாடியாடியசதித்தொழில்செய்ய
நாடிநாடிநனிநன்றெனநக்கா
னீடுநீடுமுடியானெடியானே. (௧௩)

காதுகொண்டகனபொற்குழைசோர
மீதுகொண்டவடகம்புடைமேவ
வாதியாதிமுழுகும்வயிறென்னப்
பூதிமீதுபுரளாநரல்கின்றான் (௧௪)

மாதவன்வயிறுபற்றிநரன்றாற்
கேதமென்னையெனவேந்தல்வினவ
வூதியூதிவயிறுள்ளளவெல்லா
மோதகங்கண்முழுகும்பலவென்றான். (௧௫)

என்றுதின்றனைபன்மோதகமென்ன
வென்றுதின்றனவுமல்லவினிப்போய்ச்
சென்றுதேவிகடிகாவின்விழாவி
னின்றுதின்னலுறுகின்றனவென்றான். (௧௬)

மாதவன்மொழியமன்னவனக்காங்
கேதமென்னைபெரிதெய்தினையாங்கே
வேதநாவின்விறல்வேதியர்க்கல்லா
வீதவில்லையினியென்செய்தியென்றான். (௧௭)

வேதம்வல்லவரைவென்றிடுகிற்கும்
வாதம்வல்லன தனுற்பெறுகிற்பன்
வாதம்வெல்லும்வகையும்மெனமாண்பு
மாதுபண்டுமறியும்மறவேலோய். (கஅ)

வாதம்வெல்லும்வகையாததுவென்னி
லோதிவெல்லலுறுவார்களையென்கை
கோதுகொண்டவடிவிற்றடியாலே
மோதிவெல்வனுரைமுற்றுறவென்றான். (கக)

நன்றுவாதனனிகாண்டுமென்பபோய்ச்
சென்றுசேர்லைமதில்சேருபுவாயி
லொன்றுகாவலுழையாரொடுகூடிப்
பொன்றிலாதபுகழான்பொழில்புக்கான். (உ0)

நீடுசெம்பொன்முடியாற்கெதிர்ந்தா
வேடமேவியவிதூடகனோடி
யோடியாடிவருவானுயர்காவிற்
கூடிவீழ்வனகொழுங்கனிகண்டான். (உக)

கண்டுகண்டுதனகண்கனிதம்மேன்
மண்டிமண்டிவரவாயெயிறூறக்
கொண்டுகொண்டுகுவியாவிவைகாணு
யுண்டுமுண்டுமெனவோடியுரைத்தான். (உஉ)

நல்லவல்லகனிமுன்னையநாமிவ்
வெல்லைசெல்லவுறுமென்னலுமாயின்
வல்லைவல்லைவருவாயெனமுன்னு
லொல்லையொல்லையொலிபாடிநடந்தான். (உங)

சந்துமாவொடுதடாயிடமெல்லாங்
கொந்துதேனொடுகுலாயினர்கூடி
வந்துதாழ்ந்துமதுமாரிதயங்கித்
தந்துதாதுபொழியும்பொழிறூனே. (உச)

மாவின்மேல்வளரமாதவிவைத்த
தாவிலாததமைசார்வனநோக்கிக்
காவுகாமர்களிகண்டதுகையாற்
கூவுமோடியவைகொள்குவமென்றான். (௨௫)

கூடிவண்டுகுடையுங்குளிர்காவி
னோடிமண்டிவருவானொருபாலாற்
சேடுகொண்டகனிசிந்தினகண்டு
மூடுகொண்டமதியான்முனிவுற்றான். (௨௬)

ஏவலின்றியெரிவெங்கதிரோனும்
போவலென்றுநினையாப்புனைகோயி
லோவலின்றியுடையாய்சிறிதேனுங்
காவலின்றுகடிகாவிதுவென்றான். (௨௭)

பொன்னினாயபுரிசைத்தளமேலு
மன்னுவாளர்மறவோர்பலர்காப்ப
ரென்னைகாவலிஃதில்வகையென்றான்
மின்னுவார்ந்துமிளிருஞ்சுடர்வேலோன். (௨அ)

அருமுகத்தகனியாயினவெல்லா
மொருமுகத்தனகளன்றியுதிர்த்துத்
தருமுகத்தர்வருவார்தறுகண்ணார்
கருமுகத்தருளர்காவல்களென்றான். (௨௯)

யாவர்யாவரவரெங்குளரென்னக்
காவுமேவுமுசுவின்கலைகாட்ட
வாவர்கள்வரதனைலெழுநாம்போய்த்
தேவிகாவுகனிசேர்குவமென்றான். (௩0)

கள்வர்தாம்பலரெனக்கடல்வண்ண
னுள்விராவுநகைசேருரைகேட்டே
வெள்கிவேந்தனருகேயிருபாலும்
பள்கிநோக்குபுபயிர்த்துநடந்தான். (௩௧)

வேறு.

தாழ்தளிர்பொதுளியதமாலவீதியை
யேழைகண்டிருளெனவெருளயாவதுஞ்
சூழிருளன்றிதுசோலைகாணென
வீழிணர்க்கண்ணியான்வெருவுநீக்கினான். (௧௨)

வாலிதழ்வீழ்தருமகிழ்தன்றாண்முதல்
சாலிகைபுக்கதுதயங்குதாரினாய்
சோலையுமமர்த்தொழிற்றொடங்குமோவென
வேலைநீர்வண்ணனைவெருண்டுநோக்கினான். (௧௩)

அஞ்சலிங்கமர்த்தொழிலில்லையாவது
மஞ்சிவர்மகிழந்தன்வயவுநோய்கெடூஉப்
பஞ்சிவரல்குலார்பவழவாயினா
லஞ்சுவைநறவமீங்குமிழலானதே. (௧௪)

ஆங்கதனாவியாலரவத்தேனெழா
வீங்கிதன்றாண்முதலிருளமொய்த்தன
வோங்கியகேள்வியாயுணர்ந்துகொள்கென
வீங்கியகழலவன்விளங்கச்சொல்லினான். (௧௫)

முள்ளரைமுருக்கினோடெழுந்தமல்லிகை
வள்ளிதழ்குருதியின்வடிவினாழ்த்தன
கள்ளவிழ்கண்ணியாயிரியுநாளெனத்
தெள்ளிதினதனையுந்தெளியச்செப்பினான். (௧௬)

கடிமிசைவிரிதருங்காமர்கொம்பரின்
முடிமிசையெழுதருமுறிகொளீர்ந்தளி
ரடிமிசையீன்றதிவ்வசோகமென்கொலோ
கொடிமிசையெழுதியகுவவுத்தோளினாய். (௧௭)

இலைத்தலையீர்ந்தளிரல்லவீங்கிதன்
மலைத்தகுவயவுநோய்தீரவைத்தன
கலைத்தலைமகளிர்தங்காமர்சீறடி
யலத்தகச்சுடரெனவறியக்காட்டினான். (௧௮)

காவியால்விலங்கியகருங்கண்வெம்முலைத்
தேவியார்சீறடிசென்னிசேர்த்தலு
மேவியாங்கலர்ந்திடுகின்னைவென்றதா
லாவியாரசோகினதமைதிவண்ணமே. (௲௧)

மாதவன்மொழிதலுமன்னனுங்கொரு
போதினுற்புடைத்தனன்புடைத்தலோடமிங்
கேதிலாளொருத்திக்காவென்னைச்செய்தவித்
திதெலாந்தேவிக்குத்தெரியச்செப்புவேன். (௪௦)

என்றலுமெரிமணிக்கடகக்கையினு
லன்றவன்கைத்தலம்பிடித்தங்கியாவது
மின்றிறவினிச்செய்தலில்லெனச்சொலிச்
சென்றுருமணிச்சிலாவட்டமேறினன். (௪௧)

சோரிகதிர்மணிச்சிலாவட்டஞ்சூழ்ந்தன
னருகின்றந்தணனமர்ந்துநோக்கியே
வெருவியமனத்தினன்விதலைமேனியன்
பெருகியதலையினன்பெயர்ந்துபின்றினன் (௪௨)

யாதுகண்டனையெனவிதனுள்வாழ்வதோர்
பூதமுண்டதுபுடைத்துண் ணுமாதலா
லேதமுண்டிங்கினியிருப்பின்வல்லையே
போதவென்றந்தணன்புலம்பிக்கூறினன். (௪௩).

யாததனுருவெனவெரிபொன்னோலையுஞ்
சோதிசூழ்சுடர்மணிக்குழையுந்துன்னிய
காதொடுகண்பிறழ்ந்துளதுகைகுழி
தூதியவயிற்றதென்றுருவமோதினன். (௪௪)

மின்னிழற்பூணவன்மெல்லகக்கது
கின்னிழற்காணனகிற்கின்னுரை
யென்னிழலென்னுெடுமியங்கினல்லது
கன்னிழலுள்புகிற்காண்டலாகுமே. (௪௫)

நின்னிழலாவதுதெளியகின்றெழி
னிக்கிழற்காணெனவிறைஞ்சிநோக்குபு
தன்னிழருன்செய்வசெய்யத்தான்றெளிந்
தின்னிழலிருந்தனனிலங்குநூலினன். (சசு)

திருந்தியமணிநகைத்தேவியிவ்வழி
வருந்துணைப்பொழுதுமிம்மணிச்சிலாதலம்
பொருந்தினபொழினலங்காண்டுமென்றரோ
விருந்தினரிருவருமினிதினென்பவே. (சஎ)

வேறு.

மின்னவிர்விளங்குமணிமேகலையிழற்றப்
பொன்னவிர்சிலம்பொலிபெயர்ந்துபுடைசாற்றக்
கன்னியர்நிரந்துபலர்காவலொடுசூழ
வன்னமெனவந்தரசியார்பொழிலடைந்தார். (சஅ)

மாலையமர்சிந்தையொடுவார்பொழின்மருங்கின்
வேலையமர்கண்ணிவிளையாடுதல்விரும்பி
மேலையமர்விஞ்சையின்மறைந்துவிரைநாறுஞ்
சோலையமர்தோகையெனவேதொழுதுநின்றாள். (சகூ)

மாதவன்மருட்டமழைவண்ணன்மணிவட்டஞ்
சோதிவிடுசூழ்சுடர்வளாவவதன்மேலாற்
றூதுபடுபோதுதவிசாமெனவடுத்த
மீதுபடுபொங்கணையின்மெல்லெனவிருந்தான். (ருo)

பந்தணையுமெல்விரலிபாடகமொடுக்கி
வந்தணையுமெல்லையுண்மயங்கியொருமாற்ற
மந்தணன்வினவுவகமீதுகினைவானாய்க்
கந்தணைவிலாதகளியானைபலவல்லாய். (ருக)

நிலத்தவள்கொலன்றிநெடுமால்வரையுளாள்கொ
லலத்தகவடிச்சுவடசோகின்மிசைவைத்தா
ளுலத்தகையதோளணிகொண்மார்பவுரையென்ன
வலத்தகையனுயமணிவண்ணன்மொழிகின்றான். (ருஉ)

செய்யனசெறிந்தனதிரண்டவிரல்சால
வையதசையார்ந்தவடியின்னமுகிலுலே
மெய்யுமறிவன்வினவில்விஞ்சையன்மடந்தை
வையமுடையாற்குரியமாதரவளென்றான். (௫௩)

என்றலுமிரண்டுகருநீலமலர்கண்ணுஞ்
சென்றுகடைசேந்துசிறுவாணுதல்வியர்த்தே
யன்றரசனுவியுருகும்படியனன்று
மின்றவழுமேனியொடுதேவிவெளிநின்றாள். (௫௪)

தாரிவர்கருங்குழலிதன்னைமுகநோக்கி
மாதவனடுங்கிவளர்பூம்பொழின்மறைந்தான்
காதலனுமங்குரியகட்டுரைமறந்திட்
டேதமினியென்கொல்விளைகின்றதெனகின்றான். (௫௫)

மன்னன்மகளேமகரவார்குழன்மடந்தா
யன்னமனையாயமிர்தின்மேலுமமிர்தொப்பா
யென்னையிவனுற்றதெனவென்னுமிலையென்று
முன்னுபுருவக்கொடிமுரிந்துமுனிவுற்றாள். (௫௬)

செய்யனசெறிந்தனதிரண்டவிரல்சால
வையதசையார்ந்தவடியின்னமுகிலுலே
மெய்யுமறிவன்வினவில்விஞ்சையன்மடந்தை
வையமுடையாற்குரியமாதரவள்கண்டாய். (௫௭)

ஆங்கவளொடுங்குவிளையாடுநெனிகீயான்
பூங்கமழுமாட்டெனதேபுகுவனென்று
டாங்கலனெழுந்துதகைநீலமணிவண்ண
னோங்குமுடிசேறடியின்மேலொளிரவைத்தான். (௫௮)

மற்றநெடுமான்மகரமாமுடிவணங்கக்
கற்றனைதவப்பெரிதுகைதவமுமென்ன
வுற்றதொர்பிழைப்புடையனுய்விடினுணர்ந்து
முற்றமுறைசெய்தருளுமொய்குழலியென்றான். (௫௯)

மன்னனோர்பிழைப்புமிலன்மாதவனைநாடி
யின்னினியிவண்கொணர்மினென்னவுழையோர்கண்
முன்னவுன்மறைந்தமுருகார்பொழிலினுள்ளே
துன்னுபுதொடர்ந்துதுகில்பற்றுபுகொணர்ந்தார். (௬௦)

பேதைமைகலந்துபிறழ்கண்ணினொடொடுங்கு
மாதவனைநோக்கிமணிவாய்முறுவறோன்றிக்
கோதைகளில்யாத்திவனைநீர்கொணர்மினென்றாள்
போதுவிரிதேங்குழலிபூம்பொழிலணைந்தாள். (௬௧)

மன்னவன்மருட்டமணியாழ்மழலைமாதர்
முன்னியமுகத்துமுறுவற்கதிர்முகிழ்ப்ப
வின்னவருள்பெற்றனனினிப்பெரிதுமென்னு
வன்னமனையாளையணிமார்பினிலணைத்தான். (௬௨)

போதிவரலங்கலொடுபூண்முலைநெருங்கக்
காதலன்முயங்குபுகலந்தினிதிருந்து
மாதவனுமேதமிலனாதலின்மடந்தாய்
தீதுபடுசிற்றமொழியென்றுதெளிவித்தான். (௬௩)

இட்டதளைதம்மொடிருதோளுமிடைவீக்கிக்
கட்டிவிடுபூம்பிணையல்கைவிடலுமெய்யு
ளொட்டிவிடுகாதலொடுவந்துருவுகொண்டு
பட்டபலபாடலினொடாடல்பலசெய்தான். (௬௪)

வேறு.

ஓடுமேமனமோடுமே, கூடுமேதணிகோதையாய்
காடுசேர்கனிகாண்டொறு, மோடுமேமனமோடுமே. (௬௫)

ஊறுமேயெயிறூறுமே, வீறுசேர்விரிகோதையாய்
சேறுசேர்கனிகாண்டொறு, மூறுமேயெயிறூறுமே. (௬௬)

வேண்டுமேமனம்வேண்டுமே, பூண்டபொன்னணிமார்பி
னாய், நீண்டமாங்கனிநேர்தொறும், வேண்டுமேமனம்வே
ண்டுமே. (௬௭)

வே று.

இன்னனபாடியாடவீர்ங்கனிபலவுங்கூவி
முன்னவனூரவூட்டிமுறுவலோடமர்ந்தபின்னை
மன்னியபாரிசாதமணமகனுகாட்டிக்
கன்னியங்காமவல்லிகடிவினைதொடங்கலுற்றார். (௬௮)

திருமணிகிழற்றுஞ்செம்பொற்றிலதமாமுடியினனுங்
குருமணிக்கொம்பரன்னகொழுங்கயனெடுங்கணாளும்
பருமணிபதித்தபைம்பொன்வேதிகைப்பாரிசாத
மருமணியரும்பித்தாழ்ந்தவங்தளிர்ப்பொதும்பர்சார்ந்தார். ()

வரிவளைவயிரொடேங்கவாரணிமுரசமார்ப்பக்
கருவளர்கனபொற்சோலைக்கறங்கிசைபரந்தபோழ்திற்
றிருவளரலங்கன்மார்பிற்செங்கணான்றேவிமார்க
ளுருவளர்கொம்பரன்னாளருளறிந்துழையரானார். (௭௦)

செங்கயலுருவவாட்கட்டேவிதன்குறிப்பிற்சேர்ந்த
மங்கையர்வனப்புநோக்கிமணிவண்ணன்மகிழ்ந்துமற்றப்
பொங்கியவிளமென்கொங்கைமகளிர்தம்புருவவில்லா
லங்கயனெடுங்கணென்னும்பகழியாலழுத்தப்பட்டான். (௭௧)

குடங்கையினகன்றுநீண்டுகுவளையின்பிணையல்செற்று
மடங்களிமதர்வைச்செங்கண்மான்பிணைமருட்டிமையாற்
படங்கலர்திருள்பட்டுள்ளாற்செவ்வரிபொதிந்தவாட்க
ணிடங்கழிமகளிர்சூழவிற்திரனிருந்ததொத்தான். (௭௨)

ஆங்கவரோடுமற்றவணிபொழிற்கரசனாய
பாங்கமைபாரிசாதம்பருவஞ்செய்பொலிவுநோக்கி
யிங்கிவற்கிசைந்தகோலமினிதினினியற்றுகென்று
னோங்கியவுருவத்தார்மேலொளிநிலாவுமிழும்பூணான். (௭௩)

எந்திரமிழிந்ததாரையருவிநீரினிதிறைட்டிக்
கந்தெனத்திரண்டதிண்டோட்கனகசாலங்கள்காட்டிப்
பைந்தழைப்பொழிலுக்கெல்லாமரசெனப்பட்டஞ்சேர்த்தி
யந்தளிர்க்கொம்பர்தோறுமணிப்பலவணிந்தாரன்றே. (௭௪)

கன்னியங்காமவல்லிக்களங்குழைமடந்தைதன்னை
மன்னவன்றேவிமார்கண்மணவினைக்கோலஞ்செய்து
பின்னதனோடுசேர்த்திப்பெருகியகளியரானா
ரின்னகைப்புதல்வர்செல்வம்யாவரேயினிதென்னாதார். ( )

மாதரார்மனத்தினுள்ளுமணிவண்ணனினைப்பினுள்ளுங்
காதலுஞ்செறிந்ததாகக்காமனுமுழையனாகப்
போதலர்பருவச்சோலைப்பொழினலநுகரும்போழ்தி
னோதநீர்வண்ணனங்கோருபாயத்தாலொளிக்கலுற்றான். ( )

பொன்னவிர்குழையினாரைப்பொழில்விளையாடலேவி
மன்னவன்மதலைமாடவளநகரணுகுவான்போற்
றன்னைமெய்மறைத்தோர்விஞ்சைதாழிருளெழினியாகப்
பின்னைமாதவனுந்தானும்பிணையனாருழையனானான். (எஎ)

மன்னவன்மறைந்ததெண்ணிமாபெருந்தேவிமற்றப்
பொன்னவிர்கொடியனாரைப்பொழில்விளையாடலேவக்
கன்னியங்கோலஞ்செய்துகதிர்மணிக்கலங்கடாங்கி
யின்னகைமழலைதோற்றியிளையவரினையரானார். (எஅ)

அம்பொன்செய் கலாபவல்கு லந்தழை புனைந்தவஞ்சிக்,
கொம்பஞ்சுமருங்குனோவக்குவிமுலைமுறிகொண்டப்பிச்,செ
ம்பொன்செய்சுருளைமின்னச்செவிமிசைத்தளிர்கள் சேர்த்தி
க்,கம்பஞ்செய்களிற்றினான்றன்கண்களைக்களிப்பித்திட்டார்.

விரவம்பூந்தளிரும்போதுமிடைந்தனமிலைச்சுவாரு
மரவம்பூஞ்சிலம்புசெய்யவந்தளிர்முறிகொய்வாரு
மரவம்பூங்கவரியேந்திமணிவண்டுமருங்குசேர்த்திக்
குரவம்பூம்பாவைகொண்டுகுழவிபோலுறுத்துவாரும். (அ0)

பாவையும்விலங்குசாதிப்படிமமும்பறப்பைதாமுங்
கோவையுமுகத்துமாக்கிக்குலவியவிதழதாக
வோவியர்புனைந்தபோலுமொளிமலர்ப்பிணையன்மாலை
தேவியர்மருளச்செய்துசிகழிகைசேர்த்துவாரும். (அக)

அருமலர்த்தழையும்போதுமடியுறையாகவேந்தித்
திருமலர்ப்பாவையன்னதேவியைச்செவ்விகாண்பா
ருருமலரிழைத்தபாவையொளிமணிநயந்துமாதோ
குருமலர்க்கொம்பினொல்கிக்குரவையின்மயங்குவாரும். ( )

சிகரமாயிலங்குசென்னித்தென்மலைச்சார்ந்துமூழ்கிப்
பகருமாமணிவண்டோவாப்பணைமுலைப்பாரந்தாங்கித்
தகரவார்குழல்பின்றாழத்தாழ்குழைதிருவில்வீச
மகரயாழெழுவிமன்னன்வண்புகழ்பாடுவாரும். (௮௩)

வட்டிகைப்பலகைதன்மேன்மணிவண்ணன்வடிவுதீட்டி
யொட்டியவடிவிற்றம்மையூடலோடிருப்பக்கீறித்
திட்டமிட்டுருவநுண்ணூற்றுகிலிகைதெளிர்ப்பவாங்கிப்
பட்டமுங்குழையுந்தோடும்பையவேகனிவிப்பாரும். (௮௪)

மாம்பொழின்மருங்குசூழ்ந்தமணிச்சிலாதலத்துமேலாற்
காம்பழிபணைமென்றோண்மேற்கருங்குழறுவண்டுவீழப் [த்
பூம்பொழில்விளங்கத்தோன்றும்பொன்னிதழ்மறிந்துநோக்கி
தேம்பொழிசெய்யுளின்பஞ்செவிமுதற்சேர்த்துவாரும். ( )

கோதையுங்குழைவின்பட்டின்கொய்சகத்தலையுந்தாழ
மாதர்வண்டொருங்குபேரமழையிடைநுடங்குமின்போற்
போதலர்பொதும்பிற்றாழ்ந்தபொன்னெழிலூசறன்மே
லோதநீர்வண்ணற்பாடி * நூழிலூழியங்குவாரும். (௮௬)

கள்ளுமிழ்ந்துயிர்க்குஞ்சோலைக்கனமடற்குமரிவாழை
யுள்ளெழுசுருளைவாங்கியொளியுகிர்நுதியினூன்றிப்
புள்ளெழுதடமும்போர்மான்றொழுதியுமிதுனமாய
வொள்ளெழிலுருவுங்கிள்ளியுழையவர்க்கருளுவாரும். (௮௭)

மயிலுடையாடல்கண்டுமகிழ்ந்துமெய்மயங்கிநிற்பார்
குயிலொடுமாறுகொள்வார்குழைமுகஞ்சுடரக்கோட்டிக்
கயிலொடுகுழல்பின்றாழக்கண்டுநீர்கொண்மினென்றுங்
கயிலிடைப்பகழிவாட்கணங்கையின்மறைத்துநிற்பார். (௮௮)

* ஊழிநூழியங்குவாருமெனவும் பாடம்.

செழுமலர்த்தாதுகொய்துமெல்விரல்சிவந்தவென்பார்
விழுமலர்த்துகள்வந்தூன்றமெல்லடிமெலிந்தவென்பார்
கொழுமலர்ப்பிணையருங்கிக்கொடியிடையொசிந்தவென்பா
ரெழுமலர்த்தனையதோளான்றேவியரினையரானார். (அகூ)

வேறு.

கொடிமருங்குறுமேகொடியாய் நுடங்க
வடிநெடுங்கண்ணேக்கமணிவண்டாயோட
வடிமலருங்கைத்தலமுமந்தளிராய்த்தோன்றக்
கடிநறும்பூஞ்சோலையைக்காரிகையார்வென்றார். (கூ0)

மணங்கமழும்பூமேனிவாசங்கமழ
வணங்கிவருஞ்சோலையலர்நாற்றமெய்திக்
கணங்குழையீர்யாழுமக்குக்கைமாறிலேமென்
றிணங்கினரும்போதுமெதிரேந்தித்தாழ்ந்த. (கூக)

அந்தாரசோகமசோகமவர்க்கீந்த
செந்தார்த்திலகந்திலகமாய்ச்சேர்ந்தன
வந்தார்க்குமாவாதுமென்பனபோன்மாதழைந்த
கொந்தார்பூஞ்சோலைக்குலகறிவோகூடின்றே. (கூஉ)

வெள்ளித்திரண்மேற்பசும்பொன்மடற்பொதிந்
தள்ளூறுதேங்கனியதாம்பொற்றிரளைசிந்து
புள்ளூறுபொன்வாழைக்கானம்புடையணிந்த
தெள்ளுமணியருவிச்செய்குன்றஞ்சேர்ந்தார். (கூ௩)

கஞ்சுகிமாந்தருங்காவல்முதியாரு
மஞ்சிவர்சாரன்மணியறையும்வார்பொதும்புந்
துஞ்சுமழைதவழுஞ்சோலைகளுஞ்சோதித்துச்
செஞ்சொலவர்போய்த்திசைகாவல்கொண்டாரே. (கூச)

தோரகைமடமஞ்ஞைசோலைப்பரப்பனபோன்
மாகமழைவண்ணன்காதன்மடந்தையர்க
ளாகமணிசூழ்சாரறையவிரும்பொழில்வாய்ப்
போகமணிவகலைபுலம்பப்புக்கார். (கூரு)

அரையிலங்குமேகலையார்ப்பினயல
வரையிலங்குமேகலைமாறேகின்ருர்க்கும்
புரையிலங்குபொற்சிலம்புதான்சிலம்பும்போழ்தி
னிரையிலங்குபொற்சிலம்புநேரேசிலம்பும். (௯௬)

கொங்குண் குழலார்குழலேர்மணிமழலை
தங்கினவைகொண்டுதானுமெதிர்மிழற்று
மங்கணவர்செய்வசெய்தசதியாடின்றே
செங்கணெடியான்கடிகாவிற்செய்குன்றே. (௯௭)

மருவிமழைதவழுமையோங்குசார
லருவிகொழித்தவருமணிகள்வாரித்
தெருவுபடத்திருத்திச்சிலம்புனைவா
ருருவகரிழைப்பாரொண்ணுதலாரானர். (௯அ)

மரகதவீர்ங்கதிரைவார்புற்றளிரென்
றுரைதருகாரிகையாரூன்றிமிதித்துத்
திரைதவழச்சிறடிகளேவடைந்து
விரைதருபூம்படைமேன்மெல்லவசைந்தார். (௯௯)

வெம்பரியதண்சாரல்வேரூரியக்கொழுந்து
தம்பருவச்சோலைதழைத்ததகைநோக்கி
யெம்பெருமான்போலுமெழிலவிவையென்று
வம்புருவந்தோன்றமணியருவியாடுவார். (௧௦௦)

செங்களிதோய்ந்துள்சிவந்தசீறடியார்வாண்முகத்தின்
றங்கொளிபாய்ந்துள்ளெறித்ததண்காந்தமாமணி
திங்களொளிகருதித்தெண்ணீர்த்துளிசிதற
மங்குன்மழையயிர்த்துவார்பொழிலின்வாய்மறைவார். (௧௦௧)

வம்பத்திரளுருவின்மாணிக்கச்செங்கதிரை
யம்பொற்சிலம்பினசோகந்தளிரென்று
தம்பொற்சுடராழிமெல்விரலாற்றைவந்து
கொம்பிற்குழைந்துகுறுமுறுவல்கொண்டகல்வார். (௧௦௨)

விண்டுசுடர்தயங்குமேதகுமாமாணிக்கங்
கண்டுகவின்விரிந்தகாயாந்துணரிவை
கொண்டுகுழற்கணிதுமென்றுகொளலுறுவார்
வண்டுவழிபடரவாட்கண்புதைத்தியல்வார். (௧௦௩)

வேயோங்குசாரல்விளைபுனங்காவல்கொண்
டாயோவெனமொழியுமம்மழலையின்னிசையாற்
போயோங்குபூஞ்சோலைவாழும்புனக்கிளிகண்
மாயோன்மடந்தைமார்கூவிமகிழ்விப்பார். (௧௦௪)

பூந்தளிர்தாழ்ந்தபொழிறயங்குபொன்வரைவா
யீர்ந்தளிர்மேனியாரிவ்வாறினிதியலக்
காந்தளங்குன்றின்கனபொன்மலியறைமே
லேந்திளங்கொங்கைமகளிர்சிலரியைந்தார். (௧௦௫)

பைம்பொனறைமேற்பவழமுரலாக
வம்பமணிபெய்துவான்கேழ்மருப்போச்சி
யம்பொன்மலைசிலம்பவம்மனைவள்ளையுடன்
கம்பஞ்செய்யானைக்கரியவனைப்பாடினர். (௧௦௬)

கோடிசிலையெடுத்தான்கோளரிமாவாய்போழ்ந்தா
னாடியல்யானையயக்கிரீவனையடித்தான்
வீடின்மணியருவிவெண்மலையுங்கைப்பிடித்தான்
வாடலில்பூங்கண்ணிமாமேகவண்ணனே. (௧௦௭)

வலம்புரிவாய்வைத்தான்வார்சிலைகைக்கொண்டான்
சலம்புரிசண்டைதலைபனிப்புக்கண்டான்
பொலம்புரிதாமரையாள்பொன்னாகந்தோய்ந்தான்
கலம்புரிவண்டடக்கைக்கார்மேகவண்ணனே. (௧௦௮)

செம்பொன்செய்யாழியான்சேதாம்பனீண்முடியா
னம்பொனிதியுமருங்கலமுங்கைப்படுத்தா
னம்புமணிமேனிநங்கைகலநுகர்ந்தான்
கம்பஞ்செய்யானைக்கருமேகவண்ணனே. (௧௦௯)

வே று.

மடந்தையர்பாட்டவாங்குமாபெருந்தேவிசிற்ப
வடைந்தவரோடுமோடுமார்வநீர்வெள்ளம்வாங்க
வுடைந்தழிமனத்தன்வேந்தனுழையதோர்தெய்வங்கூவிப் .
படந்தவாமுகத்துவேழமாகெனப்பணித்துவிட்டான். (௧௧௦)

மைவரையொன்றுகோலமணிதயங்கருவிதாழ
வைவனங்கலந்தசாரலருகுவந்தணைவதேபோற்
றெய்வமோர்வேழமாகிச்செய்கடாந்திரண்டுவீழ
மைவருநெடுங்கணல்லார்நடுங்கவந்தணைந்ததன்றே. (௧௧௧)

கயில்கலந்திருண்டுதாழ்ந்தகருங்குழன்மருங்குசோர [ச
வெயில்கலந்திலங்குஞ்செம்பொன்மிடைமணிக்குழைவில்வீ
வயில்கலந்திலங்குவேற்கணெயரிபிறழவோடி
மயில்கலந்திரிந்தபோலமடந்தையர்நடுங்கினரே. (௧௧௨)

நாண்டனனிறைந்தநங்கைநடுங்குபுநுடங்கிநோக்கி
யாண்டையாரடிகளென்னுமாயிடையஞ்சல்பொன்னே
யீண்டையேனென்னைபட்டதென்றுசென்றணுகினனல் [ன்.
வேண்டியவிளைத்துக்கொள்ளும்விழுத்தவம் விளைத்துவந்தா

மலைமுகமதநல்யானைமற்றதுமறித்துநங்கை
முலைமுகநெருங்கப்புல்லிமுருகுவேய்கோதைசூட்டிக்
கலைமுகந்திருத்திக்காதிற்கனபொன்செய்சுருளைநீவி
யிலைமுகங்கலந்தசெம்பொற்கலங்களையிலங்கவைத்தான். ( )

மங்கையர்தம்மையெல்லா மணிவண்ணன்மருட்டிமற்றிக்
கொங்கவிழ்குளிர்கொள்சோலைக்குன்றினினிழிந்தபோது
வெங்கதிர்விரிந்தவெய்யோன்விசும்பிடைவெதும்பிவேவச்
செங்கதிர்க்கூடங்குத்திச்சென்னடுவாகநின்றான். (௧௧௫)

அணங்கனார்நுதலின்மேலிலரும்பியவாரத்தெண்ணீர்
மணங்கமழலங்கன்மார்பன்மனத்தினைவாங்கமற்றக்
கணங்குழைமடந்தைமாரைக்கடிபுனலாடல்காண்பான்
வணங்கொள்பூந்துணர்நீள்சோலைமண்டுநீர்வாவிசார்ந்தான்.

சார்ந்துநீர்நிறைந்தவாவிதயங்குசெங்குவளைவாவி
பூந்துகளவிழ்ந்தபொற்றாமரைமலர்புதைந்தவாவி
தேந்துணரகன்றதெண்ணீர்த்திருமணியுருவவாவி
வாய்ந்தனகாட்டிக்காட்டியுழையவர்வணங்கினின்றார். (௧௧௭)

அன்னவாறமைந்ததெண்ணீரலைபுனலாடும்போழ்தி
னின்னவாறியற்றாகென்றாங்குழையரைமறையவேவிப்
பொன்னவாஞ்சுணங்குமேபோர்த்தபுணர்முலைமகளிரோடு
மன்னவாம்வயிரத்தோளான்வலஞ்சுழிவாவிபுக்கான். (௧௧௮)

மலங்குபாய்தயங்குபொய்கை மணிக்கல்வாயடுத்தசெம்பொ [ற்
கலங்கிறைறிழிந்துகீழேகலந்துவந்தெழுந்ததெண்ணீ
ரலங்கலான்மடந்தைமார்தனரும்புணையாகவீங்கி
வலங்குலாய்ச்சுழிந்துவாய்த்தவாவிவாய்மடுத்ததன்றே. ()

அலைபுனல்பெருகலோடுமலைகடல்வண்ணன்றன்னை
மலைபுனைகொடியிற்புல்லிமடந்தையர்மயங்குவாரு
மிலைபுனைகோதைசோரவிடுபுனைதழுவுவாருங்
கலைபுனைதுகிலுந்தோடுமொழியப்போய்க்கரைசேர்வாரும். ()

ஆர்புனல்சுழித்துவாங்கவனையராயணிபொன்வாவி
நீர்புனைதடத்தினுள்ளானிலைகொண்டுநெடுங்கண்சேப்பத்
தார்புனைமார்பன்றன்மேற்றரங்கநீரொருங்குதூவி
வார்புனைமுலையினல்லார்மயங்கமர்தொடங்கலுற்றார். (௧௨௧)

திரளிருஞ்சிவிறிவீக்கிச்செழுமழைத்தாரைபெய்வார்
மருளிரும்பிணையன்மாலைப்படைபலவழங்கிச்சூழ்வார்
சுருளிருந்தோடுவாங்கித்தோண்மிசைதுளங்கவீழ்ப்பா
ரிருளிருங்குழலினார்களிறைவன்மேலினையரானார். (௧௨௨)

சாந்தெழுசிவிறித்தாரைசதுர்முகமாகவீக்கிப்
பாய்ந்தனபவழச்செங்கேழுங்கையாற்படுத்ததெண்ணீர்
வேய்ந்தனதிவலையாகிவீழ்ந்தனவேரிமாலை
நாந்தகக்கிழவன்பொய்யேநங்கைமார்க்குடைந்துநின்றான். ()

காரையார்வண்ணன் மாலைக்காற்படையுடைந்தபோழ்திற்
றேரையாய்க்குறளுஞ்சிந்துமிதந்தனசில்லசிந்தி
வேரியார்குவளைவேய்ந்தமெல்லியலவர்க்குத்தோற்ற
வோரையாய்முதலையாகிக்கூன்படையொளித்தவன்றே. ()

வென்றனம்வீரன்றன்னைவீக்குமின்சிவிறித்தாரை
சென்றெனச்சிறந்தகாதற்றேவியர்திளைக்கும்போழ்தி
லொன்றியவுழையர்கீழ்நீரோப்புறித்திடுதலோடு
நின்றகஞ்சுழிந்ததெண்ணீர்நெரேலெனவிழிந்ததன்றே. ()

மாலையுந்துகிலும்வாரிவார்புனலொழுகும்போழ்தி
ஞலையின்கரும்பினின்சொலணங்களுரவிழத்தத்தங்
கோலமென்றுகில்கடாங்கிக்குழைமுகஞ்சுடரக்கோட்டி
வேலைநீர்வண்ணன்முன்னர்நாணினுன்மெலிவுசென்ருர். ()

அருமணிக்கலாபவல்குலவிழ்துகிலசைத்துமீட்டுந்
திருமணிவண்ணனேடுங்தேவியர்திளைத்துத்தெண்ணீர்ப்
புரிமணிப்பொன்செய்வாவிப்புணைபுறந்தழுவிப்புக்கார்
கருமணிவண்டுந்தேனுங்கையுறக்கலந்தன்றே. (கஉஎ)

வேறு.

கொங்கைகளுரும்பனீர்குடைந்துங்கொய்தளி
ரங்கையினேன்புணைதழுவியாடியுஞ்
செங்கயற்கண்மலர்சிவப்பமூழ்கியு
மங்கையர்புனற்ருழின்மயங்கிற்றென்பவே. (கஉஅ)

அடிக்கலத்தலத்தகங்குழுமிக்குங்குமப்
பொடிக்கலந்திவான்படைத்தபூம்புனல்
வடிக்கலந்திலங்குவாணெடுங்கண்மைக்குழம்
பிடிக்கலந்திருளுமங்கியற்றப்பட்டதே. (கஉகூ)

கொங்கைவாய்க்குங்குமக்குழம்புங்கோதைவாய்
மங்கைமார்சிதர்ந்தனவாசச்சுண்ணமுஞ்
செங்கண்மாலகலத்துவிரையுந்தேர்த்தரோ
வங்கண்மாவிரும்புனவளறுபட்டதே. (கங0)

அணங்கனாகலல்குலலைத்துமாங்கவர்
சுணங்குசூழிளமுலைதுளும்பத்தாக்கியும்
வணங்குபூங்கொடியிடைவளைத்தும்வாவிவா
யணங்குநீர்த்திரையவையலைப்பதொத்தவே. (கஙக)

வடந்தவழிளமுலைவிம்மமங்கையர்
குடைந்திடவெழுந்தநீர்குளித்ததாமரை
மடந்தையர்குளித்தெழும்போழ்தின்வாண்முக
மடைந்ததோர்பொலிவினையறிவித்திட்டவே. (கஙஉ)

வளைத்தகையொண்பணைத்தோளிமாரொடு
திளைத்தகங்குழுமியதரங்கத்தெண்புன
லிளைத்தவர்மணிக்கரையேறச்சீறடி
திளைத்துமுன்சிறிதிடஞ்சென்றுமீண்டதே. (கஙங)

பொழுதுசென்றொழிகையெல்லைபூங்கழ
ரெழுதுவந்திளையவருணர்த்தத்தொண்டைவா
யெழுதியகொடியனார்சூழவீர்ம்பொழிற்
பழுதுறையிலாப்பகற்கோயிலெய்தினன். (கஙச)

தேவியர்திருமணிமேனிநீர்துடைத்
தாவியம்புனைதுகிலல்குன்மேலுடீஇக்
காவியங்கண்ணினார்காகதுண்டத்தி
னாவியாவீர்ங்குழலாவியூட்டினார். (கஙரு)

தண்ணிறத்தண்கழுநீரினெய்தலின்
கண்ணிறக்கருங்கடையிதழும்பெய்திடை
தண்ணறுந்தமனகக்கொழுந்துஞ்சார்த்திய
வொண்ணிறப்பிணையலன்றுவக்கப்பட்டதே. (கஙசு)

பொன்மலைக்காவிற்றிமிர்ந்துபூங்கமழ்
தென்மலைச்சந்தனஞ்செறிந்துதாமரை
நன்மலர்த்தாதுமீதப்பிநங்கைமார்
மென்முலைத்தடங்களும்விருந்துபட்டவே. (கஙஎ)

கண்ணகங்குளிர்ப்பக்கல்லாரக்கற்றையுந்
தண்ணறுங்குவளை * தாமெறித்ததாமமு
மொண்ணிறத்தாமரையொலியலுந்தழீஇ
யெண்ணரும்பெருங்கவினிளையரெய்தினார். (கஙஅ)

காமருநிறத்தகல்லாரக்கற்றைகள்
சாமரையெனத்தமரசைப்பத்தாமரை
தேமருகுடையிலைகவிப்பத்தேவியர்
பூமருமடந்தையர்போன்றுதோன்றினார். (கஙகூ)

தேவர்கடிசைமுகங்காப்பத்தீஞ்சுவை
யாவியாரமிர்தயின்றிருந்தவாயிடைப்
பாவையர்கருங்கணுற்பருகுவார்கள்போன்
மாவரசழித்தவன்மருங்குசுற்றினார். (கசo)

வேறு.

வஞ்சியங்கொம்பனாருமன்னனுமிருந்தபோழ்தின்
விஞ்சையனொருவன்றோன்றிவிசும்பினின்றிழிந்துவந்து
மஞ்சிவர்சோலைவாயில்வாயிலோன்வாயிலாக
வஞ்சனவண்ணன்செந்தாமரையடிவணங்கினானே. (கசக)

வந்தவன்வணங்கலோடுமாமனைநுதலியென்னை
கந்தணையானைவேந்தன்கழலடிசெவ்வியோவென்
றந்தமிலாழியாள்வான்வினவலினருளுமாறென்
றிந்திரனனையரோர்க்கிறைஞ்சலுமிருக்கவென்றான். (கசஉ)

உரிமையோடிருந்தபோழ்தி னுணர்த்துதற்குரித்தென்றெண் [ணித்
திருமுகந்தொழுதுகாட்டத்தேவிதன்மருங்குநின்ற
வுரிமைகொளுழையருள்ளாளொருத்திவாசித்துணர்த்த
வருமுடியொழியவெல்லாவணிகளுமவனுக்கீந்தான். (கசங)

கனிவளர்கிளவியாருங்கதிர்மணிக்கலங்கள்வாங்கிப்
பனிமதிவிசும்பின்வந்தான்பால்வரப்பணித்தபின்னை
யினியிதுபெயர்த்துநீயேயுரையெனவெடுத்துக்கொண்டு
துனிவளரிலங்குவேலான்கழலடிதொழுதுசொன்னான். ()

* தாமமென்பதன்விகாரம், தாமம், ஒளி.

சுடர்மலைத்திரண்டசோலைச்சுரேந்திரகாந்தமென்னும்
வடமலைநகரமாளுமன்னவன்றேவிபெற்ற
தடமலர்ப்பெரியவாட்கட்டையன்மற்றவளையெங்கோன் [ன்.
விடமலைத்திலங்குசெவ்வேல் வெய்யவன்பெயரன்வேட்டா

என்றவன்பெயர்த்துஞ்சொல்லவின்பநீர்வெள்ளமூழ்கி
மின்றவழிலங்கும்வேலான்விஞ்சையனவனைப்போக்கிச்
சென்றுதன்கோயில்சேர்ந்தான்செங்கதிர்த்திகிரியானு
மன்றழல்சுருங்கமுந்நீரலைகடலழுவம்பாய்ந்தான். (கசசு)

அழலவன்குளித்தபின்னையணங்கிவரந்தியென்னு
மழலையங்கிளவிச்செவ்வாய்மடந்தைவந்தடைந்தபோழ்திற்
குழலமர்கிளவியார்தங்கூந்தலுட்குளித்துவிம்மி
யெழிலகிலாவிபோர்ப்பவிருவிசும்பிருண்டதன்றே. (கசஎ)

விரவினபரவைப்பன்மீன்மிடைமணிக்கலாபமாக
மருவினபரவையல்குன்மயங்கிருட்டுகிலைவாங்கிப்
புரிவணன்மதியமென்பான்பொழிகதிர்த்தடக்கைநீட்டி
யிரவெனுமடந்தைசெல்வநுகரியவெழுந்துபோந்தான். ()

ஏரணிவிசும்பினங்கேயெழுநிலாவிரிந்தபோழ்திற்
சீரணிமணிவண்டார்க்குஞ்சிகழிகைப்பவழவாயார்
காரணிவண்ணனென்னுங்கருங்களிவேழந்தன்னை
வாரணியிளமென்கொங்கைவாரியுள்வளைத்துக்கொண்டார்.

பங்கயமுகத்துநல்லார்பவழவாய்க்கவளங்கொண்டு
பொங்கியகளியதாகிமயங்கியபொருவில்வேழங்
குங்குமப்பொடிநின்றுடிக்குவட்டிளங்கொங்கையென்னுந்
தங்கொளிமணிமுத்தேந்துந் தடத்திடையிறைஞ்சிற்றன்றே.

வேய்மருளுருவத்தோளார்வெம்முலைத்தடங்களென்னும்
பூமருதடத்துட்டாழ்ந்துபொற்பொடிபுதையவாடிக்
காமருகாமமென்னுங்கருங்கயம்படிந்துசென்று
தேமருகுழலஞ்சாயற்றேவிகைப்பட்டதன்றே. (கருக)

காதலா லுரிமைபாங்கிற்கடிகமழ்காமவல்லித்
தாதெலாந்தகர்ந்துசிந்தத்திளைத்தவத்தடக்கைவேழ
மாதரீளமிழ்தின்சாயற்றேருட்டியால்வணக்கப்பட்டுப் [றே.
போதுலாம்புணர்மென்கொங்கைக்குவட்டிடைப்பூண்டதன்

செங்கயற்கண்ணினாளுஞ்செல்வனுந்திளைத்துத்தீந்தேன்
பொங்கியவமளிமேலாற்புணர்முலைநெருங்கப்புல்லித்
தங்கியபொழுதிற்றாழ்ந்துதண்கதிர்மதியந்தானே
மங்கைதன்பவழச்செவ்வாய்மடுத்தகமடைந்ததன்றே. ()

அடைந்ததுமதியமாகவாயிடையரசன்றிண்டோண்
மிடைந்ததோணெகிழவிம்மிமெல்லியல்வெருவலோடு
மடங்கலையலைக்குநீரான்மருட்டினன்வினவவார
வடந்தவழிளமென்கொங்கைமாதராண்மிழற்றினாளே (௧௫௪)

வணங்கியிவ்வுலகமெல்லாமகிழ்ந்துகண்பருகுநீர்மை
யணங்கிவர்சிறுவன்வந்துனணிவயிற்றகத்துப்பட்டான்
கணங்குழையஞ்சலென்றுகருமணிவண்ணன்றேற்றப்
பணங்குலாம்பரவையல்குற்பாவையும்பரிவுதீர்ந்தாள். ()

கங்குல்வாய்மடந்தைகண்டகனவுமெய்யாகல்வேண்டி
மங்குல்வானகட்டுச்சென்றுமதியவன்மறைந்தபின்னை
யங்குலாயிருளைநீக்குமாயிரங்கதிரினானுங்
கொங்குலாங்குழலிகாணுங்குழவியதுருவங்கொண்டான். ()

வேறு.

குலம்புரிசிறுவனைத்தரித்துக்கோலமா
நிலம்புரிநிழலொளிநிரந்துதோன்றலால்
வலம்புரிமணிக்கருவிருந்ததன்னதோர்
நலம்புரிதிருவினணங்கையாயினாள். (௧௫௭)

மின்னிலங்கவிரொளிமேனிமெல்லவே
தொன்னலம்பெயர்ந்துபொன்சுடர்ந்துதோன்றலான்
மன்னிலங்கருமணிவளரவாளுமிழ்
பொன்னிலம்புரைவதோர்பொலிவுமெய்தினாள். (௧௫௮)

கோணலம்பொலிந்துவிண்குளிரக்குங்குமத்
தோணலம்பொலிந்ததோர்தோன்றலோடுதன்
கேணலம்பொலிதரக்கிளருஞ்சோதிய
நாணலம்பொலிதரநம்பிதோன்றினன். (க௫௯)

பொலிகெனும்பொலிகளும்பொன்செய்மாமணி
யொலிகலவொலிகளும்விரவியூழிநீர்
கலிகெழுகனைகடல்கலங்கியன்னதோர்
பலிகெழுமுரசொலிபரந்தொலித்ததே. (க௬0)

துளைபடுகுழலிசைதுடியொடார்ப்பவும்
வளைபடுகறங்கிசைவயிரொடேங்கவுந்
தளைபடுதகைமலர்மாலைதாதுகக்
கிளைபடுவளகர்கிலுகிலுத்ததே. (க௬க)

தொத்திளங்கடிமலர்துதைந்தகோதையார்
மொய்த்திளங்குமரரோடாடுமுன்கடை
மத்தளப்பாணியுமதனகீதமுங்
கைத்தலத்தாளமுங்கலந்திசைத்தவே. (க௬உ)

சிறைநகர்சீத்தனதிலதமுக்குடை
யிறைநகர்விழவணியியன்றனீண்டுநீர்த்
துறைநகர்சுண்ணநெய்நாவிதூங்கின
நிறைநகரவர்தொழினினைப்பிகந்தவே. (க௬௩)

சுண்ணநெய்யெழுபகலாடித்தொன்னகர்
நண்ணியநானநீராடிநம்பியைப்
புண்ணியாவாசனஞ்செய்துபுங்கவன்
றிண்ணியவடிமலர்ச்சேடஞ்சேர்த்தினர். (க௬௪)

வழுவலினஞ்சிலான்வண்பொனாழியான்
றழுமலரலங்கலான்றூதைதானெனச்
செழுமலரணிகுழற்றேவிமாரென
வெழுபெருங்கிளைகளுமினிதினீண்டினர். (க௬௫)

எழுதருபரிதியங்குழவியேய்ப்பதோர்
தொழுதகைவடிவொடும்பிதோன்றலுந்
தழுவினர்முயங்கினர்முயங்கித்தம்முளே
யொழிவிலவுவகைநீர்க்கடலுண்மூழ்கினர். (கசுசு)

அறத்தகையந்தணர்குழுவுமாடல்வேன்
மறத்தகைமன்னர்தங்குழுவுமாநகர்த்
திறத்தகுமுதியருமீண்டிச்செல்வனைப்
பொறுத்தனர்பொலிவுரைபுடைபொழிந்ததே. (கசுஎ)

குருமணிக்கோவையுங்குளிர்பொற்குன்றமு
மருமணிக்கலங்களுமரத்தவாடையும்
புரிமணிவளநகர்புகுந்துகொள்கெனக்
கருமணியொளியவன்கவரக்காட்டினன். (கசுஅ)

திருவொடுதிசைமுகந்தெளிர்ப்பத்தோன்றினன்
றிருவொடுவென்றியிற்சேருமாதலாற்
றிருவொடுதிகழ்தரவிசயனென்றரோ
திருவுடைமார்பனைநாமஞ்சேர்த்தினர். (கசுகூ)

விஞ்சையருலகிற்கும்விடுத்துமோகையென்
றஞ்சனவண்ணனங்கருளுமாயிடை
மஞ்சுடைவிசும்பினின்றிழிந்துவந்தது
செஞ்சுடருமிழ்வதோர்செம்பொன்மாடமே. (கஎ0)

மணிநகுவிமானமொன்றிழிந்துவந்துநம்
மணிநகரணுகினதடிகளென்றலும்
பணிவரைக்கொணர்மினீர்பாங்கினென்றனன்
றுணிநகுசுடரொளிதுளும்பும்வேலினன். (கஎக)

மஞ்சுசூழ்மழைநுழைமாடந்தன்னுளோர்
விஞ்சையர்மடந்தையர்விளங்குமேனியர்
கஞ்சுகியவரொடுமிழிந்துகாவல
னிஞ்சிசூழ்நகரணியிருக்கையெய்தினர். (கஎஉ)

பொலிகெனப்புரவலன்பொன்செய்நீண்முடி
மலிதருநறுநெயம்மகளிர்பெய்தலுங்
கலிதருகனைகடலன்னகாதலோ
டொலிதருநகையொலியுவந்தெழுந்ததே. (களங)

நாவிகாறமூவிமன்னறுநெய்யாடிய
பாவைமார்தங்களைப்பாவைகோயிலுக்
கேவியாங்கிருந்தபினிறைவற்கின்னணந்
தேவிகோன்றமன்றொழுதொருவன்செப்பினன். (களச)

எங்கள்கோனெறிகதிர்ப்பெயரனீர்மலர்க்
கொங்குசேரலங்கலான்குளிரத்தங்கினண்
மங்குறோய்மணிவரைமன்னன்றன்மக
டொங்கல்சூழ்சுரிகுழற்சோதிமாலையே. (களரு)

மங்குல்வான்மழைகெழுமின்னின்மன்னவன்
றெங்கல்வாய்மடந்தைகண்டுயிலுமாயிடைக்
கங்குல்வாய்க்கதிர்மதிகவானின்மேலிருந்
தங்கண்மால்விசும்பகமலர்வித்திட்டதே. (களசு)

தெண்கதிர்த்திருமணிகனவிற்சேர்ந்தபின்
கண்கதிர்த்திளமுலைகால்பணித்தன
தண்கதிர்த்தமனியப்பாவைபோல்வதோ
ரொண்கதிர்த்திருமகளுருவமெய்தினள். (களஎ)

வானிவர்மணிநகைவிமானமேறவுங்
கானிவர்கற்பகச்சோலைகாணவு
மானிவர்நோக்கினள்வுயாவினளது
தேனிவரலங்கலாய்தீர்க்கப்பட்டதே. (களஅ)

மாணிக்கமரும்பியவண்பொன்மாகிலத்
தாணிப்பொன்னனையவளனையளாயபின்
கோணிற்கும்விசும்பிடைக்குழவித்திங்களு
ணாணிப்போமுருவொடுநம்பிதோன்றினன். (களகூ)

தேமருசெங்கழுநீரின்செவ்விதழ்
காமருபவழவாய்கமழுங்கண்மலர்
தாமரையகவிதழ்புரையுந்தானுமோர்
பூமருதமனியக்குழவிபோலுமே. (கஅo)

வானிடைமணிவிளக்கெரிந்தவண்டொடு
தேனுடைமலர்மழைசிதர்ந்ததவ்வழி
மீனுடைவிரிதிரைவெண்சங்கார்த்தன
தானுடையொளிதிசைதவழ்ந்தெழுந்ததே. (கஅக)

அளப்பருந்திறலுடையரசர்தொல்குடை
யளப்பருந்திறலிறைவலரத்தோன்றினு
னளப்பருந்திறவினனமிததேசனென்
றளப்பருந்திறற்பெயரமரக்கூறினர். (கஅஉ)

ஐயனதழகுகண்பருகவவ்வழி
மையணிமழைமுகில்வண்ணன்மாமனார்
வையகமுடையவர்க்குணர்த்திவாவென
வெய்யொடுவந்தனனிலைமையின்னதே. (கஅங)

என்றவன்மொழிதலுமிலங்குநேமியா
னின்றகஞ்சுடர்தருநிதியினீத்தமங்
கன்றவற்கருளினனரசர்செல்வமோ
டொன்றினனுவர்துதன்னுலகமெய்தினன். (கஅச)

வேறு.

விண்டாரில்லாவெந்திறலோன்பொற்சுடராழித்
தண்டார்மார்பன்றன்மகனன்மாமணியேபோற்
கண்டார்கண்களிகூருஞ்செல்வக்கவினெய்தி
வண்டாரைம்பான்மங்கையர்காப்பவளர்கின்றான். (கஅரு)

கண்கவர்சோதிக்காமருதெய்வம்பலகாப்பத்
தண்கமழ்போதிற்றாமரையாளுந்தகைவாழ்த்த
விண்கவர்சோதித்தண்கதிரோன்போல்விரிவெய்தி
மண்கவர்சோதித்தண்கதிர்வண்ணன்வளர்கின்றான். (கஅசு)

செம்பொற்கோவைக்கிண்கிணியேங்கத்திலதஞ்சே
ரம்பொற்கோவைப்பன்மணிமின்னிட்டரைசூழப்
பைம்பொற்கோவைப்பாடகமென்சீறடிநல்லார்
தம்பொற்கோவைப்பூண்முலைமுன்றிற்றவழ்கின்றான். (௧௮௭)

போதார்பொய்கைப்போதவிழ்பொற்றாமரைகாட்டி
மாதார்சாயன்மங்கையர்கூவமகிழ்வெய்திக்
காதார்செம்பொற்றாழ்குழைமின்னின்கதிர்வீசத்
தாதார்பூவின்றண்டவிசேறித்தவழ்கின்றான். (௧௮௮)

கண்ணின்செல்வங்கண்டவர்கண்டேமனம்விம்ம
மண்ணின்செல்வம்வைகலும்வைகன்மகிழ்வெய்தி
விண்ணின்செல்வச்செங்கதிரோன்போல்விளையாடித்
தண்ணென்செல்கைப்பொன்னுருள்வாங்கித்தளர்கின்றான்.

ஐயாண்டெல்லையையணைந்தானவனோடு
மையாரின்பக்காதலிநாவின்மகளாகப்
பொய்யாக்கல்விச்செல்வர்கடம்மாற்புணர்வித்தா
னெய்யார்செவ்வேனீளொளிநேமிப்படையானே. (௧௯௦)

காமச்செல்வனென்றுலகெல்லாங்களிதூங்கு
மேமச்செல்வநம்பியொடின்னுமிளையாகச்
சேமச்செல்வன்றேவிபயந்தாடிசையெல்லா
மோமச்செல்வங்கொண்டினிதேத்துமொளியாளே. (௧௯௧)

பாரார்செல்கைப்பல்கிளையெல்லாமுடனீண்டிப்
பேராவென்றிக்கொன்றியவாறுபெயரிட்டுச்
சீராரோகைவிஞ்சையர்சேணிசெலவிட்டுக்
காரார்வண்ணன்காதலொடின்பக்கடலாழ்ந்தான். (௧௯௨)

ஐயன்றானுமவ்வகையாலேவளர்வெய்த
மையுண்கண்ணிமாபெருந்தேவிமகிழ்தூங்கத்
தெய்வம்பேணிப்பெற்றனர்பேணுந்திருவேபோன்
மெய்யின்சோதிசூழொளிமின்னின்பெயராளும். (௧௯௩)

தேதாவென்றேதேனொடுவண்டிசைபாடும்
போதார்சாயற்பூங்கொடிபோலப்பொலிவெய்தித்
தாதார்கோதைத்தாயரொடாயம்புடைசூழ
மாதார்சாயன்மாமயிலன்னாள்வள்ர்கின்றாள். (கககச)

வேறு.

மழலைக்கனிவாய்மணிவண்டுவெருடிமருங்குபாராட்ட
வழனக்கலர்ந்தவரவிந்தவமளிசேர்ந்தவிளவன்னங்
கழனிச்செந்நெற்கதிரென்னுங்கவரிவீசக்கண்படுக்கும்
பழனக்குவளைநீர்நாடன்பாவைவார்த்தைபகருற்றேன். ()

செம்பொற்சிலம்புங் கிண்கிணியுஞ் செல்வச்செஞ்சீறடி போற்ற, வம்பத்துகிலின்வடஞ்சூழ்ந்தவல்குன்மணிமேகலை மருட்ட, வம்பொற்சுருளையிருபாலுமளகவல்லியருகிலங்கப், பைம்பொற்சுடிகைகிழறுளங்கப் படர்ந்தாடாயம்படிந்தாளே.

நங்கைநல்லார்பாராட்டநகையாட்டாயம்புகலோடு
மங்கைமடவார்பந்தாடன்மயங்கியாடன்மணிநிலத்துக் [அு
கொங்கைசேர்ந்த குங்குமத்தின் குழம்புங்கோதைகொய்தா
மங்கராகத்துகளும்பாய்ந்தந்திவானமடைந்ததுவே. (கககஎ)

காவிநாணுங்கண்ணார்தங்கையினேந்துங்கந்துகங்க
ளாவிதாமுமுடையனபோலடிக்குந்தோறுமடங்காது
பூவினூர்ந்தமணிநிலத்துப்பொங்கியெழுந்துபொன்னேந்தி
நாவிநாறுமிளங்கொங்கைத்தடங்கள்சென்றுநணுகியவே. ()

கரியகுழலும்பொற்றோடுஞ்செய்யவாயுங்கதிர்முறுவன்
மரியதிசையுமதிமயங்குமம்பொன்முகத்துமடவார்க
டரியத்தம்மைப்புடைத்தாலுஞ்சென்றுசேர்ந்துதிளைக்குமா
லரியசெய்யுங்காமுகர்போலளியவந்தோவடங்காவே. (கககக)

செம்பொற்சுருளைமெல்விரலாற் றிருத்திச்செறிந்ததேரல் குல், வம்பத்துகிலின்வடஞ்சூழ்துமணிமேகலையுந்தானேற் றி; யம்பொற்குரும்பைமென்முலைமேலணிந்தபொன்னாண ருகொடுக்கிப், பைம்பொற்றிலதநுதலொதுக்கிப்பாவைபந்து கைக்கொண்டாள். (உ00)

வே று.

கந்தாடுமாலியானைக்கார்வண்ணன்பாவை கருமேகக்குழ ன்மடவார்கைசோர்ந்துயிற்பக், கொந்தாடும்பூங்குழலுங்கோ தைகளுமாடக் கொய்பொலந்துகிலசைத்தகொய்சகந்தாழ்ந் தாட, வந்தாடுந்தேனுமுரல்வரிவண்டுமாடமணிவடமும்பொ ன்னாணும்வார்முலைமேலாடப், பந்தாடுமாடேதன்படைநெ டுங்கணுடப்பணைமென்றோணின்றாடப்பந்தாடுகின்றாள். ()

சுந்துகங்கள்கைத்தலத்தாலேறுண்டுபொங்கிக் கருங்கண் ணுநீ்ாமுமுறக் கலந்தெழுந்த போழ்தின், வந்தனவுஞ்சென் றனவும் வானத்தின்மேலு மணிநிலத்துமீதுநெறி மறிகுவன வாகி, யந்துகிலினிடைத்தோயுமகலல்குறீண்டுமணிமருங்கு சூழுமணியார் வடமுந்தாக்கும், கொந்தவிழும்பூங்குழலுங் கோதைகளுமூழ்கும் குவளைவாட்கண்ணிவருங் குறிப்பறிய மாட்டாள். (உ௦உ)

நறுமாலைவந்தலைப்ப நன்மேனிநோமா னங்காயிப்பந்தாட னன்றன்றுமென்பா, ரிறுமாலிம்மின்மருங்குலென்பாவமெ ன்பா ரிளமுலைமேலேர்வடம்வந்தூன்றுமாலென்பார், செறு மாலிங்கிவைகாணிற்றேவிதானென்பார் செங்கண்மால்காணு மேற்சீற்றேனென்பார், பெறுமாறுதாயருந்தோழியருநின்று பிணையனுடன்மேற்பன்மொழிமிழற்றுகின்றார். (உ௦௩)

நீராலிக்கட்டிதுனிகிரந்தெழுந்துபொங்கி நிழறயங்கும்பொ ன்னறைமேனின்றுடுகின்ற, காராலிமஞ்ஞைகளிசிறந்தாற் போலக்கருங்குழலிபந்தாடல்காதலித்தபோழ்திற், சீராலிமா ல்வண்ணன் றேவியுந்தானுஞ் செவ்வரத்தநுண்ணெழினிசே ர்ந்தொருங்குநோக்கி, வாராலிமென்கொங்கைமையரிக்கண மாதர்வருந்திறுணங்கையினிவருகவீங்கென்றான். (உ௦௪)

வே று.

அருமணிமுடியவனருளிதென்றலும்
பருமணிப்பந்துகைவிட்டுப்பாவைதன்
புரிமணிக்குழல்புறந்தாழப்போந்தரோ
கருமணியொளியவன்கழல்சென்றெய்தினாள். (உ௦௫)

மங்கையைவலப்புடைக்குறங்கின்மேலிரீஇ
யங்கையாலணிநுதலரும்புநீர்துடைத்
தெங்குமினுவகையோடினிதிருந்தபி
னங்கைதனலங்கிளர்மேனிநோக்கினன். (உ0சு)

இளமையாலெழுதருமிணைமென்கொங்கையின்
வளமையாற்பொலிதரும்வனப்பின்மாட்சியாற்
குளமையானறவிரிகுவளைக்கண்ணியா
னுளமையாவுயிர்ப்பதோருவகையெய்தினன். (உ0எ)

செல்வியைத்திருக்குழறிருத்தித்தேவித
னல்குன்மேலினிதினங்கிருவியாயிடை
மல்குபூமந்திரசாலைமண்டபம்
பில்குபூந்தெரியலான்பெயர்ந்துபோயினன். (உ0அ)

அருத்தநூலவரொடுமாய்ந்துமற்றவர்
கருத்தொடுபொருந்தியகருமச்சூட்சியான்
றிருத்தகுசுயம்வரமுரசந்திண்களிற்
றெருத்தின்மேலறைகெனவிறைவனேயினன். (உ0கூ)

விரவியசந்தமென்சேறுமட்டித்துப்
பிரவியந்தழையொடுபிணையல்வேய்ந்தன
பரவியபலிபெறுமுரசம்பன்மையி
லரவியங்கதிர்கொளவதிர்ந்தறைந்ததே. (உக0)

வாழ்கநம்மன்னவன்வாழ்கவையக
மாழ்கநம்மரும்பகையலர்கநல்லறம்
வீழ்கதண்புனல்பயிர்விளைகமாநிலந்
தாழ்கமற்றருந்துயர்சாற்றக்கேண்மினே. (உகக)

புள்ளணிவார்பொழிற்பொன்செய்மாநக
ருள்ளணிபரப்புமினுயர்மின்றோரணம்
வெள்ளணிவிரும்புமின்விருந்துபோற்றுமின்
கள்ளணிமலரொடுகலங்கள்பெய்மினே. (உகஉ)

இன்றைநாளுள்ளூறுத்திரைஞ்ஞாள்களு
மன்றலஞ்சுயம்வரம்வரைந்ததாதலா
லொன்றிவாழரசரோடுலகமீண்டுக
வென்றுதானிடிமுரசறைந்ததென்பவே. (உகங)

கொடிபடுநெடுநகர்க்கோயில்வீதிவா
யிடிபடுமழைமுகிலென்னவின்னணங்
கடிபடுமுரசுகண்ணதிர்ந்தகாரென
மடிபடுமாடவாய்மயில்கண்மான்றவே. (உகச)

முரசொடுவரிவளைமூரித்தானையோ
டரசருமரசரல்லாருமாயிடைத்
திரைசெறிகனைகடல்சென்றுதேர்த்தெனப்
புரைசெறிபுரிசையின்புறணிமுற்றினார். (உகரு)

வெண்மலைச்சென்னிமேல்விஞ்சைவேந்தருங்
கண்மலைத்திழிதருங்கடலந்தானையர்
விண்மலைத்திழிதரும்விளங்குசோதிய
ரெண்மலைச்சிலம்பிடையிறைகொண்டீண்டினார். (உகசு)

அவ்வரையரைசர்கோனருக்கன்றன்மகன்
செவ்வரையனையதோட்செல்வன்றன்னொடு
மைவரைநெடுங்கணம்மடந்தைதன்னொடு
மிவ்வரையரைஞெதிர்கொள்ளவெய்தினான். (உகஎ)

பொன்னகர்ப்புறத்ததோர்புரிசைவார்பொழி
றன்னகத்தியற்றியதயங்குபொன்னகர்
மன்னர்கட்கிறைவன்வந்திருப்பமண்மிசை
யிந்நகர்க்கிறைவனுமெதிர்கொண்டெய்தினான். (உகஅ)

கண்சுடரிலங்குவேற்காளவண்ணனும்
வெண்சுடரொளியவன்றானும்விஞ்சையர்
தண்சுடர்த்தமனியவண்ணன்றன்னொடு
மண்சுடருறுப்பதோர்வகையராயினார். (உகக)

இருபுடைக்கிளைகளும்விரவியின்னணந்
தெருவுடைத்திசைமுகந்தெளிப்பத்தேர்த்தரோ
மருவுடைமகரநீர்வளாகம்வானவ
ருருவுடையுலகம்வந்திழிந்ததொத்ததே. (உஉ0)

சிகைமணியழுத்தியசெம்பொற்சென்னிய
நகைமணிக்கோபுரவாயினுன்கொடு
வகைமணித்தலத்ததோர்மதலைமாளிகை
தொகைமணித்தொழில்பலதொடரத்தோற்றினர். (உஉக)

பளிங்கியல்பலகையும்பவழத்தூண்களும்
விளங்குபொற்கலங்களும்வெள்ளிவேயுளு
மிளங்கதிர்முத்தமுமியற்றியின்னணம்
வளங்கவின்றனையதம்மதலைமாடமே. (உஉஉ)

மீன்முகவிசும்பிடைவிரிந்தவெண்ணிலாப்
பான்முகந்தொகுப்பனபனிக்கும்வேதிகை
மேன்முகந்திருத்தியவெள்ளிமுன்றிலா
னுன்முகமருங்கினுநகுவதொக்குமே. (உஉங)

அங்கதற்கைந்துகோலளவினுடராங்
கிங்குவந்திறுத்தனவென்னுமீட்டன
செங்கதிர்ப்பவழக்காலிரைத்தசெம்பொனுன்
மங்கலச்செய்கையமஞ்சுசூழ்ந்தவே. (உஉச)

விளிம்பிடைமரகதவேதிகட்டிய
வளம்பெறுமணிநகைமஞ்சமீமிசை
யிளம்பெருஞ்சுரியுளையரிகின்றேந்திய
வுளம்பொலியாசனமுயரவிட்டதே. (உஉரு)

மண்டங்குமகரவாசனத்துமென்மயிற்
கண்டங்கள்புரைவனகனபொற்கொட்டைய
வண்டங்கொளன்னமென்றூவியார்த்தன
வெண்டங்குமணியனவியற்றப்பட்டவே. (உஉசா)

வாரித்தண்கதிர்மணிமுத்தமாலையும்
பாரித்தபளிங்கெழிற்பழித்தகோவையும்
பூரித்தபொழிகதிர்ப்பொன்செய்தாமமும்
வேரித்தண்பிணைய லுமிடையப்பட்டவே. (உஉ௭)

மஞ்சுடைமாளிகைமிடைமணித்தலம்
பஞ்சுடைத்தவிசுகள்பரப்பிப்பூவடுத்
தஞ்சுடரிடுபுகையடர்ந்தெழுந்தரோ
வெஞ்சுடர்க்கடவுளைவிருந்துசெய்தவே. (உஉ௮)

சயமரமாளிகையயற்றிச்சந்தனப்
பயமரநிழலொளிமஞ்சம்பாவின
வியமரத்தொழிலவர்வினைமுடிந்ததென்
றியமரத்தொழுதிகளெழுந்திசைத்தவே. (உஉ௯)

மங்கலநாழிகைவந்தமன்னர்க
ளிங்குவந்தேறுகவென்றுசாற்றலுஞ்
சங்கொலிபரந்தன தயங்குமாமுர
சங்கொலித்தெழுந்தனவரசர்தோன்றினர். (உ௩0)

வேறு.

எரிமணிவயிரப்பூணனிக்குவாகுலத்துட்டோன்றி
யருமணிப்புரிசைவேலியயோத்தியாள்கின்றவேந்தன்
றிருமணிநிழற்றுஞ்செம்பொன்னெடுமுடி திருவில்வீசப்
புரிமணியாரந்தாழப்பொன்னகர்பொலியப்புக்கான். (உ௩௧)

குழுவியம்பரிதிபோல்வான்குருகுலங்குளிரத்தோன்றி
யழுவநீர்ப்புரிசைவேலியத்தினபுரமதாள்வான்
முழுவங்களிரண்டுசெம்பொன்முளைக்கதிர்க்கனகவல்லி
தழுவியதனையதோளான்றன்னொளிதயங்கச்சார்ந்தான். ()

நண்டுபொன்கிளைக்குநாட * னாதவன்குலத்துட்டோன்றிக்
குண்டலபுரமதாளுங்குங்குமக்குவவுத்தோளான்
கண்டிகைதவழப்பூண்டுகதிர்மணிமுடியின்மேலால்
வண்டுகள்பரவச்சென்றுவளநகர்மருளப்புக்கான். (உ௩௩)

* நாதவன், குண்டலபுரத்து முதலரசன்.

ஊழிகாண்பரியதோன்றலுக்கிரகுலத்துவேந்தன்
வாழைதாழ்சோலைவேலிவாரணவாசிமன்னன்
சூழிமாலியானையுந்திச்சுடர்குழைதிருவில்வீச
வேழையர்கவரிவீசவெழினகரிசைப்பச்சென்றான். (௨௩௪)

சொரிமதுகலந்தசோலைச்சூரியபுரமதாளு
மரிகுலத்தரசர்கோமானவிர்மணியாரந்தாங்கிப்
பொருமலைப்பகடுநுந்திப்புயலலைத்திருண்டுவீழ்ந்த
புரிமலர்க்குஞ்சிதாழப்பொன்னகர்புகழப்புக்கான். (௨௩௫)

சொன்மலர்ந்துலகமேத்துஞ்சுடரவன்மருகன்றோலா
மன்மலர்ந்திலங்குசெய்கைவளங்கெழுமதுரையாள்வான்
றென்மலைவளர்ந்ததெய்வச்சந்தனந்திளைத்தமார்பன்
மின்மலராரந்தாங்கிவியனகர்விரும்பப்புக்கான். (௨௩௬)

ஐம்பெருங்குலத்தாயவரசரும்பிறருமாங்கட்
கம்பெறிகளிநல்யானைக்கடற்படைபுறத்ததாக
வம்பெறிவளாகஞ்செம்பொன்மஞ்சங்கண்மலிரவேறி
வெம்பரிவிளங்குந்தானைவேலவர்விளங்குகின்றார். (௨௩௭)

திருந்தியதிலதக்கண்ணித்தேவிளங்குமரன்போலு
மருந்தகையரசநம்பியடுதிறலமிததேசன்
பரந்தபின்பசலைகூரப்பனிக்கதிர்வருவதேபோல்
விரிந்தொளிசுடரவேந்தர்விளங்கொளிமழுங்கச்சென்றான்.()

மழைபுரைமதத்ததாயமழகளியானைதன்மேல்
வழைவளர்சோலைசேர்ந்தமணிவண்டுமறிவவேபோ
லெழுதெழிலழகன்றன்மேலிளையவர்கருங்கண்வீழ்ந்து
விழவயர்நகரின்வந்தவேந்தரைவிட்டவன்றே. (௨௩௯)

வரைசெறிந்தனையசெம்பொன்மஞ்சங்கண்மலிரத்தோன்றி
யரைசர்களிருந்தபோழ்திறைழியந்தடக்கைவேந்தன்
விரைசெறிகுழலங்கூந்தன்மெல்லியல்வருகவென்றான்
முரசொலிகலந்தசங்குவயிரொடுமுரன்றவன்றே. (௨௪௦)

வேறு.

மன்னவன்மடந்தைமணிமாடநிலையுள்ளாற்
பொன்னமளிமேனளியபொங்கணையின்மேலாட்
கன்னமனையாரடிகளாரருளிதென்று
ரின்னகையபூந்தவிசினின்றினிதிழிந்தாள். (உசக)

வஞ்சியனையார்மணிதொடர்ந்தசுடர்ஞாணு
லஞ்சிலயிருங்குழலசைத்தயில்பிடித்தார்
கஞ்சுகமுகத்தமுலைகச்சுமிகவீக்கி
மஞ்சிவருமாமயிலனார்மருங்குசூழ்ந்தார். (உசஉ)

ஆயமொடுதாயரிடையாளரசர்தங்க
ணேயமிகுநெஞ்சினிடையாளுமடவாளாய்ப்
பாயமதிதாரகையொடோரைபடவேகித்
தூயமணிநீர்நிலைகடோறிவர்வதொத்தாள். (உசங)

வண்டுவழிசெல்லவயமன்னர்மதிசெல்லக்
கண்டவர்கள்கண்கள்களிகொண்டருகுசெல்ல
வெண்டிசையுமேத்தொலியொடின்னொலிகள்செல்ல
விண்டமலரல்லிமிசைமெல்லெனிசென்றாள். (உசச)

அம்மெலடிதாமரைசராவியொடுநோவச்
செம்மெலிதழ்வாயொடவர்சிந்தனை துடிப்ப
வெம்முலைகளோடவர்கள்காதன்மிகவீங்க
மைமலர்நிகர்க்குமணிமாளிகையடைந்தாள். (உசரு)

வேறு.

பொன்னேநன்மணிக்கொம்பேபூமிமேலாரணங்கேபோ ற்றிபோற்றி, யன்னேயெம்மரசர்குலத்தவிர்விளக்கேயாரமி ர்தேபோற்றியுன்றன், மின்னேர்நுண்ணிடைநோமான்மென் மலர்மேன்மென்மெலவேயொதுங்காயென்று, மன்னோர்செ யயினெடுங்கண்மங்கைமார்போற்றிசைப்பமாடம்புக்காள். ()

அணிதயங்குசோபானவீதிவா யணங்கனையாரடியீடேந் த, மணிதயங்குமாளிகைமேல்வாணிலாவளர்முன்றின்மருங்

குருழ்ந்து, கணிதயங்குவினைகவின்றகண்டத்திற்றிரைமகளி ர்கையினீக்கத், துணிதயங்குவேலரசர்மனந்துளங்கச்சுடர்ந் திலங்கித்தோன்றினளே. (உசஎ)

வடியரத்தமிடைவழித்துக்கருங்கண்ணுஞ்செம்பொன்னு ல்வளைத்தசூரற், கொடியரத்தமெல்விரலாற்கொண்டரசர்கு லவரவுகொழிக்குநீராண், முடியரக்குப்பூங்கண்ணிமூரித்தேர் வேந்தர்தமைமுறையாக்காட்டிப், படியரக்குப்பாவைக்குப் பைபையவேயினையமொழிபகராகின்றாள். (உசஅ)

அங்காரவலர்கதிரமணிசுடருமரியணைமேலமர்ந்துதோ ன்றித், தங்காரமணிநிழற்றுந்தடவரையாரகலத்தான்றகரநா றுங், கொங்காரவார்குழலார்குவிமுலைகண்முகம்பொருதகுவ வுத்தோளா, னிங்காருநிகரில்லாவிக்குவாகுலத்திறைவனிரு ந்தகோவே. (உசகூ)

ஆதியானருளாழி தாங்கினனுயிரச்செங்கதிரோனனுஞ், சோதியான்சுரர்வணங்குதிருவடியான் சுடர்நீருநினையப்பட்ட, காதியானருளியபொற்கதிர்கொண்முடிகவித்தாண்டார்மருக ன்கண்டா, யோதியான்மொழியினிவனுறுவலிக்குநிகராவாரு ளரோவேந்தர். (உருo)

ஆழித்தேரொன்றேறியலைகடலினடுவோட்டி யமரார்தந் த, மாழைத்தேர்மருங்கருமணிமுடியு மணிகலமுந்திறையா வவ்வி, யூழித்தேராசிறைஞ்சவுலகெலாமொருகுடைக்கீழுற ங்கக்காத்த, பாழித்தோட்பரதன்பினிவனிவனனிலமடந்தை பரிவுதீர்ந்தாள். (உருக)

இன்னவனதுயர்குலமுமிளமையு மிங்கிவன்வடிவுஞ்சொ ல்லவேண்டா, மன்னவன்றன்மடமகளேமற்றிவனுக்கிடமரு ங்கின்மஞ்சஞ்சேர்ந்து, பொன்னவிருமணியணைமேற்பொழி கதிர்நீண்டெழுந்ததுபோற்பொலிந்துதோன்றுங், கொன்னவி ன்றவேற்குமரன்குருகுலத்தார் கோனிவனேகூறக்கேளாய்.

அருளாழியறவரசனருளிஞலகன்ஞாலம்பரிவுதீர்த்தா, ஹுருளாழியுடையரிவனடைவின்மிகக் கடைப்பணிகொண்டு ழையோர்போல, விருளாழிகிழற்றுளும்புமெரிபொன்மணி நெடுமுடிசாய்த்திறைஞ்சப்பட்டான், மருளாழுங்கழிவனப்பி ன்மற்றிவனேகுலமுதற்கண்வயவோன்கண்டாய். (உ௫௩)

சூழிருந்திண்கடற்ருனையுடன்றுளங்கச் சுரர்கொணர்ந்து சொரிந்தமாரித், தாழிரும்பல்புயருங்கிச்சரகூடஞ்சந்தித்தத கையோனன்றேன், யாழிரங்குமணிவண்டுமிலங்கிழையார் கருங்கண்ணுமருங்குநீங்கா, வீழிரும்பொற்சுடராரவரைமார் பனிவன்சீர்யான்விளம்பவேண்டா. (உ௫௪)

இங்கிவனதிடமருங்கினெழில்வயங்கு மணிமஞ்சமிலங்க வேறிச், சங்கிவர்வெண்சாமரையுந்தாழ்குழையுநீள்சுடருந்த யங்கிவீசக், குங்குமஞ்சேர்கொழும்பொடியிற்புரண்டுதன்னி னிறஞ்சிவந்தகுளிர்முத்தாரஞ், செங்கதிரோனெளிபருகுஞ் செவ்வரை * தேரகலத்தான்றிறமுங்கேளாய். (உ௫௫)

தகரநாறிருஞ்சோலைச்சயம்பூருன்றுறவரசாய்நின்றகாலை, மகரயாழ்நரம்பியக்கிவரங்கொண்டு வடமலைமேலுலகமாண் ட, சிகரமாலியானையான்வழிமருகன்செந்தாமந்தவழ்ந்துதீந் தேன், பகருமாமணிமுடியானமரருமேபாராட்டும்படியன்பா வாய். (உ௫௬)

† சக்கரர்தாம்பிறந்துவரித்தரங்கநீர் வளாகமெல்லாந்தங் கீழ்க்கொண்ட, வுக்கிரமெய்க்குலத்தரசனெளிவேலகிவ்விளை யவனதுருவேகண்டா, யக்கிரநற்பெருந்தேவிமடமகளேயரச ணங்குமணங்கேயின்னும், விக்கிரமக்கடற்ருனைவிறல்வேந்த ரிவர்சிலரைவிளம்பக்கேளாய். (உ௫௭)

ஏலஞ்செய்பைங்கொடியி னிணர்ததைந்து பொன்னறை மேற்கொழுந்தீன்றேறிக், கோலஞ்சேர்வரைவேலிக்குண்டல த்தார்கோமானிக்கொலைவேற்காளை, ஞாலங்களுடன்பரவுநா

* தேர், உவமவுருபு. † சகரரின்விகாரம்.

தவன்றன்குலவிளக்குநகைவேனம்பி, போலிங்கணரசில்லை பொன்னூரவரைமார்பன்பொலிவுங்காணாய். (உருஅ)

சொரிமலர்த்தண்மலரணிந்தசோலைசூழ்சூரியத்தார்கோமான்ருேலா, வரிகுலத்தார்போரேறிவ்வரியேறுபோலிருந்த வரசகாளை, வரிமலர்த்துமணிவண்டுபுடைவருடுமாலையார்ம களிர்வாட்கண், புரிமலர்த்தண்வரையகலம்புணராதார்புண் ணியங்கள்புணராதாரே. (உருகூ)

வேலைவாய்க்கருங்கடலுள் வெண்சங்குமணிமுத்தும்விர வியெங்கு, மாலைவாய்க்கரும்பருவகன்பண்ணைதழீஇயருகே யருவிதூங்குஞ், சோலைவாய்மலரணிந்தசூழ்குழலாரியாழி சையாற்றுளைக்கைவேழ, மாலைவாய்கின்றுறங்குமதுரைசூழ் வளநாடன்வடிவுகாணாய். (உகூ௦)

கண்சுடர்கள்விடவனன்று கார்மேகமெனவதிருங்களிகல் யானை, விண்சுடருநெடுங்குடைக்கீழ்விறல்வேந்தன்றிறமித னைவிளம்பக்கேளாய், தண்சுடரோன்வழிமருகன்றென்மலை மேற்சந்தனமுஞ்செம்பொன்னூரத், தொண்சுடரும்விரவியக ல்வரைமார்பனுலகிற்கோர்திலதங்கண்டாய். (உகூக)

மழைக்கரும்புங்கொடிமுல்லை மருங்கேறவரம்பணைந்துத டாவிளைண்ட, கழைக்கரும்புகண்ணீனுங்காபுரத்தார்கோமா னிக்கதிர்வேற்காளை, யிழைக்கரும்புமிளமுலையாயெரிகதிரோ ன்வழிமருகனிவனீரீர்ந்தண், டழைக்கரும்பின்முருகுயிர்க்கு ந்தாரகலஞ்சார்ந்தவர்கடவுஞ்செய்தாரே. (உகூஉ)

வண்டறையுமரவிந்தவனத்துலாய் மதர்த்தெழுந்தமழலை யன்ன, முண்டுறைமுன்விளையாடியிளையவர்கணடைபயிலு முறந்தைக்கோமான்,கொண்டறையுமிடிமுரசுங்கொடிமதிலு ங்குளிர்புனலும்பொதியும்பூவு, மொண்டுறையுமும்மூன்றுமு டையகோனிவனிவனதெழிலுங்காணாய். (உகூ௩)

தழலவார்தாமரையினீரிதழுஞ்செங்குவளைத்தாதும்வாரி, யழலவாஞ்செந்தோகை யுலங்குபொலங்கதிர்ச்செந்நெலலைத்

தவாடை, பழனவாய்ப்பைங்கரும்பின்வெண்போதுபவழக் காற்செம்பொன்மாடத், தெழினிவாய்க்கொணர்ந்தசைக்கு மியலேமாங்கத[illegible]னிவனேகண்டாய். (உகூச)

காந்தளங்கட்கமழ்குலையாற்களிவண்டுகளிறகற்றுங்கலிங்கநாடன், பூந்தளவங்கமழ்சாரற்பொன்னறைசூழ்தண்சிலம்பனன்றேபொன்னே, யேந்திளஞ்சிங்காதனத்தினினிதிருந்தவிளவரசனிப்பாலானேன், மாந்தளிர்கண்மருங்கணிந்தமணியருவிக்குன்றுடையமகதைக்கோவே. (உகூரு)

அங்கநாடுடையவர்கோ னவ்விருந்தானிவ்விருந்தானவந்திக்கோமான், கொங்குவார்பொழிலணிந்தகோசலத்தார்கோமானிக்குவளைவண்ணன், கங்கைதானிருகரையுங்கதிர்மணியும்பசும்பொன்னுங்கலந்துசிந்தி, வங்கவாய்த்திரையலைக்கும்வளநாடனிவன்போலும்வைவேற்கானே. (உகூகு)

வஞ்சியின்மெல்லிடையவளைவானிலாவளர்முன்றில் வலமாய்ச்சூழ்ந்து,பஞ்சியின்மெல்லடிநோவநடைபயிற்றிப்படைவேந்தர்பலரைக்காட்டி, மஞ்சிவருமாளிகையின்வடமருங்கின்மணிமஞ்சமலிரத்தோன்றும், விஞ்சையர்தமுலகாளும்விறல்வேந்தர்குழாங்காட்டிவிரித்துச்சொன்னாள். (உகூஎ)

மாடிலங்குமழைதவழ்ந்து மணியருவிபொன்னறைமேல் வரன்றிவண்பூந், தோடிலங்குகற்பகமுஞ்சுரபுன்னைவனங்களுமேதுதைந்துவெள்ளிக்,கோடிலங்குநெடுவரைமேற்குடைவேந்தரிவர்குணங்கள்கூறக்கேட்பி, னேடிலங்குபூங்கோதாயிமையவரின்வேறுயதிமைப்பேகண்டாய். (உகூஅ)

அங்கவவர்வளநகருங்குலவரவுமவயவமு மறையும்போழ்தின், வெங்கதிரோன்பெயரவனுக்கிளவரசிவ்வேந்தனெனுமுன்னந்தானே, கொங்கிவருங்கருங்குழலிபெருந்தடங்கணிருங்குவளைபிணையல்போலச், செங்கதிரோனெனவிருந்ததிருந்துவேலிளையவன்மேற்றிளைத்தவன்றே. (உகூகூ)

வே று.

கடாமிகுகளிநல்யானைக்கவுளிழிகானவீதி
விடாமிகைசுழன்றுவீழும்விரைகவர்மணிவண்டேபோற்
படாமுகக்களிற்றினுன்றன்பவழக்குன்றனையமார்பிற்
றடாமுகையலங்கறன்மேற்றையல்கண்சரிந்தவன்றே. ()

ஏட்டினர்குழலினளுக்குழையவளின்னனென்று
காட்டினளாவதல்லாற்காரிகைதன்னின்முன்ன
மோட்டினணிறையுங்கண்ணுமுள்ளமுங்களித்ததங்கே
பாட்டினலென்னைபோகபான்மையேபலித்ததன்றே. (உஎக)

விண்டழிநிறையளாகிமெல்லவேநடுங்கிநாணி
வண்டிவர்மாலைநோக்கிமாதராண்மறைதலோடுங்
கொண்டதோர்குமரன்போலக்குங்குமக்குவவுத்தோண்மே
லொண்டொடிமாலைவீழ்த்தாளுலகொலிபடைத்தன்றே. ()

ஆர்த்ததங்கரவத்தானையாலித்தமுரசுஞ்சங்குந்
தேர்த்தனமலருஞ்செம்பொற்சுண்ணமுந்திசைகளெல்லாம்
போர்த்தனபதாகைபொங்கிப்பூமியங்கிழவருள்ளம்
வேர்த்தனவேர்த்துத்தாமேவெய்துயிர்த்தொழிந்தவன்றே.()

புனைவுதானிகந்தகோதைப்பொன்னனுள்பூமிபாலர்
நினைவுதானிகந்துகாளைவடிவெனுநிகளஞ்சேர
வினைகடாம்விளையுமாறியாம்வேண்டியவாறுவாரா
வினையதால்வினையின்றன்மையெனநினைந்தாறினரே. ()

நெய்த்தலைப்பாலுக்காங்குநெடுவரையுலகின்வந்த
மைத்துனகுமரன்றன்னைமடமொழிமாலைசூட்ட
வித்தலையரசர்கோமானெரிகதிராழிவேந்தன்
கைத்தலைவேலினற்குக்கடிவினைமுடிவித்தானே. (உஎ௫)

விண்ணகம்புகழுநீர்மைவிழுக்கலம்பரப்பியார
மண்ணகவளாகத்துள்ளமன்னரான்மண்ணுநீர்தந்
தெண்ணகன்புகழினுரையெழிலொளிதுளும்பவாட்டிப்
புண்ணகங்கமழும்வேலான்பொன்மழைபொழிவித்தானே.()

திருமணன்மணிமுத்தாகத்தண்டிலமியற்றிக்கான்யாற்
றருமணற்றருப்பைசூழ்ந்தாங்கதன்மிசைபரிதிபாய்த்திப்
பெருமணமன்னற்கேற்றசமிதையாற்பெருக்கப்பட்ட
திருமணியுருவச்செந்தீசெல்வத்திற்சிறந்ததன்றே. (உஎஎ)

தங்கழல்வேழ்விமுற்றித்தையலக்காளேயோடும் [ண்ணீர்
பொங்கழல் வலஞ்செய்போழ்திற் குழைமுகம்பொறித்ததெ
பைங்கழலமரர்பண்டுபெடைத்தரோமிர்தப்புள்ளி
யங்கெழுமதியந்தன்மேலரும்பியாங்கணிந்தவன்றே. (உஅ௯)

மன்னவகுமரனுங்குமடந்தையைப்புணர்ந்துமாடத்
தின்னகிலமளிமேலாவிளமுலைத்தடத்துமூழ்க
வன்னவன்றாதைசெங்கோலாணைவேலருக்கசீர்த்தி
தன்னமர்மடந்தைக்கேற்றசயமரமறைவித்தானே. (உஎ௯)

சயமரமறைந்தனன்றுட்டமனியமஞ்சம்பாவி
யியமரந்துவைப்பவேறியிகன்மன்னரிருந்தபோழ்திற்
பயமலைமன்னன்பாவைக்கவரவர்பண்புகூறிக்
கயமலர்நெடுங்கணுளோர்காரிகைகாட்டினளே. (உஅ0)

வரிகழன்மன்னரென்னுமணிநெடுங்குன்றமெல்லாஞ்
சுரிகுழன்மடந்தையென்னுந்தோகையம்மஞ்ஞைநோக்கி
யெரிகதிராழிவேந்தன்றிருமகனென்னுஞ்செம்பொன்
விரிகதிர்விலங்கற்றிண்டோட்குவட்டினைவிரும்பிற்றன்றே. ()

மாதாரள்சுதாரைவாட்கண்மலரொடுமணிவண்டார்க்கும்
போதுலாம்பிணையல்வீரன்பொன்வரையகலஞ்சூழ
வேதிலாமன்னர்வாடவிருபுடைக்கிளைஞரெல்லாங்
காதலாற்களித்துச்செல்வக்கடிவினைமுடிவித்தாரே. (உஅஉ)

கழல்வலம்புரிந்தகோன்றாட் கடல்வண்ணன்புதல்வன்காமர்
குழல்வலம்புரிந்தகோதைகுழைமுகம்வியர்ப்பவேட்டா
னழல்வலம்புரிந்துசூழ்ந்தாங்கத்தொழின்முடித்தபின்னைத்
தழல்வலம்புரிந்தவேலான்றடமுலைவாரிசார்ந்தான். (உஅ௩)

மாதரஞ்சாயலாளுமணிவண்ணன்சிறுவன்றானு
மோதநீரின்பமென்னுமொலிகடற்றாங்கழ்கச்
சோதியம்பெயரினாளுஞ்சுடரவன்புதல்வன்றானுங்
காதலிற்களித்துத்தங்கள்கனவரையுலகஞ்சார்ந்தார். (உஅச)

வே று.

எரிவிசயங்கோவேந்திமன்னரென்னு
மரிவிசயங்கெடநின்றவாணைவேலான்
றிருவிசயன்றிருவன்னசெல்வியோடு
மருவிசயங்கெழுகோயின்மலர்ந்துபுக்கான். (உஅடு)

இனையனவாமிகுசெல்வமிங்குமாக்கிப்
புனைமலர்வானவர்போகம்புணர்க்கும்பெற்றி
வினையதனின்விளைவின்னதென்றுநாளு
நினைமின்மோநெறிநின்றுநீர்மைமிக்கீர். உஅசு)

சுயம்வரச்சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம் - கஅசo.

பதினொராவது

துறவுச்சருக்கம்.

மன்னியபுகழினான்றன்மகன்வழிச்சிறுவர்வாயி
னின்னகைமழலைகேட்டாங்கினிதினிருந்துபின்னர்ப்
பன்னுமெய்த்துறவிற்புக்கான்பயாபதிமன்னர்மன்ன
னன்னதன்பகுதிதன்னையறியுமாபகர்தலுற்றேன். (க)

திருமகிழலங்கன்மார்பிற்செங்கணான்வணங்கச்செல்வப்
பெருமகிழ்வெய்திவேந்தன்பிரசாபதிபெரியவாட்க
ணுரிமையொடிருந்தபோழ்தினொலிகலனொலிப்பவோடி
யருமைகொடிகிரியாள்வான்சிறுவர்சென்றணுகினாரே. (உ)

ஆங்கவரணைந்தபோழ்தினமிர்துகொப்புளித்தபோலுந்
தெங்கமழ்பவழச்செவ்வாய்முறுவனீர்பருகித்தேங்கி
யீங்கிவையனையதோற்றியின்பமேபெருகநின்ற
வீங்கியதவத்திற்கின்னும்வித்திடற்பாலதென்றான். (ங)

அல்குடன்விளங்குமம்பொற்குடைநிழலரசர்சூழ
வுலகுடன்வணங்கவோடையுயர்களிற்றெருத்தமேலாற்
பலகுடைபணியச்செல்லும்பண்பிதுநமக்குத்தந்த
நலனுடைத்தளியநங்கணல்வினைத்தெய்வமன்றே. (ச)

தன்னையோரரசனுக்கித்தரங்கநீர்வளாகமாள்வித்
தின்னுயிராகச்செல்லுநல்வினையென்னுமின்ன
முன்னுபகாரிதன்னைமுதல்கெடமுயலுங்கீழ்மை
நன்னரின்மன்னனன்றேநரகங்கட்கரசனுவான். (ரு)

சென்றநாள்பெயருமேனுஞ்செல்வமுஞ்செருக்குமாக்கி
நின்றநாணிலவுமேனுநெறியின்றுவருந்தவேண்டா
வின்றுபோல்வாழ்துமன்றேயிப்படித்தன்றியாங்கள்
பொன்றுநாள்வருவதாயின்வாழ்க்கையோர்பொருளதன்றே.

எரிபுரையெழிலதாயவிளந்தளிரிரண்டுநாளின்
மரகதவுருவமெய்திமற்றதுபசலைகொண்டு
கருகிலையாகிவீழ்ந்துகரிந்துமண்ணுதல்கண்டும்
வெருவிலர்வாழ்துமென்பார்வெளிற்றினைவிலக்கலாமோ. (எ)

பிறந்தனர்பிறந்துசாலப்பெருகினர்பெருகிப்பின்னை
யிறந்தனரென்பதல்லாலியாவருமின்றுகாறு
மறைந்துயிர்வாழாநின்றாரில்லையால்வாழிநெஞ்சே
சிறந்ததுதவத்தின்மிக்கதின்மையேசிந்திகண்டாய். (அ)

பிறந்துநாம்புறஞ்செய்கின்றபேதையிவ்வுடலந்தானு
மிறந்தநாள்போல்வதின்றாயிற்றையினுளைவேறுய்ப்
பறைந்துநாம்பற்றப்பற்றப்பற்றுவிட்டகலுமாகிற்
சிறந்தனர்பிறர்கள்யாரேசிந்தைநீசிந்தியென்றான். (கூ)

தொகைமலரலங்கல்சூடித்தூநறுஞ்சுண்ணமப்பிப்
புகைநனிகமழவூட்டிப்புறஞ்செயப்பட்டமேனி
சிகையினோர்சிறுமுட்டீண்டச்சிதைந்தழுக்கொழுகுமாயி
னகைபெரிதுடைத்துநாணுமிதனைநாமகிழ்தனெஞ்சே. (க0)

ஒழுகியநடையுநீருமுதலகையிகப்பலூறு
மழுகலிவ்வள்ளல்யாக்கையகம்புறமாயிற்றாயிற்
கழுகொடுகவருங்காக்கைகைதடிகொண்டுகாத்து
மழகுளசுழலுமன்னோவாயிரச்சாதிமாதோ. (௧௧)

வல்வினைவிளைத்தமாந்தர்மற்றதன்வித்துமாட்டிப்
புல்வினைகானமண்டிப்புலியின்வாய்ப்பட்டதேபோ
னல்வினையினிதினாட்டுநல்வினைமுதல்கண்மாறி
யில்வினையின்பம்வெஃகியிறுபவேயறிவிலாதார் (௧௨)

இன்னனபலவுஞ்சிந்தித்திருந்ததுமிகையென்றெண்ணி
மன்னவனுழையர்தம்மான்மந்திரத்தவரைக்கூவிப்
பொன்னவிர்பவழத்திண்காற்புரிமணிக்கூடமெய்தித்
தன்னமரமைச்சரோடுதானமர்ந்திருந்துசொன்னான். (௧௩)

மலைபயில்களிநல்யானைமன்னரால்வவ்வலின்றாய்க்
கலைபயில்மகளிர்கண்போற்கள்வர்கைப்படாதுநாளு
நிலையினசெல்வக்கூனநிகழ்வனவுரைமினென்று
னிலைபயின்மகரப்பைம்பூணெரிமணிக்கடகக்கையான். (௧௪)

ஆள்வினைமாட்சியென்னுமிரண்டினுமரசுகாத்துத்
தோள்வினைக்களவுகாவலுள்வழித்துன்னல்செல்லா
வாள்வினைத்தடக்கைவேந்தேவருவதுமற்றுமுண்டோ
கோள்வினைபயின்றகூற்றங்குறுகலதாயினென்றார். (௧௫)

கோள்வினைபயின்றகூற்றவரசனாற்கொள்ளற்பால
கேள்வினைபயின்றநூலிற்கிளந்துநீருரைமினென்ன
வாள்வினைபுரந்ததோளான்மனத்தையுணர்ந்துமாதோ
நாள்வினைபுரிந்துநங்களுயிர்நிறைகொள்ளுமென்றார். (௧௬)

சந்தினாற்றவிர்க்கலாமோசார்பினாலொழிக்கலாமோ
பந்தியாமுன்னந்தாமேபகைத்திருந்துய்யலாமோ
வெந்திறற்காலன்றன்னைமேற்சென்றுவெல்லலாமோ
யுய்ந்துயிர்யாங்கள்வாழுமுபாயநீருரைமினென்றான். (௧௭)

பீழைமைபலவுஞ்செய்துபிணிப்படைபரப்பிவந்து
வாழுயிர்ப்பொழித்துவவ்விவலிந்துயிர்வாங்கியுண்ணுங்
கூழைமைபயின்றகூற்றவரசனைக்குதிக்குஞ்சூழ்ச்சி
பாழியந்தடக்கைவேந்தேபயின்றிலம்யாங்களென்றார். (௧௮)

ஆயினக்காலன்பாணியாம்பிறவரசசெல்வ
மேயினங்களித்தியாங்கள்விழைந்துயிர்வாழும்வாழ்க்கை
பாயியவெழுந்தவேங்கைபாரிக்குமளவிற்பைம்புன்
மாயிருஞ்சுருளைமேயுமான்மறிபோலுமென்றான். (௧௯)

அருங்களியானைவேந்தேயத்துணைப்பாணியுண்டோ
கருங்களிமதநல்யானைவாய்புகுகவளமேபோற்
பெருங்களியாளன்காலன்பிறையெயிறணிந்துநின்ற
விருங்களியாணர்வாழ்விற்கிமைப்பிடைபெரிதுகண்டாய். ()

இன்னுயிரழியும்போழ்துமிறைவனுக்குறுதியல்லான்
முன்னியமுகமன்மாட்டாமுற்றியவறிவினாரை
மன்னவன்மகிழ்ந்துநோக்கிவாழுயிர்வவ்வுங்காலன்
றன்னையுமிகந்துசேருஞ்சரண்பிறிதுரைமினென்றான். (௨௧)

இனியனபோன்றுதோன்றிநுகர்ந்தவற்கிறுதிசெய்யுங்
கனிபுரைகிளவிநீக்கிக்கண்ணனார்கருத்துட்கொண்டு
துனிவனநினையுங்காலன்றுணிவனதுணியுஞ்சூட்சி
முனிவரைவணங்கிக்கேட்டுமுயறுமோவடிகளென்றார். ()

குருகயர்வுயிர்க்குஞ்சோலைக்குளிரணிப்பழனநாட
முருகயர்வுயிர்க்கும்பூவார்முறிமிடைபடலைமாலைத்
திருவயர்வுயிர்க்குமார்பற்செறிதவர்சரணமூலத்
தருகயர்வுயிர்ப்பினல்லாலரண்பிறிதாவதுண்டோ. (௨௩)

எரிகின்றசுடரினெய்பெய்திடுதிரிதூண்டியாங்கு
விரிகின்றபுலமைவீரர்மொழிதலும்விசோதியன்னாற்
பரிகின்றவுரிமைவல்லபடரொழிமனத்தனானன்
சொரிகின்றமதுவின்மாரித்துவலையினனைந்ததாரான். (௨௪)

கரும்பணிமொழியினர் தங்கருந் தடங்கண் ணும்வண்டுஞ்
சுரும்பணை முலேயினருந்தொடையலுந் துதைந்தமார்ப
னரும்பணியசோகமீழலடிகளதணிபொற்கோயில்
விரும்பணிவிழவுசாற்றிவியன்முரசறைகவென்றான். (உரு)

ஒளியவனுலகந்தன்னுட்கரந்தவனுயிர்களுய்ய
மளியவனருள்செய்யாழியுடையவனடிமைசெய்வார்க்
கெளியவனெந்தைபெம்மாற்கியற்றியவிழவின்மிக்க
களியவரென்பசெம்பொற்கதிர்முடிசூடுவாரே. (உசு)

அருள்புரியழலஞ்சோதியாழியானுதியில்லான்
மருள்புரிவினைகட்கென்றுமறுதலேயாயவாம
னிருள்புரியுலகஞ்சேராவியனெறிபயந்தபெம்மான்
பொருள்புரிவிழவுகாண்பார்புண்ணியவுலகங்காண்பார். (உஎ)

கண்ணியவறிவன்செல்வவிழவினுட்களித்தமாந்தர்
புண்ணியத்துகள்களென்னும்பொற்சுண்ணம்புதையவாடிப்
பண்ணியன்மொழியினர் தங்கருங்கண்ணுற்பருகுநீர்மை
விண்ணியலுருவமெய்திவிளங்கிவீற்றிருப்பரன்றே. (உஅ)

எல்லேசான்முரசிற்சாற்றியின்னனவறைதலோடு
மல்லன்மாநகரங்கேட்டேவானுலகிழிந்ததேபோன்
முல்லேவான்கண்ணிசூடிமுகிணைகைக்கலங்கடாங்கிச்
செல்லும்வாய்தோறுஞ்செல்வவிழவணிதேர்த்ததன்றே. ()

இன்னிசைமுரசங்கேட்டேமெய்பெரிதினியகேட்டா
மன்னியநங்கள்வாளுள்வாழ்கநம்மிறைவனென்னுப் [த்
பொன்னியன்மலருஞ்சாந்துஞ் சுண்ணமும்புகையும்பொங்க
துன்னியநகரமாந்தர் துறக்கம்பெற்றவர்களொத்தார். (௩0)

வேறு.

பூரணமணிக்குடநிரைத்தபொன்னணி
தோரணமெடுத்தன துதைந்தவெண்கொடி
வாரணிமுரசொடுவளேகளார்த்தரோ
காரணிகடலொலிகைதவிர்த்ததே. (௩௧)

விரையினன்மெழுகியவீதிவாயெலாந்
திரையினர்செழுமணிமுத்தஞ்சிந்தினு
ருரையினுலென்னையவ்வொளிகொண்மாநகர்
புரையினற்பொன்னுலகிழிந்ததொத்ததே. (௩௨)

கழுமியகாழகிலாவிகாமரு
செழுமணிமாளிகைச்சென்னிசூழ்வது
விழுமணிவிளங்கியவிலங்கன்மீமிசைத்
தழுவியவிளமழைதவழ்வதொத்ததே. (௩௩)

வெண்டுகிலுடுத்துவெண்சாந்துமெய்வழித்
தொண்டிரண்மல்லிகையொலியல்சூடினர்
வண்டிரண்மணிமுத்தும்வயிரச்சாதியுங்
கொண்டியலணியொடுகோலந்தாங்கினர். (௩௪)

வெண்மருப்பிரட்டையவேழமீமிசைக்
கண்மருட்டுறப்பனகமலப்பூப்பலி
விண்மருட்டுறப்பனவேந்திவேதியர்
மண்மருட்டுரைப்பதோர்வகையின்மன்னினர். (௩௫)

செம்மலர்க்கண்ணியர்செம்பொற்றூரினர்
கொய்மலர்க்குங்குமங்குழைந்தசாந்தினர்
கைமலர்மணிநகைக்கடகம்வில்விட
மெய்ம்மலரணியினர்வேந்தராயினர். (௩௬)

செந்நிறக்குவளைகைசெய்தசூட்டின
ரந்நிறந்தழுவியவரத்தவாடையர்
மெய்ந்நிறஞ்செய்வனவேழமீமிசைக்
கைந்நிறமல்ரொடுகலந்துதோன்றினர். (௩௭)

பொன்மலர்க்கண்ணியர்பொன்செய்சுண்ணமொய்
மின்மலர்மேனிமேல்விளங்கவப்பினர்
மென்மலரணிநகைமிளிருங்கோலமோ
டின்மலரிருநிதிக்கிழவரீண்டினர். (௩௮)

பேரொளிப்பீதகவுடையர்பைம்பொனு
லாரொளிதழுவியவலர்செய்பூப்பலி
போரொளியானைமேனிரைத்துப்போந்தனர்
வாரணிவனமுலையவரொடென்பவே. (௩௯)

நகரமாங்கெழுந்தபினாலுஞ்சங்கொடு
முகரவாய்மணிமுரசதிருமுரிநீர்
மகரமால்கருங்கடன்மருளுந்தானையான்
சிகரமால்யானைமேற்செல்வன்றேன்றினன். (௪௦)

வேல்புரைகண்ணியர்கவரிவீசவெண்
பால்புரைபவழக்காற்குடையினீழலான்
மால்புரைகருங்கடல்வளாகங்காவலன்
கால்புரைபுரவியங்கடலுட்டோன்றினன். (௪௧)

பூதமெழுபுரவிகள்புடைபரந்திட
மதமழைபொழிவனவயிரக்கோட்டன
கதமழலெழவுமிழ்தகையகாணில
விதமெழுகளிறுகள்பலமிடைந்தவே. (௪௨)

ஆர்த்தனபல்லியமதிர்ந்தகுஞ்சரந்
தேர்த்தனதேர்க்குழாந்திகைத்தபல்லுயிர்
போர்த்தனகொடிமிடைபொழிந்தபூமழை
வேர்த்தனவிளிர்ந்தனவிணைகளென்பவே. (௪௩)

விரிந்துயர்வெள்ளிவெண்குடையின்மாடெலாந்
திருந்தியசாமரைதிசைகடோர்த்தன
பரந்தெழுபாற்கடற்பாவைவெண்டிரை
நிரந்தெழுநுரையொடுகிளைத்தவொத்தவே. (௪௪)

பீலியந்தழைபிணித்திட்டவட்டமு
மாலியங்கசைப்பனவாலவட்டமு
மேலியங்கொளியவன்மறையவேய்ந்தரோ
காலியங்கிடவிடங்காண்கிலாரரோ. (௪௫)

சந்தனஞ்செறிந்தனசெப்புந்தண்புகைக்
கந்தமேநிறைந்தனகரண்டகங்களுங்
கொந்துமொய்ம்மலர்நிறைகோடிகங்களு
முந்தியொன்றொன்றினையூன்றுகின்றவே. (௪௬)

நிரந்தனபூப்பலிநிரைகொண்மாரியாய்ச்
சொரிந்தனசுரும்பிவர்துணர்கொள்பூமழை
பரந்தனமங்கலப்பதாகையவ்வழிக்
கரந்தனகருவினைக்குழாங்களென்பவே. (௪௭)

பாடுவார்பலாண்டிசைபரவுவார்பரந்
தாடுவாரறிவனைப்பரவியார்களுங்
கூடுவார்குழுவுமெய்க்குழுமியெங்கணு
மூடுதான்வியலிடமுள்ளதில்லையே. (௪௮)

நொவ்வகைவினைப்பகையகற்றினானெறி
செல்வகைமொழிந்தவன்செல்வச்சேவடிக்
கிவ்வகையெழுவகைவிழவுசெல்வுழி
நெய்வகைவேலவனிலைமைகேட்கவே. (௪௯)

நீர்ப்பலிவிரைப்பலிநிரந்துதேனிமிர்
பூப்பலியெனவிலைநிரைத்துப்புண்ணியன்
சீர்ப்பொலிசினகரஞ்சென்றுசேர்ந்தன
னூர்ப்பொலிதழுவியவரவத்தானையான். (௫௦)

கோடுயர்கோபுரவாய்தல்சேர்ந்துதன்
னீடுயர்மழகளிறிருவித்தானிழிந்
தேடுயரினமலரேந்தியீர்ம்பொழின்
மாடுயர்வளநகர்வலங்கொண்டெய்தினான். (௫௧)

மன்னவனணைதலுமலர்ந்தவாணிலாப்
பொன்னணிவளநகரகத்துப்பொங்கரி
துன்னியவணைமிசைத்துளங்குஞ்சோதியோ
டன்னணமசோகமரடிகடோன்றினார். (௫௨)

குஞ்சரத்தடக்கையகுழவிச்சென்னிய
மஞ்சிவர்தோற்றத்துமகரவாயொடு
செஞ்சுடர்மணிநிரையழுத்திச்செம்பொனு
லஞ்சுடருமிழ்வதவ்வணையின்வண்ணமே. (ருங)

ஏழிய லுலகிலுள்ளிருளங்கையகன்
றூழியல்வினைகளோடவியவாயிரந்
தாழொளிசுடரவன்றனைக்காணவோர்
சூழொளிமண்டிலஞ்சுடரத்தோன்றுமே. (ருச)

கழுமியபானிலாக்கதிரின்கற்றைகள்
செழுமணித்திரண்மிசைச்செறிந்தபோல்வன
வெழுவளர்த்தனையதோளியக்கரேந்தின
தொழுதகையுருவினகவரிதோன்றுமே. (ருரு)

பருகலாம்பானிலாப்பரந்தமாமணி
யருகெலாமணிந்தகடம்பொனூர்ந்துமேற்
பெருகலாஞ்சுடரொளிபிறங்கிநின்றதம்
முருகுலாம்பிண்டியான்குடையின்மும்மையே. (ருசா)

அழல்வளர்த்தனையனதழையுமவ்வழற்
றழல்வளர்த்தனையனமலருந்தாமரைப்
பொழில்வளர்வனையமும்பொதுளிவண்டினங்
குழைவளரசோகின்மேற்குளிறுகின்றவே. (ருஎ)

மாமழைக்கண்ணியர்மருங்குபோல்வன
தூமழைவளர்கொடிதுவன்றிப்பத்திகள்
பாமழையுருவுகள்பலவுந்தோன்றவே
பூமழைபொன்னிலம்புதையவீழ்ந்தவே. (ருஅ)

மொய்த்திலங்கலர்மழைமுருகுலாவிய
மைத்தலைவிசும்பிடைமயங்கவானவர்
கைத்தலம்பரவியகாமரின்னிய
மெத்திசைமருங்கினுமிரங்கித்தோன்றுமே. (ருகூ)

மைஞ்ஞலம்பருகியகருங்கண்மாமணிப்
பைஞ்ஞலம்பருகியபருமவல்குலார்
மெய்ஞ்ஞலம்விஞ்சையர்விரவமேலெலாங்
கிஞ்ஞரமிதுனங்கள்கிளர்ந்துதோன்றுமே. (கூ0)

எரிமணிநெடுமுடியிமைப்பிற்செங்கணைப்
புரிமணிவண்ணனும்பொன்செயாழியத்
திருமணிவண்ணனுந்தேவிமார்களு
மருமணிவண்ணனுக்கருகுதோன்றினர். (கூக)

ஒண்டமர்மணிகளுமொளிர்பொற்சாதியுங்
கொண்டனரியற்றியகோலச்செய்கையாற்
கண்டவர்கண்கவர்நகரங்காண்டலும்
விண்டுதிர்வினையினன்வேந்தனாயினன். (கூஉ)

பணியொடுநறுவிரைமெழுகிப்பன்மல
ரணியுடையனையனபலவுஞ்செய்தபின்
மணிமுடிநிலமுறவணங்கிவாமன்மேற்
றுணிபடுவினையினன்றுதிதொடங்கினன். (கூங)

வேறு.

மூவடிவினுமிரண்டுசூழ்சுடருநாண முழுதுலகமூடியெழி
ன்முளைவயிரநாற்றித், தூவடிவினுமிலங்குவெண்குடையினீ
ழற் சுடரோயுன்னடிபோற்றிச் சொல்லுவதொன்றுண்டாற்,
சேவடிகடாமரையின்சேயிதழ்கடீண்டச்சிவந்தனவோசேவ
டியின் செங்கதிர்கள்பாயப், பூவடிவுகொண்டனவோ பொங்
கொளிகள்சூழ்ந்து புலங்கொளாவாலெமக்கெம்புண்ணியர்த
ங்கோவே. (கூச)

கருமாலைவெவ்வினைகள்காறளரநூறிக்கடையிலாவொண்
ஞானக்கதிர்விரித்தாயென்று, மருமாலைநன்னெறியைமுன்ப
யந்தாயென்றுமடியேமுன்னடிபரவுமாறறிவதல்லாற், றிருமா
லேதேனருமாவிந்தமேந்துந் திருவணங்குசேவடியாய்தேவா
திதேவ, பெருமானேநின்பெருமைநன்குணரமாட்டார்பிணங்
குவார்தம்மைவினைப்பிணக்கொழிக்கலாமே. (கூரு)

ஒளியாகியுலகாகிநீவிரிந்தாயென்கோவுலகெலாநின்னொளி
யினுள்ளடங்கிற்றென்கோ, வளியர்ரவுலகநீயாள்கின்றாயென்
கோ வமருலகுதானின்னதடியடைந்ததென்கோ, விளியாத
மெய்ப்பொருளை நீவிரித்தாயென்கோ நீவிரித்தவாறேமெய்ப்
பொருள்விரிந்ததென்கோ,தெளியாமவில்லைநின்றிருவடிகண்
மெய்ம்மைதெளிந்தா லுஞ்செவ்வனேதெரிந்துரைக்கலாமே.( )

களியானைநாற்கோட்ட தொன்றுடையசெல்வன் கண்
ணோராயிரமுடையான்கண்விளக்கமெய்து, மொளியானையூ
ழிமுதலானானையோங்கி யுலகளவுமாகியுயிர்தமக்குறுகண்செ
ய்யா, வளியானையாரழலஞ்சோதிவாய்சூழ்ந்த வருளாழியா
னையிணையடிபரவுவார்கட், கெளியானையெந்தைபெருமானை
யேயல்லா லிறையாகவீங்கொருவரெண்ணுமாறென்னே. ( )

தெருளாமையால்வினவற்பாலதொன்றுண்டு திருவடிகள்
செம்பொனாரரவிந்தமேந்த, விருளாழியேழுலகுஞ்சூழொளி
யின்மூழ்கவிமையாதசெங்கண்ணினிமையோர்வந்தேத்த, வு
ருளாழியானுமொளிமணிமுடிமேற்கைவைத்தொருபாலில்வ
ரவுலகநின்னுழையதாக, வருளாழிமுன்செல்லப்பின்செல்வ
தென்னோ வடிப்படாதாய்நின்றவகன்ஞாலமுண்டோ.(௬௮)

வானோர்தமுலகுடையமானீலவண்ணன் மகிழ்ந்திறைஞ்
சுமாலையணிமணிமுடிமேல்வைகா, வூனருமறவாழியோடை
மால்யானை யுடையான்றனொளிமுடியின் மேலுரையோநிற்க
த், தேனருமரவிந்தஞ்சென்றேந்தும்போழ்து திருவடிகள்செ
ந்தோடுதீண்டாவேயாகி, லானாவிம்மூவுலகுமாளுடையபெ
ம்மா னடியுறுவாரின்மைதாமறிவுண்டதன்றே. (௬௯)

தேனருளிமந்தாரச்செந்தாமந்தாழ்ந்து திரளரையசெம்ப
வளம்வம்பாகவூன்றி, வானருளிமாணிக்கச்செங்கதிர்கள்வீசி
மதிமருட்டும்வெண்குடையோர்மூன்றுடையவாமன், யான
ருளவேண்டியடியிணைபணியும்போழ்து மிமையவர்கோனாயி
ரச்செங்கணான்வந்து,தானருளுமாறென்றுதாள்பணியும்போ
ழ்துந் தகையொன்றதேவிறைமைதக்கதேயன்றே. (௭௧)

விண்டாங்குவெவ்வினைவெருஉவுதிராறிவிரிகின்றமெய் ஞ்ஞானச்சுடர்விளக்குமாட்டிக், கண்டார்கணின்னிலைமைக ண்டொழுகயானின் கதிர்மயங்குசோதியாற்கண்விளக்கப்ப ட்டுத், தண்டாஅமரைமலரின்மேனடந்தாயென்றுந்தமனீ யப்பொன்னணையின்மேலமர்ந்தாயென்றும், வண்டாரசோ கினிழல்வாயமர்ந்தாயென்றும் வாழ்த்திறல்வாராயோவான வர்தங்கோவே. (எக)

கருவார்ந்தபொருணிகழ்வுங்காலங்கண்மூன்றுங் கடையி லாநன்ஞானக்கதிரகத்தவாகி, யொருவாதிங்கவ்வொளியினி ன்னுள்ளமாகி லுலகெல்லாநின்னுள்ளத்தேயொளிக்கவேண் டா, திருவார்ந்ததண்மார்பதேவாதிதேவ திரளரையசெக் தளிரசோகமர்ந்தசெல்வ, வருவாரும்வையகமுநீயும்வேறுகி மணிமேனிமாலேமயக்குவதிங்கென்னே. (எஉ)

செங்கணெடுமாலேசெறிந்திலங்குசோதித் திருமுயங்கு மூர்த்தியாய்செய்யதாமரையி, னங்கணடிவைத்தருளுமாதி யாயாழி யறவரசேயென்றுநின்னடிபணிவதல்லா, லெங்கணி டரகலுமாறிந்நிலைமையெய்தி யிருளுலகநீக்குமருடருகநீயெ ன்று, வெங்கணிருவினையையறவென்றாய்முன்னின்று விண் ணப்பஞ்செய்யும்விழுத்தகைமையுண்டோ. (எங)

வேறு.

என்றுநன்கேத்தியிறைஞ்சியிறைவனைச்
சென்றுயர்சேவடிச்சேடந்தலைவைத்து
வென்றவன்கோயில்வலங்கொண்டுமீண்டுமோர்
பொன்றவழ்வேதிகைமண்டபம்புக்கான். (எச)

ஆங்கொர்முனிவனருந்தவப்பல்குணந்
தாங்கியமாமலையன்னதகையவன்
பூங்கமழ்சேவடிப்போதுதன்பொன்முடி
தாங்கியதாமநுதியாற்றுடைத்தான். (எரு)

ஆற்நிலமைந்தவருந்தவத்தால்வினை
யூற்றுச்செறிந்தவொருபெயர்மாதவன்
மாற்றருமந்திரவாய்மொழியாயிடை
யேற்றனகொண்டாங்கிறைவனிருந்தான். (எசு)

வணங்கிமணிமுடிமன்னனிருப்ப
மணங்கமழ்கண்ணியர்மந்திரமாந்த
ரணங்குமறவமிர்தூட்டியடிகள்
பிணங்கும்பிறவிகள்பேர்த்துய்மினென்றார். (எஎ)

வன்னமணிமுடிமன்னனிருந்திட
வின்னியற்செல்வமெனைப்பலவெய்திய
மன்னனறியுந்திருவறமாண்பினை
யென்னைவினவியதென்னைகொலென்றான். (எஅ)

அடிகளடிசிலமைந்ததயில்வான்
முடியமுயலுமுறைமையறியா
னெடிதினதுவறுநீர்மையுமோரான்
வடிவமர்செல்வன்வகையுமதுவே. (எகூ)

மந்திரமாந்தர்மொழிதலும்வானிடை
யந்தரம்வாழுமமரர்வழிபடுந்
தந்திரனான்றதவத்திற்கரசனு
மிந்திரனன்னாற்கெடுத்துரைக்கின்றான். (அ0)

கதியுங்கதியினுட்டுப்புமத்துப்பின்
விதிசெய்வினையும்வினைவெல்வகையு
மதியவர்காமுறும்வீட்டதுமாண்பு
மதிபதிகேளென்றருந்தவன்சொன்னான். (அக)

ஓடுஞ்சகடத்துருளுமொளிகொள
வீடிலொருவன்விசிறும்வளையமு
மாடுந்துகளுமெனச்சுழன்றுருயிர்
நாடுங்கதியவைநான்குளகண்டாய். (அஉ)

நரகர்விலங்குமனிதர்நற்றேவர்
விரவினவர்தம்விகற்பமுரைப்பின்
பெருகுமுரையென்றுபெய்மலர்த்தாரோ
னுருகவொருவாறுறுவனுரைத்தான். (அஙு)

நரகர்கதித்துன்பம்.

கீழாநரகங்கிளத்தும்படலங்க
ளேழாயிருபத்திரட்டியோடொன்பது
போழாமவற்றுள்ளவர்கள்புகலிடம்
பாழாமிலக்கமெண்பஃதுடனான்கே. (௮௪)

இருளினிருளுமிருளும்புகையு
மருளிலளறுமணலும்பரலு
மருளின்மணியுமெனவிப்பெயர
பொருளினரகங்கள்போதரக்கொண்ணீ. (௮௫)

ஆங்கணரகமடைந்தார்படுதுய
ரீங்கணுரைப்பினெமக்கும்புனிவரும்
வாங்கியவற்றின்முதலதன்வார்த்தைகள்
பாங்கின்மொழிவன்பனிமலர்த்தாரோய். (௮௬)

* பத்தடம்பத்தொடுமூன்றுமவற்றிடை
யொத்தவுறையுளிலக்கமோர்முப்பது
கொத்தெரிவெம்பவர்கும்பிக்குழியவை
யித்துணையென்பதொரெல்லையிலவே. (௮௭)

பேழைப்பிளவும்பிலத்தின்முகங்களுந்
தாழிப்பதலையும்போலுந்தகையன
வாழப்பரந்தவழுகலளறவை
பீழைப்பதகர்பிறக்குமிடமே. (௮௮)

குழிபடுகும்பிக்கருவாய்பெருகி
யழுகலுடம்பிவையங்குநிறைந்தால்
வழுவியனல்படுபாறைக்கண்வைகிப்
புழுவினுருள்வபொரிவபொடிவ. (௮௯)

புழுவினுருண்டுபொடிந்தவர்பொங்கி
யெழுவர் † புகையைந்தெழுந்தபின்மீட்டும்
வழுவிலர்வீழ்வர்மதிந்துமவ்வாறே
யொழிவிலாதேனையுள்ளளவெல்லாம். (௯0)

---

* பத்தடம் - படலை. † புகை - யோசனைதூரம்.

அங்தோவறனேயெனவழைப்பார்களை
வந்தோமெனச்சொல்லிவாங்குபவரில்லை
வெந்தேவிளிந்துமொழியார்விழுத்துயர்
முந்தேவினையமுயன்றனர்புக்கார். (௬௧)

அன்னணம்வேதனையெய்துமவர்களைத்
துன்னியுளர்சிலர்தூர்த்ததொழிலவர்
முன்னதிற்செய்தவினையின்முறைபல
வின்னணமெய்துமினென்றிடர்செய்வார். (௬௨)

தங்கிருட்போதிற்றலைச்சென்றயன்மனை
யங்குமகிழ்ந்தாளவளிவள்காணெனச்
செங்கனலேயெனவெம்பியசெம்பினிற்
பொங்கனற்பாவைகள்புல்லப்புணர்ப்பார். (௬௩)

கொள்ளுமிவையெனக்கூட்டில்வளர்த்ததம்
வள்ளுகிர்ப்பேழ்வாய்ஞமலிவடிவுக
ளள்ளிக்கதுவவலறியயலது
முள்ளிற்புனைமரமேறமுயல்வார். (௬௪)

மேயப்பருவம்விரும்பியமீனினங்
காயப்பெருந்தடிகாண்மினிவையெனத்
தீயைப்பருகியசெப்புத்திரளவை
வாயைப்பெருகப்பிளந்துமடுப்பார். (௬௫)

மறிப்பலகொன்றுமடப்பிணைவீழ்த்துங்
கறிப்பலவெஃகிக்கறித்தவர்தம்மை
யுறுப்புறுப்பாகவரிந்தரிந்தூட்டி
யொறுப்பர்சிலரையவருமொருபால். (௬௬)

இடைப்பலசொல்லியெளியவர்தம்மை
யுடைப்பொருள்வெஃகியொறுத்தபயத்தான்
முடைப்பொலிமேனியைமுண்மத்திகையாற்
புடைப்படங்கிப்புரள்வரொருசார். (௬௭)

வெறுப்பனவேசெய்துமேலாயவரைக்
குறிப்பலசொல்லியநாவைக்கொடிற்றூற்
பறிப்பர்பரியவயிரமுட்கொண்டு
செறிப்பருகிர்வழியேறச்சிலரே. (௯௮)

பொரிப்பர்சிறைசெய்துபொங்கெரிமாட்டிக்
கரிப்பரகல்படுகாரகலேற்றித்
திரிப்பர்பலரையுஞ்செக்குரலுட்பெய்
துரிப்பருடலையவருமொருபால். (௯௯)

பழுப்பலபற்றிப்பறிப்பர்பதைப்ப
மழுப்பலகொண்டவர்மார்பம்பிளப்பர்
கழுப்பலவேற்றியகைப்பர்கடிதே
விழுப்பெரும்பூணேய்வினையின்விளைவே. (௧௦௦)

பறிப்பர்பலரவர்கைகளைப்பற்றிச்
செறிப்பர்விரல்களைச்சீவுவர்மேனி
நெறிப்படுரெலும்புநிரந்துடன்வீழ
மறிப்பர்மலைமிசைமற்றுமொருசார். (௧௦௧)

சாவநலிந்திடுந்தண்ணீர்ப்பிணிபெரி
தாவென்றலறுமவரையருநஞ்சின்
வாவிகள்காட்டலின்மண்டிமடுத்துண்டு
நாவுமழுகரல்வரொருசார். (௧௦௨)

அழலிவையாற்றேமெனவழன்றோடி
நிழலிவையாமெனநீள்பொழிற்புக்காற்
றழல்வளிதாமேதலைவழிசிந்தக்
கழல்வனர்வீழ்ந்துகரிவரொருசார். (௧௦௩)

முல்லைமுகைமலர்த்தாரோய்முதற்புரை
யல்லலெனப்பலவாயிரகோடிக
ளெல்லையிறுன்பமிவற்றினிருமடி
புல்லினர்கீழ்க்கீழ்புரைபுரைதோறும். (௧௦௪)

விளிவிறுயரொடுமேற்பொங்கிவீழு
மளவுமவர்கண்முறையும்பிறவு
மளவிலகீழ்க்கீழிரட்டியறைந்தே
னுளரொளிஞானமஃதொன்றுமொழித்தே. (கoரு)

பெய்யாவருநஞ்சும்பேரழற்குட்டமுஞ்
செய்யாக்குழிகளுஞ்சீர்த்தடங்களு
மையாநரகரிடமிவைநாறினு
முய்யாபிறவுயிரோசனைக்கண்ணே. (கoசு)

எழுவின்முழமூன்றறுவிரலென்ப
வழுவின்முதலதன்கீழ்ப்புரைவாழ்வா
ரொழிவிலபொங்குவரோசனையேழ்மேன்
முழுவிலேஞ்னூற்றிருடுமுக்காவதமே. (கoஎ)

ஆண்டுச்சிறுமைபதினுயிரமுள
நீண்டவர்வாழ்நாணிறைவு * கடலெல்லை
யீண்டிதன்கீழ்க்கீழ்ப்பெருகிவருமெங்கும்
வேண்டிற்சிறுமைதம்மேலோர்நிறைவே. (கoஅ)

மூன்றுமொரேழுமொழிபஃதும்பத்தினே
டேன்றநல்லேழுமிருபத்திரண்டுமென்
றூன்றவலைகடன்முப்பத்துமூன்றுமென்
றூன்றினகீழ்க்கீழுயர்ந்தனவாழ்நாள். (கoகூ)

மூடைகொண்முழுச்செவிமொண்பற்பதக
ருடையந்தவியிருப்புண்பதுநஞ்சே
புடையவர்காணியபோர்நனிமூட்ட
மிடைவர்படுகொண்டுவேதனைமிக்கார். (ககo)

வேவாரழலுள்விளியாரளற்றினு
ளோவார்புகையுளுகையாவுழல்பவ
ராவாவளியநரகர்படுதுய
ரேவார்சிலையாயிரங்குந்தகைத்தே. (ககக)

* கடல்—சமுத்திரம், அஃதோரெண்.

ஆங்குண்டெனப்படுமாழ்துயர்வீழ்பவர்
தேங்கொண்டபைந்தார்த்திறன்மன்னயாரெனிற்
றாங்கொண்டதாரமறுத்துப்பிறன்வரைப்
பூங்கொண்டைமாரைப்புணருமவரும். (கக௨)

உள்ளங்கொடியாருயிர்க்கொலைகாதலர்
வெள்ளங்கொடியனமேவிப்பிறன்பொருள்
கொள்ளுங்கொடுமைக்குணத்தின்மணித்தரு
நள்ளலர்ச்சாய்த்தோய்நரகமடைவார். (கக௩)

நல்லறங்காய்ந்துநலிந்துபொருள்படைத்
தில்லறஞ்செய்யாதிறுகுபவர்களும்
புல்லறம்புல்லாப்புலவரைவைதுரைத்
தல்லறஞ்செய்யுமறிவில்லவரும். (கக௪)

தெண்டிரைவாழுந்திமிலுங்கலங்களுங்
கொண்டிரையாகவுயிர்கொல்லுஞ்சாதியுங்
கண்டிடுகாதனைகின்றுற்செயப்படுந்
தண்டிகடம்மொடுஞ்சார்த்தினைகொண்ணீ. (கக௫)

ஆறுநரகவழலினுளாழ்பவர்
தேறுர்திருவறந்தேறினுநல்வத
மேறுர்சிலர்நனியேறினுநில்லலர்
வேறுயினிச்சொல்லவேண்டுவதுண்டோ. (கக௬)

விலங்குகதித்துன்பம்.

விலங்குடன்சாதிவிரிப்பிற்பெருகு
மூலங்கொண்டதோண்மன்னவோரறிவாதி
புலங்கொண்டவைம்பொறியீறுப்புணர்ந்த
நலங்கொண்டஞாலத்தினுடியுணர்நீ. (ககஎ)

நின்றுவருந்து* நிகோதப்பிறவியு
ளொன்றறிவெய்தியுழக்குமுயிர்பல
வன்றிச்சிறிதுண்டவற்றினுமவ்வழிச்
சென்றுபெயர்வசிலவுளகண்டாய். (கக௮)

* நிகோதம்—விலங்கு.

ஓரறிவாகியுழக்குமுயிர்களைப்
பேரறிவாரும்பிறரில்லையின்னவை
யாரறிவாரழியுந்திறம்யாதெனிற்
கூரறிவில்லவர்கொன்றிடுகின்றார். (ககக)

உயிர்த்தொகையாறனுளொன்றொழித்தேனைப்
பெயர்த்தொகைபெற்றபிறவிகடம்மைப்
பயிர்த்தலுமின்றியுலகம்பதைப்பச்
செயிர்த்தவர்போலச்செகுத்திடுங்கண்டாய். (கஉ0)

ஏனையொழிந்தவியங்குநற்சாதிக
ளானைமுதலாவளியவிலங்குகண்
மானுடர்பற்றிவலிந்துநலிந்திட
வூனெய்யுருகுமுழக்குமொருபால். (கஉக)

ஊர்ந்துமுழுதுமுறுபாரமேந்தியுஞ்
சாய்ந்தவிலங்குகடாளுடைந்தாழ்தர
வீர்ந்துமறுத்துமிறைச்சியுவப்பவர்
தேர்ந்துசெகுப்பவுந்தேயுஞ்சிலவே. (கஉஉ)

தடிவிலைவாழ்நர்தடிந்திடப்பட்டு
முடிவிலைவாழ்நர்முருக்கமுரிந்துங்
கொடுவிலெயினர்கள்கொல்லக்குறைந்தும்
விட்விலவேதனைவேந்தவிலங்கே. (கஉ௩)

அந்தோவளியவிலங்குகள்யார்கண்ணு
நொந்தோமெனச்சென்றுநோக்கினுனிப்பொடு
வந்தோமெனவின்றமாண்புடையார்களு
முய்ந்தோய்ந்தொழியமுயன்றிடுகின்றார். (கஉச)

கன்னியர்வேட்கைகடவுளரும்பிணி
துன்னியதுன்பவிலங்கின்கடுதுய
ரென்னுமிவற்றினையெம்போல்பவரன்றி
மன்னவறிபவர்மற்றில்லைமன்னே. (கஉ௫)

வலியமுழங்கினுநாறினும்வட்கி
நலியுமிவையெனநையுமொருபாற்
பலிபெறுதெய்வங்கண்மேலிட்டுப்பாற்றுங்
கலியவர்கையுட்கழியுமொருபால். (கஉ௬)

கண்களிஞேக்கியுங்காதலினுள்ளியு
மண்களிடைவிட்டுவைகியும்புல்லியுந்
தண்கமழ்தார்மன்னதாயர்வளர்ப்புழி
யெண்களையின்றிடரெய்துமொருபால். (கஉ௭)

இன்னனதுன்பமொடிவ்விலங்காகுந
ரென்னவரென்னினிவைநனிகேளினி
மன்னியமாதவமேற்கொண்டுமாயங்கள்
பின்னைமுயல்வார்பிறப்புமதுவே. (கஉ௮)

பொருளிடைமாயம்புணர்ந்தும்பிறரை
மருளிகளாகமயக்குமவரு
மிருளுடையுள்ளமொடேதங்களெண்ணு
வருளிலவருமவைநனியாவார். (கஉ௯)

பற்றுபெற்றிமுனிந்தார்பலபல
செற்றநவின்றார்செறுப்பொடுசென்றவர்
சுற்றமழிக்குந்துவர்ப்பகைதுன்னினர்
மற்றிவ்விலங்கெய்துமன்னுயிர்மன்னு. (க௩0)

இல்லையுயிரென்றுமில்லைபிறப்பென்று
நல்லனதீயனநாடிலிலவென்றும்
பல்லனசொல்லிப்படுத்துண்ணும்பாவிக
ளில்லாதுசெல்வர்திரோதகதியே. (க௩க)

மக்கட்கதித்துன்பம்.

மாகமழைவண்கைமன்னவமக்களு
மேககதியினரேயவிகற்பினர்
சேகர்மிலேச்சர்மனிதர்கடிப்பியர்
போகமனிதரெனப்பொருட்பட்டார். (க௩உ)

பத்துவகையபாதவிரேவதத்
தத்தகுகாலவிழிவினகத்தவர்
சித்தந்தெளிவிலர்சீலமடைவிலர்
செத்தவறிவினர்சேகரவரே. (கரு௨)

தீவினுள்வாழுங்குமானுடர்தேசத்து
மேவியுறையுமிலேச்சரெனப்பெய
ராவரவருண்மிலேச்சரவரையும்
வீவருந்தாரோய்விலங்கினுள்வைப்பாம். (கரு௪)

வாலுமொடியர்வளைந்தவெயிற்றினர்
காலுமொரோவொன்றுடையர்கலையிலர்
நாலுஞ்செவியர்நவைசெய்மருப்பினர்
சீலமடைவிலர்தீவினுள்வாழ்வார். (கரு௫)

மக்கட்பிறப்பெனுமாத்திரமல்லது
மிக்கவெளிற்றுவிலங்குகளேயவர்
நக்கவுருவினர்நாணொழுக்கினர்
தொக்கனர்மண்ணேதுளைத்துண்டுவாழ்வார். (கரு௬)

பூவும்பழனுநுகர்ந்துபொழின்மர
மேவியுறையுமிலேச்சர்மிகப்பல
ரோவலர்வாழ்வதொரு * பனிதோபமென்
றேவல்சிலைமன்னவெண்ணியுணர்நீ. (கரு௭)

தேசமிலேச்சரிற்சேர்வுடையாரவர்
மாசின்மனிதர்வடிவினராயினுங்
கூசின்மனத்தர்கொடுந்தொழில்வாழ்க்கையர்
நீசரவரையுநீரினிழிப்பாம். (கரு௮)

கூடன்மிலேச்சர்குமானுடரென்றிவ
ரேடவிழ்தாரோயெவராபவரெனிற்
கோடிக்குதர்க்கமுரைத்துக்குணங்களை
நாடினர்கொள்ளாநவமிலவரும். (கரு௯)

* பனிதோபம்—பல்லம், அஃதோரெண்.

அடங்காமரபினவர்கட்கடங்கார்
விடங்கார்மணந்தவிடக்கும்பிறவு
முடங்காய்ந்துணக்கொடுப்பாருமுயர்ந்தோர்
தொடங்காவினைகடொடங்குமவரும். (௧௪௦)

அன்னபிறவியுளாங்கவராபவ
ரின்னுஞ்சிலவரிழிகதிப்பாற்பட்டுத்
துன்னியபோழ்தேசுருங்கியொழிபவ
ரென்னும்பிறர்களறிவிற்கிகந்தார். (௧௪௧)

மக்கள்வதியுமிரண்டரைத்தீவினுட்
டக்கநிலத்துப்பிறந்தவர்தம்முளு
முக்குலத்தாரொடுங்கூடாமுயற்சிய
ரொக்கலைப்போல்வார்பலருமுளரே. (௧௪௨)

மூக்குலத்தாரொடுமூடத்தொழுதியர்
தக்கதகாவென்பதோராத்தகையவர்
மக்களெனப்படுவாரலர்மற்றவர்
பக்கங்கிடக்கும்பதரெனக்கொண்ணீ. (௧௪௩)

நல்லநிலங்கணலங்கொள்வடிவுக
ளில்லையமர்ந்துழித்தோன்றலெனவிவை
யெல்லையில்யோனிகளெல்லாமிகந்தெய்த
லல்லியந்தாரோயரிதுபெரிதே. (௧௪௪)

* அண்ணையலிகுருடாதியவர்களை
மண்ணுயர்ஞாலத்துமானுடராகவைத்
தெண்ணுநர்யாருளரெல்லாமமையினும்
பெண்ணின்பிறவியும்பீடுடைத்தன்றே. (௧௪௫)

எண்பத்துநான்கெனுநூறாயிரமுள
பண்பொத்தசாதிப்பவமென்பமற்றவை
கண்பற்றுந்தாரோய்களிப்பதொர்நல்வினைத்
திண்பற்றுடையவரிவ்வுடல்சேர்வார். (௧௪௬)

---

* அண்ணை—பேடி.

சார்ந்தபொழுதேதலைநாட்கருவினுள்
வார்ந்துவழுவாதமைந்துவளரினும்
மீர்ந்தண்கமழ்நறுந்தாரோயிடர்பல
கூர்ந்துவருபயாங்கூறவுலவா. (கசஎ)

குழவியருஞ்சுரஞ்சென்றுகுமர-
வழுவவடவியரிதினிகந்தாற்
கிழவெனுமெல்லைகெழீயினர்சார்ந்து
வழுவினர்செல்வதுமற்றோர்கதியே. (கசஅ)

ஆனைதுரப்பவரவுறையாழ்குழி
நானவிர்பற்றுபுநானுமொருவனோர்
தேனினழிதுளிநக்குந்திறத்தது
மானுடரின்பமதித்தனைகொண்மீ. (கசகூ)

அன்பும்பிறவுமமைந்தாங்ககத்திருந்
தின்பங்கருதுமிருவர்க்கிடைபல
துன்பங்கடோன்றுந்தொடர்ப்பாடுளவெனின்
முன்பவையில்லெனின்முற்றுந்தொழிலே. (கரு௦)

இன்னநிலைமையிதனுட்பிறந்தவர்
மன்னுமொன்றுண்டுவரத்தாற்பெறுவது
பொன்னியல்சேர் * கற்பபோகநிலங்களிற்
றுன்னுமுயற்சிதுணியுந்திறமே. (கருக)

துன்னுமுயற்சிதுணியுந்திறமவை
பன்னியுரைப்பிற்பலவாய்ப்பெருகினுந்
தன்னியருனந்தவமொடுபூசனை
யென்னுமிந்நான்கெனவெண்ணியுணர்நீ. (கருஉ)

தலையுமிடையுங்கடையுமாச்சாற்று
நிலைமையதானநிழன்மணிப்பூணோ
யுலைவிலேற்போனுடனீபவனீயு
மலைவில்பொருளின்னமாட்சியமன்றே. (கருங)

* கற்பபோகநிலம், போகநுகரும் பதினாறுகற்பலோகம்.

* ஐமையமைந்தார்க் † கெழுமையமைந்தவ
ரிம்மைகினையா ‡ ரிமைபதமீவழி
¶ மும்மைக்கு o மும்மடங்காயமுறைமையிற்
பொய்மையில்புண்ணியம்போர்க்கும்புகுந்தே. (௧௫௪)

துறவியடக்கைபிறர்க்குநன்றுற்ற
லுறவினர்க்கோம்புதன்மெய்த்தலைப்பாடென்
றறிவரறைந்தாங்கறைந்தனன்றுனங்
குறைவிலனேற்பவற்கேற்றகுணனே. (௧௫௫)

போதிசைவாற்றல்பொன்றுதறுகட்ப
மீதற்கிவறுதலேற்பவர்மாட்டெழு
காதல்கழிபற்றிலாமைதெரிந்தறி
வேதமின்றீவான்குணமிவையேழே. (௧௫௬)

தானுமடங்கியடங்கினர்க்கேந்திய
வூணமுயிர்களுக்கெல்லாமுணர்வது
ஞானவொழுக்கம்பெருகுநலத்தகை
யீனமிலின்பநிலங்கட்குவித்தே. (௧௫௭)

கடைநின்றவருறுகண்கண்டிரங்கி
யுடையதம்மாற்றலினுண்டிகொடுத்தார்
படைகெழுதானையபல்களியானைக்
குடைகெழுவேந்தர்களாகுவர்கோவே. (௧௫௮)

ஊறுபலசெய்துயிர்கட்கிடர்செய்யும்
வீறில்பொருளேவினையவர்க்கீந்தவ
னேறும்பயனிஃதென்றினியான்சொல்லி
னூறிணர்த்தாரோய்நகுவதுடைத்தே. (௧௫௯)

தன்கைப்பொருளுமிழந்துதனக்கொரு
புன்கட்கதிசெல்லும்வாயில்புணர்ப்பவன்
வன்கட்பதகர்க்குவான்பொருள்கைக்கொடுத்
தென்கைப்பணிகொண்மினென்பவனொத்தான். (௧௬௦)

* விடயம். † சப்தகுணம். ‡ ஆகாரம்.
¶ காரணம். o நவக்கிரமம்.

ஒத்தகுணங்களமைந்தாங்குறுவர்க்குத்
தத்துவந்தேறியவன்செய்ததானங்கண்
* முத்திறத்துள்ளும்படாதுமுடிமன்ன
வுத்தமதேவருளுய்க்குமுணர்நீ. (௧௯௧)

மிக்கவிரதம்விரிபலவாயினுந்
தொக்கன † வைந்திற்சொலு ‡ மூன்றி ¶ னுன்கினி
லொக்கவவற்றினுறுபயஞ்சொல்லிடிற்
றக்கவர்க்கொத்ததிற்றன்னங்குறைவே. (௧௯௨)

எல்லாவிரதமியல்பொக்குமாயினு
o மல்லாவிரதமனையாயவர்கட்குக்
கொல்லாவிரதங்குடைமன்னவாமெனின்
வெல்லாவகையில்லைவீங்கெழிற்றோளாய். (௧௯௩)

தம்மையுடையவர்தாங்குந்தவத்திய
லெம்மைவினவினெமக்குமுரைப்பரி
தும்மையுலகத்தொளிபடுமூக்கமோ
டிம்மையிகந்தார்க்கிசையுமதுவே. (௧௯௪)

தவஞ்செய்துவந்தார்தவநிலைநிற்பா
ரவஞ்செய்துவந்தார்க்கரிதுபெரிதும்
பவஞ்செய்துமாக்கள்பரியுமதுதா
னெவன்செய்துமென்னையீர்மலர்த்தாரோய். (௧௯௫)

தெருண்டவர்மேற்கொளுஞ்செய்தவச்செல்வ
மிரண்டும்பலவுமியலாய்ப்பெருகு
மருண்டினியென்னவைவந்தபொழுதே
முரண்டருதோண்மன்னமுற்றவுணர்நீ. (௧௯௬)

உலகங்கண்மூன்றுமுடையபெருமாற்
கலகையில்பூசனையாற்றமுயன்றாற்
றிலகமிவரெனத்தேவர்களாவர்
விலகுஞ்சுடரொளிவீங்கெழிற்றோளாய். (௧௯௭)

---

* கர்ப்பம், உபவாதம், சம்மூர்ச்சனம். † அணு. ‡ குணம்.
¶ சிக்ஷை. o விரதமல்லாதது.

புண்ணியவாயிலெனநாம்புகழ்ந்துரை
கண்ணியகான்காயடங்கினுங்காவல
நுண்ணியநூல்வழிநோக்கிநுனித்தவ
ரெண்ணியவாயில்களின்னுமுள்வே. (௧௬௮)

அருளுங்தெருளுங்குணத்தின்கணூர்வமும்
பொருளொன்றுமேசேரும்புகழ்ச்சிநிகழ்வு
மருளிறவமும்வாலியஞானமு
மிருளறுதியானநிகழ்வுமென்றேமே. (௧௬௯)

ஆருயிர்யாதொன்றிடருறுமாங்கதற்
கோருயிர்போலவுருகியுயக்கொள்ள
நேரினதுமுடியாதெனினெஞ்சகத்
தீரமுடைமையருளினியல்பே. (௧௭0)

வையினும்வாழ்த்தினும்வாளாவிருப்பினும்
வெய்யமுனிதல்குளிர்தல்வெறுப்பொடு
மையன் * மூம்மூடப்பகுதிமயக்கின்மை
செய்யமனத்தோர்தெருளின்றிறமே. (௧௭௧)

அறிவரடிமுதலார்வம்பெருக்க
லுறுவரொழுக்கமுவத்தன்முதலா
விறுதியில்பல்குணநோக்கமென்றின்ன
செறிதலிலார்வங்கள்செல்வந்தருமே. (௧௭௨)

ஆற்றல்வகையாலருந்தவமேற்கொண்டு
நோற்றுநுனித்தலொழுக்கந்தலைநிற்றல்
போற்றியுரைத்தல்புகழ்ச்சிநிகழ்விஃ
தேற்றுமிருவிசும்பீர்மலர்த்தாரோய். (௧௭௩)

அற்ற † துவர்ப்பினராகுமருநிலை
யுற்றவர்க்கிவ்வாறொழுக்கந்தலைநிற்ற
னற்றவமென்றிங்குநாங்கண்மொழிந்தது
மற்றிதுவானுலகாள்விக்குமன்னா. (௧௭௪)

---

* லோகமூடம், தேவமூடம், பாசண்டிமூடம். † அறுவகைத்துவர்ப்பாவன ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், சுகுச்சை.

நூற்பொருள்கேட்டுநுனித்தோருணர்வது
மாற்படைகூட்டுமயங்கிருடீர்ப்பது
மேற்படைமெய்ம்மைவிளக்கும்விளக்கது
நாற்படையோய்நல்லஞானநிகழ்வே. (௧௭௫)

சென்றுபெருகுந்தியானநிகழ்ச்சியு
மொன்றவுரைப்பினொரு * நால்வகைப்படு
நன்றியின் † மாற்றினைநல்குமிரண்டல்லன
வென்றிவிசும்பொடுவீடுந்தருமே. (௧௭௬)

போற்றியபுண்ணியப்பொற்சுண்ணமுன்புகழ்
வாற்றிமுயல்வார்க்ககநிழ்வாமவை
மாற்றியவற்றைமறுதலையாக்கொளிற்
பாற்றியுழப்பிக்கும்பாகநிகழ்வே. (௧௭௭)

காட்சியெனும்பெயர்க்கதிர்விளக்கேற்றிய
மாட்சியுடையார் ‡ வதமிலராயினு
மாட்சிகரிதன்றமருலகல்லது
மீட்சியில்பேரின்பவெள்ளத்துழவே. (௧௭௮)

மெய்ப்பொருடேறுதல்காட்சிவிளக்கது
செப்படுமாயின்வினையென்னுந்தீயிரு
ளப்படிமானுநிலையன்றதனைநின்
கைப்பொருளாக்கொள்கதிர்மணிப்பூணோய். (௧௭௯)

தெய்வமனிதரவரைத்தெளிவுறி
னையவிசயனுமாழிவலவனு
மெய்தவிவர்முதலீரொன்பதின்மரிவ்
வையமருளவருநருளரே. (௧௮௦)

ஆழியிழந்தவயகண்டனுதியாப்
பாழிவலவன்பகைவர் ¶ மும்மூவரும்
வீழவுரைத்தேன்வியன்பெருஞாலத்து
ளேழிதொறாழியுலப்பிலகண்டாய். (௧௮௧)

---

* ஆர்த்தம், ரௌத்திரம், தர்மம், சுக்கிலம். † மாற்று—ஜனனமரணம். ‡ விரதம். ¶ நவப்பிரதிவாசுதேவர்.

தேயவினைவெல்லுந்தெய்வமனிதரு
ணீயுமொருவனைநின்குலத்தாதிக்கட்
பாயவிழுச்சீர்ப்பரதனையுள்ளுறுத்
தாயதிகிரியவருமவரே. (கஅ௨)

தீர்த்தஞ்சிறக்குந்திருமறுமார்பரும்
பேர்த்துப்பிறவாப்பெருமைபெறுநரு
மோர்த்திவ்வுலகினுளுத்தமர்மற்றவர்
தார்த்தங்குமார்பதவத்தின்வருவார். (கஅ௩)

வேறு.

தக்கமிகுதானமுதலாயதலைநிற்கு
மக்களிவராவர்மதயானைமறவேலோய்
புக்கவருளேபடுவர்போகநிலஞ்சார்ந்தா
ரொக்கவவர்தன்மையுமுரைக்கவுலவாவே. (கஅ௪)

உத்தமர்களேனையிடையோர்கள்கடையோரா
முத்தகையராவரவர்மூரிநெடுவேலோய்
பத்துவகை * பாதவமியற்றியபயத்தா
லத்தகையசெய்கையுமவர்க்கனையகண்டாய். (கஅ௫)

அங்கிருவர்தம்பதிகள்செய்கையுயைறைந்தா
லிங்கிருவர்செய்கைதமையெண்ணியறிவாய்நீ
தங்குரவரோடிருவர்மாறிருவர்தாமா
யிங்கிருவர்தேவர்கள்வளர்ப்பவியல்கின்றார். (கஅ௬)

நக்ககுழவிப்பருவநாற்பதினொடொன்பா
னெக்கவருநாள்கள்கலையோடெனிறைந்தான்
மிக்கவொளிசூழ்ந்துமிளிர்மேனியவராகித்
தக்கவிளமைப்பருவமெய்தினர்கடாமே. (கஅ௭)

கொம்பழகுகொண்டகுழைநுண்ணிடைநுடங்க
வம்பழகுகொண்டமணிமென்முலைவளர்ந்தாங்
கம்பவழவாயுளணிமுள்ளெயிறிலங்கச்
செம்பவளமேனியவள்கன்னிமைசிறந்தாள். (கஅ௮)

---

* பாதவம்—கற்பகவிருக்ஷம்.

நீலமணிகண்டனையகுஞ்சிகணிறைந்தான்
ஞாலமணிகொண்டநளிர்தாமரைமுகத்தான்
கோலமணிமால்குவடுகுங்குமமடுத்தாற்
போலுமணிமேனியொடுகோளைபொலிவுற்றான். (கஅகூ)

தாதுபடுசண்பகமிகந்தநறுமேனிக்
காதுபுனைகாமர்குழைபொற்சுருளைமின்ன
மீதுபடுகற்பகவிளந்தளிர்மிலைச்சிப்
போதுபுனைகோதையவள்பூம்பொழிலணைந்தாள். (ககூ0)

பவழவரையன்னதிரடோட்பரவைமார்பன்
றவழுமணியாரமொடுதார்மணிதயங்கக்
* கவழமனைமேவுகளியானையெனவந்தாங்
கவிழுமலரிர்ம்பொழிலுளையனுமணைந்தான். (ககூக)

கன்னியவண்மேவிளையகாளையிருகண்ணு
மன்னுகமழ்தாமரையின்வாயிதழலங்கல்
பின்னியெனவீழ்ந்தபிணையன்னவவள்கண்ணுந்
துன்னுமிருநீலமெனவந்தெதிர்துதைந்த. (ககூஉ)

நையுமெனநின்றவிடையாள்குணமோர்நான்கும்
வையமகிழ்காளையிவன்மாண்டகுணநான்கு
மையெனவகன்றனவணைந்தனர்கனிந்தார்
மெய்யுமிடைவுற்றவிதுவால்விதியின்வண்ணம். (ககூஙு)

அன்றுமுதன்மூன்றளவுபல்லமுடிகாறுஞ்
சென்றுபெருகிக்களிசிறந்துநனிகாம
மென்றுமிடையின்றியிமையாரினுகர்வார்க்கு
நின்றதுபிராயமதுவேவிழலும்வேலோய். (ககூச)

கங்குலவணில்லைகலியில்லைநவில்லை
யங்கவர்களுளிடைகழித்தமிர்தயின்று
வெங்குமிலவின்பவெழிலெய்தறருமீதாற்
றங்கியதவத்தரசர்க்கீந்தபயன்றுனே. , (ககூரு)

---

* மகரளகரப்போலி.

அன்னமிகுபோகமவரெய்திவிளையாடி
முன்னமுடிபல்லமவைமூன்றுடன்முடித்தாற்
பின்னுமவர்தம்வழிபிறந்தவரைநோக்கி
மன்னுமினிதேறுவதுவானுலகமன்னு. (௧௯௬)

பல்லமுதலோர்பகுதிமூன்றிரண்டுமொன்று
மல்லவிருவர்க்கமிர்துமம்முறையினேறு
நல்லநிலங்காலமுயர்வென்றிவைகணுடிச்
சொல்லவுலவாவிவர்கள்செய்கைசுடர்வேலோய். (௧௯௭)

செம்பவழம்வெண்பளிங்குபைந்தளிர்சிறக்கும்
வம்பழகுகொண்டமணிமேனியவர்பூவார்
கொம்பவிழுஞ்சண்பகங்கண்முல்லையிணர்க்கோங்க
மம்பவழவண்ணமுதலானவர்மெய்நாற்றம். (௧௯௮)

நலங்கண்மிகுநம்முலகினன்மைமிகுநீராற்
புலங்கண்மிகுபோகமொடுபோகநிலத்துள்ளால்
விலங்கொடுளவாழ்பறவையவ்வுடம்புவிட்டாற்
கலங்கண்மிகுகற்பநிலமேறுவனகண்டாய். (௧௯௯)

வேறு. தேவர்கதித்துன்பம்.

பூவிரியுநறுமேனிப்பொன்னிலங்குமிர்சோதித்
தேவர்கடந்திறமுரைத்தறேவருக்குமரிதெனினு
நாவிரவிநாமுரைப்பநால்வகையாய்விரியுமவை
யோவரியபெரும்புகழாயொருவகையாலுரைப்பக்கேள். ()

ஈரைவர்பவணர்களுமிருநால்வர்வியந்தரரு
மோரைவர்சோதிடருமொருபதின்மேலறுவரெனுங்
காரையமுறுவகையாய்கற்பகருமீயுலகிற்
சீரையமில்லாததிருமலர்த்தார்த்தேவரே. (௨௦௧)

உற்றவர்க்குமேலவர்க * ளொன்பதின்ம † ரொன்பதின்மர்
மற்றவர்க்குமேலவ ‡ ரைவகையரவர்மேலவர்க
ளிற்றவரதெண்வகையாமிவர்க்கென்றுமில்லாத
செற்றநோய்செயிர்பகையென்றிவைமுதலசெலவுணர்நீ. ()

* நவக்கிரைவேயகம். † நவானுதிசை. ‡ பஞ்சானுத்தரம்

அருமணியி னொளிகிழற்றுமாயிரமாம்பணமணிந்த
திருமணிசேர்முடியவருந்தீயொழுகுசிகையருமாப்
பருமணியபடலஞ்சேர்பவணத்துப்பதின்மர்களொண்
குருமணிகொணெடுமுடியாய்கூறுபாடுடையவரே. (௨௦௩)

கின்னரர்கண்முதலாயவியந்தரரைக்கிளந்துரைப்பி
னின்னநரருலகத்துளெவ்வழியுமுளராகி
மென்னரம்பினிசைகேட்டும்வெறியயர்வுகண்டுவந்து
மன்னவரைவணங்கியுந்தம்மனமகிழ்வரொருசாரார். (௨௦௪)

குலகிரியுமலையரசுங்குளிர்பொழிலுநளிர்கயமும்
பலகிரியுந்தீவகமும்படுகடலும்படிநகரு
முலகிரியவெளிப்பட்டுமொளிகரந்துமுறைந்தியல்வ
ரலகிரியும்பலகுணத்தோயமரர்களேனைப்பலரே. (௨௦௫)

சந்திரருஞ்சூரியருந்தாரகையுநாண்மீனும்
வெந்திறலகோட்களுமாமெனவிளங்கிவிசும்பாரு
மந்தரத்தைவலஞ்சூழ்ந்துவருபவருநிற்பவருஞ்
சுந்தரஞ்சேர்மணிமுடியாய்சுடர்பவருஞ்சோதிடரே. (௨௦௬)

எண்ணியமுத்தேவர்களுமிவர்மடந்தையவருமாய்க்
கண்ணியநூற்காட்சிக்கதிர்விளக்குத்தூண்டினோர்
நண்ணுபவோவெனினண்ணோர்நல்விரதந்தலைநின்று
புண்ணியங்கள்படைத்தாரக்குழுவினிடைப்பொலிவாரே. ()

காதலிற்பிழையாராய்க்கள்ளூன்றேன்கடிந்தகற்றி
யீதலோடில்லிருக்குமிளம்பிடியார்முதலாயா
ரோதினமுத்தேவராயுயர்ந்தவர்க்குளுயர்ந்துளராய்ச்
சோதியும்பேரெண்குணனுந்துப்புரவுந்துன்னுவரே. (௨௦௮)

மந்தரமாநெடுமலையின்மத்தகத்துமேற்கூற்றி
னந்தரப்பேருலகத்துளமரரைமற்றுறையுங்கா
லிந்திரவில்லெனவெளிப்பட்டிமையவர்கடொழுதேத்தச்
சுந்தரநன்மணிப்படிவமெனச்சுடர்ந்துதோன்றுவரே. (௨௦௯)

அலர்மாரிமேற்சொரிவாரமிர்தநீரோட்டுவார்
பலமாண்டகலனணிந்துபலாண்டிசைப்பார்பாடுவார்
மலர்மாண்டமணிக்கவரிமருங்கசைப்பார்மடந்தையரைச்
சிலர்மாணச்சேர்த்துவார்தேவராயதுபொழுதே. (உ௧௦)

ஆடாதுமொளிதிகழுமாரணங்குதிருமேனி
வாடாதகண்ணியினர்மழுங்காதபூந்துகில
ரேடார்ந்ததொங்கலராயின்பநீர்ப்பெருவெள்ள
நீடாரக்குளித்தாடுகில்லையமரேயவரெல்லாம். (உ௧௧)

பொன்மாடநெடுநிலத்தார்புகலமளியணைமேலார்
கன்மாடுபொன்வளருங்கதிர்மணிக்குன்றதன்மேலார்
மின்மாடுமிளிர்ந்திலங்குவிமானத்தாரெனினல்லாற்
சொன்மாடுபிறிதில்லைச்சுவர்க்கஞ்சேர்ந்தவர்கட்கே. (உ௧௨)

கந்தருவக்கோட்டியுள்ளார்கண்கனியநாடகங்கண்
டிந்திரனோடினிதினிருந்திளம்பிடியார்பாராட்டச்
சுந்தரமாமணிமாடச்சூளிகையரெனினல்லா
லந்தரமேற்பிறிதில்லையமருலகடைந்தவர்க்கே. (உ௧௩)

கந்தாரங்களித்தனையபனிமொழியார்கண்கவர
மந்தாரவனத்திடையாமணிமுழவினிசைவரங்க
மந்தாரமணியரங்கினெனும்வார்த்தையவையல்லாற்
செந்தாரோய்தேவர்கள்செய்திறற்றொழின்மற்றுடையரே.()

* தீர்த்தங்கடிறந்தவர்க்குச்சிறப்போடுதிசையெல்லாந்
தேர்த்தங்கணொளிபரப்பச்செல்பொழுதுந்தம்முலகிற்
கார்த்தங்குமயிலனையார்காமஞ்சேர்கனிகோட்டி
தார்த்தங்குவரைமார்பதம்முருவினகலாரே. (உ௧௫)

இமையாதசெங்கண்ணரிரவறியார்பகலறியா
ரமையாதபிறப்பறியாரழலறியார்பனியறியார்
சுமையாகிமணிமாலைசுடர்ந்திலங்குநெடுமுடியா
ரமையாதநல்லுலகினைகைமணிப்பூணமரரே. (உ௧௬)

---

* தீர்த்தகரபரமதேவர்கள்.

அனுவளவாய்ச்சிறுகுதன்மற்றதிநுட்பமிகப்பெருக [ப்
னணியவர்போனினைத்துழியேநண்ணுறுதல்விழைதகைமை
பணியினமைத்திடல்குறிப்பிற்பலவுருவுநனிகோட
றணிவமையுநெடுவேலோய்சுரருடையகுணங்களே. (உகஎ)

அளிதருஞ்செங்கோலுடையோயமரருக்குமந்தரமுண்
டொளியோடுபேரின்பமுயர்ந்தவர்க்கேயுயர்ந்துளவாந்
தெளிதருநற்காட்சியதுதிருந்தியமேனெடுந்தகையோர்க்
